# பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனம்
**(PRIDE)**

# பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 636 011

**இளங்கலை தமிழ் இலக்கியம்**

**இரண்டாம் ஆண்டு**

**தாள் – 10 : தமிழக இலக்கிய, இலக்கண வரலாறு**

**பாட ஆக்கம்**

**முனைவர் வே.வேலுமணி**

தமிழ் விரிவுரையாளர்

அரசினர் கலைக் கல்லூரி (ஆடவர்)

கிருட்டிணகிரி.

## பாடத்திட்டம்

**அலகு 1 :** சங்க காலம் - முச்சங்கங்கள் - பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் -கீழ்க்கணக்கு நூல்கள்.

**அலகு 2 :** பெருங்காப்பியங்கள் - சிறுகாப்பியங்கள் - பக்தி இயக்கம் - ஆழ்வார்கள்-நாயன்மார்கள் - பன்னிரு திருமுறைகள் - நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் -ஒட்டக் கூத்தர் - புகழேந்தி – ஜெயங்கொண்டார்.

**அலகு 3 :** சைவ சித்தாந்த சாத்திரங்கள் - சித்தர் பாடல்கள் - உரையாசிரியர்கள் - திருவிளையாடற் புராணம் - வில்லிபாரதம் - அருணகிரியார் - அதிவீரராம பாண்டியர் - தாயுமானவர் - சிற்றிலக்கியங்கள்.

**அலகு 4 :** இக்காலக் கவிதைகள் - சிறுகதைகள் - புதினங்கள் - நாடகங்கள் - அயலகத் தமிழ் வளர்ச்சி – தனித்தமிழ் இயக்கம் - புதுக்கவிதை வளர்ச்சி – திறனாய்வு வளர்ச்சி.

**அலகு 5 :**அகத்தியம் - தொல்காப்பியம் - இறையனார் களவியல் - பன்னிரு படலம்-புறப்பொருள் வெண்பாமாலை – நம்பியகப் பொருள் - நன்னூல் - - யாப்பருங்கலம் - நேமிநாதம் - வீரசோழியம் - தொன்னூல் விளக்கம் - முத்துவீரியம் - இக்கால இலக்கண மரபு.

## தாள்- 10 : தமிழ் இலக்கிய, இலக்கண வரலாறு

மக்கள் எப்பொழுது சிந்திக்கத் தொடங்கினார்களோ அப்பொழுதே மொழித்தோன்றியிருக்க வேண்டும். முதலில் பேச்சுமொழித்தோன்றி வரிவடிவம் பெற்று பின்னர் எழுத்துமொழித் தோன்றியிருக்க வேண்டும். அவ்வாறு எழுத்து மொழித்தோன்றிய பிறகே இலக்கியங்களும், இலக்கணங்களும் தோன்றி .இவ்வகையில் தமிழ் இலக்கிய இலக்கணம் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ச்சிப்பெற்று வந்துள்ளன எனலாம். இவற்று;ள் இலக்கியம் முதலில் தோன்றியதா? இலக்கணம் முதலில் தோன்றியதா? என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கான விடை தேடலுக்கு,

எள்ளினின்று எண்ணெய் எடுப்படுவதுபோல்

இலக்கியத்தினின்றெ டுப்படும் இலக்கணம்

என்னும் கூற்று விடையளிக்கிறது. இக்கூற்று இலக்கியத்திலிருந்தே இலக்கணம் பெறப்பட்டது. எனவே, இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் தொன்றியது என்பதைக் காட்டுகிறது. இவ்விலக்கியம் அகத்தியர் காலத்தும், அதற்கு முன்பும் இருந்திருக்க வேண்டும் எனலாம். ஆனால், இதற்கான குறிப்பு தமிழில் முதல் நூலாகிய அகத்தியத்தில் இருந்தனவா? இல்லையா? என்பதைக் கண்டறிய இந்நூல் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை. அகத்தியம் பற்றிய ஒரு சில குறிப்புகளே கிடைக்கப்பெற்றுள்ளன. கிடைக்கப்பெற்ற 103 நூற்பாக்களைத் தொகுத்து பாவானந்தம்பிள்ளை பேரகத்தியத் திரட்டு என்ற நூலை வெளியிட்டார். அகத்தியத்திற்குப் பிறகு தமிழில் நமக்குக் கிடைத்த முழுமையான நூல் தொல்காப்பியமாகும். இது வழிநூலாகும். இந்நூலில் தொல்காப்பியர், ஆங்காங்கே என்மனார் புலவர், என்றிசினோர், யாப்பறி புலவர், நூல் நவில் புலவர். மொழிப என்றெல்லாம் குறிப்பிட்டுச்செல்வது, அவர் காலத்தும், அவர் காலத்துக்கு முன்னும் இலக்கியங்கள் இருந்தன என்பதைச் சுட்டுகிறது. இக்குறிப்புகளைக் கொண்டே தமிழில் இலக்கியங்கள் இருந்தன என்பதைத் தீர்மானிக்கிறோம். எனவே, இவர் காலத்திற்கு முன்பு தோன்றிய முழுமையான இலக்கியங்கள் கிடைக்கப்பெறவில்லை எனவே, தொல்காப்பியர் காலத்தும் அவர் காலத்திற்குப் பிறகும் தொகுக்கப்பட்ட, எழுதப்பட்ட இலக்கியங்களைக் கொண்டே தமிழறிஞர்கள் தமிழிலக்கிய வரலாற்றை எழுதத் தொடங்கினர்.அவ்வாறு எழுதும்போது, தொல்காப்பியர் காலத்தை முதன்மையாகக் கொண்டே எழுதினர்.

இலக்கியம், இலக்கணம் இரண்டும் மனிதனுக்கு இரு கண்கள் போன்றன, இவ்விரண்டில், சமுதாயத்தின் பாதிப்பை மிகுதியாக ஏற்பது இலக்கியமாகும். எனவே, மக்களின் மனதைப் பிரதிபலிக்கும் கண்ணாடி மொழி என்றால் ‘மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி’ இலக்கியம் என்பர் அறிஞர்கள்.

இவ்விலக்கியங்களும் சமூக மாற்றத்திற்கேற்ப, காலந்தோறும் மாறிக் கொண்டே வருகின்றன. இவ்விலக்கிய மாற்றத்தோடு, இவ்விலக்கியங்களின் பாடுபொருளும் மாறிக்கொண்டே வருகின்றன. இப்பாடுபொருள்களை அடிப்படையாகக் கொண்டு, தோன்றிய தமிழிலக்கியங்களை அக, புற இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், உரைநடை, கட்டுரை இலக்கியங்கள், கவிதை, நாடக இலக்கியங்கள், சிறுகதை, நாவலிலக்கியங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

இவ்விலக்கியங்கள் எந்த கால கட்டத்தில் தொன்றின என்பதை அறிந்து, காலத்தை வரையறுத்து. சங்ககாலம் (கி.மு 500 - கி.பி 100), சங்கம் மருவிய காலம் (கி.பி 100 – கி. பி 600), பல்லவர் காலம் (கி.பி 600 – கி.பி 850)

சோழர் காலம் (கி.பி 850 – கி. பி 1350) நாயக்கர் காலம் (கி.பி 1350 – கி.பி 1750), ஐரோப்பியர் காலம் (கி. பி 1650 – கி.பி 1947), இக்காலம் எனப் பகுத்து தமிழிலக்கிய வரலாற்றை அறியலாம்.

**அலகு - 1**

**1:1 சங்ககாலம் (கி.மு 500 – கி.பி 100)**

சங்க இலக்கியம் என்ற தொகுப்பில் உள்ள பாட்டுகளின் காலம் சங்க காலமாகும் இச்சங்ககாலம் தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் என அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் தமிழகம் மூவேந்தர்களின் ஆட்சிக்கும் குறுநில மன்னர்களின் ஆளுகைக்கும் உட்பட்டிருந்தது. அக்காலத்தில் அவ்வப்போது மண்ணாசை, பெண்ணாசை, புகழாசையின் காரணமாக மூவேந்தர்களுக்கிடையே அடிக்கடி போர் நிகழ்ந்தது, இப்போர், நிகழ்வினால் இவர்களிடையே பகையும், பூசலும் இருந்ததே தவிர, பிற நாட்டார் ஊடுருவளோ படையெடுப்போ, காழ்ப்புணர்ச்சியோ இடையூரோ இல்லை. அதனால், மூவேந்தர் ஆட்சிக்காலத்தில் மக்கள் துன்பப்படவில்லை. மூவேந்தர்களின் போர் அறநெறிப் போராகத் திகழ்ந்ததால், அப்போர் அவர்கள் அளவில் நின்று நிலவியதே தவிர, மக்களின் அமைதியையும் ஒற்றுமையையும் நிலைகுலைக்கவில்லை. மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகமாக மாண்புற்றது. எனவே, பண்டைத் தமிழர் வாழ்க்கை, மன்னன் இல்லாமல் மக்கள் இல்லை, மக்கள் இல்லாமல் மன்னன் இல்லை என்ற கட்டமைப்போடுத் திகழ்ந்தது, இக்கட்டமைப்புக் குறித்து

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவனாக

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்

புலவர் பாடாது வரைகவென் நிலவரை (புறம் 72 13 .16)

என் பகைவர்களை நான் போரில் முறியடிக்காவிட்டால் மாங்குடி மருதன் முதலான சிறப்புடைய புலவர்கள் என் நாட்டைப் பாடாமல் நீங்கும் தாழ்வு அடைவேனாக என்று பாண்டிய நெடுஞ்செழியன் கூறியுள்ளான். என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று விளக்குகிறது. இவ்வாறு மக்கள், மன்னன், சமூகம் என்ற கட்டமைப்போடு பண்டைத் தமிழர் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்க்கையில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் முகிழ்ந்தன.

பண்டைக்கால சமுதாயத்தில் மக்கள் வேறுபாடின்றி ஒற்றுமையுடன் காணப்பட்டனர். பசியும், பிணியும் நீங்கி வளமான வாழ்க்கை வாழ்ந்தனர். சாதி, இன வேற்றுமை இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நானிலப்பகுப்பும், பரதவர் எயினர், ஆயர் போன்ற குடிமுறைகளும் நிலவின மேலை நாட்டினர் தமிழகத்தை நாடி வந்து வாணிகம் நடத்தும் அளவிற்குத் தமிழகம் வளம் செழித்து காணப்பட்டது. எல்லா வளமும் பெற்றுத் திகழ்ந்தது. உரிமையோடு வாழ்ந்ததால் மக்கள் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று விளங்கினர் என்பது தெளிவு.

மக்கள் மன்னனிடத்தில் செல்வாக்குப்பெற்று விளங்கியதுபோல், புலவர்களும் மன்னனிடத்தில் செல்வாக்குப்பெற்று விளங்கினர். மன்னர்களால் புலவர்கள் உயர்வாகவே கருதப்பட்டனர். இவ்வகையில் சேர சோழ பாண்டியர்கள் வீரம் பொருந்தியவர் போரைக்கண்டு புறமுதுகிட்டு ஓடாதவர்களாகவும் மக்களிடத்தும் புலவரிடத்தும் அன்பு நிரம்பியவர்களாகவும் நீதிக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருந்தனர்களாகவும் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் ஔவையார் அஞ்சாமல் பேசியது.

பேகனின் குடும்ப வாழ்க்கைக்காக கபிலர். பெருங்குன்றூர் கீழார், பரணர் பாடிய பாட்டுகள், பாரி இறந்தபோது பாரி மகளிருக்காக கபிலர் வாழ்க்கையை அற்பணித்தல், நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் ஏற்பட்ட பகைமையைக் கோவூர்கீழார் கழைய முற்பட்ட நிகழ்வு ஆகியன சான்றாக அமைகின்றன. மன்னர்கள் புலவர்களின் அறிவுரைக்கும், அறவுரைக்கும் செவிக்கொடுத்துப் பணிந்திருக்கிறார்கள். இவ்வாறு, புலவர்கள், மன்னர்களாலும், வள்ளல்களாலும் போற்றப்பெற்று உயர்த்தப்பட்டனர். மக்களும் மன்னர்களைப் போற்றியதை விட மிகுதியாகப் புலவர்களைப் பொற்றினர், மதித்தனர். எனவே, இச்சங்க காலத்தில் புலமைக்கு மதிப்பு இருந்தது, தமிழ்மொழி வளம், சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது. பிறமொழிச் செல்வாக்கு முற்றிலும் இல்லை அரசியலே தலைமை வகித்தது மற்றும் சமூகம், பொருளாதாரம், சமயம் ஆகியன சிறந்திருந்தது. பிறமொழி, நாட்டினர் ஊடுருவல் இன்றி காணப்பட்ட அமைதியான சூழ்நிலையில் காதல், வீரத்தை மட்டுமே பாடுபொருளாகக் கொண்ட கவிதைகள் எழுந்தன. இவ்வாறு தனித்தனியே வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட கவிதைகளைப் பொருள் அடி வரையறை அடிப்படையில் தொகுக்கப்பட்டுப் பெறப்பட்டன. அவ்வாறு தொகுக்கப்பட்டுச் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்களே ! இச்சங்கம் குறித்து இனி அறியலாம்.

### 1.1.1 சங்கம்

சங்க காலத்தில் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகமாத்திகழும் தமிழ் நாட்டில் தமிழ் சிறப்பாக வளர்த்தவர்கள் பாண்டியர்கள்தான் இவர்கள் தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காகச் சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்தனர் என்பது வரலாற்று உண்மை. இருப்பினும் ‘சங்கம்’ என்ற சொல்லே தமிழ்ச்சொல் இல்லை. சங்கம் என்ற ஓர் அமைப்பு நிலவியது என்பதே பொய் என்றும், இறையனார் களவியல் உரை கூறும் சங்கம் பற்றிய செய்திகள் புனையப்பட்ட ஒன்று என்றும் கே.என் சிவராச பிள்ளை, பி.டி. சீனிவாச ஐயங்கார் போன்றோர் கூறுகின்றனர்.

கி.மு 3-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள், பிராமி எழுத்தால் எழுதப்பட்டிருப்பதாலும் முதல், இடைச்சங்க நூல்கள் கிடைக்கப் பெறாததாலும் கடைச்சங்கம், மட்டுமே இருந்தது என்று கே.எஸ் நீலகண்ட சாஸ்திரி, வையாபுரிபிள்ளை போன்றோர் கூறுவர். இறையனார் களவியல் உரை உரையாசிரியர் சங்க இலக்கியங்கள், செப்பேடுகள் கல்வெட்டுகள் போன்ற பிற சான்றுகளின் குறிப்புகளைக்கொண்டு முச்சங்கங்கள் இருந்தன என்பர். உ.வே.சா, கா.சு பிள்ளை போன்றோர், புணர்ப்பு கூடல், அவையம், துறை, தொகை என்னும் பெயர்களால் சங்கம் என்ற அமைப்பு இருந்தன என்பர். சங்கம் இருந்தமைக்குப் பின்வரும் சான்றுகள் உள்ளன. 1.இலக்கியச் சான்றுகள், 2. பிறர் குறிப்பு, கல்வேட்டு போன்ற புறச்சான்றுகள் முதலியன.

### 1.1.2 இலக்கியச்சான்றுகள்

1. இமிழ்குரல் முரசம் மூன்றுட னாளுந்
   
   தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே (புறநானூறு 78:13-16)
2. நிலனாவிற் றிரிதருஉ நீண்மாடக் கூடலார்
   
   புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றே(கலித்தொ 85,7-18)
3. தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்
   
   மகிழ்நனை மறுகின் மதுரை (சிறுபாணாற்றுப்படை 66, 67)

4. தண்டமிழ் வேலித் தமிழ் நாட்டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ் பூத்தல் அல்லது
குன்றுதல் உண்கோ மதுரை (பரிபாடல் - மதுரை-3)

5. தென் தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை (சிலம்பு 10.58)

6. சங்க முகத்தமிழ் (திருமங்கை ஆழ்வார்)

7. சங்கத் தமிழ் மாலை முப்பதும் (ஆண்டாள்)

8. தலைச்சங்கப் புலவனார் தம்முன் (சேக்கிழார்)

9. சங்கத்தமிழ் மூன்றும் தா (அவ்வையார்)

10. தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்(மணிமேகலை 15.139)

11 நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
(திருநாவுக்கரசர். தேவாரம் 6 : 76–3)

12. சங்கத் தமிழ் (திருப்பாவை - 30)

13. சங்க முகத்தமிழ் (பெரிய திருமொழி 3:4 -10)

இவ்விலக்கியச் சான்றுகளும் இன்னும் பிற இலக்கியச் சான்றுகளும் சங்கம் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

### 1.1.3 கல்வெட்டுச்சான்று

தாலமி, பிளைணி போன்றோர் தங்கள் நூல்களில் சங்கத்தைப்பற்றி குறிக்கின்றனர். ஈழ நாட்டு வரலாறு கூறும் நூல்களாம் மகாவம்சம் இராஜ ரத்னாகிரி முதலியன சங்கமிருந்தமையைச் செப்புகின்றன பெரிப்புளுஸ் நூலிலும் சங்கம் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.வாழ்மீகி இராமாயணமும், வியாசர் பாரதமும் சங்கமிருந்த கபாடபுரம் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. மஹாபாரதம் தமிழ்ப்படுத்ததும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்று சென்னை அரசாங்கக் காட்சிச் சாலையிலுள்ள சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிக்கின்றன.

### 1:2 முச்சங்கங்கள்

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளும் கல்வெட்டுச்சான்றுகளும் பன்னெடுங்காலமாக மூன்று சங்கங்கள் இருந்தன என்பதைத் தெளிவு படுத்துகின்றன. பின்வந்த உரையாசிரியர்கள் மறவாமல் இவற்றினுக்கு அணிசெய்து பேசுகின்றனர். சங்கப்பாடல்கள், பல இடங்களில் பல்வேறு காலங்களில் வாழ்ந்தோர் பாடியவையாக இருந்தாலும். இவை, சங்கத்தில் படியெடுத்து வைக்கப்பெறாவிடின், எங்ஙனம் தொகையாகவும் பாட்டாகவும் தொகுக்கப்பட்டிருத்தல் கூடும், இந்நூல்களே சங்கமிருந்தமைக்குச் சான்றுகளாகவும் விளங்குகின்றன. முதன் முதல் சங்கம் பற்றிய குறிப்பு, கி.பி 7ஆம் நூற்றாண்டைய நாவுக்கரசர் தேவாரத்தில்தான் வருகிறது.

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழ்தருமிக் கருளி னோன்காண்
(திருநாவுக்கரசர் தேவாரம் - 3)

என்னும் கூற்றிலிருந்து அறியலாம். இதற்கடுத்து சங்கம் பற்றிய முழு விவரம் கி. பி 11, 12 ஆம் நூற்றாண்டைய இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரையால் அறிகிறோம் பாண்டிய நன்நாடுடைத்து நல்லத் தமிழ் என்று

பாடினார். அவ்வையார். பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்து புலவர்களுக்கு ஊக்கம் ஊட்டி புதிய நூல்களின் ஆக்கத்திற்கான தொண்டினைச் செய்தார்கள், இவர்கள் நிறுவிய சங்கம், 1.முதற்சங்கம் 2. இடைச்சங்கம் 3. கடைச்சங்கம் என மூவகைப்பட்டதாகும்.

### 1.2.1 முதற் சங்கம்

இச்சங்கம், குமரிக்குத் தென்பால் தென்மதுரையில் (கடல் கொண்ட மதுரை) நிலவியிருந்தது இது கடல்கோலால் அழிந்தது என்றும் இச்சங்கத்தில் அகத்தியர். திரிபுரமெரிந்த விரிசடைக் கடவுள். குன்றெரிந்த முருகவேல், முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் முதலிய 549 உறுப்பினர்கள் உட்பட, 4449 புலவர்கள் இருந்தனர். இப்புலவர்களுள் அரசர் மற்றும் அரச புலவர்கள் காய்ச்சினவழுதி முதலாக, கடுங்கோண் ஈறாக 89 பேர் இருந்தனர். இதில் 7 பேர் பாண்டிய மன்னர்கள், அவர்களால் பாடப்பெற்றவை பரிப்பாடல், முதுநாரை, முதுகுருகு களவியலுரை முதலான நூல்கள் இச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலவியிருந்தது என்றும் அகத்தியமே இச்சங்கத்திற்கு இலக்கண நூலாகப் பின்பற்றபட்டவை என்றும் களவியல் உரை கூறுகின்றது.

### 1.2.2 இடைச்சங்கம்

இச்சங்கம் கபாடபுரத்தில் நிறுவப்பட்டது இதுவும் கடல்கோளால் அழிந்தது. இடைச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி, மோரி, வெளஊரக் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன், மாரன் கீரந்தை உள்ளிட்ட 59 உறுப்பினர்கள் வீற்றிருந்தனர். 3700 புலவர்கள் இடம்பெற்றனர். அவர்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலிய நூல்களை இயற்றினார்கள். இச்சங்கத்திற்கு அகத்தியமும், தொல்காப்பியமும் இலக்கண நூல்களாய் விளங்கின இச்சங்கம் 3700 ஆண்டுகள் நிலவியிருந்தது என்றும் இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. வெண்டேய் செழியன் முதல், முடத்திருமாறன் வரை 59 புரவலர்கள் இருந்தனர். இடைச்சங்கத்தில் பாண்டிய மன்னர்கள் ஐந்து பேர் இருந்தனர் என்று கூறுகிறது.

### 1.2.3 கடைச்சங்கம்

இச்சங்கத்தில் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தவர்கள் சிறு மேதாவியாரும் சேந்தம் பூதனாரும், அறிவுடையனாரும், பெருங்குன்றூர் கீளாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் மருதநில நாகனாரும், கனக்காயனார் மகனார் நக்கீரனாரும் முதலாகிய 449 புலவர்கள். அவர்களால் பாடப்பெற்றவை நெடுந்தொகை, கலித்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல் முதலியன. இச்சங்கத்திற்கு இலக்கண நூலாய் விளங்கியன அகத்தியமும், தொல்காப்பியமும் ஆகும். இச்சங்கம் 1800 ஆண்டுகள் நிலவியிருந்தது. கடைச்சங்கம் நிறுவப்பட்டது உத்தர மதுரை (இன்றுள்ள மதுரை) என்றும், இச்சங்கத்தில் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெரு வழுதி முடிய 49 புரவலர்கள் வீற்றிருந்தனர் என்றும். சங்க உறுப்பினர்கள் 49 பேர் என்றும் களவியல் உரை கூறுகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துத் தமிழுக்கு இணையில்லா தொண்டு செய்திருக்கின்றார்கள் என்பதை இறையனார் அகப்பொருள் வழி அறியமுடிகின்றது. நமக்குக் கிடைக்கும் பெரும்பாலான சங்க நூல்கள் கடைச்சங்ககாலத்தில் தோன்றியவை ஆகும்.

சங்கப் பாடல்கள் தோன்றிய காலத்தை நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. தொகுக்கப்பெற்ற காலத்தையே சங்க காலம் என்று வரையறுத்துக் கூறுகிறோம். சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம் முதல்

தொகுக்கப்பெற்ற காலம் வரை அமைந்த நல்ல பாடல்களின் தொகுதிகளே பாட்டும் தொகையுமாகும். சங்கப் பாக்களின் தொகை 2381, பாடிய புலவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 500 பேர் பெயர் தெரியாத புலவர்கள் 102 பேர் என்பதாகும்.

### 1:3 பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் (சங்க நூல்கள்)

பாட்டும் தொகையும் எனப் போற்றப்பெறும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் தமிழரின் வாழ்க்கையை உள்ளங்கை நெல்லிக்கனிப்போல காட்டுபவையாகும். இவற்றை, பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்றும் குறிப்பர். இந்நூல்களை, குறைந்த அடிகளைக்கொண்டவை, நிறைந்த அடிகளைக் கொண்டவை எனத் தனித்தனியாகத் தொகுத்தனர். இவ்வாறு, தொகுக்கப்பட்ட நூல்கள் குறித்துப் பின்வருமாறு காணலாம்.

#### 1.3.1 எட்டுத்தொகை

பழந்தமிழரின் அகவாழ்வையும், புறவாழ்வையும் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுபவை எட்டுத்தொகை என்னும் தொகைநூல்கள் ஆகும். இந்நூல்களைப் பழமையான பாடல் ஒன்று பின்வருமாறு தொகுத்துக் கூறுகின்றது

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்தப் பதிற்றுப்பத்து ஓங்குபரிபாடல்

கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று

இத்திறத்த எட்டுத்தொகை

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை எட்டுத்தொகை நூல்கள். இவற்றுள், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும் அகப்பொருள் பற்றியவை, புறநானூறு, பதிற்றுப்பத்து என்ற இரண்டும் புறப்பொருள் பற்றியவை. பரிபாடல் அகம், புறம் பற்றியது.

##### 1.3.1.1 நற்றிணை

நாநூறு அகப்பாக்களால் ஆனது. இந்நூல், நற்றிணை நாநூறு எனவும் போற்றப்படுகிறது, எட்டுத்தொகை நூல்களுள் முதற்கண் வைத்து கூறப்பட்டுள்ளது. இதன் சிற்றெல்லை 9 அடி பேரெல்லை 12 அடியாக அமைந்திருக்கின்றன. இந்நூலைத் தொகுத்தவர் யாரென்று தெரியவில்லை, தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியார். 'திணை' என்ற சொல் அகப்பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த பெயராகும். 'திணை' என்ற பெயரோடு நல் என்னும் அடையும் சேர்ந்து நற்றிணை என வழங்கப்படுகிறது. இந்நூலுக்குப் பின்னத்தூர் நாராயனசாமிஐயர் உரை எழுதியுள்ளார்.இதுவே மிகப் பழைய உரையாகும். நற்றிணைப் பாடிய புலவர் 175 பேர். பாரதம் பாடிய பெருந்தேவனாரின் திருமால் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. நற்றிணையின் அகச்சுவை கெழுமிய பாடல்களில் மக்கள் அகவாழ்வு, மன்னர் கொடை, ஆட்சித்திறம், ஒருமைப்பாடு, பழந்தமிழர் பழக்க வழக்கங்கள், ஊமைத்திறம், உள்ளுறை, இறைச்சிப் பொருள்களின் அமைப்பு, கருத்து ஆழம் முதலியவற்றை அறியலாம்.

நீர் எவ்வாறு உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததோ, அவ்வாறே, நான் ஊயிருடன் இயங்குவதற்க்குத் தலைவனது அருள் தோய்ந்த அன்பு நெஞ்சம் இன்றியமையாதது ஆகும் என்று சங்க காலத்து தலைவி கூறுகிறாள். காட்டாக,

நீரின்  றமையா உலகம் போலத்

தம்மின் றமையா நந்நயந் தருளி. (1 : 6-70

என்னும் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

மேலும், இரவில் விருந்தினர் வந்தாலும் முகம் கோணாமல் மனைவியானவள் கணவனுடன் மனமகிழ்ச்சியுடன் விருந்தினர்களை வரவேற்று விருந்து கொடுக்கும் செய்தியை மற்றொரு பாடல் வெளிப்படுத்துகிறது.காட்டாக,

அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின் மெல்லியல் (142 : 9-10)

என்னும் பகுதியால் அறியலாம். உண்மையான செல்வம் என்பது எது? என்பதற்கு நற்றிணை பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது. அதாவது,

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே

என்பதாம். தன்னைச் சார்ந்திருப்பவர்களின் துன்பத்தைத் துடைப்பதே அக்காலச் சான்றோர்கள், பெரும் செல்வமாகக் கருதினர்.

தலைவனைப் பிரிந்துத் துன்பத்தால் பசலைப் படர்ந்து, மெலிந்து காணப்படும் தலைவி, தன் பிரிவு ஆற்றாமையைத் தோழியிடம் நெஞ்சம் நெகிழுமாறு கூறுகிறாள். இறப்பதற்கு நான் அஞ்சவில்லை, மறு பிறப்பில் தலைவனை மறக்க நேருமோ என்று அஞ்சுகிறேன் என்னும் உண்மைக் காதலின் தன்மையை

சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்

பிறப்புப் பிரிவதா குவதா யின்

மறக்குவன் கொல்லென் காதலன் எனவே

என்னும் ஆழ்ந்த காதலின் இயல்பை வெளிப்படுத்துகிறது.

செல்வம் மிகுந்த வீட்டில்  பிறந்து, செல்வச் செழிப்புடன் வாழ்ந்த பெண் ஒருத்தி தான் புகுந்த இடத்தில் காணும் வருமையைப் போக்கப் பிறரை நாடுதல் இல்லை என்னும் சிறந்த  பண்பை

கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்

கொடுத்த தாதை கொழுஞ்சோ றுள்ளாள்

என்னும் வரிகள் வெளிப்படுத்துகின்றன. இதுபோன்ற பகுதிகள், தமிழர் வாழ்க்கையின் மேன்மைத் திறத்தைக் காட்டுகின்றன. இவ்வாறு தொகை நூல்களில் முதன்மையில் வைத்து எண்ணப்பெரும் நற்றிணை பல சிறப்புக் கூறுகளைக் கொண்டு தமிழுக்குப் பெருமை சேர்க்கிறது.

**1.3.1.2 குறுந்தொகை**

எட்டுத்தொகை நூல்களுள் முதன் முதலில் தொகுக்கப்பட்டது எனக் கருதப்படுவது குறுந்தொகை. இது, நல்ல குறுந்தொகை எனப் பாராட்டப்படுகிறது. இதன் சிற்றெல்லை 4 அடி பேரெல்லை 8 அடி. இந்நூல் பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்டது. பாடிய புலவர்கள் 205 பேர். இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்ட தொகைநூல் இதுவேயாகும். இந்நூலில் முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும் இறுதி 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதியுள்ளனர். இப்பொழுது

அப்பழைய உரைகள் கிடைக்கவில்லை.. இந்நூளுள் காணப்படும் பரணர் பாடல்களுள் பெரும்பாலானவற்றில் வரலாற்றுக் குறிப்புகளைக் காண்கிறோம்.

இனம், மொழி, நாடு கடந்து எங்கேயோ வெவ்வேறிடத்தில் பிறந்த தலைவனும் தலைவியும் ஒன்றுபட்ட கருத்தில் காதலில் திலைத்தனர். அதேபோல், இவர்களுடைய தாயும் தந்தையரும் ஒருவரையொருவர் அறிந்ததில்லை. ஆயினும், முன் பின் தெரியாத இவரகள்(தலைவன் தலைவி) இன்று காதலில் ஒன்றுபட்ட நிலை, செம்மண் நிலத்தில் மழைநீர் கலந்து மழைநீரையும் செம்மண்ணையும் பிரிக்கமுடியாததுபோல ஒன்றுபட்ட தலைவன் தலைவியின் உள்ளார்ந்த அன்பையும் பிரிக்க முடியாது என்பதாம். மழைநீர் மண்ணின் நிறத்தினைப் பெருகின்றதோ அதுபோன்று, அன்பால் பிணைந்த நெஞ்சம் இரண்டும் ஒன்று கலந்தன என்று உரைக்கப்பட்டுள்ளது, காட்டாக,

யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர்ப்போல

அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே

என்னும் பாடலைக் கொண்டு அறியலாம். மேலும்,

வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்

என்ற குறுந்தொகை, அடிகள் ஆண். பெண் இருபாலர் வாழ்வினையும் குறிக்கின்றன. மேலும்,

இம்மை மாறி மறுமை யாயினும்

நீயா கியர்என் கணவனை

யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே

என்று கூறும் தலைவியின் உயர்ந்த உள்ளப்பாங்கையும் காணலாம்.இதுமட்டுமல்லாமல் ஆழ்ந்த அன்பின் திறத்தை, அறியைப் பொருட்களைக் கொண்டும் வெளிப்படுத்துகிறது. குறுந்தொகைப் பாடல் ஒன்று, 'மலைச்சாரலில் ஆண் குரங்கு இறந்ததைக் கண்டு ஆற்றாத பெண் குரங்கு தன் இளைய குட்டியைச் சுற்றத்தாரிடம் ஒப்படைத்துவிட்டு மலையின் உச்சியிலிருந்து வீழ்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறது என்னும் செய்தியைக்

கருங்கண் தாக்கலை பெரும்பிரி துற்றெனக்

கைமை யுய்யாக் காமர் மந்தி

கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி

ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செருக்கும்

என்னும் குறுந்தொகைப்பாடல் கூறுகிறது. இப்பாடல் உணர்த்தும் கருத்து, இத்தன்மைக்கொண்ட மலைச்சாரலில் வாழும் தலைவனே உன் உயிருக்கு ஏதேனும் துன்பம் நேரிடின் உன் தலைவியும் அவ்வாறே உயிரை மாய்த்துக்கொல்வாள் என்பதாம். இக்கருத்துகள் மட்டுமல்லாமல் பல்வேறு பாடல்களில் நீதிக்கருத்துகளும் பொதிந்து கிடப்பதைக் காணலாம். உவமை, உள்ளுறை, இறைச்சி ஆகிய குறிப்புப் பொருள்கள் குறுந்தொகைப் பாடல்களில் ஏறாலமாகக் காணக்கிடக்கின்றன.

### 1.3.1.3 ஐங்குறுநூறு

திணை ஒன்றுக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்திணைகளுக்கு 500 பாடல்களைக் கொண்டது. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் சிவபெருமானைப்பற்றியது கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இப்பாடல்கள் 3 அடி சிற்றெல்லையும் 6 அடி பேரெல்லையும் கொண்டது. அடிவரையரைக் குறைந்த நூறு நூறு பாக்களால் இது ஐந்திணை ஒழுக்கங்களைத் தனித்தனியே சிறப்பித்தலால் ஐங்குறுநூறு என்ற பெயர் பெற்றது. இப்பாடல்கள் அகவற்பாக்களால் ஆனது. ஆதன் அவினி போன்ற மலைநாட்டு வேந்தர் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.. ஐந்து திணைகளையும் பாடிய புலவர்களைப்பற்றிய பழைய வெண்பா ஒன்று எத்திணை ஒழுக்கப் பாடல்களுக்கு எப்புலவர் சிறந்தவர் என்று கூறுகிறது.

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லைப் பேயன்
நூலையோ தைங்குறு நூறு

மருதத்திணைக்கு ஓரம்போகியார், நெய்தல் திணைக்கு அம்மூவனார், குறிஞ்சித்திணைக்குக் கபிலன், பாலைத்திணைக்கு ஓதலாந்தையார், முல்லைத் திணைக்குப் பேயனார் என்ற சிறப்பைக் காட்டுகிறது.. இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூரக்கீழார் என்பவர். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தலிருஞ்சேரலிரும்பொறை என்பவராவர். ஐங்குறுநூற்றில் வாழ்வியல், உலகியல் கருத்துகளைச் செவ்விதின் காணலாம்.காட்டாக,

நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
விளைக வயலே வருக இரவலர்
பால்பல ஊறுக பகடு பல சிறக்க
பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
பசியில் லாகுக பிணிசேண் நீங்குக
வேந்து பகை தணிக யாண்டுபல நந்துக
அறம் நனி சிறக்க அல்லது கெடுக.
அரசு முறைசெய்க கணவில் ஆகுக
நன்று பெரிது சிறக்க தீதில் ஆகுக
மாரி வாய்க்க வளநனி சிறக்க

என்னும் பாடல் சங்ககாலச் சான்றோர்கள், நாடு வளமோடும். வாழும் மக்கள் துன்பமின்றியும் வாழவேண்டும் என்னும் வேட்கைக் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துகிறது.

### 1.3.1.4 பதிற்றுப்பத்து

இந்நூல், பத்து சேர அரசர்களைப்பற்றி பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாடல்களில் பாடினர். எனவே, இது பதிற்றுப்பத்து எனப் பெயர் பெற்றது. முதற் பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. இப்பாடல்கள் அகவற்பாவாலானது. இது புறப்பொருள் நூல் என்பதாகும்.

இப்பாடல்களில் 2-ஆம் பத்து இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் பாடியது. 3–ஆம் பத்து பல்யானைச் செல்கெலு

குட்டுவனைப் பாலை கௌதமனார் பாடியது. 4 – ஆம் பத்து களங்காய்க் கண்ணினார் முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. 5 – ஆம் பத்து கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது. 6 –ஆம் பத்து ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார் பாடியது 7 – ஆம் பத்து செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. 8 – ஆம் பத்து தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கீழார் பாடியது. 9 – ஆம் பத்து இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்கீழார் பாடியது.

சேர நாட்டின் வளத்தினை .

கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்கண் எருமை நிரைத் தடுக்குநவும்
கலிகெழு துணங்கைப் யாடிய மருங்கின்

என்னும் பாடல் கொண்டு அறியலாம். மேலும்,நானிலத்துப் பொருள்களும் சேர நாட்டில் வளம்பெற்று விளங்கிய செய்தியை

கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவு அறுபறியா முழுவுமிழ் மூதூர்

என்னும் வரிகள் விளக்குகின்றன.வெளிநாட்டுப் பொருள்கள் சேர நாட்டுக்கு வந்த செய்தியையும் கூறுகிறது.

சேர மன்னர்கள் மற மேம்பாட்டில் சிறந்தவர்களாக விளங்கினர் சேர நாட்டு வீரர்களின் வீர மேம்பாட்டையும் வெற்றிச் சிறப்பையும்

மண்புனை யிஞ்சி மதிலக்கடந் தல்லது
உண்குவ மல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணியர் வயவர் பெருமகன்

என்ற பகுதியால் அறியலாம் ஆடுகோட்பாட்டச் சேரலாதனின் கொடைவளம்

வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்

என்ற பகுதியாலும் அறியப்படுகின்றன. அதாவது, பரிசிலர் வாரா காலத்தும் அவர்கள் இருக்கும் இடம் நாடித் தேடிப் பரிசில் வழங்கும் தன்மையுடையவன் என்பதாம்.

**1.3.1.5 பரிபாடல்**

ஓங்கு பரிபாடல் என்னும் தொடர், இந்நூலின் தன்மையை உணர்த்துகிறது. இது, காலத்தால் முந்தியது. பரிபாடல் என்னும் ஒரு வகைப் பாவினால் இயற்றப்பட்டதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. பரிபாடலில் திருமால், செவ்வேள் ஆகிய தெய்வ வழிப்பாட்டுப் பாடல்களும் வையை மதுரை ஆகிய இயற்கைக் காட்சிப்பாடல்களும் அமைந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய கூறுபாடுகள், இயற்கைக்காட்சி, இயல் நலங்கள், காதல் சிறப்பு, வீர மேம்பாடு, அன்பு, பண்பு, ஆடல், பாடல் ஆகியன இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கு உரை எழுதியவர் பரிமேலழகர். இந்நூலின் சிற்றெல்லை 25 அடி பேரெல்லை 400 அடி. மொத்தப் பாடல்கள் 70. இதில் நமக்குக் கிடைத்துள்ளவை 22. இவற்றுள் திருமாலுக்குரியவை 6, முருகனுக்கு உரியவை

8, வையைக்குரியவை 8 பாடல்களாகும். நாடக வழக்கிற்க்குச் சான்றாகப் பரிபாடலையும் கலித்தொகையையும் தொல்காப்பியர் எடுத்துக்காட்டுகிறார். காட்டாக,

கலியே பரிபாட்டு ஆயிருபாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்

இதனால், தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது பரிபாடல் என அறிய முடிகிறது. இந்நூல்

பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளினர்க் கடம்பி னொலிதா ரோயே (பரி – 5)

என்று முருகனைப் பரவுவது முதலான செய்திகளைக் கூறுகிறது.

**1.3.1.6 கலித்தொகை**

இந்நூல் கற்றறிந்தொர் ஏத்தும் கலி, கல்விவலார் கண்ட கலி என்னும் பெயர்களைப் பெற்றது. இது, நூற்றைம்பது பாடல்களைக் கொண்டது. ஐந்து திணைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. கலிப்பாவால் ஆனது. பா வகையால் பெயர் பெற்றது துள்ளலோசை மிகுந்து வந்தது. ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்களை, ஒழுகலாறுகளை இந்நூல் சிறப்பாகக் கூறுகிறது.

இதில், பாலைத்திணையைப்பற்றி 35 பாடல்களைப் பாடியவர் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ, குறிஞ்சித்திணையைப் பற்றி 29 பாடல்களைப் பாடியவர் கபிலர், மருதத்திணைப் பற்றி 35 பாடல்களைப் பாடியவர் மருதநில நாகனார், முல்லைத்திணைப்பற்றி 17 பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திறன், கடவுள் வாழ்த்துடன் நெய்தல் திணைக்குரிய 33 பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார். இலக்கண நூல்களில் கூறும் அகப்பொருள் பகுதிகளுக்கு, இந்நூல் இலக்கியமாய்த் திகழ்கிறது. கலித்தொகை, காதலின் உறுதியையும் நிலையான உண்மையையும் மனதில் நன்கு பதியுமாறு கூறுகிறது. காட்டாக,

பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கல்லதை
மலையுலே பிறப்பினும் மலைக்கவைதான் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கல்லதை
நீருளே பிறப்பினும் நீருக்கவைதான் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
ஏழ்புணர் இன்னிசை முதல்பவர்க்கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூடுங்கால் நும்மகள் நுமக்குமாங்கனையளே

என்னும் பாடல் தலைவி பிறந்த வீட்டைப் பிரிந்து புகுந்த வீட்டில் வாழ்க்கைப்படுதலை அறிவுறுத்துகிறது.மேலும்,

ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

செறிவெனப்படுவது மறைபிறர் அறியாமை

முறையெனப்படுவது கண்ணோடாது உயிர்வவ்வல்

பொறையெனப்படுவது போற்றாரைப் பொருதல்

என்னும் வரிகள் உதவுதல் , போற்றுதல், பண்பு, அன்பு, செறிவு, முறை, அறிவு ஆகியவற்றை சிறப்பாக விளக்குகிறது.

**1.3.1.7 அகநானூறு**

இந்நூல் அகம் என்ற பெயர் அமைந்த பழைய இலக்கிய நூல் இதுவொன்றே ஆகும். .இந்நூல் சிற்றெல்லை 13 அடி பேரெல்லை 31 அடிகளையும் கொண்டது இந்நூலைத் தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. .இது பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது. 400 பாடல்களைக் கொண்டது. இப்பாடல்களைத் தொகுத்தவர் மதுரை உப்புரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். கடவுள் வாழ்த்துப் பாடல் சிவபெருமானைப் பற்றியது. இந்நூல் நெடுந்தொகை என்ற வேறு பெயராலும் அழைக்கப்படுகிறது. இந்நூல் மூன்று பகுதிகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.1. களிற்றுயானைநிரை 2 மணிமிடைப்பவளம் 3. நித்திலக்கொவை என்பன. களிற்றுயானைநிரை முதல் 120 பாடல்களையும் மணிமிடைப்பவளம் அடுத்த 180 பாடல்களையும் நித்திலக்கொவை இறுதி 100 பாடல்களையும் உள்ளடக்கியது..

1, 3, 5, 7, 9 முதலான ஒற்றை எண்பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும் 2, 8, 12 முதலான எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும் 14 என நான்கை ஒட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும் 6, 16 முதலான ஆறு எண் பெற்றவை மருதத் திணையாகவும் 10, 20 எனப் பத்துகளாலான எண் பெற்றவை நெய்தல் திணையாகவும் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூல் அறிய வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டது. பண்டைத் தமிழரின் திருமணச் செய்திகளும் பெரும்பான்மையாக உள்ளன.பண்டைத் தமிழர் திருமணத்தின்போது நல்ல நாள், நல்ல நட்சத்திரம் பார்த்து கடவுளை வணங்கித் திருமணச் சடங்குகள் செய்தனர். காட்டாக,

அங்கன் இருவிசும்பு விளங்கத் திங்கள்

அகடம் அண்டிய துகடீர் கூட்டத்துக்

கடிநகர் புணைந்து கடவுட் பேணி

என்னும் பகுதி சடங்கு பற்றிய நிகழ்வை விளக்குகிறது. மேலும், பண்டைத்தமிழர் வணிகச் சிறப்பை

யவணர் தந்த விளைமாண் நன்கலம்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும் (அகநா – 148)

என்னும் வரிகள் விளக்குகின்றன.

**1.3.1.8 புறநானூறு**

கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது. முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர்கிழார் இறுதியாகப் 157 புலவர்கள் புறநானூறுப் பாடல்களைப் பாடியுள்ளனர். புறம் பற்றிய 400 பாடல்களின் தொகுப்பே புறநானூறு ஆகும். இந்நூல் அகவற்பாக்களால் அமைந்தது. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும்

தொகுப்பித்தோர் பெயரும் தெரியவில்லை பாக்களில் அமைந்துள்ள அடிகளின் சிறுமை, பெருமை எல்லைகளும் தெரியவில்லை இதற்குப் புறம், புறப்பாட்டு என்னும் வேறு பெயர்களும் உண்டு.

இந்நூல் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற புறப்பொருட் கருத்துகளைத் தழுவி அமைந்த செய்யுள்களைக் கொண்டது. பண்டைத் தமிழகத்தையாண்ட சேர, சோழ, பாண்டியர், என்னும் முடியுடை மூவேந்தர்கள் சிற்றரசர்கள், வேளிர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள், கொடை, மக்கள் வாழ்க்கை முறை, உணவு, உடை, நடை முதலிய பல செய்திகளைக் கூறும் வரலாற்றுப் பெரு நூலாகப் புறநானூறு திகழ்கின்றது. நான் தமிழ் இலக்கியத்தின்பால் ஆர்வம்கொண்டதற்குப் புறநானூறு ஏற்படுத்திய தாக்கமே காரணமாகும். என்று ஜி யு போப் கூறுகிறார். இவர் புறநானூற்றில் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்துள்ளார். புறநானூறு பண்டைய மன்னர்கள் போர் நிகழ்வில் அறநெறியினைக் கடைப்பிடித்ததை நெட்டிமையார் என்னும் பெண்பாற் புலவர்

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்

தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்

என்று பாடுகிறார். மேலும், உலக ஒருமைப்பாட்டுணர்வை கணியன் பூங்குன்றனாரின்

யாதும் ஊரே யாவரும் கேளீர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

என்னும் பாடல் வெளிப்படுத்துகிறது.மேலும்,

உண்பது நாழி உடுப்பவை இரண்டே (புறநானூறு – 1895)

என்னும் இக்கூற்று, தாழ்ந்தோருக்கும், உயர்ந்தோருக்கும், ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் தாங்கள் உண்ணும் உணவு சிறிதளவே. உடுப்பதோ மேலாடை, கீழாடை என்னும் இரண்டு மட்டுமே. ஆகையால் எவ்வளவு செல்வங்கள் சேர்ப்பினும் பண்பாடற்று கிடக்கும் .அதனால், என்ன பயன்? செல்வம் சேர்த்தல் பிறருக்கு ஈதலுக்காகவே என்பதாம்.மேலும்,

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமீன் (புறம் 195 : 6-7)

என்னும் கூற்று பிறருக்கு நல்லது செய்யவில்லையாயினும், தீமை செய்யாதிருப்பதே சிறந்த அறமாகும் என்று கூறுகிறது.

இந்நூலில், வானநூல் கருத்துகள் சில புலவர்கள் பாடல்களில் இடம் பெற்றிருப்பது நம் முன்னோர் அறிவினை வியக்கத் தூண்டுகிறது. செல்வத்துப் பயனே ஈதல் என்ற அரசர்களும்

பீடின் மன்னர்ப் புகழ்ச்சி ஆவண்டிச்

செய்யா கூறிக் கிளத்தல்

எய்யா தாகின்றுஎம் சிறுசெந் நாவே

என்று புலவர்களும்

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

என்று மக்களும் பண்டைக்காலத்தில் வாழ்ந்த வாழ்வு புலனாகின்றது.

மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நறீஇத் தாமாய்ந் தனரே

என்பதற்கு இலக்கியமாகப் பழந்தமிழர் வாழ்ந்தனர் என அறிகிறோம்.

**1.3.2 பத்துப்பாட்டு**

எட்டுத்தொகை நூல்களுக்கடுத்து முறையாக வைத்து எண்ணப்படுவது பத்துப்பாட்டாகும்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்னும் பழஞ்செய்யுள் பத்துப்பாட்டு நூல்கள் எவை என்ற பட்டியலைக் கூறுகிறது. பத்துப்பாட்டின் சிறப்பு, ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற்றெரிந்து சான்றோருரைத்தத் தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டும் என்ற நச்சினார்க்கினியர் உரை சிறப்புப் பாயிரத்தால் அறிய முடிகிறது. மேலும், பத்துப்பாட்டின் பெருமையைப் பறைசாற்றும் வகையில்,

பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே

என்று மனோன்மணியம் பாடல் வரிகள் பறைசாற்றுகின்றன.

பத்தப்பாட்டினுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியன அகப்பொருள் பற்றியன மற்ற ஏழு பாட்டுகள் புறப்பொருளைத் தழுவியன அவற்றுள் ஐந்து பாட்டுகள் ஆற்றுப் படை நூல்கள், பரிசு பெற்றுத் திரும்புகிற பாணன், கூத்தன் முதலியோர் தாம் எதிர்ப்படுகின்ற தம் இனத்தைச் சார்ந்த இரவலனைத் தாம் பரிசில் பெற்ற வள்ளலிடம் வழிப்படுத்துதலே ஆற்றுப் படையாகும்

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்

என்னும் பாவிலிருந்து அறியலாம். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடு கடாம்) ஆகியன ஆற்றுப்படை நூல்கள்.

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய இரண்டினையும் நக்கீரரும் பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய இரண்டினையும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரும், மதுரைக்காஞ்சியை மாங்குடி மருதனாரும் சிறுபாணாற்றுப்படையை நல்லூர் நத்தத்தனாரும், குறிஞ்சிப் பாட்டைக் கபிலரும், மலைபடு கடாம் என்னும் நூலைப் பெருங் கௌசிகனாரும், முல்லைப் பாட்டினை நம்பூதனாரும் பாடியுள்ளனர்.

### 1.3.2.1 திருமுருகாற்றுப்படை

இந்நூலை இயற்றியவர் நக்கீரர். பத்தப்பாட்டில் முதலாவதாகக் கூறப்படும் நூல். இது புலவராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது. 317 அடிகளையுடையது, ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. சைவர்கள், முருகன் திருவருள் வேண்டி நாள்தோறும் பாராயணம் செய்யும் நூல் திருமுருகாற்றுப்படை. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

முருகப்பெருமான் கோயில் கொண்டிருக்கும் தலங்களை இந்நூல் இனிமை தரும் வகையில் விளக்கி நிற்கின்றது. திருப்பரங்குன்றத்திலே முருகனின் தோற்றப் பொலிவும் திருச்சீரலைவாய் என்று அழைக்கப்படும் திருச்செந்தூரில் முருகப்பெருமான் ஆறுமுகமும் பன்னிருகையையும்கொண்டு அடியவர்களுக்கு அருள் வழங்குவதைப்போன்று யானைமீது எழுந்தருளியுள்ள காட்சியும், திருவாவினன்குடியில் தேவர்களும் முனிவர்களும் முருகனைப் போற்றிப் பாடுதலும், திருவேரகம் என்னும் சுவாமிமலையில் அந்தணர் பற்றிய செய்திகளும் அவர் வழிபாட்டு முறைமையும் சிறப்புற விளக்கப்படுகின்றன. குன்றிலே வாழும் குறவர்களின் வாழ்வு உணர்த்தப்படுகிறது. ஆறாவது படைவீடாகிய பழமுதிர்ச்சோலையில் அடியவர்கள் மேற்கொள்ளவேண்டிய தவநெறியினையும், அவர்களுக்கு முருகன் அருள் வழங்கும் தன்மையினையும் விளக்குகிறது.

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே

என்று அருவி பாயும் பழமுதிர்சோலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைச் சிறப்பிக்கிறது. எந்த இடத்தில் பக்தர்கள் முருகனை நினைத்து வழிபடுகிறார்களோ அந்த இடத்திலே முருகப் பெருமான் காட்சியளிப்பான் திருமுருகாற்றுப்படை பிற்கால பக்தி இயக்க வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது. வீடு பேற்றினை வேண்டியவர்களுக்கு முருகப் பெருமான் அருளும் தன்மையினை நக்கீரர் பின்வருமாறு கூறுகிரார்.

மணங்கமல் தெய்வத்து இளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவனின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒரு நீ ஆகத்தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி (திருமு: 290-5)

என்னும் பாடல் விளக்குகிறது. .

### 1.3.2.2 பொருநராற்றுப்படை

இந்நூல், சோழ மன்னன் கரிகாற்பெருவளத்தானைப் பற்றியது. பாடியவர் முடத்தாமக் கண்ணியார். பரிசில் பெற்ற பொருநன், பரிசில் பெறவிழையும் பொருநனை ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது. இந்நூல் இசையோடு அமைய வஞ்சியடிகள் இடையிடையே வந்த ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. 384 அடிகளைக் கொண்டது. .ஏர்க்களம், போர்க்களம். பரணி, பற்றிய செய்திகளைக் கூறுகிறது. பாட்டுடைத் தலைவனின் பெருமையினையும் கொடை சிறப்பினையும் பொருநர் சுவைபடக் கூறுகின்றனர். விறலியர், பொன்னரி

மாலையைப் பெறுதலும், வற்றாது வளம் சுரந்து பாயும் பொன்னி நதியின் புதுப்புனல் வெள்ளமும் சுவைப்பட வருணிக்கப்படுகிறது. செல்வத்தின் செருக்கினையும் வறுமையின் வாட்டத்தினையும் அழகுற எடுத்தியம்புகிறது.

வருமைக் கோலத்தைக் காட்டும் ஈரும் பேனும் நிறைந்து காணப்படும் ஆடையைக் களைந்து கரிகாலன் அரவுரி அன்ன ஆடை அளித்ததைப் பொருநன்

ஈரும் பேனும் இருந்திறை கூடி

வேரொடு நனைந்த வேற்றிலை நுழைந்த

துன்னற் சிதாஅற் துவர நீக்கி

நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து

அரவுரி அன்ன அறுவை நல்கி

என்னும் பாடல், பெற்ற தாயைக்காட்டிலும் பரிந்து, தன்னளி செய்தான் கரிகாலன் எனப்பாராட்டுகிறான்.

ஆறலை கள்வர் படைவிட வருளின்

மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை

என்ற தொடர், இசையின் ஆற்றலைப் புலப்படுத்துகிறது. கரிகால் வளவன் பெயரும் வென்றியும்

வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்

என்னும் அடியால் சிறப்பிக்கப்படுகின்றன.

**1.3.2.3 சிறுபாணாற்றுப்படை**

இந்நூல் ஓய்மாநாட்டு நல்லியக் கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. 269 அடிகள் கொண்டது ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. பாணர்களில் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என மூன்று பிரிவுண்டு. யாழ் கொண்டு பாடும் யாழ்ப்பாணனே இந்நூலில் குறிக்கப்படுகிறான். யாழ்ப்பாணரில் சிறு பாணரை ஆற்றுப்படுத்தியமையால் சிறுபாணாற்றுப்படை என்றும் வழங்கப்பெற்றன.

இந்நூலால் பழந்தமிழகத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம். கடையெழு வள்ளல்கள் பற்றியும், மதுரை, உறந்தை, வஞ்சி, கொற்கை ஆகிய பட்டினங்கள் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

இந்நூலில், பாணனின் வருமைக்காட்சி சிறப்பாகக் கூறப்படுகிறது. வளமாக ஓடிப் பின் வற்றிய ஒரு காட்டாறு காட்டப்படுகிறது. ஊற்றற்ற கானாற்றை அடுத்து வெயிலின் கொடுமை கூறப்படுகிறது. வறுமையின் எல்லையை ஒரு நாயின் குடும்பம் வாயிலாக ஆசிரியர் பின்வரும் அடிகளால் உணர்த்துகிறார் காட்டாக.

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை

கறவாப் பால்முலை கவர்தல் நோனாது

புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்

காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த

இப்பாடல் உணர்த்துகிறது.

பழுதடைந்த குடிசையில் இசைவாணர் கூட்டம், மயங்கிக் கிடக்கிறது. இல்லத் தலைவி. ஏற்கனவே கிள்ளப்பெற்ற வேலைச் செடியின்

கொழுந்துகளைக் கிள்ளி வந்து வேக வைக்கிறாள். உப்பு இல்லை இறுப்பினும் தன் குடும்பத்தின் வறுமையை மற்றவர் அறியாவண்ணம் தன் வீட்டுக் கதவு அடைத்துக்கொண்டு உப்பில்லா வெந்த கீரையைப் பரிமாறுகிறாள்.

குப்பை வேளை உப்பிலி வெந்ததை

மடவோல் காட்சி நாணிக் கடையடைத்து

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்

அழிபசி வருத்தம். (சிறு: 135-140)

என்னும் பாடல் வறுமையின் கொடுமையைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

### 1.3.2.4 பெரும்பாணாற்றுப்படை

500 அடிகளைக் கொண்டது. பெரிய பாடல்களாக இருப்பதாலும் பெரிய யாழை வாசிக்கும் பாணர்கள் பற்றிக் கூறப்படுவதாலும் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம். இது, தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இப்பாட்டில் பரிசில் பெற்ற பெரும்பாணன் ஒருவன் தன்வழியில் எதிர்ப்பட்ட மற்றோர் பாணனைக் காஞ்சி மாநகரைக் கோநகராகக் கொண்டு, செங்கோலோச்சிய இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பாணாறு என்ற மற்றோர் பெயரும் உண்டு. எதிர்ப்படுகின்ற இரவலனாகிய பாணனைப் பரிசில் பெற்ற பாணன்.

பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்

பழுமரம் தேரும் பறவை போலக்

கல்லென் சுற்றமொடு கால்கிளந்து திரிதரும்

புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண

என்று விளித்து

அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்

பல்வேல் திரையற் படர்குவி ராயின்

என்று இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துகிறான். மேலும், இந்நூல் சிறந்த உவமைகளையும் ஆங்காங்கே குறிப்பிடுகிறது. பாணன் கையில் ஏந்திய யாழ் நரம்பு நெகிழ்ந்தும், இறுகியும் தோன்றும் தோற்றம் பாணன் மனைவியின் கையில் நெகிழ்ந்தும் இறுகியும் உள்ள வளையைப் போல் அமைந்துள்ளது என்கிறார். இதுபோன்று உள்ள பல உவமைகளைக் கூறுகிறார்.

### 1.3.2.5 முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டில் மிகச் சிறிய அடியளவை உடைய பாடல். இது 103 அடிகளையுடையது. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. ஆசிரியர் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவர். இப்பாட்டு முல்லைத் திணைக்கு உரிய, இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. போர்மேற் சென்ற தலைவன் திரும்பி வரும்வரை ஆற்றியிருந்த தலைவியின் செயலைக் கூறுகிறது இடையே அகத்திணையான முல்லைக்குத் தொடர்பான புறவொழுக்கமாகிய வஞ்சியினையும் கூறுகிறது. கார்ப்பருவத்தின் வருமை, பெருமுதுப்பெண்டிர் விரிச்சி கேட்டல், நல்ல வாய்ப்புள், யானைநிலை, குதிரைநிலை, மறவர்நிலை, நாழிகைக்கணக்கர் ஆகியோர் செயல்களையும் கூறுகிறது.

மன்னன் பாசறையில் இடையில் வாளேந்தி, கையில் விளக்கேந்தி அணையும் விளக்கை அணையாது காக்கும் மங்கையர் உள்ளனர். கண்ணைக்

காக்கும் இமைபோல அரசனுக்குப் பாதுகாவலராய்ப் பெருமூதாளர் உள்ளனர் நாழிகை வட்டில் கொண்டு நாழிகை அறியும் நாழிகைக் கணக்கர் உள்ளனர். அடுத்து யவனர்களும் உள்ளனர்.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை

மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து

வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்

என்று வன்கண் யவனர் பற்றி கூறுகிறது.

உடம்பின் உரைக்கும் உரையா நாவின்

படம்புகு மிலேச்சர்

என மிலேச்சர்கள் வருணிக்கப்படுகிறார்கள். குளிரில் நடுங்கும் ஆய்ச்சியள் ஒருவள் தோளோடு தன் இரண்டு கையையும் கட்டிக் கொண்டு வீட்டின் முன் கட்டிவைத்துள்ள கன்றுகளிடம் கோவலர் பின் வர நும் தாயர் விரைந்து வருவர் எனக் கூறுகிறாள் காட்டாக,

சிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்றின்

உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்

நடுங்குவல் அசைத்த கையல் கைய

கொடுங்கோர் கோவலர் பின்னின்று உய்தர

இன்னே வருகுவர் தாயர் என்போன் (முல்லை 12-16)

என்னும் வரிகள் விளக்குகின்றன. முல்லைப் பாட்டின் தலைவி நெஞ்சை ஆற்றி நிற்பதால் நெஞ்சாற்றுப்படை என்றும் பிறிதொரு பெயரால் அழைக்கப்படுகிறது..

**1.3.2.6 மதுரைக்காஞ்சி**

பத்தப்பாட்டில் அடியளவில் பெரியதாய் உள்ளது மதுரைக்காஞ்சி. 782 அடிகள் கொண்டது. இடையிடையே வஞ்சியடிகள் பெற்று ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. இந்நூல், இந்த உலகின் நிலையாமையை அறிவுறுத்துகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை உயர்நெறிக்கண் செலுத்துவதாய் அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் மாங்குடி மருதனார். இப்பாட்டு, “பெருகு வளமதுரைக் காஞ்சி” எனப் புகழப்படுகிறது. ‘கூடற்றமிழ்’ என்ற வேறு பெயராலும் அழைக்கப்படுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் வெற்றியைப் பாராட்டும் இந்நூல் அவனுக்கு இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகியவற்றை எடுத்துக்கூறி வீடுபேற்றிற்குறிய நெறியில் செல்லுமாறு அறிவுறுத்துகிறது.

கொன்னொன்னு கிளக்குவல், அதுபோர் அண்ணல்

கேட்டிசின் வாழி! கெடுகநின் அவலம்!

என உணர்த்தி

அன்னாண் நின்னொடு முன்னிலை யெவனோ

திரையிடு மணலினும் பலரே உணரசெல

மலர்தலை யுலக மாண்டுகழிந்தோரோ

என்று பல்வேறு நிலையாமையை எடுத்துக் கூறி

அரிய தந்து குடி அகற்றி

பெரிய கற்று இசை விளக்கி

முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்

பல்மீன் நடுவண் திங்கள் போலவும்

பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி

மகிழ்ந்தினி துறைமதி பெரும!

என்று நன்னெறியினை இனிமைபுற எடுத்தியம்புகிறது.

**1.3.2.7 நெடுநல்வாடை**

இந்நூல், 188 அடிகள் கொண்டது. அகவற்பாவால் இயற்றப்பட்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றி நக்கீரர் பாடியது, நெடுநல்வாடை 'வேம்புதலை யாத்த நோன்காழ் எ.்.கம்' என்ற அடி கொண்டு பாண்டியனுடைய அடையாளமாகிய வேப்பமாலையைக் குறிப்பிடுவதால் இ.்.து புறப்பாட்டு என்று சிலர் கூறுகின்றனர். இன்றுவரை அகமாபுறமா? என்ற ஆய்வுக்கு உட்பட்டதாக உள்ளது.

வடக்கேயிருந்து வீசும் வாடைக் காற்று தலைவனைப்பிரிந்து தனிமைத் துன்பத்தால் வருத்தமுறும் தலைவிக்கு நெடுவாடையாகவும் படையெடுத்துப் பாசறையில் தங்கிப்போகத்தில் மனம் செல்லாமல் தான் மேற்கொண்ட வினை முடிக்க வாய்ப்பாய் இருப்பதனால் அரசனுக்கு நல்வாடையாகவும் ஆயிற்று எனவே பாட்டின் தலைப்பு நெடுநல்வாடை எனப் பொருத்தமுற அமைந்தது. இதில் கூறப்படும் பாசறை கூதிர்ப் பாசறை யாகும்.

நெடுநல் வாடையில் கூதிர் பருவத்தின் சிறப்பை அழகாகப்படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். விலங்கிணங்கள் மேயவில்லை குரங்குகள் குளிர்ச்சியால் வாடின. பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன, பால் குடிக்க மடியை முட்டும் கன்றுகளைத் தாய்ப்பசுக்கள் உதைத்தன, மலையும் குளிரும்படியாகக் கூதிர் பருவத்தின் நள்ளிரவு இருந்தது என்பதை

மாமேயல் மறப்ப மந்தி கூறப்

பறவை படிவன வீழக்கறவை

கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்

குன்று குளிர் பன்ன கூதிர் பானாள்

என்னும் வரிகள் சிறப்பிக்கிறது.

**1.3.2.8 குறிஞ்சிப்பாட்டு**

இதன் ஆசிரியர் கபிலர். இவர் குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவர், ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையினையும் தமிழின் அகப்பொருள் மரபினையும் உணர்த்த பாடப்பட்ட நூலாகும். 261 அடிகள் கொண்டது, நச்சினார்க்கினியர் இதனைப் பெருங்குறிஞ்சி என்று பாராட்டுகின்றார். அகவற்பாவால் ஆனது. இந்நூல், தோழி செவிலிக்குத் தலைவியின் பொருட்டு அறத்தொடு நிற்கும் நிலையை அழகுறக் கூறுகிறது.

------------------------------------வள்ளிதழ்

ஒண்செங் காந்தள் ஆல்பல் அனிச்சம்

தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி

செங்கொடு தேமா மணிச் சிவிகை

எனத் தொடங்கி,

செங்காந்தட்பூ முதல் மலைஎருக்கம்பூ ஈறாக 99 பூக்களும் வண்ணமும் வனப்பும் புலப்பட வருணிக்கப்பட்டுள்ளன. தமிழர்தம் தூய களவொழுக்கம் புலனாகின்றது. முப்பதுக்கும் மேற்பட்ட உவமைகள் பாட்டின் அழகுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன.

### 1.3.2.9 பட்டினப்பாலை

இப்பாட்டு சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியதாகும். இந்நூல், 301 அடிகளைக் கொண்டது இப்பாட்டு பெரும்பாலும் வஞ்சியடியும் இறுதியில் ஆசிரியப்பாவும் அமைந்த நூலாகும். எனவே, இது 'வஞ்சி நெடும்பாட்டு' எனவும் வழங்கப்படும். பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைத் திணையாகலின் இப்பெயர் இதற்கு அமைந்தது. இந்நூலுக்கு ஆசிரியர் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாகப் பெற்றார் என்று பிற்காலத்து நூல்களான கலிங்கத்துப்பரணியும் சங்கரசோழனுலாவும் கூறுகின்றன. சோறுடைத்தான் சோழவளநாடும் காவிரி கடலொடு கலக்கும் இடமாம் காவிரிப்பூம்பட்டினமும் கரிகாற் பெருவளத்தானது நெஞ்சப்பாங்கும் இப்பாட்டில் இனிமையுற விளக்கப்படுகின்றன.

தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது

வாணிகம் செய்கின்றனர்

சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி

என்று நாட்டு வளப்பம் நயம்பட வருணிக்கப்படுகிறது. மேலும், தலைவியைப் பிரிந்து விளைமேற் செல்ல நினைத்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியவை.

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே!
திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெப்ப கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே

என்பது, மனமே! குறைவில்லாத சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினத்தையே நான் தேடும் செல்வமாகப் பெற்றாலும், நீண்ட கூந்தலையுடைய என் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன். பொருள் தேடச் செல்லும் காட்டுவழி திருமாவளவன் பகைவரை வெற்றிகொள்ள எடுத்த வேலைவிடக் கொடியது தலைவியின் தோளோ அக்கரிகாலனுடைய செங்கோலைக் காட்டிலும் மென்மையது. என்று கூறுகிறான் தலைவன். பட்டினப்பாலை பண்டைத்தமிழரின் வாழ்க்கை, செல்வச் சிறப்பு வாணிகச் சிறப்பை கூறுகிறது.

### 1.3.2.10 மலைபடுகடாம்

இந்நூல், ஆற்றுப்படை நூல்களில் அடியளவில் பெரியது 583 அடிகளைக் கொண்டது ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இதற்குக் கூத்தராற்றுப் படை என்ற வேறு பெயரும் உண்டு. பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன் எதிர்ப்பட்ட கூத்தனை நன்னன் சேய் நன்னனிடத்து ஆற்றுப்

படுத்தியதாகக் கூறுகிறது. இந்நூலைப் பாடியவர் பெருங்கௌசிகனார். மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் ‘கடாம்’ எனச் சிறப்பித்ததனால் மலைபடு கடாம் எனப்பெயர் பெற்றது.

ஐந்து நில மக்கள் வாழ்க்கை முறைகள், நன்னன் சிறப்பியல்புகள் மலையில் எழும் பல்வகை ஒலிகள், இசைக்கருவிகள் முதலியன அழகுறக் கூறப்படுகின்றன.

இந்த ஆற்றுப்படையில் நன்னன் நாட்டிற்குச் செல்லும் வழியின் தன்மை இடைவழியில் உண்ணக்கிடக்கும் உணவுப்பொருள்கள், மன்னன்கொடை, நாட்டின் பெருமை, மலையின் வளம், சோலையின் அழகு முதலியன சிறப்புறக் கூறப்படுகின்றன.

மழை கரத் தன்ன ஈகை நல்கித்

தலைநாள் விடுக்கும் பரிசில் மலைநீர்

வென்றொழு கொடியின் தோன்றும்

குன்றுசூழ் இருக்கை நாடுகிழ வோனே

என்னும் வரிகள் நன்னன் சேய் நன்னன் ஈத்துவக்கும் பண்பினைக் கூறுகிறது.

**சங்கம் மருவிய காலம் (கிபி 100-600)**

இக்காலத்தைக் களப்பிரர்கள் காலம் என்றும் இருண்ட காலம் என்றும் சங்கம் மருவிய காலம் என்றும் கூறுவர். சங்கம் மருவிய காலம் ஆறாம் நூற்றாண்டின் இறுதி, ஏழாம் நூற்றாண்டின் தொடக்கமாகும். சங்க காலத்தில் தமிழகம் முடிவுடை மூவேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கி.பி மூன்றாம் நூற்றாண்டு அயலாரின் ஆட்சிக்கு உட்பட்டது. சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்களும், நடு நாட்டையும், தொண்டை நாட்டையும் பல்லவர்களும், ஆட்சியைப் பிடித்தனர். இவர்கள் ஆட்சியைப் பிடித்ததும் மூவேந்தர்களின் அமைதியான ஆட்சியில் கலங்கம் நேர்ந்தது. இன்பங்களைப்பாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போனது. தாய்மொழி இவர்களுக்குத் தமிழாக இல்லை. களப்பிரர்கள் பாலிமொழியையும் பல்லவர்கள் பிராக்கிருத மொழியையும் ஆதறித்தனர். இதனால், மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றில் சில கூறுகளை இழக்க நேறிட்டது. பிறமொழிக் கலப்பாலும் அயலார்களின் வரவாலும் தமிழ்மொழி ஆதரிக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்டு வளர்ச்சி குன்றிப் போற்றுவாரற்று விளங்கியது. தமிழ்மொழி. இதனால், சிறப்பான முறையில் நூல்கள் தோன்றவில்லை தோன்ற .இயலாமல் போய்விட்டது. மக்களிடையே ஒற்றுமை நிலைகுழைந்தன, முரண்பாடுகள் ஏற்பட்டன. இம்முரண்பாடுகளைக் கழையவும், மக்களை ஒன்று திரட்டவும் சங்கக் கவிஞர்கள் முனைந்தனர், இவர்கள் சங்கப் பாடல்களில் காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டிருந்தனர், இதை விடுத்து அதே சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களில் நீதியைப் புகுட்டினர், இதன் விளைவாகத் தோன்றியதே நீதி நூல்கள். இந்நீதி நூல்கள் குறித்து இனி அறியலாம்.

**1:4 பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (நீதி நூல்கள்)**

கீழ்க்கணக்கு என்பது அடிகள் குறைந்த செய்யுட்களால் ஆகிய நூல்களைக் குறிக்கும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சங்க கால இலக்கியம் என்று சிலர் கூறுவர். ஆனால், இக்கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது ஏற்றுக்கொள்ள சில இடர்பாடுகள் உண்டு. சங்ககால நூல்களில், கூறும் பொருளாலும் அமைந்திருக்கும் நடையாலும் வேறுபாடு உண்டு. எனவே இந்நூல்கள் சங்க மருவிய காலத்தில் தோனறியன என்பர்.

அறநூல்களெல்லாம் எந்த ஆண்டில் எழுதப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், அவை, எந்த நூற்றாண்டில் தோன்றியிருத்தல் கூடும் என்பது உய்துணர்ந்து கூறவேண்டிய நிலையில்தான் உள்ளது.

அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம் பொருளின்பம் அடுக்கி மேல்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்

என்று பன்னிரு பாட்டியல் கூறுகிறது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களையும் கூறும் நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்..

'கணக்கு' என்ற சொல் முதலில் இலக்கியத்திற்கு வழங்கியது. அக்காலத்தில் கணக்காயர் என்ற சொல்லே இலக்கிய ஆசிரியர் என்ற பொருள் தந்ததை நாம் அறிகிறோம் இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பின்வரும் வெண்பா தொகுத்துக் கூறுகிறது.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலை காஞ்சியுள் னேலாதி யென்பவே
கைநிலையோ டாங்கீழ்க் கணக்கு.

அறநெறியினைத் தெளிவுறுத்துவதற்கு ஏனைய பா வகையைக் காட்டிலும் வெண்பாவே சிறப்புடையது. எனவே, சங்க மருவிய காலத்தில் வெண்பா பெருவழக்காகவும் ஆசிரியப்பா சிறு வழக்காகவும் உள்ளன.

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

| **நீதி நூல்கள் (11)** | **அக நூல்கள் (6)** | **புற நூல் (1)** |
|---|---|---|
| 1. திருக்குறள் | 1. கார் நாற்பது | 1. களவழி நாற்பது |
| 2. நாலடியார் | 2. ஐந்திணை ஐம்பது | |
| 3. நான்மணிக்கடிகை | 3. திணைமொழி ஐம்பது | |
| 4. இன்னா நாற்பது | 4. திணைமொழி நூற்றைம்பது | |
| 5. இனியவை நாற்பது | 5. திணைமாலை நூற்றைம்பது | |
| 6. திரிகடுகம் | 6. கைனிலை (இன்னிலை) | |
| 7. ஆசாரக்கோவை | | |
| 8. பழமொழி | | |
| 9. சிறுபஞ்சமூலம் | | |
| 10. முதுமொழிக்காஞ்சி | | |
| 11. ஏலாதி | | |

இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள், எல்லா காலங்களிலும் பொருட் சிறப்பாலும் பல்வகை தகுதிகளாலும் சிறப்புற்று விளங்குவது திருக்குறளாகும்.

**நீதி நூல்கள் - 11**

**1.4.1 திருக்குறள்**

நீதி இலக்கியங்களுள் தலையாயதாக வைத்து கருதப்படுவது திருக்குறளாகும். திருக்குறளைச் சுவைத்த அறிஞர் ஆல்பர்ட் உயர்ந்த அறிவை ஊட்டும் இலக்கியத்தைப்போல் வேறொரு இலக்கியம் உலக மொழிகளில் எந்த மொழிகயிலும் இல்லை என்று கூறுகிறார். திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர். இத்திருவள்ளுவர் தன்னை உலகினுக்கு அற்பணித்ததால் தமழ்நாடு புகழ் பெற்றது என்பதை

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ் நாடு

என்று பாரதியாரும், இவ்வள்ளுவன் செய்த நூலுக்கு ஈடு இணை இவ்வுலகத்தில் வேறு எந்த நூலும் இல்லை என்பதை,

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ, பாரிலுள்ள

நூலெல்லாம் வள்ளுவன் செய் நூலாமோ

என்று மற்றொரு புலவரும் பாடியுள்ளனர்.

திருவள்ளுவர் பிறப்பு, வளர்ப்பு பற்றி உண்மை வரலாறு கிடைக்கவில்லை. பல்வேறு அறிஞர்கள் பலவாறு பேசுகின்றனர். தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தவர் என்று திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.அவர் ஒரு அறவோர் என்றும் மறைந்த திரு.வி.க கூறுகிறார்.

**வள்ளுவர் வேறுபெயர்**

நாயனார், தேவர். முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்மகனார். மாதானுபங்கி, செந்நாப்போதகர், பெருநாவலர் என்னும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறார். திருக்குறள் பலருக்குப் பலவகையாகப் பயன்பட்டுச் சிறப்பு வாய்ந்தத் தனிநூலாக விளங்குகிறது. இலக்கிய ஆராய்ச்சியாளர் திருக்குறளை இலக்கியமாகக் கற்று கலைநயம் காணலாம். அறவோர் சமய நூலைப் போற்றி ஒழுக்க முறைகளைக் காணலாம். இவ்வாறே ஒவ்வொரு சாராரும் தம் தம் துறைக்கு ஏற்ற கருத்துகளைத் திருக்குறளில் காணலாம். துறவு வாழ்க்கையை ஆராய்ந்து விளக்கியுள்ள எல்லா நூல்களும் பலர்க்கும் பல்வேறு வகையில் பயன்படுவனவே ஆகும் என்று டாக்டர்.மு.வரதராசன் கூறுகிறார்.

**திருக்குறளின் பெருமை**

திருக்குறளின் பெருமையைப்பற்றி கூறும்போது

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்

குறுகத் தறித்த குறள்'

என்று திருவள்ளுவ மாலையில் ஔவையாரும்

எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்

இல்லாத எப்பொருளும் இல்லையாம்.

என்று மதுரைத் தமிழ் நாகனாரும், தமிழின் பெருமையாகக் கூறுகின்றனர். அதாவது எல்லாப்பொருளையும் தன்னகத்தே கொண்டு நிற்பது திருக்குறள் என்கிறார். திருக்குறளின் மேன்மையைத் திருவள்ளுவமாலையில் சீத்தலைச்சாத்தனார்,

மும்மலையும் முந்நூலும் முந்நதியும் முப்பதியும்

மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்

தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார் அன்றோ

யாமுரைத்தேர் வள்ளுவர்முப் பால்

என்று கூறுகிறார். சொல்லழகும் பொருளழகும் கொணடுத் திகழும் திருக்குறளை வாழ்க்கை விளக்கமாகக் கொள்வது பொருந்தும் எனலாம்.

**சமயப் பொதுநூல்**

திருக்குறள் சமயப் பொதுநூலாகக் காட்சியளிக்கிறது. சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிருத்துவர் ஆகிய அனைவரும் தத்தம் சமயக்கருத்துகள் குறட்பாக்களில் காணப்படுவதால் தத்தம் சமயத்திற்குரிய நூலே குறள் என்று கூறுவர். எனவேதான் கல்லாடர் என்னும் தமிழ் புலவர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்

அன்றென்ப ஆறு சமயத்தார் - நன்றென

எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்

முப்பால் மொழிந்த மொழி”.

என்று பாடினார்.

**காலம் கடந்தது**

கால வெள்ளத்திற்கு இரையாகாமல் மூன்று காலத்திற்கும் பொருந்தி வருகின்றது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த நூல் திருக்குறள். அக்கால மக்களின் வாழ்கை நெறிக்குப் பொருந்தி இன்றும் மாறாமல் அரும்பயன் விளைவிப்பதாய் உறுதிப்பொருளைப் பயப்பதாய் விளங்கும். அறிதோறும் அறிதோறும் அறியாமையைப் புலப்படுத்துவதாய் நவில்தோறும் நவில்தோறும் நயம் பயப்பதாய் விளங்குகிறது. சாதியைக் கடந்து எல்லா சாதியினருக்கும் பொதுநூலாகத் திருக்குறள் திகழ்கிறது. இதனால்தான் திருவள்ளுவர்

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில்’ வேற்றுமையான்.

என்றார். சான்றாக, மனோன்மணியம் என்ற நாடகநூல் இயற்றிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள்

வள்ளுவன்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்

உள்ளுவரோ மறுவாதி ஒரு குலத்திற்கு ஒரு நீதி.

என்று குறிப்பிட்டார். திருக்குறள் மதம், இனம், சமயம் நாள் முதலியவற்றைக் கடந்து நிற்பது என்பதை,

எம்மதமும் எவ்வினமும் எந்நாளும்

சம்மதம் என்று ஏற்கும் தமிழ்வேதம்.

என்று சுந்தானந்தபாரதி குறிப்பிடுகிறார்.

உலக இலக்கியங்களில் திருக்குறளைப்போலச் சிறந்த

அறம் உரைக்கும் நூல் வேறு இல்லை.

என்று சுவைட்சர் கூறுகிறார்

**மொழிப்பெயரப்பு**

திருக்குறளை இலத்தீன் மொழியில் வீரமாமுனிவரும், ஆங்கில மொழியில் போப்பு, வ.வே.சு ஐயர், தீட்சர். இராஜாஜி அவர்களும் ருசிய மொழியில் யூரிய்ரில்சேவ் அவர்களும், மேலை நாட்டுமொழிகளாகிய ஜெர்மன், பிரன்சு. திராவிட மொழிகளாகியத் தெழுங்கு, மலையாளம்,. ஆரிய மொழிகளாகிய வடமொழி, இந்தி ஆகிய மொழிகளிலும் மொழிப்பெயர்த்துள்ளனர்.

**வேறுபெயர்கள்**

திருக்குறள் முப்பால்நூல் உத்திரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

**காலம்**

கி.மு 3 ஆம் நூற்றாண்டினது என்று மறைமலையடிகளும், கி.மு 1,2 ஆம் நூற்றாண்டினது என்று இராமச்சந்திரதீட்சரும் கி.மு 5 ஆம் நூற்றாண்டினது என்று திரு வையாபுரிப்பிள்ளை அவர்களும் கூறுகின்றனர். எனவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் திருவள்ளுவர்காலம் ஏறத்தாழ கி.மு 1 முதல் கி.பி 300 க்கு உட்பட்டது என்று கொள்வதே சிறப்புடையதாகும். திருக்குறளின் காலத்தைத் தீர்மானிக்க இயலவில்லை

**உரை**

குறளின் பெருமையைக் கருதி பதின்மர் உரை வகுத்தனர். தருமர், மணக்குடவர் தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர் நூலுன்கு உரைசெய்தனர் . இவர்கள் செய்த உரைகளில் மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர் ஆகியோர் உரைகளே கிடைத்துள்ளன. இந்த ஐந்து உரைகளையும் “திருக்குறள் உரைவளம்” என்று தருமபுரி அதினம் வெளியிட்டுள்ளது. திருக்குறள் உரைக்கொத்து எனத் திருப்பனந்தாள் (பல உரைத்தொகுப்பு) காசிமடம் வெளியிட்டது இவ்வுரைகளில் சிறந்த உரை பரிமேலழகர் உரையாகும் (கி.பி 13 ஆம் நூற்றாண்டினர்). கா.அப்பாதுரையாரின் முப்பால் உரை ஒரு விருந்தி உரையாகவும் திகழ்ந்தது. திருக்குறளுக்கு முனுசாமி பேருரை வழங்கினார் சிற்றுரைகளில் சிறந்தது மு.வ உரையாகும். பால் வண்ணனின் திருக்குறள் சிறப்புரை குறிப்பிடத்தக்கது.

**திருக்குறள் அமைப்பும் பகுப்பும்**

திருக்குறள் முதலடி நான்குசீர், இரண்டாமடி மூன்றுசீர் கொண்ட இரண்டடி குறள் வெண்பாவால் இயற்றப்பட்டது.

இந்நூல் அறம், பொருள். இன்பம் ஆகிய மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் 380 குறட்பாக்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும் 700 குறட்பாக்களையும், இன்பத்துப்பால் 25 அதிகாரங்களையும் 250 குறட்பாக்களையும் கொண்டது. மொத்தம் 133 அதிகாரங்கள் 1330 குறட்பாக்களைக் கொண்டது. அறத்துப்பால் தனி மனிதனது வாழ்வின் மேன்மைகளைக் குறிக்கின்றது. பொருட்பால் சமுதாய வாழ்வைச் சுட்டிக்காட்டுகிறது. இன்பத்துப்பால் அகவாழ்வின் வெற்றிகளைச் சிறப்புற எடுத்துரைக்கின்றது.

**அறத்துப்பால்**

திருவள்ளுவர் அறநெறியில் அழுத்தமான நம்பிக்கையும் உறுதியும் உடையவர் என்பது தெளிவு

மறந்தும் பிறன்கேடு சூழ்ற்க சூழின்

அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

மறந்தும் பிறருக்குக் கெடுதியானவற்றை மனதளவில் கூட எண்ணக் கூடாது. அவ்வாறு எண்ணினால் எண்ணியவறுக்கே கெடுதி விளையுமாறு அறமே செய்துவிடும் என்கிறார். மனதில் மாசு இல்லாமல் தூய்மை பெறுதலே அறம் என்கிறார். ஒருவன் ஒரு செயலை மேற்கொள்ளும்போது முடிவு நல்லதாக ஏற்படுமானால் அதை அடைய உரிய வழி தவறாக இருந்தாலும் கவலை இல்லை என்று கருதுவோரும் உண்டு. வழியைப்பற்றிப் பொருட்படுத்தாமல் முடிவைப் பற்றி வற்புறுத்திக்கூறும் நூல்களும் உண்டு. ஆனால் திருவள்ளுவருக்கு அதில் உடன்பாடு இல்லை. முடிவு நல்லதோ கெட்டதோ வழித் தூய்மையாக இருக்கவேண்டும். பெற்ற தாயின் பசியை போக்குவதாக இருந்தாலும் சான்றோர் பழிக்கும் தீய செயல்களைச் செய்யக்கூடாது. தீமைகளைப் பொருத்துக்கொள்வது எப்படி என்றால் அவர் செய்த பல தீமைகளை விட்டு, முன்பு செய்த நன்மை ஒன்று இருக்குமானால் அந்த நன்மையைத் திரும்ப திரும்ப எண்ணிப்பார்க்க வேண்டும். கொலை போன்ற தீமையும் இதனால் மறக்கப்படும் என்கிறார்.

**பொருட்பால்**

அறத்துப்பாலில் நெஞ்சத்தைப் பயன்படுத்தி அறநெறியை வற்புறுத்தும் திருவள்ளுவர், உலக வாழ்க்கையில் சிறந்து விளங்குவதற்குரிய நெறிகளையும் இரண்டாம் பகுதியில் தெளிவாக எடுத்துரைக்கின்றார், பொருட்பால் சமுதாய வாழ்வை சுட்டிக்காட்டும். வாழ்க்கைக்குப் பொருள் கட்டாயமாகத் தேவை என்னும் கருத்தைத் பொருட்பால் அழகாக எடுத்துரைக்கிறது. பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகம் இல்லை அருள் இல்லாதவர்களுக்கு அந்த உலகம் இல்லாதது போல என்கிறார். பல இடங்களில் கற்பவரின் சிந்தனையைத் தூண்டும் வகையில் வினாக்கள் எழுப்பியுள்ளார்.

**இன்பத்துப்பால்**

அகவாழ்வின் வெற்றியைச் சிறப்புற எடுத்துரைக்கும். மனைவி தக்கவள் ஆனால், ஒருவனுடைய வாழ்க்கையில் இல்லாதது என்ன? மனைவி தக்கவளாக வாய்க்காவிட்டாள் அவளுடைய வாழ்வில் இருப்பது என்ன?

இல்லதுஎன் இல்லவன் மாண்பானால்? உள்ளது என்

இல்லவள் மாணாக் கடை?

என்று இல்லற வாழ்வின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

**1.4.2 நாலடியார்**

இந்நூல் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது. திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றப்படுவது.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

என்னும் இப்பழமொழிக்களால், திருக்குறளோடு நாலடியாரின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன. நான்கடிகளால் ஆன 400 வெண்பாக்களால் ஆனது. 12 இயல்களையும் 40 அதிகாரங்களையும் கொண்டது. நான்கு + அடி என்பதுடன்

‘ஆர்’ விகுதி சேர்ந்து நாலடியார் ஆனது. இது நாலடி நானூறு என்ற வேறு பெயராலும் அழைக்கப்படுகிறது. பிற்காலத்தில் திருக்குறளைப் பின்பற்றி இந்நூலைப் பாகுபாடு செய்தவர் பதுமனார் என்பவர். இந்நூல் திருக்குறளைப்போல் 1. அறத்துப்பால் 2. பொருட்பால் 3. காமத்துப்பால் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது. இந்நூலை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர் ஜி.யு.போப் என்பவர். இதன் காலம் கி. பி 7 – ஆம் நூற்றாண்டு என்பர் வையாபுரிப்பிள்ளை. ஆனால், இதனை ஏற்பார் இல்லை.

**நூல் தோன்றிய பழையகதை**

பழங்காலத்தில் நாட்டில் உள்ள பல மலைகளில் சமணமுனிவர்கள் எண்ணாயிரம் பேர் வாழ்ந்து வந்தனர் ஒரு சமயம் கொடிய பஞ்சம் ஏற்பட்டது பஞ்சத்தின் காரணமாக சமண முனிவர்கள் மதுரைக்கு வந்து பாண்டியனின் உதவியைப் பெறுகின்றனர் பாண்டியன் விருப்பத்திற்கிணங்க அங்கே தங்கினர் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர், அதற்குப் பாண்டியன் உதவி செய்கிறான். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் நாட்டில் பஞ்சம் தீர்ந்தது அச்செய்தியறிந்த சமண முனிவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல பாண்டிய மன்னனிடம் வேண்டினர், அதற்குப் பாண்டிய மன்னன் இசைவு தெரிவிக்கவில்லை, பிறகு சமண முனிவர்கள் நள்ளிரவில் ஆளுக்கொரு வெண்பா எழுதி அவரவர்கள் இருக்கையில் வைத்துவிட்டு பாண்டிய மன்னனுக்குத் தெரியாமல் சென்றுவிடுகின்றனர், மறுநாள் காலை பாண்டியன் அச்செய்தியறிந்து அவர்களின் பிரிவுக்காக வருந்தி நொந்த மனதோடு அவர்கள் எழுதிய பாடல்கள் ஏடுகளை ஆற்றில் வீசுமாறு கட்டளையிடுகிறான் கட்டளையின்படி அந்த ஏடுகளை ஆற்றில் இடுகின்றனர் அதில் பல ஏடுகள் நீரோட்டத்தை எதிர்த்திச்செல்ல அவற்றை மட்டும் தொகுத்து “நாலடியார்” என்று பெயரிட்டு அமைத்தானாம். இவ்வாறு தொகுக்கப்பட்ட நாலடியார் பாடல்கள் நிலையாமை என்னும் கருத்தை அறிவுருத்துகிறது.

**கருத்து**

இந்நாலடியார் செல்வ நிலையாமை, கல்வியின் சிறப்பு, இளமை நிலையாமை ஆகிய கருத்துகளை இயம்புகிறது.

**செல்வம் நிலையாமை**

அறு சுவையும் கூடிய உணவுகளை மனைவி விரும்பி ஊட்ட அவற்றுள் இது வேண்டும் இது வேண்டா என்று உண்ட செல்வனும் ஒரு காலத்தில் ஏழைகளாய் ஆவது உண்டு, கூழ் இரந்து உண்ணவும் நேரும். ஆகையால் செல்வம் ஒரு நிலையான பொருளாகக் கருதத்தக்கது ஆகாது. “செல்வம் சகடக்கால் போல வரும்” என்னும் செல்வ நிலையாமையை இந்நூல் அறிவுருத்துகிறது.

யானையின் புறமுதுகில் குடையின் நிழலில் அமர்ந்து சேனைத்தலைவராய்ச் சென்ற பெருமை உடையவர்களும், தீவினை வந்து வாட்ட அதனால், நிலமை வேறுபட்டு தம் சொந்த மனைவியையும் பகைவர் கைப்பற்றிக் கொள்ள நேர்ந்து, வீழ்ச்சி அடைவது இயல்பாகும்.

ஒரு கருமி பெருஞ் செல்வம் சேமித்து வைத்துள்ளான் அவன் செல்வத்தைப் பிறர்க்கு வழங்காமல் தானும் அனுபவிக்காமல் சொந்தம் கொண்டாடுகிறான். ஏழையும் அந்த செல்வத்தை அனுபவிப்பதில்லை பிறர்க்கு வழங்குவதும் இல்லை. கருமியின் செல்வம் என் செல்வம் என்று ஏழையும் கூறலாம், என்று, கருமியும் ஏழையே என்ற கருத்தை,

எனது எனது என்று இருக்கும் ஏழை பொருளை

எனது எனது என்று இருப்பன் யானும் தனது ஆயின்

தானும் அதனை வழங்கான் பயன்கவ்வான்

யானும் அதனை அது.

என்னும் நாலடியார் பாடல் ஒன்று இயம்புகிறது.

**கல்வியின் சிறப்பு**

கல்விக் கரையில் கற்பவர் நாற்சில" என்றும் 'கல்லாரே யாயினும் கற்றவரைச் சேர்ந்தொழுகின், நல்லறிவு நாளும் தலைப்படுவர்' என்றும் கல்வியின் சிறப்புகளையும், அழகினையும் கவின் பெறக் கூறுகிறார். மேலும், பெண்களுக்குரிய சிறப்பைத்தர இந்நூல் தவறவில்லை. நல்ல மனைவி இல்லாத வீடு வீடல்ல. அது ஒரு காடு என்பதை தெரிவிக்கிறது பின்வரும் அடிகள்.

மானிட மனையாளை இல்லாதான் இல்லகம்

காண்டற்கு அரியதோர் காடு

இல்லாள் ஏற்றம் பெறவேண்டுமாயின் கல்வி மிகவும் இன்றியமையாதது. அக்கல்வியின் சிறப்பினை,

குஞ்சம் அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்

மஞ்சளழகும் அழகல்ல – நெஞ்சகத்து

நல்லம்யா மென்னும்

நடுவு நிலமையாற்

கல்வியழகே அழகு.

இப்பாட்டில் வரும் மஞ்சள் அழகும் அழகல்ல என்னும் தொடர் பெண்களைக்குறிக்கிறது. அவர்கள் மஞ்சள் பூசிக் கொள்வது மட்டும் அழகாகாது கல்வி கற்பதே அழகாகும் என்பது ஆசிரியர் கருத்து.

**இளமை நிலையாமை**

குளிர்ந்த சோலையில் பயன் நிறைத்த மரங்கள் பழுத்த பழங்கள் உதிர்ந்து வீழ்ந்தபின் பொழிவற்றுக் காணப்படுவது போன்றது இளமை. வேல் போன்ற கூர்மையான கண்களை உடையவள் என்று இவளைப் பெரிதும் விரும்பாதீர்கள் இளமையின் அழகு நிறைந்த இவளும் முதுமை குறித்துக் கையிலே தடிக்கொண்டு தடுமாறி நடப்பவள் ஆவாள். இவ்வாறு மனக்கண்முன் காட்சி தோன்றுமாறு இந்தக் கருத்துகளை அறிவுறுத்தும் நூல், கடமையையும் வற்புறுத்திச் செல்கிறது. கரும்பை ஆலையிலே வைத்து ஆட்டிப் பாகிலிருந்து வெல்லம் கட்டிகளை எடுத்துக் கொண்டவர்கள் அந்தக் கரும்பு சக்கைகள் அடுப்பில் இடப்பட்டு வேகும்போது துயரப்படுவதில்லை. நிலையில்லா இந்த உடம்பையும் நன்மைக்கருதி உழைக்கச் செய்து முதல் பயனைக் கொண்டவர்கள், எமன் வரும்போது துயரப்படுவதில்லை என்னும் கருத்து உடைய பாட்டு, ஓர் உவமையை நயமாக அமைத்து அழகிய ஓவியமாகக் காட்டுகிறது.

**1.4.3 நான்மணிக்கடிகை**

இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 104 பாடல்களைக் கொண்டது. எழுதியவர் விளம்பிநாகனார். 'விளம்' என்பது ஊர்ப்பெயர் 'நாகன்' என்பது இயற்பெயர் ஆர் விகுதி சேர்த்து இப்பெயர் பெற்றார். கி.பி. 4-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர். ஒவ்வொரு பாடலிலும் நான்கு உண்மைகளை உடையனவாதலால்

நான்மணிக்கடிகை என்று இப்பெயர் பெற்றது. இந்நூல் தொல்காப்பியர் கூறும் எண்வகை வனப்புகளுள் 'அம்மை' என்னும் வனப்பில் அடங்கும் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர். கடவுள் வாழ்த்தில் திருமாலைப் பாடுவதால் இந்நூலாசிரியர் வைணவரோ என்று கூற தோன்றுகிறது. முதல் 100 பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துள்ளார்.

**கருத்து**

எக்குடியிலும் நல்ல மக்கள் உதித்தல் கூடும் என்றும் இம்மையில் புகழ் வாழ்வு வாழ்ந்து மறுமையில் வீட்டுப்பேற்றினை எய்துவதையே தம் உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளார் என்றும், கொல்லாமையும் புவால் உண்ணாமையும் சிறந்த அறங்கள் என்றும் இந்நூலாசிரியர் வற்புறுத்திக் கூறுகின்றார். எனவே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வீட்டுப் பேற்றினை அடைய ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும் என்பது இந்நூலாசிரியர் கருத்து.

வயலுக்கு வனப்பளிப்பவை – நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அழகு தருவது – தாமரை மலர்
மகளிருக்கு மாண்பளிப்பது – நாணம்
ஒருவனுக்குச் சிறப்பளிப்பது – அறம்

இந்த இனிய செய்திகளை

நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணியென்ப தாமரை, பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம், தனக்கணி
தான்செல் உலகத்து அறம்.

என்னும் பாடலில் அறியலாம். மேலும், யார் யார் உறங்குவதில்லை, உறக்கம் வருவதில்லை என்பதை

கள்வர் என்பார்க்கும் துயில் இல்லை காதலில்மாட்டு
உள்ளம் வைப்பாருக்கும் துயில் இல்லை ஒண்பொருள்
செல்வம் என்பார்க்கும் துயில் இல்லை அப்பொருள்
காண்பார்க்கும் துயில் இல்லை.

என்று இப்பாடல் இயம்புகிறது.

பொருள், வலிமை ஆகியவற்றால் குறைந்தவர் என்று பிறரை இகழ வேண்டா. மிகச்சிறந்த பொருளாக இருந்தாலும் கொள்ளத் தகாதவரிடம் சென்று கைஏந்தி ஒன்றையும் கேட்காது விடுக. வறியவர் சொல் நம்மை வருத்தினாலும் அவரிடம் சொல்லக் கூடாதவற்றைச் சொல்லாமல் விடுக என்பதை

எள்ளறக் கென்றும் எளியாரென்றும் என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேம்பட – உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூற்றக
கூறல் லவற்றை விரைந்து

என்னும் பாடல் கூறுகிறது. மேலும்,

கடற்குட்டம் போழ்வார் கலவர் படைக்குட்டம்

பாய்மா உடையான் உடைக்கிற்குஞ் - தோமில்

தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும் அவைக்குட்டம்

கற்றான் கடந்து விடும்

என்னும் பாடல் மரக்கலங்களை உடையவர் கடலின் ஆழமான நீரைப் பிளந்து கொண்டு செல்வர். விரைந்து ஓடும் குதிரைப்படையுடையவன் பகைவர் என்ற ஆழ்கடலின் கரையை உடைத்து விடுவான், தன் மனதை அடக்கும் ஆற்றல் உடையவன் 'தவம்' என்னும் கடலை நீந்திக் கரை சேர்வான், மாசறக் கற்றவன் கற்றோர் என்னும் கடலைத் தாண்டுவான் என்று கூறுகிறது. மேலும்,

மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையும்

தவமிலார் இல்வழி இல்லை தவமும்

அரசன் இலாவழி இல்லை அரசனும்

இல்வாழ்வார் இல்வழி இல்

என்னும் பாடல் இந்தப் பெரிய உலகில், வாழ்வார்க்கு மழை இல்லாமல் நன்மை உண்டாவதில்லை அந்த மழையும் தவம் செய்யாதவர் இடங்களில் பெய்யாது. அத்தகைய சிறப்புடைய தவமும் அரசன் இல்லாத இடத்து நிகழாது, இந்தச் செங்கோல் அரசனும் குடிமக்கள் இல்லாத இடத்து இல்லாதவன் ஆவான் ஆகிய அறக்கருத்துகளை கூறுகிறது.

### 1.4.4 இன்னா நாற்பது

இதன் ஆசிரியர் கபிலர். இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட 41 பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலிலும் இது இது துன்பம் தருவது என அறிவுறுத்துவதால் இப்பெயர் பெற்றது. காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு என்பர்.

**கபிலர் பற்றிய கருத்து**

சங்ககால கபிலர் ஊண்சோறு உண்டவர். இந்நூலாசிரியர் புலால் உண்ணுதலையும் கள்ளுண்ணுதலையும் கண்டிக்கிறார். எனவே, இவர் சங்க காலத்து கபிலர் இல்லை என்பது சிலர் கருத்து.

**சமயப்பொது நோக்கு**

கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன், பலராமன், மாயோன், சேயோன் ஆகிய தெய்வங்களைப் பாடுவதால் சமயப் பொதுநோக்குடையவர் எனக் கருத இடமுண்டு.

**அறக்கருத்துகள்**

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா

ஊணைத்தின்று ஊணைப் பெருக்குதல் முன்னின்னா

தீமையுடையார் அயலிருத்தல் இன்னா

பந்தம் இல்லாத மனைவியின் வனப்பின்னா

**துன்பம் தருவன**

ஆற்றல் இல்லாதான் பிடித்தபடை இன்னா

நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா

தோற்றம் இலாதான் துணிவு இன்னா ஆங்கு

இன்னா மாற்றம் அறியான் உரை

வலிமை இல்லாதவன் கையிலே எடுத்த கருவி துன்பத்தைத் தரும் மணம் இல்லாத மலரின் அழகு துன்பத்தைத் தரும், தெளிவு இல்லாதவன் ஒரு செயலைச் செய்ய முற்படுதல் துன்பத்தைத்தரும், சொல்லின் திறம் அறியாதவனின் சொல் துன்பத்தைத்தரும்.

ஒழுக்க மிலார்க்கு உறவுரைத்தல் இன்னா
விழுத்தகு நூலும் விழையாதார்க்கு இன்னா
இழிந்த தொழிலவர் நட்பு இன்னா
கழிப்புவாய் மண்டிலம் கொட்பு

நல்லொழுக்கம் இல்லாதவரிடம் தமக்கு உறவு உள்ளதாகக் கூறுதல் துன்பத்தைத் தரும். சிறந்த நூற்கல்வி இல்லாமை துன்பத்தைத் தரும் இழிந்த தொழிலைச் செய்பவர் நட்பு துன்பத்தைத் தரும். நல்லவரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட காட்டில் போதல் துன்பத்தைத் தரும்.

### 1.4.5 இனியவை நாற்பது

இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் இந்நூலாசிரியர் பெயர் 'சேந்தன்' என்பதாகும் சேந்தன் தந்தையார் 'பூதன்' என்பதாகும் மதுரைத் தமிழாசிரியர் சேந்தன் தம் தந்தையிடம் கல்வி பயின்று புலமை பெற்று இந்நூல் இயற்றினார் என்பதாம். இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட 41 பாடல்களைக் கொண்டது. இதன் காலம் கி பி 5 ஆம் நூற்றாண்டு என்பர். சிவன், திருமால், பிரமன் ஆகிய மும்மூர்த்திகள் கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ளதால் இவர் சமயப் பொது நோக்குடையவர் என்று கருத இடமளிக்கிறது.

**பாடுபொருள்**

ஒவ்வொரு பாடலிலும் இன்னது இன்னது இனியவை என்று கூறுகிறது தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் ஒன்றாகிய அம்மையில் அடங்கும். இந்நூலாசிரியர் இன்னா நாற்பது நூலைப் பின்பற்றியே இயற்றினார் என்பது பொருந்தும் இன்னா நாற்பது வழங்கும் தொடர்களை அப்படியே இனிமையாக்கி வழங்குகின்றன.

ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன்னின்னா-இன்னா நாற்பது

ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே-இனியவை நாற்பது

இன்னா நாற்பது மொத்தம் 40 பாடல்கள், ஒவ்வொன்றும் 4 இன்னா கருத்துகளுடையன. இனியவை நாற்பதில் 36 பாடல்கள், ஒவ்வொன்றும் 3 இனிய கருத்துகளுடையன. இனியவை நாற்பதில் 4 பாடல்கள், மட்டும் ஒவ்வொன்றும் 4 இனிய கருத்துகளுடையன மனதில் கொள்ளத்தகும் சிறந்த அறிவுரையை பின்வரும் பாடல் கூறுகிறது.

கொல்லாமை முன் இனிது கோல் கோடி மாராயம்
செய்யாமை முன் இனிது செங்கோலன் ஆதல்
எய்தும் திறத்தால் இனிதென்ப யார் மாட்டும்
பொல்லாங்குறையாமை நன்கு

1. உயிரைக் கொல்லாமை 2. நடுநிலைத்தவறி தன்னிடம் சிறப்பு செய்யாமை 3. செங்கோலன் ஆவது 4. மற்றவர்மீது குற்றம் கூறாமை ஆகியவை மனதில் கொள்ளத் தகுவன.

பிச்சைபுக்காயினும் கற்றல் மிகவினிதே

கயவரைக் கைக்கழிதந்து வாழ்தலினிதே
மானமிழந்தப்பின் வாழாமை முன்னினிதே
நாட்டார் புறங்கூறான் நனியினிதே
வருவாய் அறிந்து வழங்கலினிதே

பிச்சை எடுத்தாயினும் கற்றல், தீயோரை நீக்கி வாழ்தல், மானம் அழிந்தப்பின் வாழாமை, வருவாய் கண்டு வழங்கல், மற்றவர்மீது புறங்கூறாமல் இருத்தல் ஆகியவை இனிதாகக் கருதப்படுவன.

"ஒப்ப முடிந்தால் மணவாழ்க்கை முன்னினிது"
"மானம் அழிந்தப்பின் வாழாமை முன்னினிது
"குழவி தளர்நடைக் காண்டல் இனிது"
"வருவாய் அறிந்து வழங்கல் இனிது
அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிது"

எனறு இனிது இது எனக் கூறுகிறது.

**1.4.6 திரிகடுகம்**

இதன் ஆசிரியர் நல்லாதனார். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துப்பொருள் சேர்ந்தது திரிகடுகம். இது, உடல் நோயைப் போக்குவது அதேபோல் ஒவ்வொரு பாடலிலும் இடம்பெறும் மூன்று கருத்துகளும் உளநோயைப் போக்குவன, இந்நூல், கடவுள் வாழ்த்துடன் 101 பாடல்களைக் கொண்டது. இதில் இடம்பெறும் கடவுள் வாழ்த்துத், திருமாலைப் பற்றியது

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய
பல்பொருள் வெ∴கும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை

1. தன்னைப் புகழ்ந்துத் திரிவது 2. வீணாகக் கோபம் கொள்வது 3. பொருள் முழுதையும் தாமே அடைய வேண்டும் என நினைத்தல் இம்மூன்றும் செல்வம் உடைக்கும் படையாகும்.

கணக்காளர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோர் இல்லா அவைக்களனும் - பாத்துண்ணாத
தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மைப் பயத்தல் இல்

1. ஆசிரியர் இல்லாத ஊர் 2. நீதிமான் இல்லாத அவை 3. செல்வத்தைப் பங்கிட்டுத்தரும் இயல்பில்லாதவன் ஆகியோர் அருகில் வாழும் வாழ்க்கை நன்மை பயப்பதில்லை

கயவரை கையகந்து வாழ்தல் நயவரை
நள்ளிருளும் கைவிடா நட்பொழுகல் - தெள்ளி
வருவன வாராமல் காத்தல் இம்மூன்றும்
குடிமா சிலர்க்கே உள

1. கீழ்மக்களைவிட்டு விலகி வாழ்தல் 2. அன்புள்ளவரை நல்லிரவிலும் கைவிடாமல் நேசித்தல் 3. ஆராய்ந்துத் தனக்குப் பழிச்செயல்கள் வரவிடாது காத்துக்கொள்ளுதல் இம்மூன்றும் மாசற்ற குடிப்பிறந்தார்க்கு வேண்டுவன.

ஈதற்கு செய்த பொருளை அறநெறி

சேர்தற்குச் செய்க பெருநூலை யாதும்

அருள் புரிந்து சொல்லுதல் சொல்லை இம்மூன்றும்

இருள் உலகம் சேராத ஆறு

1. பிறருக்குக் கொடுப்பதற்குப் பொருளீட்டவேண்டும், 2. அறநெறி புகட்டும் நூலை இயற்றவேண்டும், 3. எந்தச் சொல்லையும் அருள் புரிந்து சொல்லவேண்டும், இம்மூன்றும் இருள் உலகமாகிய நரக உலகை அடையாமல் இருக்கக் கூறும் நெறியாகும்.

### 1.4.7 ஆசாரக்கோவை

இதன் ஆசிரியர் கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார். கடவுள் வாழ்த்து நீங்களாக 100 பாடல்களைக் கொண்டது. காலம் கி பி 5 ஆம் நூற்றாண்டு என்பர். வெண்பாவால் ஆனது. ஆசாரம் என்பது வடசொல், அதற்கு நிகரான தமிழ்ச்சொல் ஒழுக்கம் என்பதாகும். இந்நூல் முதல் வெண்பாவின் ஈற்றடி ஆசார வித்து எனவும், நூறாவது வெண்பா ஆசார வித்து எனவும் முடிகிறது. மக்கள் அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள் இவை, தவிர்க்கப்படவேண்டிய தீய ஒழுக்கங்கள் இவை என்பன பற்றி விளக்குகின்றார் ஆசிரியர்.

உண்ணும் முறை, நீராடும் நெறி, துயிலும் விதம், உடையணியும் வகை படிக்கத்தகாத நாட்கள் முதலியன பற்றி இந்நூல் உரைக்கின்றது.

**கொள்ளத்தக்கவை**

வைகறை யாமம் துயில் எழுந்து செய்யும்

நல் அறமும் ஒன் பொருளும் சிந்தித்து வாய்வதின்

தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே

முந்தையோர் கண்ட முறை.

**தள்ளத்தக்கவை**

நகையொடு, கொட்டாவி, காறிப்பு, தும்மல்

இறையும் பெரியார் முன் செய்யாரே செய்யின்

அனையாது நிற்கும் பழி

### 1.4.8 பழமொழி

நீதி நூல்களில் திருக்குறள் நாலடியாருக்கு அடுத்த நிலையில் போற்றப்படுவது பழமொழியாகும். இதன் ஆசிரியர் முன்றுறையர். இவர் சமணர் என்பார். மொத்தப் பாடல்கள் 400, ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி பொதிந்து உள்ளதைக் காணலாம். இந்நூலின் வேறுபெயர் பழமொழி நானூறு என்பதாகும். வரலாற்றுக் குறிப்புகளைத் தன்னகத்தே கொண்டது. முடியுடை மூவேந்தர், கடையெழு வள்ளல் பற்றிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

31 ஆம் பாடலில் - பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பற்றியச் செய்தி

21 ஆம் பாடலில் - கரிகாலன் நரைமுடித்து முறை செய்த செய்தி

49 ஆம் பாடலில் - தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் பற்றிய செய்தி

93 ஆம் பாடலில் - மனுநீதி கண்ட சோழன் பற்றியச் செய்தி

102 ஆம் பாடலில் - பொற்கைப் பாண்டியன் பற்றியச் செய்தி

361 ஆம் பாடலில் - பாரி முல்லைக்குத்தேர் கொடுத்தல், பேகன் மயிலுக்குப் போர்வைத்தருதல்

பற்றிய வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பண்பால் உயர்ந்த, பெரியோரைத் துணையாகக் கொண்டால் யாவரும் நன்மை அடைய முடியும், என்னும் உண்மையை இராமாயணக் கதையைக்கொண்டு விளக்குகிறது கீழ்க்காணும் பழமொழிப்பாட்டு.

பொலந்தார் இராமன் துணையாகப்போதந்து
இலங்கைக் கிழவர்க்கு இளையான் - இலங்கைக்கே
போந்து இறை ஆயதூம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழிஇ இலாள் இல்

கரிகாலன் நரைமுடித்து நீதி வழங்கிய நிகழ்ச்சியை விளக்கும் பழமொழிப்பாடல் மிகவும் புகழ்பெற்றது.

உரை முடிவு காணான் இளமையோன் என்ற
நரை முது மக்கள் உவப்ப நரைமுடித்து
சொல்லாமல் முறை செய்தான் சோழன் குல விச்சை
கல்லாமல் பாகப்படும்

மேலும், என்பதாம் இந்நூலில் காணப்படும் சில பழமொழிகள்

தமக்கு மருத்துவர் தாம்
பழம்பகை நட்பாதலில்
தம் கண்ணிற் கண்டதூஉம் எண்ணிச் சொலல்
காணாரெனச் செய்யார் மாணாவினை
அணியெல்லாம் ஆடையின் பின்
பின்னின்னா பேதையார் நட்பு

என்பன.

### 1.4.9 சிறுபஞ்சமூலம்

. இதன் ஆசிரியர் காரியாசன். இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். இந்நூல் 102 பாடல்களைக் கொண்டது. 1. கண்டங்கத்திரி 2. சிறுவழுதுணை 3. சிறுமல்லி 4. பெருமல்லி 5. நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் சேர்ந்த மருந்து சிறுபஞ்சமூலமாகும். இதுபோல் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து அறிய கருத்துகள் பொதிந்து இருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இக்கருத்துகள் வாழ்க்கை உயர்விற்குப் பயன்படுகின்றன. வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை ஆகிய ஐந்தின் வேர்கள் பெருபஞ்சமூலம். இதுபோன்று ஐந்து அரிய உண்மைகளைக் கூறும் பாடல் ஒவ்வொன்றும் உயிருக்கு வரும் அறியாமை என்னும் நோயினைப் போக்கி இம்மை, மறுமை இன்பங்களைத்

தரும். மெய்யுணர்வு ஒன்றால்தான் வீட்டுப்பேற்றினை ஒருவன் எய்த இயலும் என்று கூறுகிறார்.

தானத்தால் போகம் தவத்தால் சுகம்சுகமா
ஞானத்தால் வீடாகும் நாட்டு.

என்கிறார். மனைவியின் கடமையைப்பற்றி ஆசிரியர் கூறும் கருத்துப் போற்றத்தக்கது.

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்விருந்தோம்பி – திருவாக்கும்
தெய்வத்தை எஞ்ஞான்றும் தெற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு

1. கணவனின் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்தல்
2. சுற்றத்தாரிடம் சினம் கொள்ளாதிருத்தல்
3. உறவினரை வெறுக்காமல் அன்புடன் பாதுகாத்தல்
4. விருந்தினரைப் பேனல்
5. தெய்வ வழிபாடு ஆகிய இவையாவும் மனைவிக்குரிய கடமைகளாம்.

என்று வலியுறுத்துகிறார். மேலும்,

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம் - நடைதனக்குக்
கோடாமொழி வனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு

1. நாள்வகைப் படைக்கு யானைப்படையானது அழகாகும்
2. பெண்ணின் இடை சிறிதாக இருத்தல் அழகாகும்
3. ஒருவனின் ஒழுக்கத்திற்கு நடுவு நிலைமை பிறழாமை அழகாகும்
4. செங்கோல் ஆட்சிக்கும் அந்த நடுவு நிலமையே அழகாகும்
5. போர்வீரர்களுக்குக் கெடாத வீரம் அழகாகும்.

என எதற்கு எது அழகு என்ற அறக்கருத்துகளை வளியுறுத்துகிறார்.

### 1.4.10 முதுமொழிக்காஞ்சி

இந்நூல் ஆசிரியர் மதுரைக்கூடலூர்கிழார். இது, குறள்தாழிசையால் இயற்றப்பட்ட நூல். இது, பத்து பத்து செய்யுட்கள் கொண்டு பத்துப்பகுதிகளைக் கொண்டது, 100 பாக்கள் கொண்டது. நீதி நூல்களுள் மிகச் சிறிய நூல், இதன் காலம் கி பி 5 ஆம் நூற்றாண்டாகும், 'காஞ்சி' என்றால் நிலையாமையைக் கூறுவது. எனவே, தொல்காப்பியர் கூறும் காஞ்சித்திணைக்குப் பொருந்துவதாக இல்லை.

காஞ்சியென்பது, மகளிர் இடையில் அணியும் ஒருவகை அணிகலக்கோவை, பல அணிகளைக் கோத்த காஞ்சி, அணிகலன் போலப் பல முதுமொழிகளைக் கோத்த காஞ்சியே என்று கூறுவர்.

கூடலூர்க்கிழார் கல்வியிலும் ஒழுக்கமே மேம்பட்டது என்று குறிப்பிடுகிறார். இந்நூல், ஒவ்வொறு பத்தும் 'ஆர்கலி உலகத்து மக்கட்கு

எல்லாம்' என்று தொடங்கும் பத்துவரிகளில் பத்து முதுமொழிகளைத்தருகிறது. ஒவ்வொரு பத்தும், இல்லைப்பத்து, எளிய பத்து என்று தனித்தனி தலைப்புப் பெற்றுள்ளது. சிறந்த பத்து என்னும் தலைப்பில் வரும் சில வரிகள்.

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
ஓதலின் சிறந்தன்று ஒழுக்கமுடைமை"
வண்மையின் சிறந்தன்று வாய்மை உடைமை
இளமையின் சிறந்தன்று தெய்பிணி இன்மை
கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று"

(சிறந்தன்று – சிறந்தது)

எதைக்காட்டிலும் எது சிறந்தது என்று ஆசிரியர் கூறுகிறார்.

### 1.4.11 ஏலாதி

இதன் காலம் கி பி 5 ஆம் நூற்றாண்டு. கடவுள் வாழ்த்தோடு சேர்த்து 81 வெண்பாக்களைக் கொண்டது.இந்நூல் ஆசிரியர் கணிமேதாவியார். சமண சமயத்தைச் சேர்ந்தவர் 'ஏலாதி' என்பது ஏலம் முதலிய ஆறு பொருள்களாலான ஒருவகைச் சூரணத்தைக் குறிக்கும். ஏலம் 1 பங்கு, இலவங்கப்பட்டை 2 பங்கு, நாகேசுரம் 3 பங்கு, மிளகு 4 பங்கு, திப்பிலி 5 பங்கு, சுக்கு 6 பங்கு, இதுபோன்று உள்ளத்திற்கு நலம் செய்யும் 6 உண்மைப் பொருள்கள் ஒவ்வொரு செய்யுளிலும் பொதிந்து கிடக்கின்றன.'ஏலாதி' என்னும் சூரணம் உடல் நோயைப் போக்குகிறது. ஏலாதி என்னும் நீதி நூல் உள்ள நோயைப் போக்குகிறது.

தூதுவருக்கு அறிவு, தோற்றப் பொலிவு, அஞ்சாமை, கல்வி, சொல்லாற்றல் காலம் அறிதல் ஆகிய ஆறு வகையான பண்புகள் பொருந்தியிருக்கவேண்டும் என்பதை இந்நூல் பாட்டு ஒன்று வற்புறுத்திக் கூறுகிறது.

மாண்டமைந்தார் ஆய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் பூண்டமைந்த
கால மறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்

என்பதாம்.

### அகநூல் (6)

### 1.4.12 கார் நாற்பது

இதன் காலம் கி பி 4 ஆம் நூற்றாண்டு. இதன் ஆசிரியர் கண்ணங்கூத்தனார். இவர் இயற்பெயர் கூத்தன், தந்தைபெயர் கண்ணன் ஊர் மதுரை. இது, கார்காலத்தைச் சிறப்பிக்கும் நாற்பது வெண்பாக்களைக் கொண்டது. அதனால், கார் நார்பது என்ற பெயர் பெற்றது, கார்காலத்தின் அழகிய இயற்கை வருணனைகள் கொண்ட அகப்பொருள் நூல்.

காலம் இடம் பொருள் கருதி நூற்பான்
சால உரைத்தல் நானாற் பதுவே

என்று இலக்கண விளக்கப்பட்டியல் கூறுகிறது. முல்லைத் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களைக் கூறுகிறது. இதன்படி இந்நூல் காலத்தைப் பற்றியது அகப்பொருள் கூறும் கீழ்க்கணக்கு நூல்களில் மிகச் சிறியது.

முதற்பாடலில் "பெருகடல் வண்ணன் புணை மார்பில் தார்போல திருவில்" என்னும் வரியில் வானவில், திருமாலின் மார்பில் தவழும் மாலை போன்றது என உவமிக்கிறார் ஆசிரியர்.

19 - ஆம் பாடலில் நாஞ்சில் வளவன் என்று பலராமனைக் குறிப்பிடுகின்றார். எனவே, இவர் வைணவர் என்பர். சிவனுக்குரிய கார்த்திகை விளக்கிட்டு விழாவைக் குறிப்பிடுவதால் இவ்வைணவர் சமயப்பொறை உடையவர் எனக்கொள்வர்.

**முல்லை திணை**

பெரும்பொழுது கார்காலம், சிறுபொழுது மாலை நேரம், உரிப்பொருள் ஆற்றியிருத்தல், கருப்பொருள் ஆகியன அமையப்பெற்ற நூல். இது, வினைமேற் சென்ற தலைவன் கார்காலத்தில் திரும்பி வருவதாகத் தலைவிடம் கூறிச்சென்றான். அவன் குறிப்பிட்டுக் சென்ற கார்காலம் வந்ததும் அவன் திரும்பி வராமைக்கண்டு தலைவி துன்புற்றாள், பசலை நோயுற்று மெலிந்தாள் தோழி அவளைத் தேற்றினாள். தலைவனும் தலைவியை நினைத்துத் தேர்ப்பாகனோடு பேசி விரைந்து மீள்வதனை அழகுறக் கார்நாற்பது எடுத்து விளக்குகிறது.

தலைவன் கார்காலத்தே வருவேன் எனப் பிரிந்தான். தலைவி பசலை நோயுற்று மெலிந்தாள். மயில்கள் நடன மாதரைப்போல ஆடுகின்றன, காட்டிலே கொன்றை மரங்களில் பூவிரித்து சொரிகின்றன. அப்பூக்களிலே தேனை உண்டு திரியும் வண்டுகள் இசையைப் பாடிக்கொண்டு திரிகின்றன. எனவே, தலைவன் திரும்பி வருவதாகச் சொன்ன கார்காலம் வந்துவிட்டது. தலைவன் திரும்பி வந்து விடுவான் என்று, அவள் பசலையைப் போக்கும் மருந்தாகத் தோழி பருவக்காலத்தின் தன்மைகளை எடுத்துக்கூறி தலைமகளைத் தேற்றுகிறாள்.

ஆடு மகளிரின் மஞ்சை அணிகொள
காடும் கடுக்கை கவின்பெறல் பூத்தன
பாடு வண்டு ஊதும் பருவம் பிணைத்தோன்
வாடும் பசலை மருந்து.

என்று அறிவுறுத்துகிறாள்.

கார்காலத்தில் தோன்றி மலர்கள் வரிசையாக மலர்ந்திருக்கின்றன. அவ்வியற்கைக் காட்சிக்குச் செயற்கை நிகழ்ச்சியை உவமைக் காட்டுகிறார் புலவர். தோன்றி மலர்ந்திருக்கும் தோற்றம் கார்த்திகை நாளில் மக்கள் ஏற்றி வைத்த விளக்குகளைப்போல் காட்சியளிக்கிறதாம். இக்காட்சியைப் பின் வரும் பாடல் காட்டுகிறது.

நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின் தகையுடையவாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை.

என்பதாம்.

### 1.4.13 ஐந்திணை ஐம்பது

இதன் காலம் கி பி 4 ஆம் நூற்றாண்டு, ஐந்திணைக்கும் 50 பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் மாறன் பொறையனார், மாறன் என்பது பாண்டியன் பெயராகவும், பொறையன் என்பது சேரன் பெயராகவும் இருப்பதால்

இவ்விரு பேரரசருடன் தொடர்பு கொண்டவர் என்றும், தென்பாண்டி நாட்டினர் என்றும் உய்துணருவர். இந்நூல் பாயிரம், “வண் புள்ளி மாறன் பொறையன்” எனக் கூறுவதால் இவர் அரசாங்கக் கணக்கு அதிகாரியாக இருந்திருக்க வேண்டும் என்று சில திறனாய்வாளர் கூறுவர். இந்நூல், முதற்பாடலில் மேகக் கூட்டம் எழுந்தன என்பதை கூறும் பொழுது

1. கண்ணன் நிறம்போல் இருண்டு எழுந்தது.
2. முருகன் வேல்போல் மின்னி எழுந்தன.
3. சிவனுக்குரிய கொன்றைப் பூக்கள் மலரும்படி வளமாக எழுந்தன.

எனக் கூறுவதால், இவர், சமயப் பொறையுடைய வைதீக மதத்தினர் என்பர். அகத்திணை ஒன்றுக்குப் பத்துபாடல் வீதம் ஐந்திணைக்கு ஐம்பது பாடல்களைக் கொண்டு ஐந்திணை ஐம்பது என்றும் பெயர்பெற்றது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் முறையில் திணைகள் அமைக்கப்பட்ட முறை “மாயோன் மேய காடுறை உலகமும்” என்னும் தொல்காப்பிய நூற்பாவில் உள்ள முறையாகும்.

மாயோன் மேய காடுறை உலகம்
சேயோன் மேய மைவரை உலகம்
வேந்தன் மேய திம்புனல் உலகம்
வருணன் மேய பெருமணல் உலகம்

இந்நூற்பாவில் இல்லாத பாலை நிலத்திணை ஈற்றில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வறண்ட பாலை நிலத்திலே ஓர் வற்றாத அன்புக் காட்சியைக் காட்டுகிறார் இப்புலவர்.

சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமானினிதுண்ண வேண்டி – கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

பாலை வழியிலே சுனையில் நீர் சிறிதே உள்ளது. அந்நீரைத் தன் பிணைமான் உண்டல் இனிது என எண்ணுகிறது கலைமான். ஆனால், பிணைமானோ கலைமான் உண்ணாதிருக்கும் போது தான் மட்டும் உண்ண மறுக்கும் பான்மையுடையது. ஆகவே, கலைமான் ஒருவழி செய்தது. கலைமான் நீரை உறிஞ்சிக் குடிக்கச் செய்தது. குலைமான் நீரை உறிஞ்சிக் குடிப்பது போலப் பாவனை செய்ய அதனை உணராத பிணைமான் நீரைக் குடித்தது. இந்த அன்புக்காட்சியினை இப்பாடல் விளக்குகிறது.

**1.4.14 திணை மாலை நூற்றைம்பது.**

இந்நூல் கி பி 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் ஆசிரியர் கணிமேதாவியார். இவர் ஏலாதி இயற்றியவராவர் இந்நூல் திணைக்கு 30 பாடல்கள் வீதம் ஐந்து திணைக்கு 150 பாடல்களைக் கொண்டது. அகப்பொருள் நூல்களில் மிகவும் பெரியது . இப்பிறப்பில் செய்த தீவினை, நல்வினைப் பயன் மறுபிறப்பில் அவனை அடையும் என்பது பொது நம்பிக்கை. ஆனால், ஆசிரியர் இம்மையில் செய்ததன் பயன் இம்மையிலேயே தெரியும் என்று புதுமை பேசுகிறார்.

இம்மையால் செய்ததை இம்மையே ஆம் போலும்
உம்மையே ஆம் என்பார் ஓரார் காண்

என்பதாம். இந்நூல் மருதநில இயற்கையின் அழகைச் சிறப்புற விளக்குகிறது. எடுத்துக்காட்டாக மருத நிலப் பாடல் ஒன்றைக் காண்போம்,

செங்கண் கருங்கோட்டெருமை சிறுதனையா

அங்கண் கழனிப் பழனம் பாய்ந்து – அங்கண்

குவளையம் பூவொடு செங்கயல்மீன் சூடி

தவளையும் மேற்கொண்டு வரும்".

மருதநிலம் என்றாலே எருமை காட்சியளிக்கும். நல்ல நீர்நிலைகளில் திரிந்து பின் கரை ஏறி வருகிறது ஓர் எருமை, அதன் முதுகுப் புறத்தில் குவளை மலர்களும் சிவந்த கயல் மீன்களும் தவளைகளும் இருக்கின்றன. இக்காட்சியை நயம்பட சித்திரிக்கிறது இப்பாடல்.

### 1.4.15 ஐந்திணை எழுபது

இதன் காலம் கி பி 5 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. ஆசிரியர் மூவாதியார். சமண சமயத்தைச் சேர்ந்தவர். திணைக்குப் 15 பாடல்கள் வீதம், ஐந்து திணைக்கு 70 பாடல்களைக் கொண்டது. கிடைக்கப்பெற்றவை 66 பாடல்கள். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம் நெய்தல் என்ற முறையில் திணை வைக்கப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பாடல் விநாயகர் பற்றியது.

கள்ளத்தின் ஊச்சுரமம் என்பர் காதலர்

உள்ளம் படர்ந்த நெறி

என்னும் ஐந்திணை ஐம்பதின் ஒரு பாடலின் பாதிப் பகுதி.

கள்ளர் வழங்கும் சுரமென்பர் காதலர்

உள்ளம் படர்ந்த நெறி

என்று ஏறத்தாள அப்படியே இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது. எனவே, மூவாதியார் மாறன் பொறையனாருக்குப் பிற்பட்டவர் எனக் கருதச்செய்கிறது.

சான்றோர் நட்பானது என்றும் நிலைத்து நிற்கும் தன்மையுடையது. அது நாளும் வளர்ந்து நன்மையைத் தருவது என்னும் நற்கருத்தை நவில்கிறது. "தலைவன் சான்றோன்" ஆதலால் அவன் நட்பும் நலம் தரும் என்று தலைவியின் நெஞ்சு நம்புகிறது.

சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி

வலிதாகிப் பின்னும் பயக்கும் - மெலிவில்

கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை

நயந்திகழும் என்றும் என் நெஞ்சு.

சான்றோன் நட்பு என்றும் நிலைத்து நிற்கும் தன்மையுடையது அது நாளும் வளர்ந்து நன்மையைத் தருவது என்னும் சிறந்த கருத்தை இப்பாடல் விளக்குகிறது.

### 1.4.16 திணைமொழி ஐம்பது

இதன் காலம் கி பி 5 ஆம் நூற்றாண்டாகும். ஆசிரியர் கண்ணஞ்சேந்தனார். ஐந்திணை ஐம்பது போலவே திணைக்குப் 10 பாடல் வீதம் ஐம்பது பாடல்கள் கொண்டது. எனவே, திணைமொழி ஐம்பது எனப் பெயர் பெற்றது. 46 பாடல்கள் இன்னிசை வெண்பாவாலும் 4 பாடல்கள் நேரிசை வெண்பாவாலும் அமைந்தது. அகப்பொருள் பற்றிக் கூறும் சிறந்த நூல் இது.

களவு ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைவனும் தலைவியும் பலநாள் மறைவாகச் சந்தித்து மகிழ்கின்றனர். தலைவன் இரவுபொழுதில் வரும்பொழுது நேரும் துன்பத்திற்கு அஞ்சுகிறாள் தலைவி. ஊர் அறிய மணம் செய்து கொண்டால் ஒரு துன்பமும் நேராது எனக் கருதுகிறாள். தலைவியின் இந்த எண்ணத்தைத் தோழி தலைவனிடம் ஆற்றலோடு எடுத்து விளக்குகிறாள். அவன் வரும் வழியில் ஏற்படும் இடையூறுகளைக் கூறுகிறாள். தினைப்புனம் காப்போர் இரவில் திரிந்து கொண்டிருப்பர் அவர்கள் கொடிய சொல்லையும், வில்லையும், வேலையும், அம்பையும் உடையவர்கள். ஆதலால் நீ அவ்வழி வராதே! எனக் கூறித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறாள் தோழி.

விரைகமழ் சாரல் விளைபுனம் காப்பார்

வரையிடை வாரன்மின் ஐய! உரைகடியர்

வில்லினர் வேலர் விரைந்துசெல் அம்பினர்

கல்லிடை வாழ்நர் எமர்

இரவு குறி விலக்கி தோழி வரைவு கடாயது என்னும் துறையில் அமைந்த பாடலில் நீ இரவில் வரின் ஊரில் அலர் எழும் எனத் தோழி உரைக்கிறாள்.

யாழும் குழவும் முழவும் இயைந்தென

வீழும் அருவி விற்மலை நன்னாட

மழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவரின்

ஊர்அறி கௌவை தரும்

மழையருவி வீழ்வது யாழ், குழல், முழவு ஆகிய இசைக்கருவிகளின் இன்னோசை கலந்ததைப் போல இருந்தது என வரும் உவமை உள்ளந்தோறும் வகையுறும்.

**1.4.17 கைந்நிலை**

இதன் காலம் கி பி 3 ஆம் நூற்றாண்டு என்பர் ஆசிரியர் புல்லங்காடனார். இந்நூல் திணைக்குப் 12 பாடல்கள் விதம் 60 பாடல்களைக் கொண்டது. இது ஐந்திணை அறுபது என்றும் அழைக்கப்படுகிறது.அக ஒழுக்க நிலையைப் பற்றிக் கூறுகிறது. கருத்து வளம் மிக்க பாடல் ஒன்று

கள்வர் திரிதரூஉம் கானம் கடந்தவர்

உள்ளம் பிரிந்தமை நீயறிதி – ஒள்ளிழாய்

தொல்லை விடரகம் நீந்திப் பெயர்ந்தவர்

வில்லைநாம் காணும் வரவு.

பொருளுக்காகப் பிரிந்து சென்றுள்ளான் தலைவன், பிரிவை ஆற்றாளாகிய தலைவி வருந்தி, ஒருவேலை நம் மீது தலைவனுக்குள்ள அன்பு மாறிவிட்டதோ? என ஐயுறுகிறாள். ஆனால், தோழியோ, தலைவனின் அன்பு மாறாதது என்றும், பொருள் தேடிக் கொண்டு வருவான் என்றும் கூறி உண்மை அன்பின் உணர்ப்பண்பைப் புலப்படுத்துகிறாள்.

**இன்னிலை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கைநிலைக்குப் பதில் இன்னிலை என்னும் நூலைக் கூறுவர் சிலர். கடவுள் வாழ்த்து உட்பட 49 வெண்பாக்களைக் கொண்டது உள்ளன. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், வீட்டுப்பால் என நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பாடியவர் பொய்கையார், மதுரை ஆசிரியர் பூதனார் இதனைத் தொகுத்தவர். பெண்ணின் பெருமையாகக் கூறும் பாடல் ஙநற பின்வருமாறு,

ஒத்த உரிமையளாக ஊடற்கு இனியளாக
குற்றம் ஒருவம் குணத்தளாக — கற்றறிஞர்ப்
பேணும் தகையளாக கொண்கண் குறிப்பறிந்து
பேணும் தகையினாள் பெண்.

என்று பெண்ணின் இலக்கணமாகக் கூறுகிறார் ஆசிரியர்.

**புறப்பொருள் நூல் (1)**

**1.4.18 களவழி நாற்பது**

ஏற்களம் பற்றியோ போர்க்கலம் பற்றியோ பாடப்படுவது களவழி. இதன் ஆசிரியர் பொய்கையார். போர் களத்து நிகழ்ச்சிகளைப் பாடும் நாற்பது பாக்கள் கொண்டது களவழிநாற்பது.

ஏரோர் களவழி என்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்

என்னும் தொல்காப்பிய நூற்பா ஏற்களம் பற்றியும் போர்களம் பற்றியும் பாடப்பெறுவது களவழி என்று தெரிவிக்கிறது.

களவழி வாகைத்திணையில் ஒரு துறை, பொய்கையாரின் தன் நண்பன் சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் செங்கணானோடு கழுமலம் என்னுமிடத்தில் பொருது தோற்றக்காலையில் சிறை மீட்டுதல், செங்கணான் போரில் பெற்ற வெற்றியை எடுத்தியம்புவது. இந்த போர்க்கள கொடுமையை உள்ளவாறு வருணிக்கிறார் புலவர்,

கடிகாவில் காற்றுற் றெறிய வெடிபட்டு
விற்றுவீற் றோடும் மயிலினம் போல் நாற்றிசையும்
கேளிர் இழத்தார் அலமரும் - செங்கண்
சினமால் பொருத களத்து"

பெரும் துறைக் காற்றுப் புகுந்த போது சோலையில் உள்ள மயில்கள் எல்லாம் அலரிச்சிதறி ஓடுவதைப் போல், சோழன் செங்கணான் சீறிச் சினத்து போர் புரிந்த களத்தில் சுற்றத்தாரை இழந்தவர்கள் நாற்புறமும் பதறித் துடிதுடித்து ஓடி அழுகின்றனர்.

கொல்யானை பாயக் குடைமுருக்கி எவ்வாயும்
புக்கவாள் எல்லாம் பிணம்பிறங்கத் - தச்சன்
வினைபடு பள்ளியின் தோன்றுமே செங்கண்
சினமால் பொருத களந்து

சினம் மிக்க சோழன் செங்கணான் போர் செய்த களத்தில் எங்கும் குடைகளை அழித்துக் கொல்கின்ற யானைகள் பாய்ந்தன. அதனால், அந்த யானைகள் புகுந்த இடங்கள் எல்லாம் பிணங்கள் விளங்கத் தச்சனால் தொழில் செய்யப்படும் இடங்கள் போல் விளங்கும்.

இப்போர்த்துறைப்பாட்டில் அமைந்துள்ள உவமை நயம் உணர்ந்து இன்புறத்தக்கது! இங்ஙனமே இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு வகையாகப் போர்கள காட்சிகளை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

## வினாக்கள்

### பகுதி – அ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

1. சங்கம் குறித்த இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளை எழுதுக.
2. கடைச் சங்கம் - குறிப்பு வரைக.
3. பதினெண் மேல்கணக்கு நூல்கள் யாவை?
4. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' – விளக்கம் தருக.
5. ஆற்றுப்படை நூல்களில் பாணர்கள் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறார்கள்?
6. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவை?
7. திருக்குறளின் பெருமைகளாகக் கூறுவன யாவை?
8. நிலையாமைக் குறித்து நாலடியார் கூறுவன யாவை?

### பகுதி – ஆ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

9. சங்கம் குறித்து ஒரு கட்டுரை எழுதுக?
10. சங்க இலக்கியங்கள் அகமும் புறமும் பொதிந்து கிடக்கும் பாங்கை எழுதுக?
11. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணலாகும் அறக்கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
12. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகநூல்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
13. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றுவதற்கான, சமூக, வரலாற்றுக்காரணங்களை எழுதுக?
14. சங்ககாலம் தமிழக வரலாற்றில் பொற்காலம் என்பதை ஆய்க.

## NOTES

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

## அலகு - 2

### 2.1 ஐம்பெருங் காப்பியங்கள்

காப்பியமென்பது காவியமெனும் வடசொல்லின் திரிபு. ஐம்பெருங்காப்பியமென்னும் வழக்குப் பிற்காலத்ததென்பது விளங்கும். அதன் வைப்பு முறைக்குப் போதிய காரணம் இல்லையென்பதும் தெளிவு, ஐம்பெருங்காப்பியங்களாய் அமைந்திருப்பன சிலப்பதிகாரம், மணிமேகலை வளையாபதி குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்பனவாகும் இப்பெருங்காப்பியத்தின் இலக்கணத்தைத் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. இவற்றுள், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களாகும்.

பிற்காலத்தில் தோன்றிய பாடல் ஒன்று ஐம்பெருங் காப்பியத்தின் பெயரைக் கூறுகிறது. சிலப்பதிகாரம் படைத்தான்

சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்
கந்தா மணிமேகலை புனைந்தான் - நந்தா
வளையாபதி தருவான் வாசனுக்கு ஈந்தான்
திளையாத குண்டல கேசியாம்'.

இந்த ஐம்பெருங்காப்பியங்களில் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய மூன்றும் முழுமையாகக் கிடைக்கின்றன. வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரண்டும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

#### 2.1.1. சிலப்பதிகாரம்

பெண்ணுக்குப் பெருமை தரும் காப்பியமாகத் திகழ்கிறது. இக்காப்பியத்தை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று தமிழ் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட பான்மையினைப் பாடினார் பாரதியார் தமிழில் வழங்கும் காப்பியங்களுள் முதன்மையாகக் கருதப்படுவது, உலகக் காப்பியங்களோடு ஒப்பவைத்து எண்ணப்படும் தகுதி பெற்றது, சிலப்பதிகாரமே. இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் விரவப்பெற்றதால் முத்தமிழ்க் காப்பியம் என்றும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

#### நூலின் அமைப்பு

இது, தண்டமிழ் நிலமாண்ட வண்தமிழ் வேந்தர் மூவரையும் சிறப்புறக் கூறுகிறது. அதற்கேற்பவே சோழன் சிறப்புப் புகார்க் கண்டத்திலும், பாண்டியனைப் பற்றிய செய்திகள் மதுரைக் காண்டத்திலும் சேரன் செங்குட்டுவனின் வீரமேம்பாடும் வெற்றிச்சிறப்பும் வஞ்சிக் காண்டத்திலும் இடம்பெற்றுள்ளன. அரசியல் நெறியினின்றும் வழுவியவர்க்கு அறக்கடவுளே தண்டனை தரும் என்பது, மதுரைக் காண்டத்தில் நீதி தவறிய பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறத்தலினால் உணர்த்தப்படுகிறது. கற்பு மேம்பாட்டில் சிறந்த பத்தினியைத் தேவரும் தொழுவர் என்ற செய்தி வஞ்சிக்காண்டத்தில் சிறப்பாகப் பேசப்படுகிறது.

வஞ்சிக் காண்டத்தில் பலவிடங்களில் கடவுள் என்ற பெயராலேயே இக்கண்ணகி அழைக்கப்படுகிறாள். குன்றக் குரவையில் வேங்கை மரத்தடியில் ஒரு முலையிழந்து நிற்கும் கண்ணகியைக் கண்ணுற்ற குரவர்கள்,

இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம்
இல்லையால்"

என வியந்து,

சிறுகுடியீரே சிறுகுடியீரே தெய்வங்

கொள்ளுமின் சிறுகுடியீரே”

எனத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்”

எனச் சேரமாதேவியும் சேரனிடம் மொழிகின்றாள்.

இமயமால் வரை எங்கோன் செல்வது

கடவுள் எழுதவோர் கற்கே யாதலின்”

என்று கண்ணகியின் கடவுள் நிலையை வில்லவன் கோதையும் கூறுகின்றான். ஊழ்வினை பலவிடங்களிலும், சிறப்பாகப் புகார்க் காண்டத்தில் கானல்வரியிலும் உணர்த்தப்படுகிறது.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்

உரைசால் பத்தினியை உணர்ந்தோர் ஏத்தலும்

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்

என்று மூன்று அறக்கருத்துகள் உணர்துகின்றன.

**நூலின் சிறப்பு**

அரங்கேற்று காதையில் வரும் செய்திகளால் ஆடலாசிரியன் இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையாசிரியன், நூலாசிரியன் இயல்புகளை அறிகிறோம் இந்திரவிழவூரெடுத்தக் காதையில் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையெல்லாம் அறிகிறோம். கானல் வரியில் தமிழின் விழுமிய பெற்றியினை எடுத்து விளக்கும் பல அழகிய பாடல்களைக் காண்கிறோம்.

இந்திரவிழவூரெடத்தக் காதை, கானல் வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என்பவற்றில் முறையே மருதம், நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி ஆகிய திணைகளும், கூத்து, பாட்டு, விழா முதலிய செய்திகளும் விரவி வந்துள்ளன. வஞ்சிக்காண்டம் கால்கோள் நீர்ப்படை நடுகல் முதலியவற்றினைப் புலப்படுத்தி நிற்கிறது.

உலகக் காப்பியங்களெல்லாம் உயர்ந்த மக்கள், தேவர்கள், அரசர்கள் இவர்களைப் பற்றியே எழுந்திருக்க, இளங்கோவடிகள் தமிழின் முதற்காப்பியமாம் சிலப்பதிகாரத்தைக் கோவலன், கண்ணகி ஆகிய எளிய மக்களையே தம் காப்பியத் தலைவர்களாகக் கொண்டு குடிமக்கள் காப்பியமாகப் படைத்துள்ளார். ஒருவரைப் பற்றிய தொடர்ந்த முழுக்கதையினையும் ஊரும் பேரும் நாடும் சிறப்பித்துக் கூறும் பாடல்களை இந்நூலிற் காண்கிறோம். பெண்மைக்கு முதலிடம் தந்து அதற்கு உரிய சிறப்பினை வைத்துப் பெண்மையினை வாழ்த்திப் போற்றுவதனையும் இக் காப்பியத்தால் அறியலாம்.

இதன், ஆசிரியர் இளங்கோவடிகளை, குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த என்ற பதிகத்தின் முதல் தொடர், இவரைச் சமணத்துறவி எனக் கூறுகிறது. இவர், செங்குட்டுவன் தம்பியார் என்பதும் தம் தமையனாரது அல்லல் நீங்க அரசபாவியைத் துறந்த செம்மல் என்பதும் தெரியவருகின்றன. செங்குட்டுவன் சிறந்த சைவன், இளங்கோவடிகள் சமயமும், சைவமே என்று உ.வே.சா கூறுவர். தம் சமயக் கருத்துகளைக் கூறக் கவுந்தியடிகளைப் படைத்திருப்பதால் இவரைச் சமணர் என்பர் சிலர். இவர் சமயம் எதுவாக

இருந்தாலும் சமய ஒருமைப்பாட்டினையும் அமைதியினையும் கூற வந்தவர் இவர்.

சொற்சுவை பொருட்சுவை கெழுமிய இந்நூல் அக்கால அரசியல், மக்கள் வாழ்வு, சமயநிலை, சமுதாய ஒருமைப்பாடு, தொழில்வளம், திணைவளம், இயல் இசை நாடக வளம் முதலிய பிற பல செய்திகளையும் புலப்படுத்தி நிற்கும் சிறப்பு வாய்ந்தது.

**நூலின் காலம்**

இந்நூலில் கயவாகு என்னும் இலங்கை நாட்டின் வேந்தன் குறிப்பிடப்பட்டிருக்கிறான். இவன் இலங்கையில் அரசாண்ட காலம், கி.பி இரண்டாம் நூற்றாண்டென்பர்

திரு. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் இந்நூலின் காலம் கி.பி 8-ஆம் நூற்றாண்டென்பர். திரு.வையாபுரிப் பிள்ளையும் இக்கருத்தினை ஏற்றுக்கொள்கிறார். இந்நூலுக்கு அரும்பதவுரையாசிரியர் எழுதிய பழைய உரையும் அடியார்க்கு நல்லார் எழுதிய சிறந்த உரையும் உள்ளன. அடியார்க்கு நல்லார் உரையால் தான் அக்காலத்தின் இசை கூத்துப் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது.

**2.1.2. மணிமேகலை**

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 'இரட்டைக் காப்பியங்கள்' எனப்படும். இரண்டும் ஒரே காலத்தில் எழுந்தன என்பது சிலப்பதிகாரம் மூலம் அறியலாம். ஐம்பெருங் காப்பியங்களில் இவையிரண்டும் சேர்த்தே பேசப்படுகிறது. மணிமேகலைக் கதை சிலப்பதிகாரம் கதையோடு தொடர்புடையது. இதன் காலம் கி பி 2 ஆம் நூற்றாண்டென்பர். மாதவி பெற்ற மணிமேகலை, நம்மை வாழ்விப்பதே என அம்பிகாபதி மணிமேகலையைச் சிறப்பிக்கிறது.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை இம்மணிமேகலை, இக்கதையின் தலைவியாவாள் கண்ணகி வீரச்செல்வியாகவும் மாதவி அன்புச் செல்வியாகவும் மணிமேகலை அறச்செல்வியாக, தவச் செல்வியாகக் காட்சியளிக்கின்றனர். கதைத் தலைவியின் பெயரே காவியத் தலைப்பாய் அமைந்துள்ளது மக்கட் சமுதாயத்தை அல்வழி நீக்கி நல்வழிப்படுத்த எழுந்த ஒரு சீர்திருத்தக் காவியமே மணிமேகலை. இலக்கிய உலகில் இந்நூலின் தனிச்சிறப்பு, இலக்கியப் புரட்சி, பரத்தைத் தொழிலில் திழைத்த சித்திராபதியின் பேர்த்தி மணிமேகலை, காவியத் தலைவியாகின்றாள். ……பரத்தை யொழிப்போடு மதுவொழிப்பு, சிறையொழிப்பு என்னும் சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியம் மணிமேகலைக் காவியம். இது, முதல் சமயக் காப்பியமாகும்.

இந்நூலை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். இவர் சமணம், பௌத்தம் புத்த சமயக் கருத்துகளைப் பரப்பவேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்நூலை இயற்றினார் என்பர். ஒரே காலத்தில் எழுந்ததாகக் கூறப்படும் சிலப்பதிகாரம், சமய ஒற்றுமையைக் கூற, மணிமேகலை சமயப் பூசல்களை வளர்த்து நிற்கிறது. தமிழ் மொழியில் முதன்முதல் தோன்றிய சமயக் காப்பியம் மணிமேகலை. இந்நூல் மணிமேகலை துறவு என்னும் வேறொரு பெயராலும் அழைக்கப்படுகிறது.

இந்நூல் விழாவறை காதையில் தொடங்கி, பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதை முடிய முப்பது காதைகளைக் கொண்டுள்ளது. சில இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல், தொடர், உவமைகள் சிலப்பதிகாரத்தோடு ஒப்புமை பெற்று வருகின்றன. சாத்தனார் பிற சமயத்தவர் கருத்துகளை

சிந்தை யின்றியும் செய்வினை யுறுமெனும்

வெந்திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்

செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்

எய்தா தென்போர்க் கேது வாகவும்

என்னும் பாடல் மூலம் கண்டிக்கிறார்

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா

வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா

புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்

மிக்க அறமே விழுத்துணை யாவது

என்றும் அடிகளில் நிலையாமையினை எடுத்துக்கூறி, அறத்தின் மேன்மையினை வலியுறுத்துகிறார். இவ்வாறு அறக்கருத்துகளை விரித்துரைப்பதால் அறக்காப்பியம் என்று இந்நூல் அழைக்கப்படுகிறது.

**2.1.3. வளையாபதி**

இந்நூல் கி.பி 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. கி. பி 14 – ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட புறத்திரட்டில் 66 பாடல்கள் தவிர இந்நூல் முழுமையும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை உரையாசிரியர்கள் உரையிலும் மேற்கோளாகச் சில பாடல்கள் கிடைக்கின்றன அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய பாடலொன்றில்

துக்கந் துடைக்கும் துகளறு காட்சியர்

நிக்கந்த வேடத்து இருடி கணங்களை

என வருவது கண்டு இஃது ஒரு சமண நூல் என்பர். குறட்கருத்துகள் பல இந்நூலில் காணப்படுகின்றன.

கற்புடை மகளிரின் உயர்வினைப் பேசும், ‘தெய்வம் தொழாள் கொழுநற் றொழுது எழுவாள் பெய்யெனப்பெய்யும் மழை’ என்னும் திருக்குறள் (55) கருத்தின் விளக்கமாகத் திகழ்கிறது, பின்வரும் வளையாபதிப் பாடல்,

நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்

பீடுறும் மழை பெய்யெனப் பெய்தலும்

கூடல் ஆற்றுவர் நல்லது கூறுங்கால்

பாடுங்கால் மிகு பத்தினிக்கு ஆவதே.

இவ்வாறு திருக்குறள் கருத்துகளை எடுத்தாளும் பல பாடல்களை வளையாபதியில் காணலாம். குழந்தைச் செல்வத்தின் சிறப்பை

பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்

துறையிலா வசை வாவித் துகிலிலாக் கோலத் தூய்மை

நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்

சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே

என்னும் பாடல் தெரிவிக்கின்றது. நூலாசிரியரைப் பற்றிய குறிப்புத் தெரியவில்லை. ‘தொழுவல் தொல்வினை நீங்குக’ என்று கூறும் கடவுள் வாழ்த்துப் பாடல் அருகப் பெருமானின் துதியாக உள்ளது. மேலும், அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டும் ‘துக்கம் துடைக்கும்’ என்னும் பாடலில் ‘நிக்கந்த

வேடத்து இருடிகணங்கள்' என்னும் தொடர் காணப்படுகிறது. இதில் வரும் நிக்கந்தன் அருகப் பெருமானைக் குறிப்பதாகும். வளையாபதி கதை வைசிய புராணத்தின் முப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் காணப்படுகிறது.

### 2.1.4. குண்டலகேசி

ஐம்பெருங்காப்பியங்களுள் இதுவும் ஒன்று. விருத்தப்பாவால் ஆனது. இந்நூலின் வரலாறு பௌத்தக் கதையாகிய தேரிகாதையின் 46 ஆம் காதையாய் அமைந்துள்ளது வைசிக புராணத்தின் 34 ஆம் அத்தியாயம் கதைத் தலைவியின் வரலாற்றினைக் கூறுகிறது. வளையாபதிபோல முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை, தொல்காப்பிய உரை, யாப்பருங்கல விருத்தியுரை, வீரசோழிய உரை, நீலகேசி சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரை ஆகியவற்றுள் குண்டலகேசிப் பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூலை இயற்றியவர் நாதகுத்தனார் என்பவர். பௌத்த சமயத்தைச் சார்ந்தது. குண்டலகேசி விருத்தம் என்னும் மற்றொருப் பெயரும் இந்நூலுக்கு உண்டு தர்க்க நூலாயும் இந்நூல் திகழ்வதோடு பிற சமயக் கருத்துகளையும் தாக்குகிறது. வாழ்க்கையின் தன்மையினை ஒரு பாடல் உணர்த்துகின்றது.

பாளையாம் தன்மை பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறு மிளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேவரு மூப்பு மாகி
நாளுநாள் சாகின்றாமால் நமக்குநாம் அழாத தென்னே!

யாக்கை நிலையாமையை உணர்த்தும் இப்பாடல், நிலையான தன்மையை உடையது. மேலும், புலனடக்கமே மெய்யான இன்பமும் புகழும் மனத் தூய்மை உடையவர்க்கே உரியன. அவாவினை நுகர்ந்து அழிக்கலாம் என்பது எரியும் தீயை நெய்யினால் அவிக்கலாம் என்பதனோடு ஒக்கும். நாளென்னும் வாயில் மக்கள் தலை வைத்துள்ளனர். எல்லாம் ஊழால் அமைவன. ஆதலால் இழப்பின் போது வருந்துதல் வேண்டாம் - என்பன போன்ற அறங்களைக் குண்டலகேசி திறம்பட எடுத்துரைக்கிறது.

### 2.1.5. சீவக சிந்தாமணி

இதன் ஆசிரியர் திருத்தக்கத்தேவர் இவர் ஒரு சமணத் துறவி.இது ஐம்பெருங்காப்பியங்களுள் தலையாயதாய் வைத்தெண்ணப்படுவது. சோழர் காலத்தில் தமிழிலக்கியபோக்கையே மாற்றி ஒரு புதுத்திருப்பத்தை ஏற்படுத்தியது சீவக சிந்தாமணி. காப்பியத் தலைவன் சீவகன் மங்கையர் எண்மரைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வினை முற்றத் துய்த்து இறுதியில் வீட்டுப்பேற்றினை நோக்கித் துறவு பூண்டதைக் கூறுகிறது. இதற்கு மணநூல் என்ற வேறு பெயரும் உண்டு.

விருத்தப்பாவால் ஆனது. விருத்தப்பாவிற்குத் தமிழ் இலக்கியத்தில் தனிச்சிறப்பு இந்நூலாற் கிடைத்தது. சிந்தாமணியின் விருத்தப்பாக்கள் எளிய இனிய நடையில் அமைந்து கற்பனை வளமும், காவிய நயமும், பொருட்செறிவு, உவமை அழகு, உருவகச் சிறப்பும் பெற்று மிளிர்கின்றன. இந்நூல் 13 கலம்பகங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. இவரை, வீரமாமுனிவர் 'தமிழ்க் கவிஞருள் இளவரசர்' என்று கூறுகிறார். ஏமாங்கத நாட்டின் வளத்தை ஆசிரியர் அழகாக வருணிக்கிறார்.

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து

தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்

ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே

என்னும் பாடல் நாட்டின் வளத்தை நம் கண்முன் படம் பிடித்துக் காட்டுகிறது

சீவகன் பிறந்த இடத்தினையும் நிலையையும் ஆசிரியர் அவலந் தோன்ற பின்வரும் பாடலில் கூறுகிறார்

வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக

ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட

எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட

இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே!

சீவகன் சுடுகாட்டில் பிறக்கின்றான். இப்போது சுடுகாட்டில் ஆந்தைகள் தான் முழவொலிபோல ஒலி எழுப்புகின்றன. வண்ண விளக்குகள் இல்லை, பிணங்கள் எரியும் வெளிச்சம் தான் காணப்படுகிறது. இங்குத் தாலாட்டத் தாதிமார் இலர். கோட்டான்கள் தான் எல்லாப் பக்கமும் இருந்து குரல் கொடுத்துத் தாலாட்டுப் பாடுகின்றன. கணநேரத்தில் செல்வமும் சிறப்பும் சீரழிந்த நிலையை அருமையாகப் படம் பிடிக்கின்றார் தேவர். இந்நூலுக்கு நச்சினார்க்கினியர உரை எழுதியுள்ளார். இதன் காலம் 8 அல்லது 9 ஆம் நூற்றாண்டு என்பர்.திருத்தக்க தேவர் கி பி 10 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர்.

## 2.2 சிறுகாப்பியங்கள்

### 2.2.1. உதயண குமார காவியம்

இந்நூல் வத்ச நாட்டரசன் உதயணன் கதையைக் கூறுவது. 6. காண்டங்களையும் 369 விருத்தங்களையும் கொண்டது. கந்தியார் என்னும் சமணப் பெண் துறவி ஒருவரால்இயற்றப்பட்டது. காவியத்திற்குரிய தன்மை தென்படவில்லை. இது பெருங்கதையின் கதைச் சுருக்கம் எனலாம் இதன் காலம் கி. பி 15-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

### 2.2.2. நாக குமார காவியம்

இந்நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது. 5 சருக்கங்களையும் 170 விருத்தங்களையும் கொண்டது இக்காப்பியத்திற்கு நாக பஞ்சமி கதை என்னும் வேறு பெயரும் உண்டு. முழுக்க மணத்தையும் போகத்தையுமே பேசுகிறது. 519 பெண்களை மணக்கிறான் தலைவன்! காவிய அமைதியோ கவிநயமோ இல்லாதது. இதன் காலம் கி. பி 16 ஆம் நூற்றாண்டினதாகலாம் எனக் கருதுகின்றனர். அழிந்த நூலாக இருந்த இதனை சைன அறிஞர் ஜீவபந்து ஸ்ரீபால் உதவியால் 1973 ஆம் ஆண்டு முதுபெரும் மரபுப் புலவர் மு.சண்முகம் பிள்ளை அவர்களைக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது.

### 2.2.3. யசோதர காவியம்

இதன் ஆசிரியர் தெரியவில்லை இவர் ஒரு சமணர். விருத்தப்பாவாளான 5 சருக்கங்களைக் கொண்டது. 320 பாக்களைக் கொண்டது. இராசமாபுரத்து அரசன் மாரிதத்தன் தீது என உணர்த்த வந்த காப்பியம். மாரிதத்தன் வரலாறு வேறு எந்த நூலிலும் கிடைக்கவில்லை. பிறப்பு பல, சிற்றின்பத்தின் சிறுமை பேரின்பத்தின் பெருமை. ஒழுக்கத்தின் உணர்வு போன்றன புகழுவது. வடமொழி நூலின் தழுவல் நயமான செய்யுட்கள் எளிய நடையில் அமைந்த நூல். கி பி 13 ஆம் நூற்றாண்டையுடையது. இசை காமத்தைத் தூண்டும் என்பதையும், கர்மத்தின் விளைவையும் வற்புறுத்தும் கதை உத்தர புராணத்தினின்றும் எடுக்கப்பட்டது, இலக்கியச் சிறப்பற்றது.

### 2.2.4. சூளாமணி

ஆசிரியர் தோலாமொழித் தேவர். இவர் இயற்பெயர், வர்த்தமான தேவர் என்பதாகும். தன்மையானும் பல இடங்களில் சூளாமணி என வருதலானும் காப்பியத் தலைவன், உலகின் முடிக்கோர் சூளாமணியாயினான் எனக்குறிக்கப்பெறுவது கொண்டும் இப்பெயர் பெற்றது. சூடாமணி என்ற பெயருமுண்டு. நாட்டுச் சருக்கம் முதல் முத்திச் சருக்கம் முடிய 12 சருக்கங்களையும் 2131 விருத்தங்களையும் கொண்டது. கார் வெட்டி வியசன் எனும் பல்லவ மன்னன் விழைவின் வண்ணம் இயற்றப் பெற்று சேந்தன் தமிழ்க்கிழவன் தலைமையில் அரங்கேறியது. வடமொழி எழுந்த மாபுராணத்தைத் தழுவியது. முடிவில் முத்தி மொழியப்படுகிறது. இவ்வுலக இன்பம் எத்தகையது எனக் குறிக்கிறது ஒரு பாட்டு,

ஆனை துரப்ப அறவுரை ஆழ்குழி
நானவிர் பற்றுபு நாலும் ஒருவன்
தேனின் அழதுளி நக்கும் திறத்தது
மானுடர் இன்பம் மதத்தனை கொள்நீ

என்பதாம். எல்லார்க்கும் நல்லவனாக எவரும் நடக்க இயலாது எனும் இவ்வுலகியலை

அங்கொளி விசும்பில் தோன்றி அந்திவான் அகட்டுத்
திங்கள் அம்குழவி பால்வாய்த் தீங்கதிர் முறுவல்
திங்கொளி விரிந்த ஆம்பல் தாமரைக் குவிந்த ஆங்கே
எங்குளர் உலகுக் கெல்லாம் ஒருவராய் இனியநீரார்

என்னும் பாடலைக்கொண்டு அழகுபட விளக்குகிறார் வண்ணமிகு வருணனைகள், கருத்துமிகு விருத்தங்கள், சுவைமிகு சொல்லோவியங்கள். எழில்மிகு இலட்சிய உலகு போன்றன கொண்ட சிறப்பான காப்பியம் இதுவாகும்.

### 2.2.5. நீலகேசி

ஆசிரியர் இன்னாரென்றுத் தெரியவில்லை. நீலகேசித் திரட்டு என்னும் வேறொரு பெயராலும் அழைக்கப்படும் 10 சருக்கமும் 894 செய்யுட்களையுடையது. சமணமே சிறந்ததென நிறுவ குண்டல கேசிக்கு எதிராகத் தோன்றிய நூல் எனலாம். கி.பி. 10ஆம் நூற்றாண்டினது. நூல் கிடைத்திளது, வாமன முனிவர். 'சமய திவாகர விருத்தி' எனும் ஓர் உரை எழுதியுள்ளார்..

## 2.3. பக்தி இயக்கம் (கி.பி.600 – கி. பி 850)

சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த களப்பிரரின் ஆட்சி கி பி 6 ஆம் நூற்றாண்டில் வலு குன்றியது. தெற்கே இவர்கட்குக் கீழ்ப்பட்டிருந்த பாண்டியன் (கடுங்கோன் கி பி 575 – கி பி 600) இவருடன் போரிட்டுத் தம் பாண்டி நாட்டை. 300 ஆண்டுகள் ஆண்டனர். இதே சமயத்தில் வடக்கு சாதவாகனரின் ஆட்சிக்குட்பட்டிருந்த மாநிலத் தலைவர்களாய்த் திகழ்ந்த பல்லவர்கள் களப்பிரரை வென்று, தொண்டை சோழ மண்டலங்களைத் தமதாக்கினர். சிம்மவிஷ்ணு (கி பி 75 முதல் கி பி 615 முடிய) முதல் நிருபதுங்கவர்மன் (850 முதல் 882 முடிய) 3 நூறறாண்டு பல்லவர் ஆட்சி பரவியது.

இந்த களப்பிரர் ஆட்சிக் கவிழ்ந்து, சோழப் பேரரசு முண்டி எழுந்த இடைப்பட்ட காலப்பகுதியைப் பல்லவர் காலம் என்போம். இவர்கள் காலத்தில்

சைவ, வைணவம் புத்துயிர் பெற்று பொழிந்தன. விரைந்து வளர்ந்தன. எனவே, இக்காலத்தை சமயக் காலம் எனவும் பக்தி இயக்கக் காலம் எனவும் கூறுவர். இக்காலத்தில் சைவ சமய பெரியவர்களான நாயன்மார்களும் வைணவ சமய பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றி. பக்திப் பாடல்கள் மூலம் தம் தம் சமயங்களைப் பரப்பினர்.

### 2.4. ஆழ்வார்கள்

ஆழ்வார் பன்னிருவரும் முதலாழ்வார் என்று அழைக்கப்படுகின்றனர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார். பேயாழ்வார் ஆகிய மூவர் மற்ற ஆழ்வார்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் ஆவர்.

#### 2.4.1 பொய்கை ஆழ்வார்

இவர் வைணவச் சமயத்தின் விடிவெள்ளி எனப் போற்றப்படுகிறார்.முதல் திருவந்தாதி 100 பாசுரங்கள் பாடினார். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்து மாயவனையல்லால் இறையெது என்று பக்திவாழ்வு வாழ்ந்தவர். இதனால் சங்ககாலப் பொய்கையாரினும் வேறுபட்டவர் இவர் என்பர், ஆயினும் இவரே அப்பொய்கையாழ்வார் என்று திரு.மு.இராகவையங்கார் குறிப்பிடுகின்றார் கதிரவனை விளக்காக வைத்து இவர் பாடியுள்ள பாடல் வருமாறு,

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று

என்று பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடியுள்ளார்.

#### 2.4.2 பூதத்தாழ்வார்

இவர் இரண்டாம் திருவந்தாதி என்னும் 100 பாசுரங்களைப் பாடினார். இவர் மாமல்லபுரத்தினர் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன.

மா மல்லை கோவல் மதிற்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக் கிடம்

என்று இவர் பாடியுள்ளது, மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும் ஐம்பெரும் பூதங்களுமே திருமால்தான் என்ற ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர். இவர் அன்பே தம் விளக்காக எண்ணிப் பாடியுள்ளார்.

அன்பே தகளியா யார்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய் - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்ப்புரிந்த நான்

என்னும் இப்பாசுரங்கள் பூதத்தாழ்வாரின் கடவுள் பக்தியை நன்கு புலப்படுத்தும்.

#### 2.4.3 பேயாழ்வார்

இவர் திருமயிலாப்பூரில் பிறந்தவர். மூன்றாம் திருவந்தாதியைப் பாடியவர். இவர் திருமாலின்மீது கொண்ட பக்தி ஈடுபாட்டால் பாடுதல், ஆடுதல், அழுதல், சிரித்தல் முதலான செயல்களைச் செய்தமையால் இப்பெயர் பெற்றார் என்பர். திருமாலின் திருக்கோலம் கண்டு,

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்

அருக்க னணிநிறமுங் கண்டேன் - செருக்கிளரும்

பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்

என்னாழி வண்ணன்பா லின்று

என்று பாடுகிறார்.

### 2.4.4 திருமழிசையாழ்வார்

திருமழிசையிலே பிறந்த இவர் திருவல்லிக்கேணியில் நெடுங்காலம் யோகத்தில் ஆழ்ந்திருந்தார் என்பர். இவர் நாராயணின் திருவாழி அம்சமானவர் பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்றவர். காஞ்சிப் பல்லவர். இவர் தம் சீடன் கணிகண்ணன் இகழ்ந்தபோது பின்வரும் பாடல் பாடினார். இவர்பாடிய வெண்பா அழகுடையது

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி

மணிவண்ணா நீகிடக்க வேண்டா – துணிவுடைய

செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்

பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்

என்பதாம். திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகிய நூல்களைத் திருமழிசையாழ்வார் பாடியுள்ளார். இவர், பிற சமயக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறார். காப்பு மறந்தறியேன் கண்ணனே என்றிருப்பேன் என்ற பாடலில் இவர் குபேரனைக் குறிப்பதால் மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தார் என்பர்.

### 2.4.5 பெரியாழ்வார்

தென்பாண்டி நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் அந்தணர் மரபில் தோன்றிய இப்பெரியார் விஷ்ணு சித்தர் என்ற இயற்பெயருடன் நந்தவனம் அமைத்து நாடோறும் திருமாலுக்குத் திருத்துழாய்மாலைத் தொண்டு புரிந்து வந்தார். இவருக்குப் பட்டர்பிரான் விசுணு சித்தன் என்னும் பெயர்களும் உண்டு. ஆண்டாளை வளர்த்தவர் இவரே, இவருடைய பாடல்களில் மணிவண்ணனின் தோற்றமும், பாலசரிதமும், யசோதை, கோபியர்களின் உரையாடல்களும், அமைந்துள்ளன. இவர் பாடிய பாடல்கள் பெரியாழ்வார் திருமொழியும் திருப்பல்லாண்டுமாகும், பிள்ளைத் தமிழ் என்று பிற்காலத்தில் பெருவழக்குப் பெற்ற சிறுபிரபந்தத்தினைத் தோற்றுவித்தவர் இவரே கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார் இவர்.

தம்மை யசோதயாகப் பாவித்துக் கண்ணனைப் பால் குடிக்க வருமாறு, பாடியுள்ளமை சிறப்பிற்குரியது.

### 2.4.6 ஆண்டாள்

பெரியாழ்வாரின் திருமகளார் இவர். நந்தவனத்தில் துளசிச் செடிகளுக்கிடையில் கிடைக்கப்பெற்றார் என்பர், இவரின்,

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ

திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ

மருப்பொ சித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

என்னும் பாடல் வைணவர்கள் நாவிலே இன்றும் பயின்று வழங்குகிறது 'மானிடவர்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' என்று வாழ்ந்த இவர்,கோதை

என்றும் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் அழைக்கப்படுவர், இவர் திருமாலையே மணந்தார் என்பர்.

வாரண மாயிரம் சூழ வலம்செய்து

நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்

பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்

தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என்ற நாச்சியார் திருமொழிப் பாடல் இன்றி, வைணவர்களின் திருமணம் இன்றும் நிகழாது. இவர் பாடிய திருப்பாவை முப்பது பாடல்களும் மார்கழித் திங்களில் பாவை நோன்பு நோற்கும் பெண்கள் பாடிப் பரவசப்படுவதற்கும், தூய மனத்துடன் மாயவனைப் பரவுவதற்கும் பாடப்படுகின்றன.

**2.4.7 திருமங்கையாழ்வார்**

இவர் சோழ நாட்டில் திருக்குறையலூரில் கள்ளர் குடியிலே தோன்றியவர். இவர் காலம் கி. பி 9 – ஆம் நூற்றாண்டு என்பர். குமுதவல்லி என்னும் மங்கையை மணந்து திருமாலடியார், திருத்தொண்டாற்றுவதில் கைப்பொருளெல்லாம் செலவிட்டார் என்பர். பொருளுக்காக வழிப்பறி செய்யும் பொழுது திருமாலால் ஆட்கொள்ளப்பட்டார் இவர் பாடிய பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திரு நெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை ஆகிய ஆறு பாடல்களும், திருவாய் மொழியின் ஆறங்கங்களெனப் பாராட்டப்படுகின்றன. ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களில் இவர் பாடிய 1523 பாசுரங்களே சிறப்புடையவை யென்பர் மறைமலையடிகளார்.

பனிசேர் மல்லை பல்லரும்பப் பானல் ஒருகால் கண்காட்ட

நனிசேர் கமலம் முகம்காட்டும் நறையூர் நின்ற நம்பியே

என்னும் பாடலில் இயற்கையழகு காணப்படுகிறது. இவருடைய பக்தியினைக் கண்ட திருமால் “ஓம் நமோ நாராயணாய” என்னும் திருமந்திரத்தைச் செவியில் ஓதி மறைந்தார் மங்கை, மன்னன் வாடி வாடி வருந்திப் பெருந்துயர் இடும்பையில் பிறந்து இளையவர் தம்மோடு கூடி கூடி அவர்தரும் கலவியே கருதிக்கிடந்த அஞ்ஞான இருள் நீங்கப் பெற்றவராய் மெய்ஞ் ஞானம் பெற்று,

ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்

உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து

நாடினேன் நாடிநான் கண்டு கொண்டேன்

நாராயணா என்னும் நாமம்.

என்று பாடிப் பரவசமுற்றார்.

**2.4.8 தொண்டரடிப்பொடியாழ்வார்**

பொன்னியாறு வளம் சுரக்கும் சோழ நாட்டிலே திருமண்டங் குடியில் தோன்றியவர். விப்பிரநாராயணர் என்ற இயற்பெயருடையவராய்த் திகழ்ந்த இவர், திருவரங்கத்து அம்மானுக்குத் தொண்டு செய்து வந்தார். திருமாலை, திருப்பள்ளியெழுச்சி முதலிய நூல்கள் இவர் இயற்றியனவாகும். பச்சை மாமலை போன்ற இறைவனின் மேனியும் பவளவாயும் கமலச் செங்கண்ணும் இவரைப் பெரிதும் கவர்ந்து விடுகின்றன. இவை தரும் இன்பம் இந்தர லோகத்தை விடச் சிறந்ததாக இருக்கின்றது.

பச்சைமா மலைபோல் மேனி

பவளவாய் கமலச் செங்கண்

அச்சுதா அமர ரேறே

ஆயர்தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிர யான்போய்

இந்திர லோக மாளும்

அச்சுவை பெறினும் வேண்டேன்

அரங்கமா நகருளானே

என்ற இவர் பக்திச் சுவையில் ஈடுபட்டுப் பாடி மகிழ்கிறார்..

**2.4.9 திருபாணாழ்வார்**

உறையூரிலட பாணர் மரபில் தோன்றிய இவர் இசைப் பாடல்களைப் பாடி திருமாலுக்குத் தொண்டு செய்து வந்தார். அழகிய மணவாளன் திருமேனியழகு கண்டு அமலனாதிபிரான் என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களை இவர் பாடியுள்ளார். இது பாதாதிகேசமாக அமைந்துள்ளது.

கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்

உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை

அண்டர் கோண்அணி யரங்கன் என் அமுதினைக்

கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே

என்று பக்தி வெளிப்படப் பாடுகிறார்.

**2.4.10 குலசேகராழ்வார்**

இவர் திருவஞ்சிக் களத்தில் சேர மரபில் தோன்றியவர் இவர். காலம் கி பி 9 – ஆம் நூற்றாண்டாகும்.சேர நாட்டைச் சிறப்புற ஆண்ட செந்தமிழ் மன்னர் இவர், இவர் தமிழ் மொழி, வடமொழி இரண்டிலும் வல்லவர, முதலில் வடமொழியில் முகுந்தமாலை பாடிப் பின் தமிழில் ‘பெருமாள் திருமொழி’ பாடினார் என்பர். இவர் பாடிய பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதற் பகுதியான இயற்பாவில் அடங்கும், பெருமாள் திருமொழி 105 பாடல்களைக் கொண்டதாகும். திருவேங்கடமலையில் ஒரு படியாய்க்கிடந்தது. திருமாலின் பவளவாய் கண்டு மகிழும் பேறு, தமக்குவாய்க்க வேண்டுமென்று இவ்வாழ்வார் பாடுகின்றார்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!

நெடியானே! வேங்கடவா! நின் கோயி லின்வாசல்

அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்

படிமாய்க் கிடந்துன் னவள வாய் காண்பேனே!

இவர், திருக்கண்ணபுரத்தம்மானாம் இராகவனுக்குத் தாலாட்டுப் பாட்டுப் பாடுகின்றார்.

மன்னுபுகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!

தென்னிலங்கைக் கோண்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்

கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!

என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ.

கிருஷ்ணாவதார நிகழ்ச்சிகளையும் இவர்தம் பாடல்களில் அழகுறப் பொதித்துள்ளார்.

### 2.4.11 நம்மாழ்வார்

இவர் திருக்குருகூரில் வேளாளர் குலத்தில் காரிமாறனுக்கும் உடைய நங்கைக்கும் திருமகனாக அவதரித்து சடகோபன், பராங்குசன், குருகைக் காவலன், காரிமாறன், தமிழ் மாறன் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டு வந்தார். ஆழ்வார்களில் நம்மாழ்வாரே சிறந்தவர் என்பதை. இவர் ‘அவயவி’ என்றும் மற்ற ஆழ்வார்கள் ‘அவயவம்’ என்றும் அழைக்கப்படுவது கொண்டு தெளியலாம். இவர் ‘திருவிருத்தம்’ திருவாசிரியம., பெரிய திருவந்தாதி. திருவாய்மொழி என்னும் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவர் இயற்றிய திருவாய் மொழியே ‘திராவிட வேதம்’ என்றும் அழைக்கப்படுகிறது.

இத்திருவாய்மொழிக்கே ஆயிரப்படி, மூவாயிரப்படி, ஒன்பதாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்னும் வியாக்கியானங்கள் ஒதப்படுகின்றன. இவருடைய காலத்தைப் பற்றிக் கருத்து வேற்றுமைகள் பல நிலவுகின்றன. பக்தியால் உலகில் எதனையும் பெறமுடியும் என்பது அவர் எண்ணம். நம்மாழ்வார்க்குக் காணுகின்ற பொருளனைத்தும் கண்ணன் வடிவாகவே காட்சி யளிக்கிறது. அசையும் பொருள் அசையாப் பொருள் அனைத்திலும் அவன் உள்ளான் என்னும் நம்பிக்கையை அனைவர்க்கும் ஏற்படுத்துகிறார். காட்டாக,

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலர் என்றும் காண்தோறும் - பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
யெல்லாம் பிரான் உருவே யென்று”.

என்பதாம்

### 2.4.12 மதுரகவியாழ்வார்

நம்மாழ்வாரின் சீடராவார். இவர் பாண்டி நாட்டுத் திருக்கோளுரினர் வடக்கே அயோத்திவரை சென்று பல வைணவக் கோயில்களைத் தரிசித்தவர் நாடு திரும்பி நம்மாழ்வாருக்கு அடியவராய் இருந்தார் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. இவர் கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பிரபந்தத்தை அருளியிருக்கிறார். முதற்பாடல் கண்ணிநுண் சிறுத்தாம்பு எனத்தொடங்குவதால் இவர் பாடிய பாடல்கள் இப்பெயர் பெற்றன. நம்மாழ்வாரின் புகழினையும் இவர் போற்றிப்பாடுகிறார்.

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி யென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே.

எனவும்,

நாவினால் நவிற் றின்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற் றறியேன் குருகூர்நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவனே

எனவும், மதுரகவியார் பாடிய பாசுரங்கள், அவர் நம்மாழ்வார் மீது கொண்ட பக்தியைப் புலப்படுத்துகின்றன.

**2.5 நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள்**

**1.** பொய்கையாழ்வார் - முதல்திருவந்நாதி – 100, **2.** பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி – 100, **3.** பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி – 100, **4.** திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி – 96, திருச்சந்த விருத்தம் - 120, **5**. நம்மாழ்வார் - திருவிருத்தம் 100, திருவாசிரியம் - 7, பெரிய திருவந்தாதி 87, திருவாய்மொழி – 1102, **6.** குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி – 105, **7.** திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி – 1084, திருக்குறுந்தாண்டகம் - 20, திருநெடுந்தாண்டகம் - 30, பெரிய திருமடல் - 78, சிறிய திருமடல் - 40, திருவெழுகூற்றிருக்கை – 1, **8.** தொண்டரடிப் பொடியாழ்வார் - திருப்பள்ளியெழுச்சி – 10, திருமலை – 45, **9.** திருப்பாணாழ்வார் - அமலனாதி பிரான் - 10, **10.** பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு, திருமொழி – 473, **11**. ஆண்டாள் - நாச்சியார் திருமொழி – 143, திருப்பாவை – 30, **12.** மதுரகவியாழ்வார் - கண்ணிநுண் சிறுதாம்பு – 11.

**2.6 நாயன்மார்கள்**

**2.6.1 திருஞானசம்பந்தர்**

இவர் சீர்காழியில் அந்தணர் மரபில் சிவபாத இறுதையருக்கும் பகவதியாருக்கும் மகனாகப் பிறந்தார்.. இவர் ஆளுடைய பிள்ளை என்றும் காழிவள்ளல் என்றும் அழைக்கப்படுவர். இவர் தம் பாடலில் சிறுதொண்டரைச் சிறப்பிப்பதால் இவர் காலம் கி.பி 7- ஆம் நூற்றாண்டு என்பர். இளமையிலேயே இறைவன் அருள் பெற்று நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பும் ஞானசம்பந்தன் என்ற பெயர் பெற்றான். இவர் வாழ்நாளில் பல தெய்வத்தலங்களுக்கும் சென்று இறுதியில் திருபெருமணநல்லூரில் தம் 16 வயதில் இறைவனோடு சேர்ந்தார்.

இவர் 16000 பதிகங்கள் பாடியுள்ளார். இதில் 383 பதிகங்கள் 1213 பாடல்கள் கிடைத்துள்ளன. இவையே முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இவர் திராவிட சிசு என சங்கரரால் அழைக்கப்படுவர்.இவர் தோடுடைய செவியன் என்ற புகழுக்பெற்றப் பாடலை சம்பந்தர் இறைவன் திருவருளால் பாடினார்.

தலைவி தன்னைக் காதலியாகவும் இறைவனைக் காதலனாகவும் எண்ணிக் கிளியைத் தூதனுப்பும் அகத்துறை அமைதியும் இவர் பாடலில் இடம்பெற்றுள்ளன..

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே

தூது என்பது ஒருவர் தம் கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்க இடையே வேறொருவரை அனுப்புவதாகும். இறைவன் எல்லா உயிர்களிலும் இரண்டறக் கலந்திருக்கும் உண்மையை,

உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிலைசேரப் படைத்து அவற்றின்
உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்

எங்குமாய் எல்லாம் பொருளுமாய் நின்ற இறைவனை நோக்கி சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே என்று வேண்டிக் கொண்டால் அவன் நாம் செய்யும் பிழைகளைப் பொறுத்து அருள் புரிவான் என்று கூறுகிறார் தமிழ் வித்தகர் திருஞானசம்பந்தர்.

### 2.6.2 திருநாவுக்கரசர்

இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தார். இவர் காலம் கி. பி 7 ஆம் நூற்றாண்டு, இவர் தந்தை புகழனார், தாயார் மாதனியார். இளமையில் பெற்றோரை இழந்து தமக்கையார் திலகவதியாரை மறந்தார் பின்னர் சமண சமயம் புகுந்து தருமசேனர் எனும் பட்டம் பெற்றுச் சூலை நோயால் வருந்தி, மீண்டும் சைவ சமயத்திற்கு வந்தார். இவர் இயற்பெயர் மருணீக்கியார் சம்பந்தர் இட்ட பெயர் 'அப்பர்' என்பதாகும். செந்தமிழ்ப் பதிகம் தொடை பாடிய பான்மையினால்' 'நாவுக்கரசர்' என்ற பெயரை இறைவர் வழங்கினார்.

இவர் எண்பத்தோர் ஆண்டுகள் வாழ்ந்து, வாழ்க்கையில் பல துன்பங்களைச் சந்தித்து அனுபவ முதிர்ச்சி பெற்றுத் திழைந்தார். அடியார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பரந்துபட்ட கொள்கையில் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்ற வீர வாழ்வு தவ வாழ்வு வாழ்ந்தவர். இவர், 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்' எனத் திருப்புத்தூர்த் தேவாரத்தில் பாடியிருப்பது, சங்கம் இருந்ததை வலியுறுத்தும் இவரைப் பல்லவன் நீற்றறையில் இட்ட பொழுது,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்று பாடினார். இவர் பாடிய 311 திருப்பதிகங்களிலும் அவ்வளவாக இயற்கை வருணனை இடம்பெறவில்லை. பாட்டினைப் படிப்பவர் மனக்கண் முன் இறைவனின் முழு வடிவத்தினையும் கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றலை இவர் பாடலில் காணலாம். அத்தகைய சிவபெருமானை வழிபட்டால் தீவினை தொலையும் எனக் கூறி இறைவழிபாட்டின் மேன்மையை உணர்த்துகிறார். வாகீசர்.

சிட்டனைச் சவனைச் செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்டனைத் திருப் பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே.

எல்லாத் துன்ப நோய்களையும் போக்கும் மருந்து இறைவழிபாடே என்பது அப்பர் பெருமானின் கருத்து. இவர் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குக் கொணர்ந்ததாகத் திருச்சிராப்பள்ளிச் சிவன் கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது.

### 2.6.3 சுந்தரமூர்த்தி நாயனார்

இவர், கி. பி 7- ஆம் நூற்றாண்டினர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் அந்தணர் மரபில் பிறந்தார், பிறந்த இடத்தின் வைதீகத்திருவும் வளர்ந்த இடத்தில் மன்னவர் திருவும் பொருந்த வளர்ந்து, திருவாரூரில் பரவை நாச்சியாரைக் காதலித்து, மணந்து. பின்னர் வேளாளர் குலத்தில் பிறந்த

சங்கிலி நாச்சியாரை கடிமணம் செய்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர் இவருடைய வாழ்வில் துன்பங்கள் குறுக்கிடவில்லை

தம்பிரான் தோழர் நாவலூரர் வன்தொண்டர் ஆகிய வேறு பெயர்களும் இவருக்குண்டு. இவருடைய பாடல்களில் இயற்கை அழகு நயம் காணலாம். காட்டாக,.

அரும்பருகே கரும்பருவ அறுபதம்பண் பாட

அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூ ழயலின்

கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்

கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே

என்னும் பாடல் காட்டுகிறது.

இவருடைய பிற பாடல்களாகிய ‘பித்தா பிறைசூடி’ ‘பொன்னார் மேனியனே’ ‘பண்ணிடைத் தமிழொப்பாய்’ முதலிய பாடல்கள் ஒதுவார்களால் அடிக்கடி பாடப்படும் இவர் ‘ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் யான்சேய்யுந் துரிசுகளுக் கிடனாகி’ என்று இறைவனைப் பாடுகிறார். ‘கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை’ என்று சங்க காலப்பாரியின் வண்மையைச் சிறப்பிக்கிறார் சைவ அடியார்களைப் பற்றிய குறிப்புகள் நாட்டுப் பிரிவுகள் ஆறுகள் கோயிற் பண்டாரங்கள் இசை நடனக் கலைகளின் வளர்ச்சி முதலியன பற்றிய குறிப்புகள் இவர் பாடல்களில் விரவி வருகின்றன. இவருடைய திருத்தொண்டத் தொகையே நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திரவந்தாதிக்கும் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்திற்கும் வித்தாய் அமைந்தது

### 2.6.4 மாணிக்க வாசகர்

இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரிலே அந்தணர் குலத்தில் பிறந்தார். இவர் இயற்பெயர் வாதவூரார். அரிவர்த்தன பாண்டியனிடம் தென்னவன் பிரமராயன் என்ற விருதுப் பெற்று அமைச்சாராய் விளங்கினார். அரசன் பொருட்டுக் குதிரை வாங்கச் சென்றபொழுது திருப்பெருந்துறையில் சிவனன்பு பெற்று பரிகள் வாங்கும் வேலையினை மறந்து அரசத் தொல்லைகளுக்கு உள்ளாகி இறுதியில் இறைவன் இணையடி நீழலை அடைந்தார். இவர் காலம் கி. பி 3 என்று மறைமலையடிகளும் வேறு சிலர் கி. பி 9 ல் வாழ்ந்தார் என்றும் கூறுகின்றனர்.

இவர் இயற்றிய அரிய நூல் திருவாசகம். ‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ என்பது மூதுரை வடலூர் வள்ளல் இராமவிங்க அடிகள்

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை

நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே

தேன்கலந்து பால்கலந்து செங்கனித்தீஞ் சுவைகலந்து என்

ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

என்று தம் அனுபவத்தை உரைக்கின்றார். மாணிக்க வாசகர் திருவாசகத்தைச் சிவப்பிரகாசரும் புகழ்ந்து பாடியுள்ளார். திருவாசகத்தை ஜி யு போப் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்துள்ளார். மாணிக்கவாசகர் இயற்றிய மற்றொரு நூல் திருக்கோவையார். கோவை நூல்களிலேயே சிறந்த நூல் திருக்கோவையாரும் இது, கட்டளைக் கலித்துறையால் அமைந்தது 400 பாடல்களைக் கொண்டது.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர், நாட்டு மக்களின் உள்ளங்கவர்ந்த சமுதாயப் பாடல்களையும் பாடியுள்ளார். திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, உந்தி திருத்தெள்ளேணம். திருப்பொற்சுண்ணம் ஆகிய பாடல்களை இவர் பாடியிருப்பது மக்கள் மனத்தைப் பிடிக்கும் நாட்டுப்பாடல்களுக்கு இவர் தந்த மதிப்பினைப் புலப்படுத்துகிறது. இவர் பாடிய திருவெம்பாவை இன்றும் மார்கழித் திங்களில் வைகறையில் பக்தியோடும் சுவையோடும் சைவக்கோயில்களில் பாடப்படுகிறது. 'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழில் துறைவாய் நுழைந்தனையோ" என்று மாணிக்கவாசகர் இறைவனைப் பாடியுள்ளார்

**ஒன்பதின்மர்**

இவர்கள் பாடியன திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் இவையிரண்டும் கி பி 9 - ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. மொத்தம் 29 பதிகங்களையும் 301 பாடல்களையும் கொண்டது. தேவாரத்தில் காணப்படாத சாளரபாணி என்ற பண்ணை இதில் காணலாம். இதில் சிதம்பரம் பற்றிய பதிகங்கள் 16. கி. பி 10,11 - ஆம் நூற்றாண்டினது என்று கூறுகின்றனர்.

**2.6.5 திருமாளிகைத் தேவர்**

திருவாவடுதுறையினர், போக முனிவரின் மாணவர். கருவூர் தேவரோடு உடன் பயின்றவர், சேந்தனாரின் சமகாலத்தவர், இவருடன் இணைந்து தில்லையில் ஓடாதிருந்த தேரை வடமின்றி ஓடச்செய்தவர். மதில் நந்திகளை உயிரூட்டியவர், பிணத்தை நடக்கச்செய்தவர், வெந்த பயிரை முளைக்கச் செய்தவர், இறைவன் வழிபாட்டினை 4 பதிகங்களில் பாடியவர். பாடல்களின் எண்ணிக்கை 45, மூன்று பதிகம் சிதம்பரம் மகேந்திரமலை பற்றியன, நான்காம் பதிகம் புறச் சமயங்களைக் கூறுகிறது. இவரது கோயில் திருவாவடுதுறை மடத்திலுள்ளது.

**2.6.6 கருவூர்த் தேவர்**

கருவூர்த்தேவருக்கு கருவூர்ப்பிரான், கருவூர்ச் சித்தர் என்ற வேறு பெயர்களுமுண்டு. இவரது சித்து காரணமாக, சிவலிங்கம் சரியா நிறுத்தப்பட்டது. தஞ்சைக் கோயிலில் இவரது கோயில் உளது. இவர் காலம் கி பி 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்

**2.6.7 சேந்தனார்**

திருவீழிமிழலையில் வாழ்ந்தவர். தில்லையிலிருந்து விறகு விற்று வரும் ஊதியம் கொண்டு சிவனடியாரை உண்பித்து வந்தார். சிவபிரான் நள்ளிரவில் இவர் மனையை அடைந்து கூழுண்டு, இவரது அன்பின் தன்மையை உலகமறியச் செய்தாராம், திருவாதிரையில் 'களி' செய்து முதன் முதல் இறைவனுக்குப் படைத்தவர். இவர், தில்லையில் வடமின்றித் தேரோடப் பல்லாண்டுப் பாடியவர், பதிகங்கள 4, 47 பாடல்கள் பாடினார்.

**2.6.8 பூந்துருத்தி காடவ நம்பி**

திருப்பூந்துருத்தி ஆதி சைவமரபினர், திருவாரூர், சிதம்பரம் பற்றிய 2 பதிகங்கள், 12 பாடல்கள் பாடியுள்ளார், இவரே, சாளரபாணிப் பண் பாடியவர் ஆவர்.

**2.6.9 கண்டராதித்தர்**

இவர் சோழர் மரபினர். 10 - ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியினர். தந்தை முதல் பராந்தகச் சோழன், மனைவி செம்பியன் மாதேவியார் ஆவர். தில்லை பற்றிய பதிகம், 10 பாடல்கள் பாடியுள்ளார்.

### 2.6.10 வேணாட்டடிகள்

தென் திருவாங்கூரினர். சேர மரபினர் இவர் சிதம்பரம் பற்றி 1 பதிகம் பாடியுள்ளார்.

### 2.6.11 திருவாலியமதனார்

இவர் சோழநாட்டு மிருவாலி மயிலையில் வாழ்ந்தவர். இவர் மயிலை மறைவல வாலி எனத் தம்மைக் குறிக்கிறார் அமுதனார் பெயராகலாம் 4 பதிகங்கள் கொண்ட 42 பாடல்களைப் பாடியுள்ளார் தம் பதிகங்களில் சுந்தரரைக் குறிப்பிட்டுள்ளார் இறைவனைப் பாட தாதிகேச வருணனையில் புகழ்கிறார். கி.பி.10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்

### 2.6.12 புருடோத்தம நம்பி

இவர் ஒரு வேதியர் தில்லை பற்றி 2 பதிகங்களில் 22 பாடல்களைப் பாடியுள்ளார். இவர் நம்பியாண்டார் நம்பிக்கு முந்தியவராகலாம்.

### 2.6.13 சேதிராயர்

திருக்கோவிலூர் பகுதியிலுள்ள சேதிநாட்டு மன்னர் மரபினர். நம்பியாண்டார்க்கும் முந்தியவர் இவர் பாடிய பதிகம் 1. சிதம்பரம் பற்றியது. அகப்பொருள் நலத்தது.

### 2.6.14 திருமூலர்

இவர் இயற்றிய பாடல்கள் திருமந்திரம், திருமந்திரமாலை, தமிழ் மூவாயிரம் என வழங்குகின்றது. இதுவே, பத்தாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. 9 தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. 7 பாடல்களையுடைய சிறப்புப் பாயிரம் திருமூலர் வரலாறு கூறுகிறது. முதல் தந்திரம், ஞானோபதேசம் வலியுறுத்தப் பெறுகிறது. யாக்கை, இளமை, செல்வம், உயிர் ஆகியவற்றின் நிலையாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, அறம், அன்பு, கல்வி, கேள்வி போன்ற எச்சமயத்தார்க்கும் பொதுவான அறங்கள் பேசப்படுகின்றன. இரண்டாம் தந்திரம் அன்பர் கட்கு ஆண்டவன் அருள் புரிந்தமை ஐந்தொழில் சில புராணக் கதைகள் இடம் பெறுகின்றன. மூன்றாம் தந்திரம் அட்டமாசித்தி அட்டாங்க யோகம், சோதிடம், யோகாபயிற்சி பற்றிய செய்திகள், வீட்டு நெறிக்குரிய வழிகள் விளக்கப்படுகின்றன. நான்காம் தந்திரம் மந்திர நூற் கருத்துகள், சக்கரங்கள் கூறப்படுகின்றன. சிவசக்தி வழிபாடு சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் தந்திரம் சரியை கிரியை யோகம் ஞானமார்க்கங்கள் பற்றிய செய்திகள், சைவ சமய பேதங்கள் காணப்படுகின்றன துறவு, தவம், வேடம், நீறு ஆகியன விளக்கப்படுகின்றன. ஏழாம் தந்திரம் சிவபூசை, குருபூசை மகேசுர பூசை, அடியார் பெருமை போசனவிதி இந்திரிய அடக்கம் சமாதி சற்குரு பற்றியது.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே

என்ற பாட்டு இங்கே தான் வருகிறது. எட்டாம் தந்திரம் காம வெகுளி மயக்கமாகிய முக்குற்றம், பக்தியுடைமை, புறங்கூறாமை போன்றன பகரப்பட்டுள்ளன. தத்துவமசி எனும் மொழி இதிலே இடம் பெறுகிறது. ஒன்பதாம் தந்திரம் ஐந்தெழுத்தின் பேதங்கள், சிவ தரிசனம் சித்திமார்க்கம், முத்தி மார்க்கம், பற்றி குறிக்கப்பெறுகின்றன. இந்நூல் சைவ சமய முதல் நூலாக விளங்கியது.

### 2.6.15 பன்னிருவர்

இவர்கள் எழுதியது 40 நூல்கள், 1400 பாக்கள் பாடியுள்ளனர். இவற்றின் தொகுதியே பதினோராந் திருமுறை யாகும்.

### 2.6.16 திருவாலவுடையார்

மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் பாணபத்திரர் வறுமையைப் போக்கிப் பொருள் வழங்க சேரமானுக்கு எழுதிய பாசுரம் பதினோராம் திருமுறையில் முதலில் அமைகிறது. அக்கால மடங்கள் அமைப்பும் அமைதியும் அறிய உதவுகிறது. கி.பி.6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

### 2.6.17 காரைக்காலம்மையார்

சோணாட்டுக் காரைக்காலில் பிறந்தமையால் இங்ஙனம் அழைக்கப்பட்டார் என்பர். பிள்ளைப்பெயர் 'புனிதவதி'. இவர் நாகை பரமதத்தனை மணந்தார். அறுபத்து மூவரில் இவரும் ஒருவர். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 143 பாடல்கள். இவர் பாடல்கள் மூத்த திருப்பதிகம் என்றிருப்பதும் எண்ணத்தக்கது கூத்தப் பெருமான் ஆடற்சிறப்பும் சுடலை வருணனையும் பெரிதும் பேசப்படுகின்றன. சித்தாந்தக் கருத்துகள் சிறந்துள்ளன.

### 2.6.18 கல்லாட தேவநாயனார்

சங்க காலக் கல்லாடரினும் வேறானவர். கல்லாடம் செய்தவரும் இவரும் ஒருவரா என்பது ஐயமே ! மலையாளத்தைச் சேர்ந்த கல்லாடம் என்னும் ஊராகலாம். இவர் பாடியது திருகண்ணப்பர், திருமறம் ஆகும். இணை குறளாசிரியப்பாவால் ஆனது. 38 அடிகளில் கண்ணப்பர் வரலாறு கூறுபடுகிறது.

### 2.6.19 நக்கீரதேவ நாயனார்

சங்க கால நக்கீரரல்லர். 6-ஆம் நூற்றாண்டினர். உ.வே.சா இவரைச் சங்க காலத்தவராகவே கருதுவர். இவர் இயற்றிய நூல்கள் பத்து 1. திருமுருகாற்றுப்படை, 2. ஐகலைபாதி காளத்திய பாதி கயிலையும் காளத்தியும் மாறிமாறி வர 100 வெண்பாக்களைக் கொண்டது. 3. திரு ஈங்கோய்மலை எழுபது, ஈங்கோய் மலை பற்றி 70 பாடல்கள் கொண்ட நூல் இயற்கையழகினை அள்ளித் தெளிக்கும் அழகு நூல். 4. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, 30 பாடல்கள் கொண்ட நூல். இடையிலுள்ள சில பாடல்கள் மறைய 15 பாடல்களே கிடைத்துள்ளன 5. திருவெழுகூற்றிருக்கை, இணைகுறளாசிரியப்பாவால் இயற்றப்பட்டது 7 கூறுகளைக் கொண்டது, 55 அடிகள் தேர்போல அமைத்து, ஒவ்வோர் எண் குறைந்தும் மிகுந்தும் எண்ணழகு பொருந்த அமைவது. இறைவனின் ஆடற் குறிப்புகள் அடங்கியுள்ளன. 6, கோபப் பிரசாதம், இணைகுறளாசிரியப்பாவில் அமைவது. பழமொழிகளும் புராணக் கதைகளும் பயின்று வருகின்றன. 7. காரெட்டு மேகம் பற்றிய 8 வெண்பாக்களைக் கொண்டது 8. போற்றிக் கலிவெண்பா 90 அடிகளையுடையது 9. திருக்கண்ணப்பதேவர் திருமறம், கண்ணப்பர் கதை கூறுவது. அவரது மறச்செயல் கிளத்துவதால் திருமறம் ஆயிற்று, 10. பெருந்தேவ பாணி, இணைகுறளாசிரியப்பா நக்கீரர் இறைவனை எதிர்த்த குற்றத்திற்கு ஆளாகி அதனை மன்னிக்கப் பாடியது.

### 2.6.20 கபில தேவ நாயனார்

சங்கச் சான்றோர் அல்லர், இவர் இயற்றியவை, மூன்று 1. மூத்த நாயனார், இரட்டை மணி மாலை, வெண்பாவும் கலித்துறையும் கலந்து வருவது 200 பாடல்கள் கொண்டது. விநாயகர் பற்றியது. 2. சிவபெருமான் இரட்டை மணிமாலை அந்தாதி அமைப்பில் 20 பாடல்களே இருத்தல் வேண்டும். இதில்

அவ்வமைப்பு இல்லை. 37 பாடல்கள் உள்ளன. இப்பாடல் இவர் பாடியதா என்ற ஐயமுள்ளது. 3. சிவபெருமான் திருவந்தாதி. வெண்பா யாப்பில் கட்டுக் கோப்பும் செறிவும் மிக்கது. இவர் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு.

### 2.6.21 பரணதேவ நாயனார்

சங்க கால பரணரல்லர். இவர் காலம் 10-ஆம் நூற்றாண்டு. உ.வே.சா இவரைச் சங்ககாலத்தவர் எனக் கூறுகின்றனர். இவர் பாடியது சிவபெருமான் திருவந்தாதி, 101- வெண்பாக்கள் கொண்டது. பல தலங்கள் - அடியார்கள் பற்றிப் பேசப்படுகிறது.

### 2.6.22 அதிரா அடிகள்

இவர் துறவியாவர். கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகும். மூத்த பிள்ளையார், திருமும்மணிக்கோவை பாடியுள்ளார். அகவல், வெண்பா, கலித்துறை மூன்றும் கலந்த 30 பாடல்கள் கொண்டது. விநாயகர் பற்றியது.

### 2.6.23 இளம் பெருமானடிகள்

இவர் ஒரு துறவி, நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவர் என்பா். இவர் பாடியது திருமும்மணிக்கோவை என்பதாகும். சிவபெருமான் பற்றி திருமும்மணிக்கோவை, 30 பாடல்கள் கொண்டது.

### 2.6.24 ஐயடிகள் காடவர்கோன்

63 நாயன்மார்களில் இவரும் ஓருவர். பல்லவ மரபினர். சுந்தரர்க்கு முந்தியவர். இவர் எழுதிய நூல் செத்திரத் திருவெண்பா, 24 பாடல்கள் கொண்டது ஒவ்வொரு வெண்பாவிலும் ஒரு தலம் குறிக்கப் பெறும், இரு பாடல்கள் எத்தலமும் குறிக்கவில்லை.

### 2.6.25 சேரமான் பெருமான் நாயனார்

இவர் சேர மன்னர். மலை நாட்டுக் கொடுங்கோளூரினர். 63 நாயன் மார்களில் இவரும் ஒருவர் சுந்தரர்மூர்த்தி நாயனாரின் நண்பர். சேரராதலின் சேரமான் பெருமான் எனவும் அழைக்கப்பெறுவர். ஒருமுறை வண்ணான் ஒருவன் உழமண் உடலோடு வரக்கண்டு சிவனடியார் என்றெண்ணி யானையை விட்டு இறங்கி வணங்கினாரென்றால் இவரது அன்பை என்னென்பது? இறை குதிரையின் காதில் ஐந்தெழுத்து மந்திரம் ஓதி, அதன் வலிகொண்டு விண்வழிச் சென்று சுந்தரரோடு கயிலையடைந்தவர். இவர் பாடியவை 1. திருக்கயிலாய ஞான உலா, இது, 394 அடிகளுடையது 2. பொன் வண்ணத்தந்தாதி, முதற்பாடல் பொன் வண்ணம் எனத் தொடங்கி அச்சொல்லாலேயே முடிவதால் இப்பெயர் பெற்றது. 101 கட்டளைக் கலித்துறைகள் கொண்டது 3. திருவாரூர் மும்மணிக்கோவை 30 பாடல்களுடையது.

### 2.6.26 பட்டினத்தடிகள்

இவர் காவிரிப்பூம்பட்டின வணிகர். இயற்பெயர் திருவெண்காடா என்பது. இவரிடமே சேந்தனார் கணக்கராக இருந்தார். மகன் மருதவாணன் மூலம் உலக நிலையாமையுணர்ந்து துறந்தார். திருப்பதிகள் பல தரிசித்து சமாதியானார். இவரியற்றியன 1. கோயில் நான் மணிமாலை மக்கள் வாழ்வு கடலில்செல்லும் கப்பல் போன்றது, அதனை முத்தியாகிய கரையில் சேர்க்க வேண்டுமெனப் பாடுவது, இதில் சண்டேசுரர், சிறுத் தொண்டர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. 2. திருக்கழுமல மும்மணிக் கோவை, சம்பந்தர் பற்றிய செய்திகள் உள. 3. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை இல்லறத்திலிருந்தே முத்தி பெறுவது தவம் செய்வார் திறம், உமையவள் சிறப்பு, வரகுண பாண்டியன் அன்பின் திறம் ஆகியன பேசப்படுகின்றன 4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி, காஞ்சி

ஏகம்பர் மீது 100 கட்டளைக்கலித் துறைகள் பாடப்பட்டன. 5. திருவொற்றியூர் ஒருப∴து ஆசிரியப்பாவில் அந்தாதித் தொடையில் 10 பாடல்கள் கொண்டது.

திருவேகம்ப பாமாலை பாடிய பட்டினத்தடிகளினின்றும் வேறானவர் எனவே, இவரைத் திருமுறைப் பட்டினத்தடிகள் எனலாம். இவர் நம்பியாண்டார்க்கும் முந்தியவர், இவர் காலம் கி.பி.10 -ஆம் நூற்றாண்டிற்கும் முந்தியதாகும்.

### 2.6.27 நம்பியாண்டார் நம்பிகள்

தில்லைக்கு அருகிலுள்ள திருநாரையூரில் ஆதிசைவ அந்தணர் மரபில் பிறந்தவர் அவ்வூரிலுள்ள பொள்ளாப் பிள்ளையார் எனும் விநாயகரை நைவேத்திய உணவை உண்ணுமாறு செய்தவர், தமிழ் வியாசர் எனப்படுகிறார். அரசனது வேண்டுகோளுக்கிணங்க இவர் இயற்றிய 9 நூல்கள், பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டன. 1. கோயிற்றிருப்பணியர் விருத்தம், தில்லை நடராசர் மீது அந்தாதித் தொடையால் 70 பாடல்கள் பாடப்பட்டன 2. திருத்தொண்டர் திருவந்தாதி 63 நாயன்மார்களின் வரலாற்றையும் சுருக்கித் தருவது. 86 பாடல்களையுடையது, பெரிய புராணத்திற்கு முதல் நூல் போல விளங்குகிறது. இரண்டாவது துணை நூல், 3. ஏகாதச மாலை நாவுக்கரசர் மீது 11 விருத்தத்தில் பாடியது 4. ஆளுடைப்பிள்ளையார் திருவந்தாதி 5. திருச்சபை விருத்தம் 6. திருமும்மணிக்கோவை 7. திருவுலாமாலை 8. திருக்கலம்பகம் 9. திருத்தொகை ஆகியன சம்பந்தர் பற்றியன.

### 2.6.28 சேக்கிழார்

தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் வேளாண் மரபில் தோன்றியவர். பிள்ளைப் பெயர் அருண்மொழித் தேவர். மன்னன் அநபாயனின் (2 ஆம் குலோத்துங்க சோழன்) முதலமைச்சர். திருத்தொண்டர் புராணமாகப் பாடினார் தொண்டர் சீர் பரவுவார் எனப்பட்டார். உத்தம சோழப் பல்லவன் தெய்வப் புலவர் எனவும் படுகிறார். இப்பெரிய புராணமே 12-ஆம் திருமுறையாகும். கி.பி.6-ஆம் நூற்றாண்டுடைய திருமந்திரம் முதல், கி.பி.12-ஆம் நூற்றாண்டைய பெரிய புராணம் முடிய ஆறு நூற்றாண்டுகளில் அரும்பிய சைவநூல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பன்னிரண்டு திருமுறைகளைத் தமிழ் வேதமாக சைவர் கருதுகின்றனர். பன்னிரு திருமுறைகள் (திருக்கோவையார் நீங்க) இசைத் தமிழ்ப் பாக்கள் கொண்டவை, பதினோராந் திருமுறையில் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டுப் பதிகங்கள் இசைப்பா 10-12 ஆகிய மூன்று திருமுறைகள், திருக்கோவையார், இயற்றமிழ், இசைத் தமிழ், பரப்பிய பெருமையும் திருமுறைகட்கு உண்டு. சிறப்பாக நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நற்றமிழ் ஞானசம்பந்தன் பணி குறிப்பிடத்தக்கது.

## 2.7 பன்னிரு திருமுறைகள்

'திருஞானசம்பந்தர் முதலானோர் பாடிய பக்திப்பனுவல்கள், பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறைகள்; திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள்; சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறை; மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை; திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், கண்டராதித்தர், பூந்துருத்திக் காடவநம்பி, திருவாலி அமுதனார், வேணாட்டடிகள், புருடோத்தமநம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் பாடிய பாடல்களின் தொகுதி ஒன்பதாம் திருமுறை; திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறை; காரைக்கால் அம்மையார், திருவாலவாயுடையார், கல்லாடர், நக்கீரர், கபிலதேவர், பரணதேவர், சேரமான் பெருமாள் நாயனார், அதிரா அடிகள்,

இளம்பெருமானடிகள், ஐயடிகள் காடவர் கோன், பட்டினத்தடிகள் ஆகிய பதினொருவர் பாடிய பாடல்களின் தொகுதி பதினோராம் திருமுறை; பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை. இப்பன்னிரண்டு திருமுறைகளும் பக்தி நூல்களாகும்.

**2.8 ஒட்டக்கூத்தர்**

செய்யுள் இயற்றும் ஆற்றலில் அக்காலத்துள்ள கவிகளுட் சிறந்து விளங்கினமையால் 'கவிராசர்' என்றும் 'கவிச் சக்கரவர்த்தி' என்றும் அழைக்கப் பட்டார் அரசனால் 'காளம்' என்னும் விருது பெற்றமையால் 'காளக்கவி என்றும் பட்டம் பெற்றார் இருமொழி நூல்களுள்ளும் இன்றியமையாதனவற்றைச் செவ்வனே அறிந்து அவற்றை நன்கு புலப்படுத்திச் செய்யுள் செய்யும் திறமை வாய்ந்தமையால் 'சருவஞ்ச கவி' என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

இவருடைய ஊர் மலரி என்பர். 'மலரி வருங்கூத்தன் என்ற தண்டியலங்கார மேற்கோள் செய்யுளைக் கொண்டு இவ்வாறு கூறத் துணிகின்றனர். இவருடைய இயற்பெயர் கூத்தராகும். 'கூத்த முதலியார்' என்று வழங்குவதுண்டு. இவர் கைக்கோளர் என்னும் மரபினைச் சார்ந்தவர், இவர் பிறந்த மரபின் சிறப்பினை இவர் இயற்றிய 'ஈட்டியெழுபது' என்னும் நூலில் புகழ்ந்துரைக்கின்றார்.

இவர், விக்கிரம சோழன் மீது ஓர் உலாவும், அவன் மகளாகிய இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது ஓர் உலாவும், அவன் மகனான இரண்டாம் இராசராச சோழன் மீது ஓர் உலாவும் பாடியுள்ளார். இவ்வுலாக்கள் 'மூவருலா' என்று அழைக்கப்படுகிறது.

**2.9 புகழேந்திப் புலவர்**

படிக்காசுப் புலவர் புகழேந்திப் புலவரைத் தாம் இயற்றிய தொண்டை மண்டல சதகத்தில்

கேட்டாலும் இன்பம் கிடைக்குங்கண் டீர்கொண்ட கீர்த்தியொடு
பாட்டா லுயர்ந்த புகழேந்தி

என்று புகழ்கிறார் . 'ஐயன் களந்தைப் புகழேந்தி', 'காரர் களந்தைப் புகழேந்தி' என்ற தொடர்கள் இவர் தொண்டை மண்டலத்தில் பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர் என்பதை உணர்த்தும் இவர் துளுவ வேளாள மரபினர்.

வெண்பா யாப்பில் அமைந்தது இவர் இயற்றிய நளவெண்பா தமிழில் வெண்பாவில் அமைந்துள்ள நூல்களில் இதுவே தலை சிறந்தது. வெண்பாப் பாடுவதில் புகழேந்தி இணையற்றவர் என்பதைக் கீழ்க்காணும் பாட்டில் கண்டு உணரலாம்.

'வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
செயங்கொண்டான் விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாய வுயர்சந்தம் படிக்காச
லாதொருவர் பகரொ ணாதே'

நளவெண்பா முதல் நூல் அன்று என்று மகாபாரதத்தில் கூறப்பட்டிருக்கும் 'நளோபாக்கியானம்' என்ற நளன் வரலாற்றைப் புகழேந்திப் புலவர் தமிழில் செய்தார். நளவெண்பா 'சுயம்வர காண்டம்' கலித்தொடர் காண்டம், கலி நேரிசை வெண்பாக்களும் கொண்டது. ஆசிரியர் இயற்கையினை இனிமையுற எடுத்து இயம்புகிறார்.

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு

வில்லி கணைதெரிந்து மெய்கரம்ப – முல்லைமலர்

மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே

புன்மாலை அந்திப் பொழுது

என்பதாம். இவர் நளவெண்பாவின் ஒரு செய்யுளில் 'முரணை நகர்ச் சந்திரன் சுவர்க்கி' என்னும் சிற்றரசனைப் புகழ்ந்து பாடியுள்ளார். எனவே இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தருக்குப் பின் இரு நூற்றாண்டுகள் கழித்து வாழ்ந்திருக்க வேண்டுமென்பர்.

**2.10 செயங்கொண்டார்.**

இயற்பெயர் தெரியவில்லை. அபயனின் வரலாற்றைப் பாடியமையால் தென்னகப் புலவர் சிலரை வாதில் வெற்றி கொண்டார் என்பதால் இப்பெயர் பெற்றார். முதற் குலோத்துங்கன் (1070-1120) அவைப் புலவராகத் திகழ்ந்தார் இவரது ஊர் தீபங்குடி என்பதாகும். தமிழில் போர்க் காவியங்கள் கதைகள் இல்லாக் குறையைப் போக்க வந்தது கலிங்கத்துப் பரணிக்குப் 'போரே' பாடு பொருள். போர்ப் பிரபந்தங்களுள் பரணியே தலையாயது. அந்த வீர காவியத்தை வளமோடு வடித்துள்ளார் செயங்கொண்டார். ஒரு கவிச் சக்கரவர்த்தியே 'தேடற்கு அருங்கவி' எனக் கூறுவது, எத்துணைச் சிறந்தது. பரணிக்கோர் செயங்கொண்டார்' என்ற பாராட்டு ஒன்றே இவர் திறம் போற்றுகிறது.

## வினாக்கள்

### பகுதி – அ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

1. சிலப்பதிகாரத்தைப் பெருங்காப்பியம் என்று கூறலாமா? காப்பிய இலக்கணம் கொண்டு ஆய்க.
2. ஐம்பெரும், ஐஞ்சிறு காப்பியங்களைக் குறிப்பிடுக.
3. சிலப்பதிகாரம், மணிமேகலை இரட்டைக் காப்பியம் என்று கூறுவது பொருந்துமா? ஆய்க.
4. பக்தி இலக்கியம் தோன்றுவதற்கான சூழலை எழுதுக.
5. நாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்கள் யாவை?
6. ஒட்டக் கூத்தர் - குறிப்பு வரைக.
7. புகழேந்திப் புலவர் - குறிப்பு வரைக.
8. ஜெயங்கொண்டார் - குறிப்பு வரைக.

### பகுதி – ஆ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

9. ஐம்பெருங்காப்பியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
10. ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
11. சிலப்பதிகாரத்திற்கு வஞ்சிக்காண்டம் தேவைதானா ஆராய்க?
12. ஆழ்வார்களின் பாசுரங்கள் வழி அவர்களின் பக்தி ஈடுபாட்டை எழுதுக.
13. நாயன்மார்களின் பக்திச் சுவையினைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
14. சிலப்பதிகாரத்தில் காணலாகும் மூன்று அறக்கருத்துகளையும் அவற்றிற்குரிய காண்டங்களோடுப் பொருந்துமாறு ஆராய்க?

## NOTES

**அலகு - 3**

## 3.1 சைவ சித்தாந்த சாத்திரங்கள்

### 3.1.1 திருவுந்தியார்

சிவஞான போதத்திற்கு முன்னர்த் தோன்றிய இந்நூல் இது. இதன் ஆசிரியர், திருவியலூர் உய்யவந்த தேவர், பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல், சிவஞான போதம் போன்று சைவ சித்தாந்தக் கருத்துகளை நிரல்படக் கூறாது, 45 செய்யுள்களும், ஆசிரியர் தம் மனத்தில் தோன்றிய உணர்ச்சி அனுபவங்களைக் கூறியுள்ள முறையில் அமைந்துள்ளது.

### 3.1.2 திருக்களிற்றுப்படியார்

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில செய்திகள் அவர்தம் வல்வினை, மெல்வினை இரண்டினையும் விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார். திருக்குறள் மேற்கோள், இந்நூலில் சைவ சமயக்கருத்தை விளக்க எடுத்தாளப்பட்டுள்ளன திருவுந்தியாரின் காலமே இந்நூலின் காலமுமாகும்.

### 3.1.3 சிவஞான போதம்

பதினான்கு சைவசித்தாந்த நூல்களிலும் இதுவே தலைமை வாய்ந்தது. பன்னிரண்டு சூத்திரங்களையும், முப்பத்தொன்பது அதிகாரங்களையும் எண்பத்தோர் எடுத்துக்காட்டு வெண்பாக்களையும் இந்நூல் தன்னகத்தே கொண்டு, 'பதி, பசு, பாசம்' என்ற சைவ சித்தாந்த உண்மையினைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. இந்நூலாசிரியர் மெய்கண்டார் ஆவர். திருவெண்ணெய் நல்லூர் வேளாளர் அச்சுத களப்பாரின் மைந்தர், சிலர் சிவஞான போதம் வடமொழி ஆகமத்தின் பாவவிமோசனப் படலத்தில் காணப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் மொழி பெயர்ப்பு என்பதை மறுத்து, இது, தமிழ் மொழியிலே தோன்றிய முதல் நூல், மொழி பெயர்ப்பு நூல் அன்று என்பர் அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார்

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் கல்வெட்டொன்று மெய்கண்டார் காலம் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதை அறிவிக்கிறது.

### 3.1.4 சிவஞான சித்தியார்

பரபக்கம், சுரபக்கம் என்ற இரண்டு பிரிவுகள் கொண்ட விரிவான நூலான இதனை இயற்றியவர், மெய்கண்டாரின் முதல் மாணவராகிய அருள் நந்தி சிவாசாரியார் ஆவர். இது, சிவஞான போதத்தின் வழி நூலாய் அமைந்துள்ளது. சிவத்தின் மேல் தெய்வமில்லை, சிவஞான சித்திக்கு மேல் சாத்திரமில்லை என்று சிவபோக சாரமும் பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும் என்று சிவபோகசாரப் பாடற் பகுதியும் இதன் பெருமையினைக் குறிக்கின்றன.

### 3.1.5 இருபா இருப.்.து

அருணந்தி சிவாசாரியார் தம் ஆசிரியரை வழிபட்டு வினவும் முறையிலே சில சைவ சித்தாந்த உண்மைகளை, இந்நூலில் விளக்கிக் கூறியுள்ளார். அந்தாதித் தொடையில் அமைந்த இந்நூல், பத்து நேரிசை வெண்பாவும், பத்து நேரிசையாசிரியப்பாவும் கொண்டது.

### 3.1.6 உண்மை விளக்கம்

ஐந்தெழுத்தாம் 'நமசிவாய' என்கிற தத்துவப்பொருளை விளம்பி நிற்கும் இந்நூலின் ஆசிரியர், மெய்கண்ட தேவரின் மாணவர். திருவதிகை மனவாசகங் கடந்தார் ஆவர்.

### 3.1.7 சிவப்பிரகாசம்

பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களில் முற்கூறிய ஆறு நூல்கள் போக, எஞ்சிய எட்டு நூல்களையும் இயற்றியவர் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் ஆவர். இவர், மறைஞானதேசிகரின் மாணவர். இந்நூலின் பாயிரத்தில் அமைந்த பாட்டொன்றில்

'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று

தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா'

என்று கூறியிருப்பது உணரத்தக்கதாகும். பதிநான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்பெரியார் சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்ற இரண்டு நூல்களையும் அடியொற்றி இந்நூலினை ஆக்கியுள்ளார்.

### 3.1.8 திருவருட்பயன்

பத்துப் பத்துக் குறள் வெண்பாக்களைக் கொண்ட பத்துப்பத்து அதிகாரங்களில் சித்தாந்த உண்மைகளை இந்நூல் விளக்குகிறது.

### 3.1.9 வினா வெண்பா

தம் ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தரை வினவுவது போல் சித்தாந்தக் கருத்துகளை ஆசிரியர் இந்நூலில் அமைத்துள்ளார்.

### 3.1.10 போற்றிப் ப∴றொடை வெண்பா

கலிவெண்பாவில் அமைந்த இந்நூலில் ஆசிரியர் தம்ஞான குருவின் அருட்செயல்களை அகங்குளிர நினைந்து நினைந்து போற்றுகிறார்.

### 3.1.11 கொடிக் கவி

தில்லையில் கொடியேற்றுகின்ற முறையிலே சிலசித்தாந்த உண்மைகளைக் கூறும் சிறிய நூலாகும் இது.

### 3.1.12 நெஞ்சு விடுதூது

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் இதுவும் ஒன்று. ஆசிரியப்பாவால் நெஞ்சினைத் தூதுவிடுக்கும் பான்மையில் இந்நூல் அமைந்து இப்பெயர் பெற்றது. ஆசிரியர், திருவள்ளுவரை இந்நூலில் போற்றுகிறார்.

### 3.1.13 உண்மை நெறி விளக்கம்

ஆறு விருத்தப் பாக்களில் 'தசகாரியம்' என்று சைவ சித்தாந்த சாத்திரத்துள் கூறப்படும் பத்தையும் இந்நூல் விளக்குகிறது.

### 3.1.14 சங்கற்ப நிராகரணம்

புறச் சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்தி புறச்சமயக் கருத்துகளை இந்நூல் மறுத்துரைக்கின்றது.

இதுகாறும் கூறப்பட்ட இப்பதினான்கு சாத்திரங்களும் சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன.

## 3.2 சித்தர் பாடல்கள்

சித்தர் பாடல்கள் அத்தனையும் சிந்தனைக் களஞ்சியம், பட்டறிவின் பிழிவு, அனுபவ ஞானத்தின் அச்சுக்கள், வாழ்வின் உணர்வு, ஊக்கத்தின் ஆக்கங்கள். ஆன்மீகப் பெட்டகங்கள், மனநோய் தீர்க்கும் மாமருந்துகள், அறிவினைப் புரிய வைத்து மெய்வாழ்வினை மலரச்செய்யும் ஞானமணிகள். இதய இருள் போக்கும் கை விளக்குகள், அறியாமை அகற்றி அறிவியலுக்கு அழைத்துச் செல்லும் ஆண்ம விளக்குகள், அகந்தை கிழங்கை அகழ்ந்தெடுத்து ஆன்மீகம் நாட்டும் நந்தா விளக்கங்கள் எனக் கூறலாம்.

**சமயமும் நெறியும்**

இவர்களது சமயம் சமரச சன்மார்க்கமாகவும் நெறி உண்மையைத் தேடுவதாகவும் உள்ளன.

**காலம்**

வடமொழியில் (கி.மு.200) பதஞ்சலி யோக சூத்திரம் மகாயான பௌத்தம் தோற்றுவித்த நாகார்ச்சுனர் (கி.பி. 2), திருமூலர் (கி.பி.5-6 நூற்), இவர்கள் சித்தர்களில் முதல்வர்கள், பின்னர் கிபி.11ஆம் நூற்றாண்டில் தொடங்கி இன்றுவரை எத்தனையோ சித்தர்கள் தோன்றியவண்ணம் உள்ளனர் எனக் கருதப்பெறுகிறது. சித்தர் பாடல்கள் தோன்றிய காலம், கிபி.15 - ஆம் நூற்றாண்டுக்கும் முந்தையன. தொகுக்கப் பெற்ற காலம் கி பி 18 ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி பி 19 ஆம் நூறறான்டின் தொடக்கமாகலாம்.

**பதினெண் சித்தர்கள்**

அறுபதுக்கும் மேற்பட்ட சித்தர் குழாம் உண்டு. இவர்களில் 18 சித்தர்களாகப் பலரும் கருதும் பாங்கினர். அகத்தியர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், அவ்வை, திருமூலர், சிவ வாக்கியர், பட்டினத்தார், பத்ரகிரியார், அருணகிரி, முத்துத் தாண்டவர் இராமலிங்க அடிகள் சுத்தமார்க்கத்தைச் சேர்ந்த ‘ஞானசித்தர்கள்’ ‘வித்தகச் சித்தர்கணம்’. பிறவாரும் கூறுவதுண்டு. சித்தர்கட்குத் தலைவர் அகத்தியர். பொதிய மலையில் வாழ்ந்தார். அவர் புகழ் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது சிவனிடம் தீட்சை பெற்ற எண்மரில் ஒருவர். தமிழ்ச் சித்தர் மரபு திருமூலரிலிருந்து தொடங்குகின்றது.கி.பி 5.6 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்..

பண்டைக்காலத்தில் யோகம் பயின்று, அறிவு நிரம்பியவர்கள் சித்தர்கள். இவர்கள் உலகப் பொருட்களின் உண்மை நிலைகளை விளக்கி, அவை பயனளிக்கும் ஆற்றலையும் தங்கள் நூல்களில் அறிவித்துள்ளார்கள். மருத்துவ நூல், மந்திர நூல், யோக நூல், ஞான நூல், இரசவாத நூல் முதலான பல பொருள் பற்றியும், இவர்கள் நூல் செய்துள்ளார்கள். சித்த மருத்துவம் தமிழர்க்கியைந்த மருத்துவம் ஆகும்.

இவர்களுடைய பாடல்களில் ஆழ்ந்த மறைபொருள் அமைந்திருக்கும் மேற்போக்காக எளிதில் பொருள் புரிந்து கொள்ள இயலாது. ஆயினும் இவை நாட்டு மக்கள் நெஞ்சில் கவர்ச்சியூட்டி இன்றும் வாழ்கின்றன.

### 3.2.1 அகப்பேய்ச்சித்தர்

தத்துவ ஞானத்தை ஒட்டி உவமை உருவத்தில் தந்தவர். ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் ‘அகப்பேய்!’ என்ற விளி வருவதால் இப்பெயர் வந்தது என்பர். தம் மனம் பேயாக அலைதல் பற்றிப் பேயென உருவகப்படுத்தி, அலையாது நிற்குமாறு அறிவுறுத்திப் பாடியதால் இப் பெயர் பெற்றார் என்பர். சித்தாந்தக் கருத்துகள் செறிந்துள்ள 90 கண்ணிகள் ‘ஆசாரங்கண்டாரே மோட்சம் வேண்டார்கள்’.

பிச்சை எடுத்தாலும் பிறவி தொலையாதே – அகப்பேய்

இச்சை அற்ற இடம் எம்இறை கண்டாயே – அகப்பேய்

என்று பாடியுள்ளார்.

### 3.2.2 அழுகுணிச் சித்தர்

அழுகைச்சுவையை அதிகம் பாடியதால் இப்பெயர் பெற்றார் என்பர் ஒட்டுவமை வடிவில் தத்துவ ஞானத்தைப் பாடியுள்ளார். 32 பாடல்கள் அழுவது போன்ற சந்தத்தில் அமைவதால் அழுகுணி எனப் பெயர் பெற்றார் கண்ணம்மா எனக் குழந்தையை விளித்து வினாவும் வகையில் பாடல்கள் அமைகின்றன.

பையூரிலே யிருந்து பாமூரிலே பிறந்து

மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறியேன்

மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்

பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா!

பாழாய் முடியாவோ!

மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்

காமன் மகளாகி மச்சினியும் நீயானால்

காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா!

கண் விழிக்க வேகாவோ!

என்று அழகாகப் பாடி, மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார்.

### 3.2.3 இடைக்காட்டுச் சித்தர்

இடை என்பது இடைப்பாடு என்ற ஊரினைக் குறிக்கலாம். இடையர் இனத்தையும் குறிப்பிடலாம். 'கோனே, கோனுரே, தாண்டவக் கோனே' என்ற சொல்லாட்சியும் பசுவை விளித்தல் பால் கறத்தல் குழல் ஊதுதல் கிடை போடுதல் போன்ற ஆயருக்குரிய வழக்குகளின் ஆட்சியும் இதனை வலியுறுத்தும் 130 பாடல்கள் கொண்டது,

மனமென்னும் மாட்டங்கில் தாண்டவக் கோனே – முத்தி

வாய்த்த தென்றெண்ணேடா தாண்டவக் கோனே

சினமென்னும் பாமபிறந்தால் தாண்டவக் கோனே – யாவும்

சித்தி என்றே நினையேடா தாண்டவக் கோனே

'தாம் திமி திமி தந்தக் கோனாரே, தீம் திமி திமி திந்தக் கோனாரே' என ஆடிப்பாடும்.

### 3.2.4 கடுவெளிச் சித்தர்

கடுவெளி = பரவெளி, பரம்பொருள் நிலை இதனைப் பாடியதால் இப்பெயர் பெற்றார். கடுவெளி = ஓயாமல் கடுகி முடுகிக் கொண்டிருக்கும் மூச்சு. 32 கண்ணிகள், ஆனந்தக்களிப்பு, இப்பாடல்களால், இம்மெட்டுக்கே ஆனந்தக்களிப்பு என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது. எவருமறிந்த இவர் பாட்டு,

நந்த வனத்திலோ ராண்டி – அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி

கொண்டு வந்தாண்டி ஒரு தோண்டி – அதைக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி.

என்பதாம்.

### 3.2.5 குதம்பைச் சித்தர்

குதம்பை (காதணி) அணிந்த பெண்ணை முன்னிலைப் படுத்தும் முறையில் குதம்பாய் எனப் பாடியமையால் இப்பெயர் பெற்றார். 32 பாடல்கள். மிகவும் பழகிப் போன பாடல்,

மாங்காய்ப் பாலுண்டு மலைமேலிருப் போர்க்குத்

தேங்காய்ப் பாலேதுக்கடி – குதம்பாய்!

தேங்காய்ப் பாலேதுக்கடி

என்று பாடுகிறார்.

### 3.2.6 பாம்பாட்டிச் சித்தர்

பாண்டி நாட்டில் வசித்தவர். கொங்குநாட்டு மருதமலையடிவாரத்தில் தவம் செய்தவர் எனக் கூறப்படுகிறது. பெயர்க் காரணம், காட்டில் பாம்பைப் பிடித்தாட்டிக் கொண்டிருந்து, ஒரு முறை நவரத்தின பாம்பினைப் பிடிக்க முனைந்தபோது சட்டமுனிவர் எதிர்ப்பட அவரிடம் தீர்க்கை பெற்று சமாதியில் இருந்து எழுந்து, சித்து பல செய்தார். ஓர் அரசன் மாண்டபோது அவன் உடலிற் புகுந்து அவன் மனைவியுடன் இருந்து, செத்த பாம்பினை ஆட்டினர். இதனால், இப்பெயர் பெற்றார் என்பர். இவர் 129 பாடல்கள் பாடினார் ‘ஆடு பாம்பே’ எனத் தொடங்கும் பாடல் எல்லோரும் அறிந்தது.

ஆடுபாம்பே தெளிந்தாடு பாம்பே – சிவன்

அடியிணை கண்டோமென் றாடுபாம்பே

‘நாதர் முடிமேலிருக்கும் நாகப் பாம்பே!

நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே!’

என்று பாடியுள்ளார்.

### 3.2.7 சிவ வாக்கியார்

இவர், யோகசித்தர் சந்த ஓட்டம், இவர் பாடற் சிறப்பு பேச்சு நடையது, மரூஉ மொழிமிக்கது. வடசொற்கள் மிகுதி. 520 பாடல்கள் திருமழிசை யாழ்வாரது போன்று எழுசீர் சந்த விருத்தங்கள் கொண்டது. ஆண்டவனை அகத்தில் உணர்ந்து ஒழுகாத வரை, புரப்பூசனைகள் வெறும் வேடமே பயன் ஏதும் தரா என்பது இவர் கருத்து. வினையால் பிறவி விளைகிறது. இறைவன் குருவாகி பற்று அருள் செய்யவே மெய்ஞ்ஞானம் மேவுகிறது, பற்று அகலுகிறது. திரை அகலவே ஞானமாக ஒளிரும் பதியைக் கண்டு ஆன்மா ஐக்கியமாகிறது. இது, இவரது கொள்கை. இந்த ஞானியின் புரட்சிப் பாடல் இதோ,

நட்ட கல்லைச் சுற்றி வந்து நாலு புட்பம் சாத்தியே

சுற்றி வந்து மொணமொ ணென்று சொல்லு மந்தர மேதடா

நட்ட கல்லு(ம்) பேசுமோ? நாத னுள்ளி ருக்கையில்

சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

என்று பாடியுள்ளார்.

### 3.2.8 தேரையர்

நீங்காத தலைவலியால் துடித்த ஓர் அரசனுக்கு சம்மோகினி எனும் பச்சிலையால் மயக்கமுண்டாக்கிக் கபாலத்தைத் திறந்து அங்கிருந்த ஒரு தேரையை வெளியே எடுத்து சந்தானகரணி எனும் பச்சிலையால் பழையபடி கபாலத்தைப் பொருத்தியபடியால் தேரையை அகற்றியதால் இப்பெயர் பெற்றார் என்பர். இவர் அகத்தியர் மாணவர் என்றும் தருமசௌமியரின் மாணவர் என்றும் இரு கருத்துளது மருத்துவத்துறையில் முக்கியம் பெற்றவர். இவர் நூல்கள் தைலவர்க்கச் சுருக்கம் நீர்க்குறி நெய்க்குறி சாத்திரம் பதார்த்தகுண சிந்தாமணி மணிவெண்பா மருத்துப்பாரதம் வைத்திய யமகவெண்பா என்பன.

## 3.3 உரையாசிரியர்கள்

தமிழ்ச் செல்வங்கள் பல, காலம் பல கடந்தமையால் அப்பனுவல்கள் பலவற்றின் பொருளறியா, மரபுணரா நிலை நேர்ந்துள்ளது. ஆதலின் சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்றவற்றின் ஆழ் கருத்துகள் அறியாது இடர்ப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இன்னலைப் போக்கிப் பண்டைப்பனுவல்களின் பாங்கறியச் செய்த பெருந்தொண்டு உரையாசிரியர்களையே சாரும். இருண்ட நிலையே இருந்திருக்கும். அவற்றிற்கு விளக்கம் தந்த ஒளி விளக்கங்கள் உரையாசிரியர்கள் எனலாம்.

பழம் நூல்களின் மூலம் அழியாது, மறையாது, குறையாத திறம் அவர்கட்கு உரியது. மூலப்பகுதி கிடைக்கப்பெறா நூல்கட்கு இவர்கள் உரையினின்றே மூலம் அமைக்க முடிந்தது. உரை இயற்றினமையால் தமிழ் உரை நடைக்கு வித்திட்டனர். இவர்கள் உரையினின்றே எண்ணரிய தமிழ் நூல்களின் பெயர்களும் பகுதிகளும் நமக்குக் கிடைத்துள்ளன. பண்டை இசை நாடகத்தின் பெருமை, இசை நுட்பம் இவர்கள் உரைகளாலேயே உணரமுடிகிறது. இவ்வுரையாசிரியர்கள் காலம் 13 - ஆம் நூற்றாண்டு தொடங்கி 18 - ஆம் நூற்றாண்டு முடிய எனக் கொள்ளலாம்.

### 3.3.1 இலக்கண உரையாசிரியர்கள்

#### 3.3.1.1. நக்கீரர்

இறையனார் களவியலுக்கு உரை எழுதியவர் இவரே. இவ்வுரையே இன்று நமக்குக் கிடைத்த பழமையான உரை. கடைச் சங்க காலத்தவர் அல்லர். கி.பி 8 -ஆம் நூற்றாண்டைய பாண்டிக்கோவை பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளமையான், அதன்பின் வாழ்ந்தவராதல் வேண்டும் இவ்வுரையில் தான் முச்சங்கம் பற்றிய முழுவிவரம் முதன் முதல் தென்படுகிறது. கி.பி 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

#### 3.3.1.2. இளம்பூரணர்

இவர் உரையாசிரியர்களில் தலைமை சான்றவர். தொல்காப்பியம் முழுமைக்கும் முதலில் உரை வகுத்தவர். நன்னூலை மேற்கோள் காட்டுதலால் 11-ஆம் நூற்றாண்டினர் என்பர். இவர் ஒரு சமணத்துறவி. இவரது தொன்மையும் உரைத்தன்மையும் கருதி உரையாசிரியர் என்றே அழைக்கப்பெறும் பெருமையுடையவர்.

எழுத்ததிகார உரை ஏற்றம் சான்றது. நேரிய பொருளை எளிய முறையில் தெளிவுபட வகுத்தும் தொகுத்தும் வடமொழிக் கலப்பின்றி இரத்தினச் சுருக்கமாக இவருரை அமைகிறது. வேண்டிய விவரங்களும் தேவையான மேற்கோள்களும் கொண்டது. தமிழ் மரபினைத் தழுவிச் செல்வது. 40 நூல்களினின்றும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இவரை வழிகாட்டியாக வைத்தே பின்னைய உரையாசிரியர்கள் உரை எழுதலாயினர்.

### 3.3.1.3. பேராசிரியர்

தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். மெய்ப்பாடு, உவமை, செய்யுள் மரபு, ஆகிய இயல்கட்கே உரை கிடைத்துள்ளது. குறுந்தொகை 380 பாடல்களுக்கும், திருக்கோவையாருக்கும் உரை எழுதியவர். இவர் இயற்பெயர் தெரியவில்லை, மதுரை ஆசிரியர் எனவும், ஆசிரியர் யாவரினும் சிறந்து விளங்கியதால் பேராசிரியர் எனப்பட்டார் போலும்! தக்க மேற்கோளும் தகுந்த நுட்ப விளக்கமும் வரலாற்றுக் குறிப்பும் கொண்டது. இவர் உரை விடை கூறித் தருக்க ரீதியில் அமைவது. தண்டியலங்காரத்தை மேற்கோள் காட்டுவதால் இவா் காலம் கி.பி13 -ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர் என்பர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்.

### 3.3.1.4. சேனாவரையர்

திருநெல்வேலி மாவட்ட ஆற்றூரினர். படைத்தலைவர் போலும்! வடமொழியிலும் புலமை மிக்கவர். சொல்லதிகாரத்திற்குத் திட்ப நுட்பம் செறிந்து சிறந்த உரை செய்துள்ளார். 'சொல்லுக்குச் சேனாவரையம்' எனச் சொல்லப்படுகிறது. இவர் கி.பி 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர். இலக்கண இலக்கியப் பயிற்சி மிக்கவர். முன்னைய உரைகளை நயமாகத்திறம் பட மறுக்கிறார். ஆனால், சிற்சில சமயம் தமிழின் தன்மைக்கு ஏலாத வடமொழி இலக்கண நெறிகளை நற்றமிழுக்கும் பொருத்திக் காட்டுகின்றனர். சிவஞான முனிவர் வடநூற்கடலை நிலை கண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கும் உரை செய்வாராயின் இன்னோரன்ன பொருள் அனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப்பர் என எழுதிப் புகழ்கின்றார்.

### 3.3.1.5. நச்சினார்க்கினியர்

மதுரையில் பார்த்துவாச கோத்திர அந்தணர் மரபில் தோன்றியவர். சைவ சமயத்தைச் சார்ந்தவர். சிந்தாமணிக்கு உரை எழுதிச் சமணரானவர். பல நூல்கட்கு உரை எழுதியவர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி, குறுந்தொகை இறுதி 20 பாடல்கள் ஆகியவற்றிற்கு உரை கண்டவர். இவரது காலம் கி.பி 14 - ஆம் நூற்றாண்டு. இவர் உரை விரிவும் விளக்கமும் உடையது இவருரை இன்றியமையாத போது சொற்பொருளும் இலக்கணக் குறிப்பும் கொண்டுள்ளது. தெளிவான விளக்கமும், உயர்ந்த நடையும் கொண்டது. சேனாவரையர் போன்றோரைக் கண்டித்து உரை எழுதிச் செல்கின்றார் 'உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனும் சிறப்புக்குரியவர். பாடலை நீட்டி, மடக்கி, ஒடித்துக் கொண்டு கூட்டிப் பொருள் கூறுவது இவர் போக்காகும். பாட பேதங்களையும் குறித்துள்ளார். 'ஐரோப்பிய உரைவிளக்கம் போன்று அமைந்துள்ளதாம் இவர் உரைகள்.

### 3.3.1.6. கல்லாடர் தெய்வச்சிலையார் போன்றார்

இவர்கள் தொல்காப்பிய உரையாசிரியர்கள், புறநானூறு என்பதை பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு போன்றவற்றுக்கும் உரை உள்ளன. அறியுமாறில்லை சிலப்பதிகாரத்திற்கு அரும் பதவுரையுளது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை ஊர் நிரம்பையூர். வாழ்ந்தவிடம் திருவாரூரையடுத்த தீபங்குடி, நிரம்பையர் காவலர் என்ற வேறு பெயரும் இவருக்கு உண்டு.

### 3.3.1.7. அடியார்க்கு நல்லார்

சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர், கானல் வரி நீங்கலாக முதல் 19 காதைகட்கே இவர் உரை கிடைத்துள்ளது. சில இடங்களில் பதவுரையும் சிலவிடத்து பொழிப்புரையும், இன்றியமையா இடங்களில் இலக்கணக் குறிப்பும் ஏற்ற இடங்களில் முத்தமிழ்ப் பகுதிகளும் கொண்டு எதுகை மோனையுடன்

அமைவது இவருரை. விசேடவுரையோடு விரிவாக அமைவது. மேற்கோள் இன்ன நூலினின்றும் எடுத்தாளப்படுவது என்று குறிப்பது. இவரது உரை இயல்பாகும். சோதிடக் குறிப்புகள் தெரிகின்றன. 60 க்கும் மேலான நூல்களை மேற்கோள் காட்டுகின்றார். மறைந்து போன இசை நாடகத்தமிழ் நூல்களை அறியலாம். மொத்தத்தில் செந்தமிழ் நலம் சான்றது என்று கூறலாம். கலிங்கத்துப்பரணி மேற்கோள் காட்டியமையால் இவரது காலம் கி.பி 12 - ஆம் நூற்றாண்டாகும். இவரைப் போற்றிப் புகழ்ந்தவன் பொப்பண்ண காங்கேயன் எனும் கன்னட அரசன்.

### 3.31.8. பரிமேலழகர்

இவர் திருக்குறளுக்கு உரை வகுத்தவர். பரிபாடலுக்கும் திருமுருகாற்றுப்படைக்கும் உரை கண்டதாகத் தெரிகிறது. பதின்மர் உரையில் இவர் உரையே ஏற்றம் சான்றதாக எண்ணப்படுகிறது. நூலிற் பரித்தவுரையெல்லாம் பரிமேலழகன் தெரித்தவுரையாமோ? என்ற தொண்டைமண்டலச் சதகச் செய்யுள் கொண்டுத் தெளியலாம். இவரது உரை சொற்செட்டும் தருக்க முறையிலும் அமைகிறது. திட்ப, நுட்பம் செறிந்த மேற்கோள், செய்யுட்களை உரை நடையிலேயே தந்து விடுகின்றார். சொற்களுக்கு ஏற்ற பொருளுரைத்து வரம்பு கட்டி இலக்கணம் வகுப்பதில் வல்லவர். ஏற்ற இடங்களில் இலக்கணக்குறிப்பும் இயம்புவர். வடமொழிக் கருத்தை ஒட்டி சிற்சில தமிழ் மரபுக்கு மாறாக உரை வகுக்கும் குற்றத்திற்காளாகிறார். ஆயினும், மொழித் திறமும் ஆயும் திறமும் ஆன்ற பேரறிவும் சான்றவர். இவர் காஞ்சி உலகளந்த பெருமாள் கோவில் அர்ச்சக மரபினர். இவர் ஒரு வைணவர். கி பி 13 ஆம் நூற்றாண்டச் சார்ந்தவர்.

### 3.3.1.9. பிறர்

தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும் சிவஞான முனிவர் விளக்கமான உரை எழுதியுள்ளார் இவர் சிவஞான போதத்திற்கு ‘மாபாடியம்’ எனும் பேருரையும் செய்துள்ளார். நன்னூலுக்கு முதல் உரை கண்டவர் மயிலைநாதர். விருத்தியுரை தந்தவர் சங்கர நமச்சிவாயர் காண்டிகையுரை செய்தவர் ஆறுமுக நாவலர், குறளுக்கு உரை கண்டவர்களில் மணக்குடவர் காளிங்கர் போன்றார் உரைகள் சில உள. வீர சோழியத்திற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார். யாப்பருங்கலம், காரிகை இரண்டுக்கும் குணசாகரர் உரை இயற்றியுள்ளார். இவா் கி.பி 10 ஆம் நூற்றாண்டினர், சமண சமயத்தைச் சார்ந்தவர்.

### 3.3.2 பிரபந்த உரையாசிரியர்கள்

கி.பி 14,15 ஆவது நூற்றாண்டுகளில் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திற்கு வைணவ ஆசிரியர்கள் மணிப்பிரவாள நடையில் (மணியும் பவழமும் கலந்தாற் போல) உரைகள் இயற்றினார்கள் இவ்வுரைகளை ‘வியாக்கியானங்கள்’ என்பர்.

### 3.3.2.1. ஆளவந்தார்

கி.பி11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீரநாராயணபுரத்தில் பிறந்தவர் திருவாய்மொழிக்கு முதல் முதல் உரை வகுத்தவர். பிள்ளான் பெயராலேயே வழங்கி வருகிறது.

### 3.3.2.2. திருக்குருகைப் பெருமாள் பிள்ளான்

திருவாய் மொழிக்கு வாய்மொழியாக வழங்கிவந்த ‘6000 படியினை’ இயற்றினார். கி.பி 13 ஆம் நூற்றாண்டினர், ஆறாயிரப்படி என்பது ஆறாயிரம்

கிரந்தங்களையுடையது. ஒரு கிரந்தமாவது ஒற்றெழுத்துகளை நீக்கி 32 எழுத்துகளால் ஆனது. படி அளவைக் குறிப்பது.

#### 3.3.2.3. நஞ்சீயர்

இயற்பெயர் மாதவாசார்யா. திருநாராயணபுரத்தில் தோன்றியவர். 16-ஆம் நூற்றாண்டவர். சீரங்க நாதர் எனவும் பெறுவர். திருவாய்மொழிக்கு 9000 படி உரை தந்தவர். பெரிய திருவாய்மொழிக்கு வியாகியானம் செய்தவர். கண்ணினுன் சிறுதாம்பு உரை திருப்பள்ளி எழுச்சி உரை ஆகியவை எழுதியுள்ளார்.

#### 3.3.2.4. நம்பிள்ளை

ஊர் நம்மூர். வரதராசர் எனும் வேறு பெயரும் இவருக்கு உண்டு. கி.பி 14 -ஆம் நூற்றாண்டினர். திருவாய்மொழிக்கு 9000 படி எழுத்துரு கொடுத்ததோடு திருப்பள்ளியெழுச்சி, திருவிருத்தம், பெரிய திருமொழி ஆகியவற்றிற்கு வியாக்கியானமும் எழுதியுள்ளார் .

#### 3.3.2.5. அழகிய மணவாள சீயர்

இவர் காலம் கி.பி 15- ஆம் நூற்றாண்டு, திருவாய் மொழிக்கு 12000 படி படைத்தவர். திருவாய்மொழிக்கு வியாக்கியானமும் எழுதியுள்ளார்.

#### 3.3.2.6. பெரிய வாச்சான் பிள்ளை

இவர் காலம் கி.பி 15 - ஆம் நூற்றாண்டு நம்பிள்ளையின் மாணவர். நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் திருவாய்மொழி தவிர்த்த மூவாயிரம் பாடல்கட்கும் ‘24000 படி’ இயற்றியுள்ளார். அமலனாதிபிரான் வியாக்கியானமும் செய்துள்ளார். தென்கலையார் இவர் உரையினைத் தலைமேற் கொண்டு போற்றுவார்.

#### 3.3.2.7. வடக்குத் திருவீதிப்பிள்ளை

இவர் நம்பிள்ளை மாணவர். திருவாய் மொழிக்கு ‘36000 படி’ உரை எழுதியவர். இதுவே, ‘ஈடு’ என வழங்குகிறது. காலம் கி.பி 15 ஆம் நூற்றாண்டாகும்.

#### 3.3.2.8. அழகிய மணவாளப் பெருமாணாயனார்

வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருமகன். திருப்பாவைக்கு ‘6000 படி’ உரையும், அமலநாதிப்பிரான் கண்ணினுள் சிறுத்தாம்பு முதலியவற்றிற்கு வியாக்கியானமும் அருளியவர்.

#### 3.3.2..9. மணவாள முனிகள்

இவர் ‘பெரிய ஜீயர்’ எனவும் அழைக்கப்படுவார். தென் கலையாருக்குத் தலைவர். பாண்டி நாட்டுச் சிக்கில் கிடாரம் பிறந்த ஊர், கி.பி15 ஆம் நூற்றாண்டினர். இராமானுஜர் நூற்றந்தாதி உரை, ஞானசார உரை, தத்துவக்கிரய உரை, ஸ்ரீவசன பூஷணவியாக்கியானம் திருவாய்மொழி வியாக்கியானம், மூட்சுப்படி வியாக்கியானம் ஆகியவற்றின் ஆசிரியர்.

### 3.4 திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற் புராணத்தைப் பரஞ்சோதி முனிவர் இயற்றினார். இவர் சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் பல தலங்களுக்குச் சென்று தரிசித்து மதுரையை அடைந்து அங்கயற்கண்ணியம்மையுடன் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரர் பெருமானைத் தரிசித்து அங்குத் தங்கியிருந்தார் அப்போது மீனாட்சியம்மை, இவர்தம் கனவில் தோன்றி ‘எம்

பெருமானின் திருவிளையாடல்களைப் பாடுவாய்!' எனப் பணித்தார். அப்பணியைத் தலைமேற் கொண்டு இந்நூலைப் பாடி முடித்தார்.

இத்திருவிளையாடற் புராணம் முருகப் பெருமானால் அகத்தியருக்கு அருளப்பெற்றுப் பின்னர் அகத்தியரால் பிற முனிவர்கள் அறிந்தனர். அவர்கள் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுப் பூசித்தனர் என்று இப்புராணம் கூறுகின்றது. இந்நூல் காப்பு, கடவுள் வாழ்த்து, பாயிரம், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, கைலாயச் சிறப்பு, புராண வரலாறு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு, மூர்த்திச்சிறப்பு ஆகிய இவற்றுடன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும், நூல் முடிவில் அருச்சனை சிறப்பும் இடம் பெற்றுள்ளன.

மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திரு ஆலவாய்க்காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் உடையது. இதில் சைவத் திருமுறைகள் சைவ சித்தாந்த சாத்திரங்கள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றின் கருத்துகள் இடை இடையே இடம் பெற்றுள்ளன. இந்நூல் கயிறு சாத்தி உண்மை காணும் வழக்கத்தையும் கொண்டிருக்கும் சிறப்புடையது. சைவ விரதங்களின் பெருமையை எடுத்துரைப்பது. இந்நூல் மூலம் பண்டைக்காலப் பழக்க வழக்கங்கள் பலவற்றை உணர முடிகின்றது. தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் பாடல்களின் எண்ணிக்கை பாயிரம் உட்பட 3363 ஆகும்.

### 3.5 வில்லிபாரதம்

வில்லிபாரதம் 4351 பாடல்களைக் கொண்டுள்ளது. இவருடைய நூலுக்கு முதனூல், வியாசர் எழுதிய வடமொழிப் பாரதம். இந்நூலில் பல இடங்களில் நகைச்சுவை பொருந்தியிருப்பதைக் காணலாம். அருச்சுனனைப் பாண்டியன் எங்கு வந்தாய் என்றபதற்கு விடையாகக் 'கன்னியைக் கண்ணுற்று ஆட வந்தனம்' என்று கூறுகிறான். கன்னியாகுமரியில் நீராட வந்தேன் என்றும், உன் கன்னியை மணமாட வந்தேன் என்றும் இரு பொருள்படப் பேசுகிறான்.

வீமனது முரட்டுத் தன்மையை வில்லி அற்புதமாக விளக்குகிறார். வில்லிப்புத்தூரார் சகாதேவனை, 'இமையாரொடு ஒத்த ஞான பண்டிதன்' என நமக்கு அறிவிக்கிறார். இப்படி வில்லிபாரதத்தின் பெருமையைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

### 3.6 அருணகிரியார்

இவர் இயற்றிய திருப்புகழ் குன்றமெறிந்த குமரக் கடவுளின் புகழினை இன்னிசைப் பாடல்களில் உணர்த்துகின்றது. தமிழ் நாட்டில் பல்வேறு கோயில்களிலும் எழுந்தருளியிருக்கும் செவ்வேளைச் சந்தப்பாக்களால் சந்தவிருத்தம் பெருங்கடலாம் அருணகிரியார் பாடியிருப்பது கொண்டு அப்பாடல் பெற்ற தரங்கள் எல்லாம் இன்று சைவர்களால் போற்றி வழிபாடு செய்யப்படுகின்றன. நூலின் பெயர் திருப்புகழாய் அமைந்திருப்பதோடு மட்டுமன்றி நூலில் அமைந்துள்ள 1307 பாடல்கள் ஒவ்வொன்றுமே திருப்புகழ் என்றே வழங்கப்படுகின்றமை இந்நூலின் சிறப்பாகும்.

அருணகிரிநாதருடைய பிறப்பிடம் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கும் திருவண்ணாமலையாகும். இவரோடு வில்லிபுத்தூராரையும் இணைத்துக் கூறுகின்ற கதை பொருந்தவில்லை ஏனெனில், வில்லிபுத்தூரார் அருணகிரிநாதருக்குச் சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளாவது முற்பட்டவராயிருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியால் அறியக் கிடக்கின்றது.

திருப்புகழில் 'சலாம்', 'சபாஷ்', 'ராவுத்தன்' என்ற முகம்மதியச் சொற்கள் கலந்திருப்பது நோக்கற்குரியது. இது அக்காலத்து ஆட்சிப் போக்கினையும் மொழிப்போக்கினையும் உணர்த்தும். இதேபோல் அளவுக்கு மீறிய

வடசொற்களும் கலந்திருக்கக் காணலாம் 1088 க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகளை 1307 பாடல்களில் காணலாம் என்று இசை வல்லார் கூறுவர். முதன் முதல் சந்தப்பாவைப் புதிய முறையில் கையாண்டவர் இவரே எனலாம். இவரது காலம் கி.பி15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

இவரை 'வாக்கிற்கு அருணகிரி' என்றும் 'கருணைக்குக்கருணகிரி' என்றும் புலவர் பாராட்டியுள்ளனர். தாயுமான தயாபரரும், 'ஐயா அருணகிரி, அப்பா உனைப் போல-மெய்யாக ஒரு சொல் விளம்பினர் யார்? என்று வியந்து பாராட்டுகின்றார்.

கந்தர் அந்தாதி என்னும் யமக அந்தாதி இவர் இயற்றியதாகும். இது திருவண்ணாமலையில் பாடப் பெற்றிருக்கவேண்டும் என்பர். நூற்றிரண்டு செய்யுள்கள் கொண்ட கந்தர் அலங்காரம் என்னும் நூல், பக்திச்சுவை மிக்கதொரு நூலாகும். இவர் நூலாம் கந்தர் அநுபூதி மிகச் சிறப்பு வாய்ந்த நூல் இதனைத் தாயுமான சுவாமிகள்,

'கந்தரநு பூதி பெற்றுக் கந்தர நுபூதி சொன்ன

எந்தை யருள்நாடி யிருக்குநாள் எந்நாளோ!'

என்று சிறப்பித்துள்ளார். இது கடவுள் வாழ்த்துடன் கலிவிருத்தத்தால் இதனைப் பெரியோர் மந்திர நூலாகக் கொண்டது. ஆறுமுகப் பெருமானின் அருள் வேண்டுவோர் நாடோறும் பாராயணம் செய்துவரும் சிறப்பினையுடையது இந்நூல், பதினெட்டு வகுப்புக்கொண்டு பதினெட்டுச் சந்த விருத்தங்களால் ஆன நூல் திருவருட்பாவகும். இதில், முருகப் பெருமானுடைய பெருமையும் அருளும் பேசப்பட்டுள்ளன.

இந்தக் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் உள்ளம் கற்பனைக் கடலில் அமிழ்ந்தது. தடையை உடைத்துப்பாயும் புதுவெள்ளம் போலவும் கட்டுக்கடந்த இறகு முளைத்த பறவை போன்றும் வானில் பறந்தது. எனவே, தமிழிற்குப் புத்தம் புதிய துறைகளான உலா, கலம்பகம், புராணம் முதலான சிறு பிரபந்தவகை நூல்கள் பெருவாரியாய் இக்காலத்திலே இயற்றப்பட்டன.

### 3.7 அதிவீரராம பாண்டியன்

'நைடதம் புலவர்க் கௌடதம்' என்னும் சிறப்புவாய்ந்த நைடதம் என்னும் நூலை இயற்றிய புலவர் அரசர் அதிவீரராம பாண்டியர்' ஆவார். அவர் தென்காசியிலிருந்து பாண்டி நாட்டை ஆண்டார். தென்காசியில் ஒரு கோயிலும் கட்டியுள்ளார். இவர் இயற்றிய நைடதம் நளதமயந்தியர் வரலாற்றினைக் கூறுவது. இதற்கு முன்தோன்றிய பெருங்காப்பியங்களின் பொலிவினை இந்நூலில் காணலாம். இதன் முதல் நூல் வடமொழியில் அமைந்துள்ள நைடதமாகும். கங்கைக் கரையில் அமைந்துள்ள காசிநகரின் பெருமையைக் கூறும், 'காசிகாண்டம்' என்னும் நூலையும் இவர் செய்துள்ளார். படிக்கப்படிக்க இன்பம் தரும் கூர்ம புராணத்தினையும், மொழிபெயர்ப்பு நூலாக இலிங்க புராணத்தினையும், சிறுவர்களுக்காக நறுந்தொகை எனும் வெற்றிவேற்கையினையும் இவர் இயற்றியுள்ளார். கிரிவலம்வந்த நல்லூரில் உறையும் சிவபெருமான் மீது திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடினார். இது, 'குட்டித் திருவாசகம்' என அழைக்கப்படும் சிறப்புடைத்து.

சிந்தனை உனக்குத் தந்தேன் திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன் மலரடி எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன் பரகசி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா, கருவையில் இருக்கும் தேவே!

என்ற உருக்கமான பாடலை இந்நூலின்கண் காணலாம் இவர் தமையனார் பரதுங்கராம பாண்டியர் ஆவர். இவர் கல்வி மிக்கவர், பிரம்மோத்தர காண்டம் எனும் நூலையும் செய்துள்ளார். இவர் மனைவியாரும் தமிழ்ப் புலமை சான்றவர் என்பதனை அறிகிறோம். இப்பெண்ணரசியார் நைடதத்தை, 'நாய் விரைந்தோடி இளைத்தாற்போன்ற தன்மையுடைத்து' என்று கூறி அந்நூலின் குற்றத்தினைப் புலப்படுத்தியிருப்பது அவருடைய நூல் ஆயும் நுண்ணறிவினை நுவலும்.

**3.8 தாயுமானவர்**

இக்காலத்தில் சமயத்துறையில் தெளிந்த அறிவினைப் பெற்று ஒளிவீசித் திகழ்ந்து தாயுமானவர் சுவாமிகள் வாழ்ந்தார்.இவர் தந்தையார் பெயர் கேடிலியப்பப்பிள்ளை தாயார் பெயர் கஜவல்லி அம்மை என்பதாகும். திருமறைக்காட்டிலே சைவ வேளாளர் குடியிற் பிறந்து மௌனகுருவிடம் கல்வி பயின்று இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் புலமை பெற்றுத் திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் வேலையில் அமர்ந்து, பின்னர்த் துறவு பூண்டார். யோக ஞானங்களில் சிறந்த இவர் சைவ சமய உண்மைகளையும் சித்தாந்தக் கொள்கைகளையும் தம் பக்திப் பாடல்களில் தெளிவாக உணர்த்துகின்றார்.'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற உயர்ந்த குறிக்கோளில் பரந்துபட்ட மனப்பான்மையில் வாழ்ந்த பெரியார் இவர். உறவினரின் வற்புறுத்தலால் மட்டுவார்குழலி என்னும் மங்கையைத் திருமணம் செய்து கொண்டு சில காலம் வாழ்ந்தார். கனகசபாபதி என்று தமக்குப் பிறந்த மகவுக்குப் பெயரிட்டார். பின்னர்த் துறவறத்தை மேற்கொண்டார். 'எந்த எந்த விதமாக உணர்ச்சி ததும்பும் பாடல்களை இயற்ற இயலுமோ அந்த அந்த விதமாகத் தாயுமானவர் பாடல்களை இயற்றியிருக்கிறார் என்று கூறலாம்'. இவரது சமயக்கருத்தின் சாரம் 'ஆனந்தக் களிப்பு' என்னும் பகுதியிற் புலப்படுகின்றது, 'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே' என்னும் பராபரக் கண்ணிப் பாடல்கள் மிகச்சிறந்து ஒளிவீசித் திகழ்கின்றன.

**3.9 சிற்றிலக்கியங்கள்**

கி.பி.12 - ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகம் அன்னியர் ஆடசியில் இருந்தது. அவர்கள் மொழி, செல்வாக்குப் பெற பைந்தமிழ் புறக்கணிக்கப் பெற்றது. புலவர்கள் போற்றுவாரற்று நின்றனர். வாழ்வே, குலைந்து நிற்கும் போது வளமான காவியங்களோ, வகையான இலக்கியங்களோ தோன்ற முடியுமா? செந்தமிழ்ச் சிறப்பறியா சிற்றின்பச்சிந்தை மிக்க சிற்றரசர்கள் செல்வர்கள் கைபார்த்து இருந்தனர், கவிஞர்கள் காலத்தின் கோரப் பிடியிலே சிக்கித் தவித்த கவிஞர்கள், அவர்கள் உளம் மகிழவே சிற்றிலக்கியங்கள் பல செய்து வயிற்றுப் பாட்டைக் கவனித்தார்கள் தமிழன்னையை அணி செய்யத் தரமான இலக்கியம் யாத்த நிலைபோய் தனிப்பட்டோரைப் பாராட்டிப் பயன் பெறுதற்காகப் பிரபந்தங்கள் பாடும் நிலை ஏற்பட்டது.

பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் உணர்த்தும் இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்து வரின் அவை சிற்றிலக்கியங்களாம். இந்நூல்களை 96 வகையாகக் கொண்டு இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் பிரபந்தத் திரட்டு போன்றன பிரபந்த இலக்கணம் இயம்பும் நூல்களாகும்.

இச்சிற்றிலக்கியங்களில் செந்தமிழ் நலம் அவ்வளவாக அமையாவிடினும் தமிழகம் பற்றிய அக்கால அரிய செய்திகள் பல தெரிய முடிகிறது.

இடைக்கால, பிற்கால வரலாற்றுக் கூறுகளும் விளங்குகின்றன. அக்காலக் கவிதைப் போக்கும் அறியமுடிகிறது.

### 3.9.1. அந்தாதி

அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது. முன் பாடலின் ஈற்றில் உள்ள அடியோ சீரோ அசையோ எழுத்தோ அடுத்த செய்யுளின் முதலாக அமைத்துப் பாடுவது. இறுதிப்பாடலின் முடிவும் முதற் பாட்டின் தொடக்கமும் மண்டலித்துவர மாலை போலத் தொடுத்து முடிப்பது அந்தாதியாம். இது தொல்காப்பியனார் கூறும் 'இயைபு' வகையில் அடங்கும் 'அந்தம் முதலாத்தொடுப்பதந்தாதி' எனக் காரிகை இலக்கணம் கூறுகிறது. ஒரு செய்யுளினுள்ளேயே ஓரடியின் இறுதி இன்னோரடியின் முதலாக அமைவது உண்டு. அந்தாதி தொடை எனப்பெறும் புறம் அகம் சிறுபாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, கடவுள், அகப்பொருள், புறப்பொருள் பற்றியனவாக இவ்வந்தாதிகள் இருக்கின்றன. அந்தாதி பாடும் திறன் அனைவருக்கும் ஆவதன்று, ஒரு சிலரே அத்திறத்தில் ஏற்ற முற்றுள்ளனர். அவ்வகையில் ஒட்டக்கூத்தன் 'அந்தாதிப் புலவனாக அமைகின்றான்.

திருவந்தாதி (திருமழிசையாழ்வார்), திருவருணை அந்தாதி (எல்லப்ப நாவலர்), திருவரங்கத்தந்தாதி (பிள்ளைப் பெருமாளய்யங்கார்), அற்புதத் திருவந்தாதி (காரைக்காலம்மையார்), பொன்வண்ணத்தந்தாதி (சேரமான் பெருமாள்) திருத்தொண்டர் திருவந்தாதி (நம்பியாண்டார் நம்பி), சடகோபரந்தாதி (கம்பர்), கயிலை பாதிகாளத்திபாதியந்தாதி (நக்கீரர்) போன்றன. அந்தாதிகளில் குறிப்பிடத்தக்கவை. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மட்டும் 8 அந்தாதி பாடியுள்ளார். இராகைக் கவிஞரின் திருக்குறள் அந்தாதி அண்மையது.

ஒலியந்தாதி கலையந்தாதி யமக அந்தாதி, நீரோட்டக அந்தாதி எனப் பல கூறப்படும். மடக்கு, திரிபு, சொற்றிறம், பொருள்வளம் அமைந்து அந்தாதி இலக்கியம் அந்தமில் பேரின்பம் பயக்கிறது. தொடுத்த சொல்லையே பிடித்துத் தொடுத்து பயக்கிறது.

> முப்பதுட னெடுத்து மூங்கில் இலைமேலே
>
> மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே
>
> தூங்கும் பனிநீரே வாங்கும் கதிரோனே
>
> வாங்கும் கதிரோனை'

எனும் ஏற்றப் பாட்டு தனியந்தாதிக்கு ஏற்ற சான்றெனலாம்.

### 3.9.2. உலா

பெருங்காப்பியங்களில் பாட்டுடைத் தலைவர் பவனிவருதல் சுருக்கமாகக் குறிக்கப் பெறும்! அதனை மட்டுமே உயிர்நாடியாகக் கொண்டு தெய்வமே உலா வருவதும், அவ்வுலாக் கண்டு உவகைக் கொண்டு பல்திறப் பெண்டிர் காமுற்றதாகக் கலிவெண்பாவால் பாடுவதும், உலாவாகும். பவனிச்செய்திபாடி வருதலான், 'பவனி உலா' என்றும் புறத்தே உலா வருதலின் 'புற உலா' என்றும் ஓதுவர். 'ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப' என்ற தொல்காப்பிய சூத்திரமே இதற்கு அடிப்படை. இவ்வடிப்படை காப்பியங்களில் ஒரு கூறாகி பிற்றை நாளில் தனி இலக்கியமாகவே உருவெடுத்தது. பாட்டுடைத் தலைவன் பவனியே பெரிதும் சிறப்பிக்கப்படுவதால் 'உலா', 'உலா மாலை' என்றும் பெயர் பெற்றது. இதில், உலாத் தலைவனது குலம், குடிப்பிறப்பு, மரபு, அழகு, அறிவு, ஆண்மை, அன்பு ஆகியன கூறப்பெறும். தலைவன் இயற்பெயர் தரப்பெறும் பருவப் பெண்களின் பெயர் தரப்பெறும். மகளிர் காதலுறும் செய்தி

கூறப்பெறுமே தவிர, தலைவன் அவர்களிடம் காதலுறுவதாகக் கூறுவது மரபிள்ளை, இதனால் உலாவினைப் 'பெண்பாற் கைக்கிளை' என்பர்.

'ஆதிஉலா' 'தெய்வீக உலா' எனச் சிறப்பிக்கப் பெறும் சேரமான் பெருமான் நாயனார் செய்த 'திருக்கைலாய ஞானஉலா முதல் உலாவாகும். (கி.பி.9ஆம் நூற்றாண்டு முற்பகுதி) உலாப்பாடுவதில் வல்லவர் ஒட்டக்கூத்தர் இவரது 'மூவருலா' ஏற்றம் சான்றது, விக்கிரமன், குலோத்துங்கன், இராசராசன் ஆகிய மூன்று சோழர்கள் மேல் அமைவது. நம்பியாண்டார் நம்பிகளின் 'ஆளுடைப் பிள்ளையார் திருவுலா மாலை', இரட்டைப் புலவர்களின் 'ஏகம்பநாதருலா', அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் 'திருவாரூர் உலா' 'திருக்கழுக்குன்றத்துலா' திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றால நாதருலா' தத்துவராயரின் 'சொக்கநாதருலா' 'திருப்பூவண நாதருலா' 'திருக்காளத்தி நாதருலா' 'தமிழின் உலா' 'காமராசர் உலா' போன்றன உலாக்களில் சில.

'கவரு மணங்களுடன்……' எனும் மூவருலாப் பகுதி ஏழுபருவ பெண்டிர்கள் காமுற்று நின்ற கனிவினை எடுத்தோதுகின்றது. பேதைப் பருவத்தாள் கண்களை, இந்தப் புலவர்கள் எடுத்தோதும் அழகும், திறமும்தாம் என்னே! 'அட்டதிக்கார்…….' என்ற பகுதியில் பேதைப் பருவப் பெண்ணை போதை மிக ஓதும் திறத்தை திருப்பூவணநாதர் உலாவில் காணாமல் மங்கை ஒருத்தி பந்தாடும் பாங்கினை திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றால நாதருலாவில் திறம்படச் சித்திரித்துள்ளார்.

### 3.9.3. கலம்பகம்

பலவகை மலர்களால் தொடுக்கப்பெறும் பூமாலை போன்று பல்வகைப் பாக்களால் தொடுக்கப்பெறும் பூமாலையாகும். புயம், தவம், வண்டு, அம்மானை, ஊர், ஊசல், பாண், மதங்கு, மடக்கு, கைக்கிளை, சித்து, களி, மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார்தூது எனும் பதினெட்டும் கலம்பகத்தின் தலையாய உறுப்புக்கள். ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மடக்கு, மருட்பா ஆகிய பாக்களும் தாழிசை, துறை, விருத்தம் போன்ற பாவினங்களும் இயைந்துவர இயற்றப்படுவது. இக்கலம்பக இலக்கியம், இங்ஙனம் உறுப்பும் பாவும் மிடைந்து, மண்டலித்து அந்தாதித் தொடை அமையப் பாடுவது கலம்பகம்.

இச்சிற்றிலக்கிய வகை கி.பி.9 ஆம் நூற்றாண்டிலிருந்து எழுதப்பட்டது. இப்போதுள்ள கலம்பகங்களுள் பல தெய்வம் பற்றியன, சில அடியார்கள் மீது பாடப்பட்டவை. அரசன் மேல் அமைவன ஒரு சிலவே. ஆயினும் காலத்தால்-சிறப்பால் முதன்மை பெற்றொளிர்வது நந்திக் கலம்பகமே!, இதனையொட்டி தில்லை கலம்பகம் திருவாமாத்தூர்க் கலம்பகம் மதுரைக் கலம்பகம் பிள்ளைப் பெருமாளய்யங்காரின் திருவரங்கக் கலம்பகம், திருவாணைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், திருக்காவலூர் கலம்பகம் போன்ற கலம்பகங்கள் தோன்றலாயின.

நந்திக் கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனை நிலைக்களனாகக் கொண்டு எழுந்த நூல், அதன்மேல் அறம் வைத்துப் பாடப் பெற்ற இதனை எரியும் பந்தர் மேலிருந்து கேட்டு இன்னுயிர் துறந்ததாகக் கூறப்படுகிறது. 'கலம்பகம் கொண்டு காயம் விட்ட தெள்ளாற்றை நந்திக் கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும் என்ற செய்யுளடிகள் சான்றாகும். 'அம்புலியூர் என்னும் ….' (தில்லை கலம்பகம்) இருங்குங்குமத் தோள்…….' (திருவரங்கக் கலம்பகம்) ஒன்றேயுடம்பங்கிரண்டே……' 'மாற்றொன்றிலையென்…..' (மதுரைக் கலம்பகம்) பேசவந்த தூத….' 'வாசலுக்கிடும் படல….' (திருவரங்கக் கலம்பகம்(113) 'ஈட்டு

புகழ் நந்தி பாண….' 'செந்தழலின் சாற்றை….' 'மண்ணெனலாம்….' (நந்திக் கலம்பகம்) போன்றன சுவையுடையன..

### 3.9 4. கோவை

உரு, திரு, பருவம், குலம், குணம் ஆகியன தாமே எதிர்ப்பட்டு களவு நிகழ்த்திப் பின் கற்பு நிலையில் இல்லறம் நிகழ்த்தும் இனிய நிகழ்ச்சிகளைக் கூறவது கோவையாகும். அகப்பொருட் செய்திகளை அடிப்படையாகக் கொண்டமையால் (அறநெறிக்கோவையினின்று வேறுபடுத்தவும்) அகப்பொருட் கோவை என்றும் ஐந்திணை நிகழ்ச்சிகளை நிரல் படுத்தலின் ஐந்திணைக் கோவை எனவும் அழைப்பர். அகத்துறைக் கூறுகளைக் கோவைப்படுத்திக் கூறுவதால் இப்பெயர் ஏற்றது. இக்கோவை கட்டளைக் கலித்துறையில் 400 பாடல்களில் பாடுவதாம். ஆய்ந்த கலித்துறையான் நானூறு (வச்சணந்தி மாலை) கோவையின் கைக்கிளை, களவு, வரைவு, கற்பு எனும் 4 பெரும் பிரிவுகளும், கைக்கிளை முதலிய 33 கிளவிகளும் ஒவ்வொரு கிளவியில் பல துறைகளும் அமையும். இவ்விலக்கியம் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என இரு தலைவர்களைக் கொண்டது. கடவுள், அரசர், வள்ளல் ஆகியோர் பாட்டுடைத் தலைவர்களாவார். இறைவனைத் திருக்கோவையாரும் வள்ளலைத் தஞ்சை வாணன் கோவையும் தலைவர்களாகக் கொண்டவை, பாட்டுடைத் தலைவனைப் பெறாத ஓரே ஒரு கோவை அம்பிகாபதிக் கோவையாகும். வெறும்காதற் துறைகள் மட்டும் விளக்கிச் செல்கிறது. இது 562 பாக்கள் கொண்டது.

பொய்யா மொழிப் புலவரின் தஞ்சைவாணன் கோவை, திருநெல்வேலி நாட்டுத் தஞ்சாக்கூர் வாணனைப் பற்றியது, நாற்கவிராச நமபியின் அகப்பொருளுக்கு இலக்கியமாக அமைவது பாண்டிக் கோவை திருவெங்கைக் கோவை, கோடீச்சுரக் கோவை, திருவாரூர்க் கோவை போன்றனவும் உள. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை சீகாழிக் கோவை, திரவாவடுதுறைக் கோவை, குளத்தூர்க் கோவை போன்றன இயற்றியுள்ளார் கோவை பாடுவதில் திறம் படைத்தவர் ஒட்டக்கூத்தர். குலோத்துங்கன் கோவை, நாலாயிரக் கோவை இவர் பாடியன. ஆயினும், காலத்தால் முந்தியது கவித்துவத்தால் முதன்மையானது. மாணிக்க வாசகரின் திருக்கோவையார் திருச்சிற்றம்பலக்கோவையார் எனவும் வழங்கும்.

'புரங்கடந் தானடி….' 'சிறைவான் புனறில்லை…..' 'யாழுமெழுதி….' 'தெள்ளம் புனற் கங்கை..' 'திருவளர்தாமரை…' (திருக்கோவையார்) 'புயலே சுமந்து பிறையே அணிந்து…' 'அளகம் திருத்தி மதிநுதல் நீவி…' (தஞ்சை வாணன்கோவை) போன்றன சிறந்த பாடல்கள்.

### 3.9 5. குறவஞ்சி

குறவஞ்சி, குறிஞ்சிநிலக் கலை ஓவியமாக அமைகிறது. குறவன்-குறத்தியர் கூத்து, புலவர் கைவண்ணத்தால் குறவஞ்சி நாடகம் குறவஞ்சி நாட்டியம் என்றும் வழங்கப் பெறும். குறத்தியின் செய்தியே மிகுதியும் கொண்டிருப்பதால் குறவஞ்சி எனும் பெயர் பெற்றது. முக்காலத்தும் நிகழ்ந்த நிகழ்வனவற்றைக் குறத்தி குறியாக உரைப்பதே குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டுபோல இதுவும் பத்து பாடல் கொண்டது.

தலைவன் உலா வந்த காலை, தலைவி கண்டு காமுற்று விரக வேதனையால் திங்களையும் தென்றலையும் பழித்துத் தலைவன்பால் பாங்கியைத் தூதனுப்ப, அப்போது மலைவளம் பாடிவரும் குறத்தியின் திறம் தெளிந்து குறி கேட்க, அவளும் குறி தேர்ந்து நல்வரவு கூறிப் பரிசில் பெற்றுச்செல்கின்றாளாக. அப்போது அவளைத் தேடிவரும் குறவன் புதிய ஆடை

அணிகளோடு வரும் குறத்தியைக் கண்டு ஐயுற்று வினாவ அலட்சியமாக அவள் பதில் பகரப் பின் இருவரும் இதயம் ஒன்றி இறைவனை வழுதிச் செல்வர் இதுவே, குறவஞ்சியின் அமைப்பு, இந்நிகழ்ச்சிகளை விருத்தம், அகவல், வெண்பா கொச்சகம், கலித்துறை, கழிநெடில் ஆகியன கொண்டு வசனம் விரவ இடையிடையே சிந்து, கண்ணி முதலியவற்றால் நாடகத் தமிழால் கீர்த்தனை வடிவில் பாடப் பெறுவது.

குமரேசன் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி, நகுமலைக் குறவஞ்சி போன்று பல உள்ளன. ஆயினும் குறவஞ்சி இலக்கியத்தில் காலத்தால் முற்பட்டது, தலை சிறந்தது திருக்குற்றாலக் குறவஞ்சியே, திரிகூடராசப்பக் கவிராயர் தீட்டியது, எளிமை, இனிமை, எதுகை மோனை, கற்பனை அழகு, கவிதைச்சுவை, சந்தநலம் செந்தமிழ்வளம் ஆகிய அனைத்தும் அமைந்த அமுதக் கலசம், இதனைப் பின்பற்றி அமைந்தனவே ஏனைய குறவஞ்சிகள்.

தெய்வத்தைத் தலைமை கொண்டு நாளடைவில் மானுடரைப்பற்றிப் பாடும் நிலைக்கு மாறியது விராலி மலைக் குறவஞ்சி, அதற்கு எடுத்துக்காட்டு அரசர் மேல் அமைந்தது, சரபேந்திரபூபாலக் குறவஞ்சி கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் சரபோஜிமேல் பாடியது. தமிழன்னையையே தலைவியாகக்கொண்டது. புலவரேறு வரத நஞ்சயப்ப பிள்ளை படைத்தத் தமிழரசி குறவஞ்சி, கிருத்துவ இஸ்லாமிய பெருமக்களும் சில பாடியுள்ளனர். சங்கை வேதநாயக சாஸ்திரியாரின் பெத்லகேம் குறவஞ்சி குறிப்பிடத் தக்கது பாம்பண்ணகவுண்டன் குறவஞ்சி, திருச்செங்கோட்டுக் குறவஞ்சிகளும் உள.

'அள்ளி அள்ளித் தருமமெல்லாம்…' (பெத்லகேம்) 'இருண்டமேகம் சுற்றி….' 'செங்கையில் வண்டு…' 'சூழமேதி இறங்கும்…' 'வானரங்கன் கனிகொடுத்து…' 'முருகு சந்தனக் குழம்பு….' (சரபேந்திர பூபாலக் குறவஞ்சி) போன்ற வளமான பகுதிகள் குறவஞ்சி இலக்கியங்களில் காணப்படுகின்றன.

### 3.9 6. சதகம்

நூறு பாக்களைக் கொண்டது. கி.பி.17-18 ஆம் நூற்றாண்டுகளில் பல்கிப் பெருகின, திண்ணைப் பள்ளிகளில் கட்டாயமாகக் கற்கப்பட்டது. முதன் முதல் திருவாசகத்தில்தான் திருச்சதகம் எனச் சொல்லாட்சி பெறுகிறது. தெய்வம் வள்ளல் சான்றோர், தலைவர் பெயரில் அமைகின்றன. பயனுடைய இலக்கியங்கள் இவை, சோழ மண்டல (அத்மநாத தேசிகர்), பாண்டி மண்டல (ஐயம் பெருமாள்), கொங்கு மண்டல (கார்மேகக் கவிஞர்), தொண்டை மண்டல (படிக்காசுப் புலவர்), ஈழமண்டல, நந்தி மண்டல சதகங்கள் நாட்டு நிகழ்ச்சிகளை நவில்வன. அறப்பளீசுர (அம்பல வாணகவிராயர்), குமரேச (குருபாத தாசர்), கைலாச நாதர் (சிதம்பரபிள்ளை), அண்ணாமலை (திருச்சிற்றம்பல நாவலர்), அருணாசல (காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் திருவேங்கட (நாராயண பாரதியார்), அவயாம்பிகை (நல்லத்துக்குடி கிருஷ்ணையர்), வட வேங்கட நாராயண (திவ்யகவி நாராயணதாசர்), எம்பிரான் (சிறிபெரும்புதூர் கோபால கிருஷ்ணதாசர்), கோவிந்த (நாராயண பாரதியார்), ஜெயங்கொண்டார் (முத்தப்ப செட்டியார்), தண்டலையார் (சாந்தலிங்கக் கவிராயர்), திருத் தொண்டர் மனுநீதி (வேதகிரி முதலியார்), கோகுல (அமிர்த கவிராயர்), அண்ணாமலை (திருச்சிற்றம்பல நாவலர்), கார்மண்டல (ஆறைக்கிழார்), மெய்கண்ட வேலாயுத (அழகுமுத்துப் புலவர்), மகாத்மா காந்தி (முத்து சுந்தர முதலியார்), சதகம் எனப் பல்வகைச் சதகங்கள் பிறந்துள்ளன அகத்தீசர் அரபிச் சதகங்கள் இசுலாமியச் சதகங்கள், ஏசுநாதர் திருச்சதகம் (யாழ்ப்பாண சதாசிவப்பிள்ளை) கிருத்துவச் சதகம். முதலிய சதக இலக்கியங்களும் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

### 3.9 7. தூது

தலைவன் தலைவியர்கள் விரகத்தால் வேதனையுற்றபோது ஞான்று ஒருவர் மற்றொருவருக்குத் தன் துன்பத்தைத் தெரிவிக்குமாறு உயர்திணைப் பொருள்களையேனும், அஃறிணைப்பொருள்களையேனும், தூது விடுப்பதாகப் பாடுவதாகும். தூது என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது நாராய்! நாராய்! செங்கால் நாராய்...' என்ற சத்திமுற்றப் புலவர் பாடலே! பழம் நூல்களில் பரவிகிடக்கின்றது.

தூது விடுவதைப் பொருளாகக் கொண்ட செய்யுட்கள் பல. சங்க இலக்கியத்தில் 'காமம் மிக்கக் கழிபடர் கிளவி' என்ற துறையில் வருகின்றன. ருக்கு வேதத்தில் சரமா எனும் நாய் தூது விடப்படுகிறது. குணமாலை சீவகனிடத்தில் கிளியையும் (சிந்தாமனி) உதயணன் வாசவதத்தையிடம் மானையும் (பெருங்கதை) நளன் அன்னத்தையும் (நளவெண்பா), அங்கதன் அனுமன் தூதுக்கள் (இராமாயணம்) கண்ணன் தூது (பாரதம்), ஆகியன பெருங்காப்பியத்தில் பயின்று வருவதைப் பார்க்கலாம். தேவார திவ்வியப் பிரபந்தங்களிலும் தூதுகள் சில தோன்றக் காணலாம். குறளில் தூது இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் தூது முறை பண்டுதொட்டு அமைய தலைவன் தலைவியரிடையே அமையும் தூதினையே தலையாய பொருளாகக் கொண்டு விரித்துக் கூறுவது தூதுப் பிரபந்தமாகும்.

தூது விடப்படும் பொருள்களின் பெயர்களை ஒட்டியே இவ்விலக்கியம் பெயர் பெறும். இயம்புகின்ற காலத்து எகின மயில், கிள்ளை பயம்பெறு, மேகம் பூவை, பாங்கி-நயந்துமே, குயில் பேதை, நெஞ்சத்தென்றல், பிரமரம் ஈரைந்துமே தூதுரைத்து வாங்குத்தொடை எனத் தூது செல்லற்குரியவை. இப்பத்தும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் 'தசவிடு தூதில்' அமைந்துள்ளன. விதிவிலக்கான ஒன்று. துகில் விடுதூது தலைவன் தலைவிக்கு விடுத்தத் தூது.

விதிக்கடங்கிய இப்பத்துமேயன்றி அவ்வக்காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வேறு பொருள்களைத் தூதுவிட்டதாக அமையும் நூல்கள் பல. பணம் துகில், சவ்வாது, நெல், விறலி, தமிழ் வசனம், புகையிலை, பழையது, பொன், கழுதை, காக்கை, ரயில், ராக்கெட் ஆகியன தூதாக விடுக்கப்பட்டுள்ளன. இராசகோபாலாசாரியாருக்கு இந்தித்திணிப்பை எதிர்த்து வெள்ளைவாரனார் விடுத்த தூது காக்கை விடு தூதாகும். பிரபந்தங்களின் தூது மிகவும் பிற்காலத்தது. இன்றுவரை வளர்ந்த சிறப்பினது. தூதுக்களில் தலைசிறந்தது தமிழ்விடு தூதாகும். இருந்தமிழே உன்னால் இருந்தேன் இழையோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன். தூதிலக்கியம் இந்தியமொழி யனைத்திலும் உள்ளது. வடமொழியில் தூது காவியம், அல்லது சந்தேசம் என்பர். காளிதாசரின் மேக சந்தேசம் சிறந்தது.

> பஞ்சிபடா நூலே பலர் நெருடாப் பாவே, கிண்
>
> டெஞ்சியழுக் கேறா வியற்கலையே,- விஞ்சுநிறம்
>
> தோயாத செந்தமிழே, சொல்லே ருழவரகம்
>
> தீயாது சொல்விளையுஞ் செய்யுளே". (தமிழ்விடு தூது)

தமிழே தூது போகத் தக்கது ஏனையவை ஏற்றவையல்ல எனக் காரணம் காட்டும் தமிழ்விடு தூது பகுதி தனிச்சுவையது.

### 3.9 8. பரணி

தரணியில் வீரம் நிகழ்த்தி வெற்றி பெரும் வீரனைப் பாடுவது பரணியாகும். (1) 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது

பரணி என்றபடி போரில் ஆயிரம் யானைகளைக்கொன்று வீரன்மேற் பாடுவது பரணி எனப்படுகிறது. (2) போர் நடைபெறுங்காலை பரண்மீதிருந்து பாடப் பெறுதலின் பரணியாயிற்று (3.) தலைவன் வெற்றி பெற அப்போரில் இறந்தாரின் உறுபுகளைக்கொண்டு கூழ் சமைத்துக் காளிக்குப் படைத்துப் பேய்கள் உண்டு வெற்றி பெற்றோனை வாழ்த்தும் இது பற்றியும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். (4) பரணி-யானை பிறந்த நாள் வெற்றிதரும் கொற்றவைக்கு ஏற்ற நாள் காளிக்கும் காலனுக்கும் உகந்த நாள் அந்நாளில் பிறந்தவன் பெருவீரனாகப் பிறக்குவான். (5) பரணி பிறந்தான் தரணி யாள்வான் என்பது கருத்து. பரணி வெற்றிக்குரிய நாள். அதுபற்றிய நூல் பரணியாகலாம்.

கடவுள் வாழ்த்து, கடைத் திறப்பு, காடு பாடியது, கோவில் பாடியது தேவியைப் பாடியது பேய்களைப் பாடியது இந்திரசாலம் இராச பாரம்பரியம் பேய்முறைப்பாடு அவதாரம் காளிக்குக்கூளி கூறியது. போர் பாடியது களம்பாடியது என 13 உறுப்புகளைச் கொண்டது. பரணி இரண்டடிக் கலித்தாழிசைகளால் பாடப்பெறுவது.

பரணிக்கோர் செயங் கொண்டார் என்பது கொண்டு இவர் திறமறியலாம் ஓசை நயமும், கற்பனை அழகும், சொல் வளமும், பொருள் நலமும், சந்த இனிமையும், ஒருங்கே அமைவது. கலிங்கத்துப் பரணி கடைத் திறப்பு காதற்சுவையும், களம் பாடியது வீரச் சுவையும், பேய்முறைபாடு இந்திரசாலப் பகுதிகள் நகைச்சுவையும், நிரம்பியவை கிடைக்கும் நூல்களில் காலத்தால் முந்தியது கலிங்கத்துப் பரணி, முதற்குலோத்துங்கனின் படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான், கலிங்கவேந்தன் அனந்தபதுமன் மேல் படையெடுத்துச் சென்று வென்று நிகழ்த்திய வீரத்தை விதந்தோதுவது செயங்கொண்டார் செய்தது முதலது முதன்மையது.

'வருவர் கொழுநர்', 'செக்கச்சிவந்த….', 'எடுமெடு மெடுமென...' 'விளைகனல் விழிகளின்…', 'தரைமகளும்….' 'பூவிரிமதுரை…' 'கலக்கமற்ற வீரர்….' 9 (கலிங்கத்துப் பரணி) 'அலைகொன்று வருகங்கை…..' (தக்கயாகப் பரணி) பொன்றன நயம் மிக்கவை.

**3.9.9. பள்ளு**

பண்டைக் காலந்தொட்டு உழுதொழிலில் ஈடுபட்ட பள்ளர் - பள்ளியர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கூத்து வகையில் பண்ணார்ந்த பாடல்களாகப் பாமர மக்களால் பாடி ஆடப் பெற்றன. ஆடும்பள்ளி என்ற பெயரில் உழுதொழில் ஒண்மையறிந்த உழத்தி, தன் அரசனை வாழ்த்துவதாக அமைவது, 'உழத்திப் பாட்டு', பத்து செய்யுட்களைக் கொண்டது (பன்னிரு பாட்டியல்-216) இவற்றையெல்லாம் கேட்டு இன்புற்ற புலவர் பெருமக்கள் இவற்றிற்கு இலக்கிய மெருகு தந்தபோது பள்ளுப் பிரபந்தமாக மலர்ந்தன. பள்ளன் - பள்ளியரைப் பற்றியதாதலின் இப்பெயர் பெற்றது. காப்பியர் கூறும் வனப்பு எட்டனுள் 'புலன்' வகையில் அடங்கும். இதன் இலக்கணம் குறித்துத் தொலகாப்பியச், செய்யுளியல் சூத்-223 கூறுகிறது. ஏழை எளியவர்கள் பயிலும் மிக எளிய வழக்குச் சொற்களால் சேரி வழக்குகள் அமையப் பாடப் பெறுவது என்பதறிகிறோம். இது நாடக வகை இலக்கியம் இசையோடு இயன்று வருவது, எனவே, இசை நாடக முத்தமிழ்ப் பனுவல் எனலாம்.

சிந்தும் விருத்தமும் விரவிவரப் பாடப்பெறுவது. காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து முதல் இளைய பள்ளியார் ஏசல் சமாதானமாகி வாழ்த்துதல் வரை பல உறுப்புகளைக் கொண்டது.

பள்ளன் ஒருவன் இரண்டு ஊர்களைச் சார்ந்தவாறு பட்ட சமயத்தைச் சேர்ந்த பள்ளியர் இருவரை மணக்கின்றான். இளையாளிடம் இவன் மோகங்

கொண்டிருப்பதைக் கண்டு வெகுண்ட மூத்தாள் பண்ணை ஆண்டையிடம் இல்லாததும் பொல்லாததும் கூறிப் பள்ளனைக் குட்டையில் அடைக்கிறாள். பின்னர் இரக்கங்கொண்டு விடுவிக்கின்றாள், பாயும் மாட்டைப் பிடித்து பள்ளன் படுகாயமடைகின்றான். இதனையொட்டி இரு பள்ளியரும் தத்தம் குலம், நாடு, நகர், சமயம் பற்றி ஏசிப் பூசலிடுகின்றனர் சண்டைக்குப் பின் சமாதானந்தானே! இருவரும் இணக்கமாகின்றனர், இது பள்ளியின் பாங்கும் போக்கும்.

இப்பள்ளு இலக்கியம் வாயிலாக வரலாற்றுச் செய்திகள், பள்ளர் பெருமை, மழைக்குறி, ஆற்று வெள்ளம், பள்ளன் பள்ளத்தியர் பேச்சு, நெல்வகை, மாட்டு வகை, ஏர்க்கால் வகை உழுது விதைத்து நாற்றுநட்டு, அறுவடை செய்யும் பயிர்த்தொழில் நுட்பங்களும், உழவரது வாழ்வியலும் அறியலாம் 'நெல்லு வகையை எண்ணினாலும் எண்ணலாம், பள்ளு வகையை எண்ண முடியாது' என்ற முதுமொழிப்படி, எண்ணரிய பள்ளுப்பாட்டுக்கள் (45) உள்ளன. திருவாரூர்ப் பள்ளு, திருமலைப்பள்ளு, சிவசயிலைப்பள்ளு, சீகாழிப்பள்ளு, வடகரைப்பள்ளு, வைசியப்பள்ளு, கதிரை மலைப்பள்ளு, கண்ணுழாயம்மைப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, திருவிடை மருதூர்ப்பள்ளு, திருநீலகண்டன் பள்ளு, ஞானப்பள்ளு போன்றன சான்றாகும்.

பள்ளில் பெருமை வாய்ந்தது முக்கூடற் பள்ளாகும். கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் சித்ரா நதியும் கோதண்டராம நதியும் பொருநை நதியோடு கூடுமிடத்தில் முக்கூடல் உள்ளது இவ்வூரில், எழுந்தருளியுள்ள அழகர் மீது பாடப்பட்டதே 'முக்கூடற் பள்ளு'. பள்ளன், அழகர் குடும்பன், மூத்தவன் முக்கூடற்பள்ளி, இளையவள் மருதூர்ப் பள்ளி இம்மூவர்க்கும் இடையே நடைபெறும் பிணக்கும் இணக்கும் பற்றிய நகைச்சுவைச் சித்திரமே முக்கூடற்பள்ளு.

'ஏர்மங்கலம்', 'முகவைப் பாட்டு' சிலப்பதிகாரம் செப்புவதாலும் உழவினை உவந்து ஏத்தும் வழக்கு பண்டே உண்டு என்பது உணரலாம். கி.பி.17 ஆம் நூற்றாண்டுத் தொடங்கி வளர்ந்தது இப்பிரபந்தம்.

'ஏச்சுக்குப் பிறந்தான்…', 'மாறு கண்ணும்….', 'நெற்றியில் இடும்…', 'கறைபட்டுள்ளது…', 'காயம் கண்டது நாளை வர…', போன்ற பாக்கள் நினைவு கூரத்தக்கவை.

### 3.9 10. பிள்ளைத் தமிழ்

'பிள்ளைக் கவி', 'பிள்ளைப் பாட்டு' எனவும் அழைக்கப்படும். பாட்டுடைத்தலைவரையோ தலைவியையோ குழந்தையாகப் பாவித்து, நற்றாயோ செவிலித்தாயோ காப்பு முதலிய பத்து பருவங்கட்குரிய செயல்களைச் சிறப்பித்துக் கூறுவதாகப் புலவர் பெருமக்களால் பாடப்பெறுவது. கடவுள் ஆசிரியர், வள்ளல், தொண்டர், தலைவர், புலவர்களையோ வைத்துப் பாடுதல் வழக்கு. விநாயகர், முருகன், திருமால், உமாதேவிமேல் பிள்ளைக்கவி பல உள்ளன அனுமார் மீதும் பிள்ளைத் தமிழ் உண்டு. ஆசிரியரைப் பற்றியது அம்பலவாணர் பிள்ளைத் தமிழ், சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழ், வள்ளல் பற்றியது, புலவர் பற்றியது, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் இராஜாஜி பிள்ளைத் தமிழ் தலைவர் பற்றியது.

இச்சிற்றிலக்கியம் பற்றி 'குழவி மருங்கினும் கிளவதாகும்' எனத் தொல்காப்பியம் புறத்திணையில் பேசுகிறது. பாடற் தலைவனது 3-ஆம் மாதம் தொடங்கி 21-ஆம் மாதம் வரையிலுள்ள பத்து மாதங்களைப் 10 பருவங்களாகக் கொண்டு ஒவ்வொரு பருவத்துக்கும் பத்து விருத்தங்கள் வீதம் பாடுவது முறை. இந்நூல் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை,

அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இரண்டுக்கும் உரியன. இவற்றோடு சிற்றில், சிறுபறை, சிறுதேர் சேர ஆண்பாற் பிள்ளைத் தமிழாகும். கழங்கு, அம்மானை, ஊசல் இணைய பெண்பாற் பிள்ளைத்தமிழாகும். சிலர் ஆண்பாற்பிள்ளைத் தமிழ் கி.பி.16 ஆம் ஆண்டு வரையும், பெண்பாற்பிள்ளைத் தமிழென்றால் பூப்பு நிகழும் வரையிலும் பாடவேண்டுமென்பர். அரசன் முடிகவித்த பின் இச் சிற்றிலக்கியம் பாடப்பெறாது. பிள்ளைத் தமிழில் கிடைக்கும் முதல் நூல் 'குலோத்துங்கச் சோழன் பிள்ளைத் தமிழே' இந்நூல் ஒட்டக்கூத்தர் பாடியது.

பிள்ளைத் தமிழில் சிறந்தவை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், குமர குருபர அடிகள் அருளியவை 'தொடுக்குங் கடவுட் பழம்பாடல்' தமிழன் ஒவ்வொருவனுக்கும் தெரிந்திருக்கவேண்டிய பாடல். இப்பாடல் கேட்டு மீனாட்சியம்மையே குழந்தை வடிவில் வந்து திருமலை நாயக்கர் கழுத்திலிருந்த முத்துமாலையை எடுத்துக் குமர குருபரர் கழுத்தில் அணிந்து மறைந்தார் என்றால் இத்திருப்பாட்டின் திறந்தான் என்னே!.

சிவஞான சுவாமிகளின் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழ், இன்னும் கம்பன் பிள்ளைத்தமிழ், தமிழன்னைப்பிள்ளைத்தமிழ், காந்தி அண்ணல் பிள்ளைத்தமிழ், இஸ்லாமியப் புலவர்களின் நபிநாயகப் பிள்ளைத்தமிழ், ஆண்டவர் பிள்ளைத் தமிழ் என எத்தனையோ பிள்ளைப் பிரபந்தங்கள் உள்ளன. காமராசர் பிள்ளைத்தமிழ் ம.பொ.சி.பிள்ளைத்தமிழ், அண்ணா பிள்ளைத்தமிழ், பெரியார் பிள்ளைத்தமிழ், எம்.ஜி.ஆர்.பிள்ளைத்தமிழ் அண்மைக் காலத்தவை. இந்த நூற்றாண்டில் 'குழந்தை இலக்கியம்' எனப் பேசப்படுகிறது, பல நூற்றாண்டுகட்கு முன்பே 'பிள்ளை இலக்கியத்தை' வளர்த்துள்ளனர் பைந்தமிழர்!

'தென்னந் தமிழனுடன்-' (மீனாட்சியம்மை) 'முடிவுமுதிர் கனிவாய்…' 'உலகு குளிர…' (முத்துக் குமாரசாமி) 'விள்ளு மலரா…' (சேக்கிழார்) போன்றன அரிந்திருக்க வேண்டிய திருப்பாடல்கள்.

**3.9.11. மடல்**

பெண் ஒருத்தியைக் கண்டு காமுற்ற ஒருவன் குறை இருந்தும் அவளை அடைய முடியாத நிலையில் காதல் கைகூடாத பொழுது, பனை மடல் கருக்குகளால் குதிரை செய்து அதன் மீதமர்ந்து, அப்பெண்ணின் உருவினைப் படமாக எழுதிக் கையில் ஏந்திக் கொண்டு, உடல் முழுதும் நீறுபூசி, எருக்கம்பூ எலும்பு மாலைகளை அணிந்து, நாணம் துறந்து வீதியில் வருவது மடல் ஏறுதல் ஆகும்.

இதன் தோற்றம் பற்றித் தொல்காப்பியம், அகத்திணை 35, 51 களவியலில் 10 நூற்பாக்கள் நுவலுகின்றன. கைக்கிளைக்கு உரியது மடற் கூற்று அ∴து ஆண், பெண் இருபாலார்க்கும் உண்டு என்கிறார். ஆனால், மடலேறுதல் பெருந்திணைக்கு உரியது, அது, பெண்ணிற்கு இல்லை என்கிறார். இதனைப் பின்வந்த புறப் பொருள் வெண்பா மாலையும் (பெருந்திணைப் படலம் 17), நம்பியகப் பொருளும் (களவியல் 28, ஒழிபியல் 35) வலியுறுத்துகின்றன. சித்திரமடல் காளமேகப் புலவரால் இயற்றப்பட்டது. 348 அடிகள் கொண்டது 'பாவை தெய்வங்கள் பெருமாள் சித்திர மடல்' எனும் பெயரினது நல்ல பிள்ளை சித்திர மடல்.

வாழ்விழந்தன, சில மடல்கள் எட்டப்ப நாயக்கர் மடல், கன்வாடி நரசிங்கப்ப நாயக்கன் மடல் (சொக்க நாத பிள்ளை), கலி மடல் (தத்துவராயர்) முதலியன.

### 3.9.12. மாலை

ஒரு பொருள் குறித்துப் பல கருத்து பேசும் பல செய்யுட்களால் அமைவது. ஒரு பொருளின் பல்வேறு கூறுகளைக் குறித்து ஓரே வகைப் பாவால் பாடல் பெறுவது பல்வேறு பாக்களால் பாவினங்களால் பாடுவது. இவ்வகைச் சிறு நூல்கள் சொல் அழகும் பொருள் அழகும் கொண்டவை. இது பல்வகைப்படும்.

1. அங்கமாலை, வெளிவிருத்தம் எனும் செய்யுள் வகையால் தேவர்களைப் பாதாதி கேசமாகவோ, மக்களைக் கேசாதி பாதமாகவோ பாடுவது. திருநாவுக்கரசரின் திரு அங்கமாலை நம் முடி முதல் அங்கம் வரை அத்தனை அங்கங்களும் சிவபெருமானை வணங்கி வழிபடவேணும் எனும் போக்கில் அமைவது.
2. அனுராக மாலை தன் கனவில் ஒருத்தியினைக் கண்டு மகிழ்ந்ததை ஒருவன் தன் தோழனுக்கு உரைப்பதாக அமைவது (இலக்கண விளக்கம்)
3. இரட்டை மணி மாலை, வெண்பா, கட்டளைக் கலித்துறை மாறி மாறி வர 20 செய்யுட்களால் அந்தாதியாக அமைப்பது, வெண்பா, ஆசிரியவிருத்தம் பின்னி வர அமைவது உண்டு. இரு வேறு வகை மணிகள் அடுத்தடுத்து அமையத் தொடுப்பதுபோல் அழகாக அமையும். காரைக்காலம்மையாரின் திருவிரட்டை மணிமாலையே முதல் இரட்டை மணிமாலையாகும். கபில்தேவ நாயனாரின் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, நம்பியாண்டார் நம்பியின் திருநரையூர் விநாயகர் இரட்டை மணி மாலை, குமரகுருபரரின் மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை போன்றன குறிப்பிடத்தக்கன.
4. இணை மணிமாலை வெண்பா, கட்டளைக் கலித்துறை அல்லது வெண்பா, அகவல் அந்தாதித் தொடையாக அமைய 100 செய்யுட்களால் அமைவது.
5. காப்பு மாலை தெய்வம் காப்பதாக வேண்டி 3 அல்லது 7 செய்யுட்களால் பாடுவது.
6. பல்சந்த மாலை 10 முதல் 100 விகற்பித்த பாக்களால் அந்தாதியாகப் பாடுவது.
7. பன்மணிமாலை கலம்பக உறுப்புக்களாம் அம்மானை ஊசல் நீங்கலாகப் பிற 15 உறுப்புக்களில் அந்தாதியில் பாடுவது.
8. நவமணிமாலை ஆசிரிய விருத்தத்தில் ஆனது. ஒவ்வொரு செய்யுளும் தேவர்கள் காத்தவென 9 செய்யுளில் அமைவது (வெண்பாப் பாட்டியல்-24) ஒரே பாட்டு வகையான் அமையாது.
9. நான்மணிமாலை, வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் என்ற வரிசையில் அமைய அந்தாதியாக 40 செய்யுட்கள் கொண்டது.
10. மும்மணிமாலை, வெண்பா, கலித்துறை, ஆசிரிய விருத்தம் என அந்தாதியாக 30 பாக்களில் அமைவது.
11. வசந்த மாலை, தென்றலைச் சிறப்பித்துப் பாடுவது
12. வேனில் மாலை, வேனிலை விவரித்துப் பாடுவது.
13. வருக்க மாலை மொழிக்கு முதலாக வரும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பாட்டு அமைய உயிர் வருக்கம், உயிர் மெய் வருக்கம் என்ற இருவகையுள் அமைவது.

14. மெய்க்கீர்த்தி மாலை, 'சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற் மெய்க்கீர்த்தியை அழகுற மொழிதல்' என இலக்கண விளக்கம், இதன் இயல்பு இயம்புகிறது. இது வளர்ந்து தனிப் பிரபந்தமாகவும் சோழர் காலத்தில் விளங்கிற்று.
15. தாரகை மாலை வகுப்பு என்னும் யாப்பு வகையால் கற்புடைய மகளிரைப் புகழ்ந்து. தூசிப்படையைப் போற்றி 9 பாக்களில் பாடுவது.
16. கலம்பகமாலை, கலம்பக உறுப்புகளில் அம்மானை எனும் இரண்டில் ஒன்றோ இரண்டுமோ நீங்கப் பிற உறுப்புகள் அந்தாதித் தொடையாக அமைவது.

### 3.9.13. மெய்க்கீர்த்தி

மெய்க்கீர்த்தி : சீர் மெய்க்கீர்த்தி (பன்னிரு பாட்டியல்-108) மெய்க்கீர்த்தி மாலை (இலக்கண விளக்கம்-105) எனவும் பெறும், அரசர் புகழை அகவலில் பாடுவது, கோவிற் சுவர்களில் கல்வெட்டுக்களாகவும் செப்புப் பட்டயங்களில் சாசனங்களாகவும் வடிக்கப் பெறவது. 'ஆசிரியர் விரவிய சொற்சீரடிகளால் மன்னரது உண்மைக் கீர்த்தியைத் தொடுத்துப் பாடுவது' என வச்சணந்திமாலை வரையறுக்கிறது.

## வினாக்கள்

### பகுதி – அ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

1. திருவிளையாடல் புராணம் - குறிப்பு வரைக.
2. வில்லி பாரதம் - விளக்கம் தருக.
3. கருணைக்கோர் அருணகிரியின் பக்தி நெறியினை விளக்குக.
4. அதிவீரராமன் பாண்டியன் குறித்து எழுதுக.
5. தாயுமானவர் - குறிப்பு வரைக
6. 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்னும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும் சிற்றிலக்கியம் யாது? விளக்கம் தருக.
7. குழவி மருங்கினும் கிளவதாகும் எனத் தொல்காப்பியம் கூறும் சிற்றிலக்கிய வகைக் குறித்து எழுதுக.
8. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி – விளக்கம் தருக.

### பகுதி – ஆ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

9. சைவ சித்தாந்த சாத்திரங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
10. சித்தர்களின் சிந்தனைகள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
11. உரையாசிரியர்கள் குறித்து எரு கட்டுரை எழுதுக.
12. சிற்றிலக்கியத் தோற்றம் வளர்ச்சிக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
13. குறிஞ்சி, பள்ளு இலக்கிய வகைகளைக் கூறி விளக்கம் தருக.
14. 'மாலை' என்னும் சிற்றிலக்கியம் பாடப்படும் பொருள் குறித்து எழுதுக.

# NOTES

## அலகு – 4

### 4.1 இக்காலக் கவிதைகள்

தமிழக வரலாற்றில் முக்கியக் கால கட்டமாகத் தோன்றுவது 20 ஆம் நூற்றாண்டாகும். இந்நூற்றாண்டு தமிழிலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய காலமாகும். மரபு இலக்கியங்களோடு ஒரு புதுமையான கருதுகோள் காலூன்றத் தொடங்கிய இச்சூழல் கவிதை இலக்கியம் தோன்றுவதற்குத் திருப்பு முனையாக அமைந்தது எனலாம். தொன்றுதொட்டுத் தமிழிலக்கியம் மரபு இலக்கியங்களாகவே இருந்தன. இந்நிலையை மாற்றி கருத்துக்கு முதலிடம் கொடுத்து வசனக் கவிதையைத் தோற்றுவித்தவர் பாரதியாராவார்.எனவே, முதலில் இவரைப்பற்றிக் காணலாம்.

#### 4.1.1 பாரதியார்

இவர் இயற்பெயர் சுப்பிரமணியம். இவர் சுப்பையா என அழைக்கப்பட்டார். பிறப்பு 11.12.1882 மறைவு, 11.9.1921. ஊர்: எட்டையபுரம். தந்தை சின்னசாமி ஐயர் தாய் இலக்குமி அம்மை. 13 வயதில் செல்லம்மாவை மணந்தார். 11 வயதில் கவியாற்றும் ஆற்றல் பெற்று, பாரதி என்னும் பட்டம் பெற்றார். உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியராக மூன்று மாதம், பணி புரிந்தார். சுதேசிமித்திரன் ஆசிரியக் குழுவில் சேர்ந்தார். 1905 இல் சக்கரவர்த்தினி இதழ் தொடங்கினார். இந்தியா ஏடும் பாரதியால் தொடங்கப்பட்டது. இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளையுடையது. தமிழ், முதற்கண் இயற்றமிழ்க் கவிஞர்களைக் காண்போம். இந்தக் காலத்தைப் 'பாரதியுகம்' என்றார் அறிஞர் ஒருவர். அவர் சர்வதேசக் கவி; அதாவது உலக மகாகவி. என்பதில் சந்தேகமே இல்லை. 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம். பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று இக்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின்றான்' எனப் பாஞ்சாலி சபத முகவுரையில் பாரதியாரே கூறுகின்றார். இக்கொள்கையை ஓர் இடத்தும் கைந்நெகிழவிடாது இவர் பாடலும் வசனமும் இயற்றியிருக்கிறார். இந்த் எளிமையோடு நேர்மையும் இவர் தமிழிலே காணப்படுகின்றன.

'நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்'

என்பது பாரதியார் கொள்கையாகும். தமிழ் மொழியின் பழமையினைப் பாரதியார்,

'தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்த்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிப்போல் இனிதாவது
எங்கும் காணோம்

என்று கூறுவது அவரின் தமிழ் மொழிப் பற்றினை புலப்படுத்துகிறது.

‘வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
‘பயிற்றுப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்’

என்பது பாரதியாரின் அடங்காத ஆவல்.

‘தனியொருவனுக் குணவி லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்’.

எனும் அடி பாரதியாரின் மார்க்சீயப் புரட்சியாகும். பாப்பாப் பாட்டில் பாரதியார் குழந்தையாகவே ஆகிவிடுகின்றார். வாழும் முறையினை எத்துணை எளிதாகக் கூறுகின்றார்!

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்; - இது
வாழும் முறைமையடி பாப்பா!’

பாரதியார் பாடலிலே, காலையிலே கதிரவன் ‘புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கித்’ தோன்றுகின்றான். மற்றும் நாட்டு மக்களுடைய ஒற்றுமை வாழ்வினை விளக்க அரியதொரு சித்திரமே தீட்டிவிடுகின்றார்.

‘சிந்து நதியின்மிசை நில வினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்’
‘உள்ளத்தே உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்’.

என்ற அவருடைய வாக்கிற்கு இவரே இலக்கியமாய்த் திகழ்கிறார். வசனத்தை முதன்முதலில் கையாண்ட ஒரு சிலரில் பாரதியார் குறிப்பிடத்தக்கவர்.

### 4.1.2 தேசிகவிநாயகம் பிள்ளை

இவர் காலம் கி பி 1876-கி பி 1954. ஊர் தேரூர் தந்தை சிவதானுப்பிள்ளை, தாய் ஆதி லட்சுமி அம்மாள். கல்வி பயின்றது நாகர்கோவில். பணி, தொடக்கப் பள்ளி ஆசிரியர், கல்லூரி ஆசிரியர். தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் ‘வாடாத கற்பகப் பூஞ்செண்டு’ என்று கவிமணியின் பாடலைப் புகழ்ந்து பேசுகிறார். ரசிகமணி டி.கே.சி. கவிமணியின் உருவத்தைக்காண நாமக்கல் கவிஞர் உரைக்கிறார். மேலும் தேசிய வினாயகத்தின் கவிப்பெருமை தினமும் கேட்பது என் செவிப்பெருமை என நாமக்கல் கவிஞர் பாராட்டுகிறார்.

‘துரும்பென மெலிந்ததேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினைவேகாட்டும் பாரெலாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள் கவிமணி வடிவமாகும்’.

கவிமணியின் முழு உருவமும் நம் மனக்கண்முன் வந்து நிற்கின்றதல்லவா? கவிமணியின் அற்புதப்படைப்பு ‘ஆசிய ஜோதி’ யாகும் அர்னால்டு எழுதிய ‘லைட் ஆப் ஏசியா’ (Light of Asia) என்ற கவிதையின் தழுவல் என்று இதனைப் படித்தவர் சொல்ல மனம் ஒப்பாத அளவுக்கு மொழியாக்கம் அமைந்துள்ளது; மகனை இழந்த தாய் ஒருத்தி வருந்துகிறாள்; துன்பத்தைக் கொட்டுகிறாள்;

‘வாய்முத்தம் தாராமல் மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச் சிந்தைதடு மாறுதையா!
……………………………………….
பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூ சூட்டிடம்மா
என்னும் மொழிகளின் எக்காலம் கேட்பனையா?’

என்ற கவிமணியின் பாடலைப் படிக்கும்போது அது பாரசீகப் பாடலின் மொழிபெயர்ப்பு என்ற எண்ணமே நமக்கு எழுவதில்லை நம் நாட்டுத் தாயுமானவரின் பாடலைப் படிப்பது போல அப்பர் தேவாரத்தைப் படிப்பது போல நம்மை மறந்து படித்து இன்ப அமைதி உறுகிறோம்.

உமார்கய்யாம் பாரசீக மொழியில் பாடிய பாடலைப் ‘பிட்ஸ்ஜிரால்ட்’ என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதனைக் கவிமணி தமிழில் ஆக்கியுள்ளார்.

Here with a loaf of bread beneath the bough
A flask of wine, a book of verse and Thou
Beside me singing in the wilderness
And wilderness is Paradise enow’.

தமிழ்

‘வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?’

இதனைச் சாதாரண மொழிபெயர்ப்பு என மனம் ஒருப்படவில்லை.

கவிமணியின் குழந்தைப் பாடல்களில், இனிய சந்தமும் எளிய பொருளமைப்பும் காணலாம்.

‘தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு – உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி’.

பின்வரும் பாட்டில் பெண்ணின் பெருமையினைக் கூறுகிறார்:

'மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!
பங்களக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா'.

வாழ்க்கைத் தத்துவங்கள்' என்ற தலைப்பில், இவர் பாடியுள்ள பாடல்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறப்புடையனவாகும்.

'நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்றும் இதற்கோர் ஐயமுண்டோ?'

என்னும் பாடலில் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நற்கூறு அமைந்துள்ளதைக் காணலாம்.

### 4.1.3 பாரதிதாசன்

பாரதிதாசன் அவர்கள் 29-4-1891-இல் புதுவையில் கனகசபை முதலியாரின் அருமை மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் கனக சுப்புரத்தினம் என்பது. இளமையிலேயே பிரெஞ்சு மொழியிலும், தாய் மொழியாம் தமிழிலும் நிறைந்த புலமை பெற்றுத் தமிழாசிரியராய் அரசினர் கல்லூரியில் பணியாற்றினார். இளமை நாள்களிலேயே சிறுசிறு பாடல்களை எழுதுவார். நண்பர் ஒருவரின் திருமணத்தில் விருந்துக்குப்பின் நம் கவிஞர் பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். பாரதியார் அப்பாட்டைக் கேட்பதை நம் கவிஞர் அறியார். அப்பாடலே அவரைப் பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தது… 'பாடு' என்று பாரதியார் சொல்ல. 'எங்கெங்கும் காணினும் சக்தியடா' என்று பதினாறு சீருள்ள இரண்டு அடிகளைப் பாடினார். அதன் அழகும் பொருளும் அவரைப் பாரதிதாசன் என்று தமிழ்நாட்டிற்கு உணர்த்தின. பாரதிதாசன் சாதி பேதத்தையும் சமய பேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும் விரிந்த அறிவும் கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர். பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை நிரம்பியவர். அவரது சிறு குறிப்பு முதல், கட்டுரை கவிதைகள் வரை அனைத்திலும் கருத்து உணர்ச்சி, நகைச்சுவை இவைகளைப் பரக்கக் காணலாம்.

பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, குறிஞ்சித்திட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல் கண்ணகி புரட்சிக் காவியம், மணிமேகலை வெண்பா, காதல் நிறைகள், காதல் அமைதி, இளைஞர் இலக்கியம். சௌமியன் இசையமுது. நல்ல தீர்ப்பு, தமிழியக்கம், இருண்ட வீடு முதலியன பாரதிதாசன் இயற்றிய நூல்கள்.

இயற்கையை வருணிப்பதிலே பாரதிதாசன் இணையற்ற கவிஞர். இவருடைய 'அழகின் சிரிப்பு' அனைவரும் பாராட்டிப் படிக்கும் நூலாகும். இயற்கையோடு நகைச்சுவையை இணைத்துப் பாடுகிறார்.

'கிளையினிற் பாம்புதொங்க விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக் கீழுள்ள விழுதை யெல்லாம்

ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்'.

காதல் திருமணத்தையும் விதவைகள் மறுமணத்தையும் ஆதரிக்கிறார் புரட்சிக் கவிஞர் பாடல்களில் வேகமும் விவேகமும் காணப்படுகின்றன.

'காதலிருவர்களும் - தம்
கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்? - இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?'

'வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?'

கவிஞர் சீர்திருத்த உள்ளம் வெளிப்படுகிறது.

'சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கி நடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
ஊதயினில் துரும்புபோல் அலைக்கழிப்போம் பின்னர்
ஒழித்திடுவோம் புதிதான ஓருலகம் செய்வோம்!.

என்னும் அடிகளில் பளிச்சிடுகின்றது. 'வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா? என்று வினாக்குரல் எழுப்பி,

'ஓடப்ப ராயிருக்கும் யப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ'

என்று விடையும் தருகிறார்.

'தமிழக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்!'

எனும் பாவேந்தர் பாரதிதாசன் 'கன்னற் சுவைதரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி' என்கிறார்.

இவர் எழுதிய 'பாண்டியன் பரிசு' ஒரு சிறந்த காவியம். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்பது இவர் கருத்து. இதற்குப் பெண் கல்வி தேவை என முழங்குகிறார். காட்டாக,

'கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி அங்கே
நல்லறிவுடைய மக்கள் விளைவது நவில வோநான்?'

இனி, பாரதிதாசன் 'தமிழ்ப் பற்றினை' என்னும் பாடலில் அறியலாம்.

'நன்று தமிழ் வளர்க – தமிழ்

நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!

என்றும் தமிழ் வளர்க! — கலை

யாவும் தமிழ்மொழி யால்விளைந் தோங்குக!'

என்னும் பாடலில் அறிய முடிகிறது. 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'புரட்சிக்கவி' முதலிய பாடல்களும் அறிஞர் போற்றும் சிறப்புடையனவாம். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று இவர் முழங்குகிறார்.

**4.1.4 நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை**

இவர் பிறந்தது 19.10.1888. மறைவு 24.8.1972. தந்தை வேங்கடராமப் பிள்ளை, தாய் அம்மணியம்மாள், சென்னை அரசாங்க அரசவைக் கவிஞராய் விளங்கியவர் இவர். தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். தான் வரைந்த ஓவியத்திற்காகத் தங்கப் பதக்கம் பெற்றவர். இவர் இயற்றியவை 'அவனும் அவலும்' என்னும் காப்பியம், 'மலைக்கள்ளன்' என்னும் நாவல். இலக்கிய இன்பம், தமிழன் இதயம், என் கதை, சங்கொலி, கவிதாஞ்சலி முதலியன. இவர்.

'தமிழ னென்று பெருமை யோடு

தலைநிமிர்ந்து நில்லடா

தரணி எங்கும் இணை யிலாஉன்

சரிதை கொண்டு செல்லடா'

என்று பெருமித உணர்வோடு பாடுகின்றார். நாட்டு மக்களின் நெஞ்சங்களில் வாழும் வண்ணம் சில பாடல்களை எழுதியுள்ளார். இவருடைய சுய சரித்திரத்தையும், இலக்கிய இன்பத்தில் கம்பராமாயணப் பாடல்கள், சிலவற்றின் நயங்களையும் எழுதியுள்ளார். 'மலைக்கள்ளன்' என்ற அழகிய படைப்பு இவர் சிறையில் இருந்தபொழுது எழுதியதாகும். இவர் எழுதிய நூல்களிற் சிறந்து விளங்குவது 'அவனும் அவளும்' என்னும் காவியமாகும்.

'மான் என அவளைச் சொன்னால்

மருளுதல் அவளுக்கில்லை

மீன் விழி உடையா ளென்றால்

மீனிலே கருமை இல்லை

தேன்மொழிக் குவமை சொன்னால்

தெவிட்டுதல் தேனுக்குண்டு

கூன்பிறை நெற்றி என்றால்

குறைமுகம் இருண்டு போகும்'

என்று கதைத் தலைவியின் அழகினைப் புனைகிறார்.

'தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை

தினமும் கேட்பதுஎன் செவிப் பெருமை'

என்று இவர் பிற புலவர்களையும் பாராட்டிப் பேசுகின்றார். அண்மையில் மறைந்த இக்கவிஞரைக் காந்தி யுகத்தின் கவிஞர் என அழைக்கலாம்.

### 4.1.5 பிற கவிஞர்கள்

**சுத்தானந்த பாரதியார்**

'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்றார் பாரதியார். சுவாமி சுத்தானந்த பாரதியார் எண்ணற்ற கவிதைகளை இயற்றினார். இவருடைய சிறந்த படைப்பு, 'பாரதி சக்தி மகா காவியம்' என்பதாகும்.

**அ.சீனிவாச ராகவன்**

இவர் 'நாணல்' என்ற புனைப்பெயரில் கவிதைகள் புனைந்தவர் ஆவர். இவரது, 'வெள்ளைப் பறவை'…கவிதைத் தொகுதி சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது.

**திரு.கி.வா.ஜகந்நாதன்**

இவர் 'ஜோதி' என்ற புனைப்பெயரில் மறைந்திருப்பவர் ஆவர். இவர் பாடிய பாடல்கள் 'மேகமண்டலம்' என்ற நூலாக வெளிவந்துள்ளது. 'கவிஞன் கர்வம்' என்ற கவிதையில் கற்பனையின் சிறப்பினைக் காணலாம்.

'கற்பனை யாம்ப ரிக்கே – ஒரு
கடிவாளம் என்பதில்லை
வெற்பினில் ஏறிவரும் - அந்த
விண்ணி லும்பறக்கும்'

என்று கூறியுள்ளமை மகிழத்தக்க தொன்றாகும்.

**திரு.மீ.ப.சோமசுந்தரம்**

'சோமு என்று அழைக்கப்படும் இவர் அனைத்திந்திய வானொலித் துறையில் தமிழ் நிகழ்ச்சிகளின் தலைவராய்ப் பணியாற்றி வந்தார். தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர் 'அக்கரைச் சீமையிலே' என்ற நூல் சாகித்திய அகாதெமியின் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்றது. இவருடைய 'இளவேனில்' எனும் கவிதைத் தொகுப்பு நூல், சென்னை அரசாங்கப் பரிசு பெற்றுள்ளது.

**திரு.ம.ப.பெரியசாமி தூரன்**

தூரன் அவர்களின் கவிதைகள் 'தூரன் கவிதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. தூரன் சிறுவர்களுக்கான கவிதைகள் எழுதித் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றுள்ளார்.

**புலவர் குழந்தை**

இவர் காலம் 1906 – 1972. ஊர் ஈரோடு மாவட்டம் ஓல வலசு. பெற்றோர் முத்துசாமிப்பிள்ளை, சின்னம்மை. அரசு மேல்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தவர் 'இராவண காவியம்' வழங்கியவர். இராம பக்தியுள்ள பேராசிரியர்களாலும் புகழ்ப்பெற்ற காவியம், 'இராவண காவியம்'. பல்கலைக் கழகப் பாடநூலிலும் இன்று இராவண காவியம் இடம் பெற்றுள்ளது. இதில், புலவர் குழந்தையின் கவியாற்றலை அறியலாம். புலவர் குழந்தை இக்காவியம் தவிர 'காமஞ்சரி' என்னும் கவிதை நாடகத்தையும் எழுதியுள்ளார். 'குழந்தைப் பாடல்கள்' என்னும் கவிதைத் தொகுதியையும் 'கொங்கு நாடு முதலான உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

**கம்பதாசன்**

இயற்பெயர் ராஜப்பா என்பதாகும். ‘அருணோதயம்’ என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியரான இவர் ஏழை படும் பாட்டினைத் தம் கவிதைகளில் புலப்படுத்துதலில் வல்லவர்.

**வாணிதாசன்**

பிறந்தது 1915, மறைந்தது 1974. புதுவைக் கவிஞர் என அழைக்கப்பட்டவர். 1979 இல் பாவேந்தர் விருது பெற்றார் தமிழாசிரியராய்ப் பணியாற்றியவர். பாவேந்தர் பரம்பரையினர். புதுவையில் வாழ்ந்தவராவர். இவருடைய இயற்பெயர் ‘எதிராஜ்’ என்பதாகும். ‘கொடிமுல்லை,’ ‘தமிழச்சி’, ‘தொடுவானம்’, ‘எழிலோவியம்’ இன்ப இலக்கியம் பொங்கல் பரிசு, வாணிதாசன் கவிதைகள் முதலிய நூல்கள் இவர்தம் படைப்புகளாகும். ‘சேரி’ என்ற கவிதையில்,

‘இடுவெயில் போல் உழைக்கும்
சேரிவாழ் ஏழை மக்கள்
கொடுவெயில் குளிர்ம ழைக்குக்
குந்திடக் குடிசை யுண்டோ?’

ஏழை மக்களின் வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அன்பின் மாட்சியினை காதலியின் உயர்வினைக் கொள்ளை எழில் குலவும் குழந்தையின் இன்பத்தினைப் பாடிக்களிக்கிறார். அண்மையில் ‘சிரித்த நுணா’, ‘இரவு வரவில்லை’, ‘பாட்டுப் பிறக்குமடா’ முதலிய இவர் கவிதைத் தொகுதிகள் வெளிவந்தள்ளன. ‘எழில் விருத்தம்’ தனிச்சிறப்புப் பெற்ற நூல்.

**சுரதா**

சுரதா என்ற பெயர் சுப்புரத்தின தாசன் என்பதன் சுருக்கமாகும். இவர்தம் இயற்பெயர் இராசகோபாலன். பிறந்த ஊர் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள பழையனூர். பிறந்த ஆண்டு 1921. இவர் கவிஞர் திலகம், தன்மானக் கவிஞர், கலைமாமணி முதலிய பட்டங்களைப் பெற்றவர். சீர்காழி அருணாசல தேசிகர், சிந்தனையும் எழுத்து வன்மையும் கொண்ட இவர் ‘உவமைக் கவிஞர்’ என்றும் சிறப்போடு வழங்கப்படுகிறார். ‘தேன் மழை’ என்ற கவிதைத் தொகுதியில் இவர் தம் முழுக் கற்பனை வளத்தையும் கண்டு செவியும் சிந்தனையும் குளிரலாம்.

**கண்ணதாசன்**

இவர் காலம் 1927 – 1981. ஊர் இராமநாதபுரம் மாவட்டம் சிறு கூடர் பட்டி, இயற்றமிழ்க் கவிஞர் என்ற முறையில் பெரிதும் சிறப்பிடம் பெற்ற கவிஞர். முத்தையா என்பது இவர்தம் இயற்பெயராகும். புனைப்பெயர்கள் காரைமுத்துப் புலவர், கமகப் பிரியா, வணங்காமுடி என்பதாகும். இவர் கவியரசு கவிச்சக்ரவர்த்தி என்னும் பட்டம் பெற்றவர். 1914-ல் ஏப்ரலில் கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தார். இவர் கவிதைகள் ‘கண்ணதாசன் கவிதைகள்’ என்ற பெயரில் பல தொகுதிகளாக வெளியாகியுள்ளன. மாங்கனி, ஆட்டனத்தி, ஆதிமந்தி முதலிய சிறு காப்பியங்களை எழுதியுள்ளார். கவிதாஞ்சலி, பொன்மழை அம்பிகா, அழகு தரிசனம், பகவத்கீதை விளக்க உரை, அர்த்தமுள்ள இந்துமதம், பாரிமலைக்கொடி, ஊமையன் கோட்டை, விளக்கு மட்டுமா சிவப்பு. ஆயிரங்கால் மண்டபம், அனார்கலி தெய்வ தரிசனம், ஏசு காவியம், மலை வாசம் முதலிய நூல்கள். இவர்,

‘மழைகூட ஒருநாளில் தேனாகலாம்

மணல்கூடச் சில நாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?

போன்ற திரைப்பட பாடல்கள் மூலம் வாழ்க்கைத் தத்துவங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இவர் தம் திரைப் பாடல்கள் 'திரை இசைப் பாடல்கள்' எனும் தலைப்பில் இரண்டு பெரும் தொகுதிகளாக வந்துள்ளன. இரு வேறு திரைக் கவிஞர்கள் பெறாத பெரும் பேறு 'கவியரசு' எனப் போற்றப்பட்ட கண்ணதாசன் பெற்றார். இவா் அமேரிக்கா சென்றபோது இறந்தார்.

**கே.சி.எஸ்.அருணாசலம்**

பொதுவுடைமைத் தத்துவத்தில் பூத்த கவிஞர்

'கவிதை எனக்கொரு கைவாள் - மார்பில்
கவசம் எனக்கொரு வாய்மை
புவியில் தீமைகள் வீழ — நான்
போர்செய்யும் ஓர் படை வீரன்'

என முழுங்கும் இவர், நாட்டுப்புறக் காதலைப் பின்வருமாறு நயமுற நவின்றுள்ளார்

**சாலை இளந்திரையன்**

இயற்பெயர் மகாலிங்கம் என்பதாகும். தில்லிப் பல்கழைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றியவர் 'இளந்திரையன் கவிதைகள்' 'அன்னை நீ ஆடவேண்டும்' எனும் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

**தமிழழகன்**

சந்தவின்பம் நிறைந்த கவிதை படைப்பதில் திறம் பெற்றவர். அதனால் 'சந்தக் கவிமணி' எனும் பட்டமும் பெற்றுள்ளார். இவர் பாடல்கள் 'தமிழழகன் கவிதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

திரைப்படப் பாடல்களில் கவிதைச் சுவையையும் கருத்தாழத்தினையும் பெய்த கவிஞர்,

'செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி — கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி'

என்னும் அடிகளில் செறிவான சிந்தனைக்குரிய கருத்தும் காணலாம்.

**அழ.வள்ளியப்பா**

இவர் குழந்தைக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர். அரிய படைப்பு 'மலரும் உள்ளம்' என்பதாகும். குழந்தைக் கவிதையுலகில் தனியாட்சி செலுத்துபவர். இவர் குழந்தை இலக்கியத் துறையில் சிறப்பிடம் பெறுபவர்.

**பூவண்ணன்.**

இவருடைய குழந்தைக் கவிதைகளின் தொகுதியான 'பாட்டுத் தோட்டம்' பரிசு பெற்றது இந்திய ஒருமைப்பாட்டை வற்புறுத்தும் 'இந்தியரே' என்னும் பாடல் மூலம் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமானவர்

**தணிகை உலகநாதன்.**

சென்னை மாணவர் மன்றக் கவிஞராய் விளங்குகிறார். இவரது 'குருவிக் குடில்' தமிழ்நாட்டு இளஞ்செல்வங்களை உருவாக்குகின்றது. பல நூல்களை எழுதியிருக்கும் இவரது கவிதை நூல் 'பாடும் பாப்பா' என்பதாகும்.

**முடியரசன்**

பிறந்த ஆண்டு 1920. ஊர் பெரியகுளம். பெற்றோர் சுப்பராயலு சீதாலட்சுமி இவர் கவியரசு பட்டம் பெற்றவர். இவர் காரைக்குடியில் தமிழாசிரியராகப் பணியாற்றியர். இவர் கவிதைகள் தமிழக அரசின் பரிசு பெற்றது. சிறந்த கவிஞர் ஆவர். இவர் பாடல்கள் 'முடியரசன் கவிதைகள்' என வெளிவந்துள்ளன. 'பூங்கொடி' என்பது இவரியற்றிய காப்பிய நூலாகும். இது தமிழியக்கப் போராட்ட வரலாறு காட்டும் வீர காவியம். இக்கவிஞரும், சொற்பொழிவாளரும், எழுத்தாளருமான வேழவேந்தன் எழுதிய கவிதைகள், 'வேழவேந்தன் கவிதைகள்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. இவர் கவிதைகள் நாட்டு விடுதலை, மொழி வளர்ச்சி, பகுத்தறிவு நெறி, சமூகச் சீர்திருத்தம், இயற்கையழகு, காதல், வீரம், கடமை, பொழுது போக்குப் போன்ற பல திறப்பட்ட பொருள்கள் கற்பனைத் திறனால் பொலிவும் வலிவும் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுத் திகழ்கின்றன.

**ஈரோடு தமிழன்பன்**

திறம் வாய்ந்த இளங்கவிஞர்களுல் ஒருவர் ஈரோடு தமிழன்பன் 'பாடசாலை போக வேண்டும் - பாப்பா எழுந்திரு!... செல்லப் பாப்பா எழுந்திரு' என்னும் பாடல் வானொலி தொலைக்காட்சி மூலம் எல்லோர்க்கும் அறிமுகமானது.

**அப்துல் ரகுமான்**

சொற்சுவையும் பொருட்சவையும் நகைச்சுவையும் பொருந்தப்பாடுபவர் அப்துல் ரகுமான்.

**முருகுசுந்தரம்**

பாவேந்தர் பாரதிதாசனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் கவிஞர் முருகுசுந்தரம், இவரது 'கடைத்திறப்பு', 'சந்தனப் பேழை', 'பனித்துளிகள்' ஆகியவை இவருடைய கவிதைத் தொகுதிகள், இவற்றுள் 'பனித்துளிகள்' 1971இல் தமிழக அரசின் கவிதைக்கான முதற் பரிசு பெற்றுள்ளது.

கவிதைச் சோலையில் சிறகடித்து வானம்பாடிகளாகப் பறந்து வரும் கவிஞர்கள் பலர் அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், மின்னூர் சீனிவாசன், தமிழோவியன், மு.பி.பாலசுப்பிரமணியன், தமிழ்முடி, பல்லடம் மாணிக்கம், சின்னூர் இளங்கோவன், கோவை இளஞ்செரன், இளம்பரிதி, எழில் முதல்வன், இளந்தேவன், பெருங்கவிக்கோ, மா.செல்வராசன், பொன்னடியான், கலைவாணன், திருமதி சௌந்தரா கைலாசம், ஜவாலா ஐயராம், சீதா என்பவர் ஆவர்.

'கவியரங்கம் கவிஞர்கள்' என்று கலைஞர் கருணாநிதி தலைமையில் ஒரு கவிஞர் படையே உளது. மீ.இராஜேந்திரன், பொன்னி வளவன்,

தமிழண்ணல், முத்துலிங்கம், கருணானந்தம் முதலான கவிஞர் பலர் இவர்கள் வேகமும் விறுவிறுப்பும் சுவையும் சிந்தனைச் செறிவும் நிறைந்த கவிதைகளை வடித்துப் பாராட்டுதல்களைப் பெற்று வருகிறார்கள்.

### 4.2 தமிழில் சிறுகதை வளர்ச்சி

இன்று தமிழில் மிகுதியாய் வளர்ந்து வரும் துறை சிறுகதைத் துறை எனலாம். தமிழில் உரைநடையின் செல்வாக்குக் காரணமாகக் கட்டுரை சிறுகதை நாவலிலக்கியங்கள் தோன்றின. இவற்றுள், சிறுகதை, நாவல்களின் விரைந்த வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் துணைபுரிந்தன.

#### சிறுகதை

சுவையான நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு, கவர்ச்சியான ஒரு காட்சி, நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவரின் தனிப்பண்பு, ஒரு சிறு அனுபவம், வாழ்க்கையின் ஒரு நிகழ்வு அறவுணர்வால் விளைந்த ஒரு சிக்கல் இவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் கருவாக அமையலாம். சிறுகதை 'குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும் என்பார் செட்ஜ்விக்.

தமிழில் பஞ்ச தந்திரக் கதைகளும் மதனகாமராஜன் கதையும் விக்கிரமாதித்தன் கதையும் மிகப் பழமையானவை கி.பி.18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் 'பரமார்த்த குரு கதைகளைத் தமிழில் எழுதினார். வீராசாமிச் செட்டியார் 'விநோதரச மஞ்சரி' என்னும் நூலை எழுதினார்.

கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாயூரம் வேதநாயகம்பிள்ளை (1824-89) அவர்கள் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' 'சுகுண சுந்தரி, ஆகிய நாவல்களில் இடையிடையே பல சிறுகதைகளும் மலர்ந்துள்ளன என்பதை நாம் அறிய வேண்டும். மறைமலையடிகள் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்னும் நூலினை எழுதினார். இந்நூல் கடிதத் தொகுப்பேயானாலும் ஒவ்வொன்றும் ஒரு சிறுகதைபோலத் தோற்றமளிக்கின்றது. வ.வே.சு.ஐயர் (1881-1925). இவர் எழுதிய 'மங்கையர்க்கரசியின் காதல்' என்னும் நூல் சிறந்த சிறுகதை தொகுப்பு நூலாய் விளங்குகின்றது. சிறுகதை இலக்கியத்திற்கு ஏற்ப முதல் முதலில் கதை வடித்தவர். குளத்தங்கரை அரச மரம் சொன்ன கதை என்பது தமிழில் நல்ல சிறுகதையாகும். சுப்பிரமணிய பாரதியார் எழுதிய 'திண்டிம சாஸ்திரி', 'ஸ்வர்ண குமாரி' முதலான கதைகள் சிறந்த கதைகளாகும்.

#### புதுமைப்பித்தன்

இவர் காலம் 1906 – 1944. ஊர் நெல்லை வள்ளுவர்பேட்டை தந்தை சொக்கலிங்கம் பிள்ளை, மறைந்துபோன சிறுகதை எழுத்தாளர்களின் மூலம் புகழ்பெற்றவர். விருத்தாசலம் பெயரினைக் கொண்ட 'புதுமைப் பித்தன்' இவரைச் சிறுகதை மன்னன் என்றும் சிறுகதைச் செல்வர் என்றும் கூறுவர். 'தமிழ் நாட்டின் மாப்பஸான்' என்றும் வழங்குவர். 200-க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். உலகத்தின் சிறந்த சிறுகதைகளை 'உலகத்துச் சிறுகதைகள் 'தெய்வம் கொடுத்த வரம்' என்ற இவர்தம் மொழிபெயர்ப்புத் தொகுதிகளில் காணலாம். 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' என்ற இவர்தம் கதை, பாத்திரப்படைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. 'அன்று இரவு' ஒரு நல்ல கதை. இவருடைய சிறுகதைகள் பல, 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. மணிக்கொடி யுகத்தைச் சார்ந்தவர். திருநெல்வேலி வட்டார வழக்கை ஊடுருவச் செய்தவர்.

**கு.ப.ராஜகோபாலன்**

இவர் காலம் 1910 – 1944. ஊர் கும்பகோணம். மணிக்கொடி, மறுமலர்ச்சி சுதந்திர சங்கு ஆகிய இதழ்களில் இவர் கதைகள் வெளிவந்தன கற்பனை, மனத்தத்துவம் என்ற இரண்டும் இவர் சிறுகதைகளில் களிநடம் புரிவதைக் காணலாம். இவர் கதைகள் கணவன் மனைவி இடையே நிகழும் வாழ்க்கைச் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டவை. 'காணாமலே காதல்', புணர்ஜென்மம்', 'கனகாம்பரம்' முதலான இவர்தம் சிறுகதைத் தொகுதிகள் தேனினுமினிய செந்தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகளாகும். இவற்றுள் 'காணாமலே காதல்', சரித்திரச் சிறுகதைத் தொகுதியாகும். 'விடியுமா' என்ற இவர் கதைக்கு ஈடாகத் தமிழில் குறிப்பிட எந்த ஓர் கதையும் இல்லை எனலாம்.

**ரா.கிருஷ்ணமூர்த்தி**

இவர் காலம் 1899 – 1954. ஆனந்த விகடன், ஆசிரியராகப் பணியாற்றியர் கல்கி இதழைத் தாமே தொடங்கி நடத்தினார். மது விலக்குத் தீண்டாமை ஒழிப்பு ஆகிய கருதுகோள்களைத் தம் கதைகளில் கொணர்ந்தவர் சாரதையின் தந்திரம் இவரின் முதல் சிறுகதை. கல்கி எனப்படும் ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தந்தை எனலாம். 'காதராக் கல்லன்' 'மயில்விழிமான்', கேதாரியின் தாயார் 'திருடன் மகள்' 'வீணை பவானி', 'கணையாழியின் கனவு' 'ஒற்றை ரோஜா' என்பவை இவர்தம் சிறந்த சிறுகதைப் படைப்புகளாகும்.

**வ.ரா.**

பண்பட்ட எழுத்தாளர் இவர். புதுமை நோக்கம் கொண்ட கதைகளை வழங்கியுள்ளார். 'ராஜாஜி' தத்துவங்களைப் புகுத்தி எளிய முறையில் எழுதுவதில் சிறந்தவர். இவர் கதைகள் 'ராஜாஜி கதைகள்' என்ற நூலாய் வந்துள்ளன.

**கி.வா.ஜகந்நாதன்**

இவரின் 'பவள மல்லிகை' ஓர் உயர்ந்த படைப்பாகும். 'கலைஞன் தியாகம்' அருந்த தந்தி, என்னும் இவரது சிறுகதைத் தொகுதி மிகவும் பாராட்டப் படுவதாகும்.

**பி.எஸ்.ராமையா**,

மணிக்கொடி, தினமணிக் கதிர், வாரப்பதிப்பு மூலம் பல நல்ல அரிய கதைகளைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

**சோமு**

இவரின் 'கல்லறை மோகினி' 'கேளாத கானம்' என்பவை இவர்தம் அரிய படைப்புகளாகும்

**விந்தன்**

ஏழையின் நெஞ்சக் குமுறலை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதில் வல்லவர். 'முல்லைக் கொடியாள்' என்ற இவர்தம் சிறுகதை மணிகள் எனலாம்.

**மு.வ.**

இவரின் 'விடுதலையா' என்பது சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளும், 'குறட்டை ஒலியும்' சிறப்பான கதையாகும்.

**ரா.கி.ரங்கராஜன்**

இவரின் படைப்பான 'பல்லக்கு' 'பரிசு' அரிய கருத்தினை நுண்மையான முறையில் விளக்குகின்றது. 'நிலா நனையும்?' என்ற இவர்தம் கதையும் ஓர் அரிய படைப்பாகும்.

**அகிலனின்**

குழந்தை சிரித்தது, 'இதயச் சிறையில்' ஒரு நல்ல சிறுகதை, நிலவினிலே' என்னும் இவர்தம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள கதைகள் அனைத்தும் சுவைமிக்கன.கலைமகளில் வெளியான அகிலனின் எரிமலை சிறுகதை உயர்ந்த படைப்பாகும்.

**ஜெயகாந்தன்**

விடுதலைக்குப் பின் ஜெயகாந்தன் என்ற முத்திரையை உலகிற்குப் பதித்தவர். இவர்தம் 'யாருக்காக அழுதான்?' என்னும் சிறுகதை ஓர் அரிய கதை. இவர் எழுதிய சிறுகதைகள் சிந்தனைக்கு விருந்தூட்டுபவை. சமுதாயத்தின் பலவீனமான பகுதியினை இவர் அலசிக் காட்டுகின்றார். உதயம், ஒரு பிடி சோறு, இனிப்பும் கரிப்பும், சுமைதாங்கி, புதிய வார்ப்புகள், குருபீடம் ஆகியவை சிறந்த படைப்புகள் தேவன் வருவான் என்ற தொகுதி குழந்தைகள் பற்றியது.

**கோவி.மணிசேகரன்**

அறுநூறுக்கும் மேற்பட்ட வரலாற்றுக் கதைகளை எழுதியுள்ளார். இவருடைய 'சரித்திரக் கதைக் களஞ்சியம்,' 'காளையார் கோயில் ரதம்', 'உயிரும் ஒளியும்' சரித்திர சமூகச் சிறுகதைத் தொகுதிகள், மிக்க நயமும் சுவையும் உடையன. கோவி.மணிசேகரன் ஔரங்கசீபை பாத்திரமாகக் கொண்டு எழுதிய 'பாதுஷாவின் பாதுகை' ஷாஜகானைப் பாத்திரமாகக் கொண்டு 'கண்ணே, கனியே, கற்கண்டே,' ஆனந்த விகடனில் வந்த சமூகக் கதையாகும். 'அதுவும் அங்கே முடியுமானால்' என்ற கதையும் கடையெழு வள்ளல்களைப் பற்றிய தனித்தனிச் சிறுகதைகளும் அரிய படைப்புகளாகும்.

**ந.பிச்சமூர்த்தி**

கலைமகள் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர் மணிக்கொடி யுகத்தைச் சார்ந்தவர். பழம்பேரெழுத்தாளர், மணிக்கொடி எழுத்தாளர், இவர் எழுதிய ஜம்பரும் வேட்டியும், பிச்சமூர்த்தியின் கதைகள், மாங்காய்த்தலை பதினெட்டாம் பெருக்கு என் ஐந்து தொகுதிகளை வெளியிட்டுள்ளார். மோகினி' முதலிய கதைகள் சிறந்தன.

**தி.ஜானகிராமன்**

'சிவப்பு ரிக்ஷா', 'கொட்டு மேளம்' நல்ல சிறுகதைத் தொகுதிகளாகும். இவரின் 'ஆண்டி ரசிகரும் ரசிகைகளும்' தேவர் குதிரை, கோபுர விளக்கு, சிலிர்ப்பு ஆகியன சிறந்த கதைகளாகும். தஞ்சை மாவட்ட பேச்சு வழக்கு இவர் கதைகளின் தனித்தன்மையாகும். இவரது 'சத்தி வைத்தியம்' சிறுகதைத் தொகுதி 1979 - இல் சாகித்திய அகாதெமியின் பரிசு பெற்றது.

**ஜெகசிற்பியன்**

இவரின் 'நரிக்குறத்தி', 'நொண்டிப் பிள்ளையார்' நல்ல படைப்புகளாகும்.

**நா.பார்த்தசாரதி**

இவரின் ‘மூவரை வென்றான்’ என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகள் மிகுந்த சுவை நலங் கொண்டனவாகும்.

**டி.கே.சீனிவாசன்**

‘எல்லைக்கு அப்பால்’, ‘துன்பக் கதை’, ‘குறள் கொடுத்த குரல்’ ஆகியன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள்.

**மாயாவி**

பம்பாய்ச் சூழலை வைத்துச் சுவையாகக் கதை பின்னுபவர் **‘சாவி’** நகைச்சுவை நயமிக்க சிறுகதைகள் எழுதுவதில் வல்லவர்.

**வ.சா.நாகராசனின்** ‘வெள்ளம்’, கு.ப.ராவின் ‘விடியுமா’ விற்குப் பின்னர்த் தமிழில் வந்த சிறந்த சிறுகதை எனலாம். இன்று இத்துறையில் ஸோமாஸ், சுபஸ்ரீ, ஸ்ரீரங்கம் நரசிம்மன், சுகி சுப்பிரமணியன் முதலிய தாமரை மணாளன், ராஜேந்திரகுமார், புனிதன், இனியவன், ஐ.ரா.சுந்தரேசன், பூவை எஸ். ஆறுமுகம், டி.கே.பட்டுசாமி, சபாநாயகம், க.சமுத்திரம், சுபா, அழகாபுரி அழகப்பன், பூமணி முதலியோர் இத்துறையில் முன்னேறி வருகின்றனர்.

பெண் எழுத்தாளர்களில் அநுத்தமா, ‘லஷ்மி’ எனப்புனைபெயர் கொண்டுள்ள டாக்டர் திரிபுரசுந்தரி, வேங்கடலஷ்மி, மற்றும் வசுமதி ராமசாமி, ராஜம் கிருஷ்ணன், ஆர் சூடாமணி, குமுதினி, எம்.எஸ்.கமலா, எஸ்.ரங்கநாயகி, ஆர்.எஸ்.ஞானம்பாள், லஷ்மி நாகராஜன், கல்கி மகளார் ஆனந்தி, உமா குருமூர்த்தி, கு.ப.சேது அம்மாள், சரோஜா ராமமூர்த்தி, குயிலி, எல்.என்.சியாமளா, விமலாராணி, கஸ்தூரி பஞ்சு, கோமகள், இந்திரா, கே.ஜெயலட்சுமி, துளசி ஜெயராமன், சரஸ்வதி ராம்நாத், வத்சலா கோபால கிருஷ்ணன், லட்சுமி ராஜரத்தினம், ஜோதிலதா கிரிஜா, வாஸந்தி என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். வேங்கடலஷ்மி எழுதிய மயிலும் மங்கையும்’ என்ற சிறுகதை வரிசையில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

**சிறந்த சிறுகதைகள்**

ப.லட்சுமணன், ப.சிதம்பரம், ப.பாரதி சகோதரர்கள் ‘இலக்கியச் சிந்தனை’ என்னும் ஓர் அமைப்பை நடத்தி வருகிறார்கள். ஜனவரி முதல் டிசம்பர் வரை இலக்கியச் சிந்தனை தேர்ந்தெடுக்கும் பன்னிரண்டு சிறுகதைகளையும் ஒரு சிறந்த திறனாய்வாளரிடம் அளித்து அவற்றுள் சிறந்த ஒரு கதையைத் தேர்ந்தெடுக்கச் செய்து அதனை அந்த வருடத்தின் சிறந்த சிறுகதையாக அறிவித்துப் பரிசளிக்கிறார்கள். வருடத்தின் பன்னிரு சிறுகதைகளையும் நூலாக வெளியிட்டு அதற்கு வருடத்தின் சிறந்த சிறுகதையின் தலைப்பையே நூல் தலைப்பாகத் தருகிறார்கள். இது தொடர்ந்து நடந்து வருகிறது.

1978-ஆம் ஆண்டில் சிறந்த சிறுகதை ‘பசி’ இதனை எழுதியவர் மும்தாஜ் யாசீன். 1979-ஆம் ஆண்டில் சிறந்த சிறுகதை ‘அற்பஜீவிகள்’ இதை எழுதியவர் மலர் மன்னன். 1980-ஆம் ஆண்டில் சிறந்த சிறுகதை சின்னம்மிணி இதை எழுதியவர் திருப்பூர் கிருஷ்ணன்.

இலக்கியச் சிந்தனை அளிக்கும் இச்சிறுகதைத் தொகுதிகள் ‘தமிழகத்தின் சிறுகதைக்கலை, சிறுகதைத் திறனாய்வுக் கலை’ ஆகிய இரண்டின் வளர்ச்சிக்கும் துணை செய்கின்றன. ‘கல்கி’ இதழும் ஆண்டுதோறும் அமரர் கல்கி நினைவாகச் சிறுகதைப் போட்டி நடத்திச் சிறுகதைகளை வளம்பெறத் துணை செய்கிறது.

1967-இல் கு. அழகிரிசாமியின் அன்பளிப்பு, 1979-இல் தி. ஜானகிராமனின் சக்தி வைதியம் 1999-இல் தமிழ்நாடனின் ஏழு கார்டுன்களும் ஒரு வண்ண ஓவியமும் (மொழிப்பெயர்ப்பு) ஆகிய சிறுகதைகள் சாகித்திய அகாதமி பரிசுகள் பெற்றன. இவர்களோடு சோமு, ஜெகசிற்பியன், மணிசேகரன் போன்றோர் தமிழ்நாடு அரசு பரிசு பெற்றவர்கள்.

### 4.3 புதினங்கள்

மேலை நாட்டார் தொடர்பால் வளர்ந்த துறை இந்த நாவல்துறை. மேலைநாட்டார் தொடர்பால் தோன்றிய இந்நாவல்துறை சென்ற நூற்றாண்டின் இறுதியில் சிறப்புடன் தொடங்கியது. சிறுகதையே நாவலின் முதல் வளர்ச்சி நிலை என்றும் அதிலிருந்தே புதினம் வளர்ச்சிப்பெற்றிருக்க வேண்டும் என்றும் கட்சன் கூறுகிறார்.

#### வேதநாயகம் பிள்ளை

மாயூரத்தில் முனிசீப் வேலை பார்த்த அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து தமிழ் நாவல் தொடங்குகின்றது. இந்நாவல் நீதிக்கருத்துகளும் நகைச்சுவை நிரம்பியதாகவும் உள்ளது. இந்நாவல் வெளிவந்த காலம் கி.பி. 1879 ஆம் ஆண்டாகும். அடுத்து இவர் எழுதிய 'சுகுணசுந்தரி கதை' (1887) நாவலின் பல கூறுகள் கொண்டுள்ளது. இவரே நாவலிலக்கியத்தின் தந்தை எனவும் அழைக்கப்படுவார். நாவலிலக்கியத்தின் முன்னோடியாகவும் விளங்கினார்.

#### மறக்காயர் முகமது காசிம்

இவர் இலங்கை வாசி 1865–ல் எழுதிய அசன்பேயுடைய கதை தமிழின் இரண்டாவது நாவலாகவும், இலங்கையின் முதல் தமிழ் நாவலாகவும் திகழ்கிறது.

#### வை . குருசுவாமி சர்மா

இவர் திருச்சியைச் சேர்ந்தவர். சர்மா என்பவர் 1893 ஆம் ஆண்டில் பிரேம கலர்வத்தியம் என்னும் குடும்பச் சூழ்நிலைக்கொண்ட நாவலை எழுதினார். இந்நாவல் கால வரிசைப்படி தமிழின் மூன்றாவது நாவல் என்பர். இந்நாவல் நாட்டுப்புறக் கூறுகளைப் பதிவு செய்வதாக உள்ளது.

#### ராசம் ஐயர்

இவர் காலம் 1872 முதல் 1898 முடியவாகும். இவர், பிபுத்த பாரத என்னும் ஆங்கில வேதாந்த இதலின் ஆசிரியராகப் பணியாற்றினார். கமலாம்பால் சரித்திரத்தை இதே காலத்தில (1896) வெளியிட்டார். இது, தமிழின் இரண்டாவது நாவல் என்பர். இளைஞர் காதல், இல்லற மோதல், கிராமிய வாழ்வு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நாவலில், மனித வாழ்வின் தத்துவங்கள் பொதிந்து கிடப்பதைக் காணலாம். இது நாவலின் கட்டமைப்பை முழுமையாகக் கொண்டுள்ளது.

#### பண்டித நடேச சாஸ்திரி

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் நாவல்கள் எழுதியுள்ளார். 1894 ஆம் ஆண்டு, தானவன் என்னும் நாவலையும் 1900-ஆம் ஆண்டில் தீனதயாளு என்னும் நாவலையும் எழுதினார். 1902 இல் 'திக்கற்ற இரு குழந்தைகள்' என்னும் நாவலும் 1903 இல் மதிகெட்ட மனைவி என்னும் நாவலும் வெளிவந்தன. மேலும், மாமி கொலுவிருக்கை. தலையணை, மந்திரோபதேசம் முதலியவற்றையும் படைத்துள்ளார்.

**வடுவூர் துரைசாமி ஐயங்கார்**

இவர் காலம், 1880 முதல் - 1942 முடியவாகும். இவர் ஊர் மன்னார்குடி. இவர் மனோரஞ்சனி என்ற மாத இதழ் நடத்தினார். இவர் எழுதிய நாவல்கள் மேனகா, திகம்பர சாமியார், கும்பகோணம் வக்கீல் பாலாமணி, மதன கல்யாணி, சௌந்திர கோகிலம், பூரணச்சந்திரோதையம் முதலியன இவர் எழுதிய சிறப்பான நாவல்கள் எனலாம்.

**ஜே. ஆ. ரங்கராஜி**

இவர் காலம், 1875 முதல் 1956 முடிய. ஊர் பாலையங்கோட்டை. எழுதிய துப்பறியும் நாவல்களில், இராஜாம்பால் சந்தரகாந்தா என்னும் நாவல்கள் புகழ்பெற்றவை. மோகன சுந்தரம் ஆனந்த கிருட்டிணன் இராஜேந்திரன் ஜெயரங்கன், வரதராஜன் விஜயராகவன் ஆகிய நாவல்களை எழுதினார்.

**கே. எஸ். வெங்கடரமணி**

காந்தியம், விடுதலை உணர்வு இவர் நாவல்களில் மிகுந்து காணப்படுகின்றன. காந்திய நோக்குடன் தேசபக்தன், கந்தன், முருகன் ஓர் உழவன் என்னும் நாவல்களை எழுதினார்.இவரைத் தென்னாட்டுத் தாகூர் என்றும் அழைப்பர்.

**வரலாற்று நாவல்கள்**

**கல்கி**

அவர்களைத் தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் என்பர். இந்நூற்றாண்டின் மிகச்சிறந்த எழுத்தாளரான இவர் கல்வனின் காதலி, தியாக பூமி என்னும் நாவல்களைத் தொடர்கதைகளாக எழுதினார். வீணை பவானி, மகுடபதி, சோலைமலை இளவரசி முதலிய நாவல்கள் வெளிவந்தன. அலைவோசை இந்திய சுதந்திரப்போராட்டத்தின் பின்னணியில் எழுதப்பட்ட நாவலாகும். இது, சாகித்திய அகாதமி பரிசினைப் பெற்றது. தமிழில் முதன் முதலில் வரலாற்றுப் புதினம் எழுதியவர் இவரே. வரலாற்றுப் புதினத் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார். இவர் எழுதிய வரலாற்றுப் புதினம் பார்த்தீபன் கனவு என்பதாகும். பல்லவரைச் சித்திரிக்கும் மற்றோர் நாவல் சிவகாமியின் சபதமாகும். சோழர்களின் பொற்காலத்தை ஒட்டி எழுந்த மற்றொரு நாவல் பொன்னியின் செல்வன் என்பதாகும். கல்கியையொட்டி பலர் வரலாற்று நாவல் களை எழுதி வருகின்றனர்.

**சாண்டில்யன்**

மலைவாசலும் ஜீவபூமியும் என்னும் சிறந்த நாவல்களை எழுதினர். இவர் எழுதிய கன்னிமாடம், மன்னன் மகள், யவன ராணி, கடல் புறா முதலிய நாவல்கள் அகப்புறம் கலந்த சுவை மிக்க நாவல்களாகும். ராபர்ட் கிளைவ் பற்றிய ராஜபேரிகை என்னும் வரலாற்று நாவல் 1981 – இல் சிறந்த இலக்கியத்திற்கான பரிசினைப் பெற்றது.

**கோவி மணிசேகரன்**

இவரின் செம்பியன் செல்வி கலிங்கத்துப்பரணியை அடிப்படையாக கொண்டு தோன்றிய சுவை மிக்க நாவலாகும். களப்பிரர் காலத்தை ஒட்டி எழுந்த முகிலில் முழைத்த முகம் பொற்கால பூம்பாவை அருமையான நாவல்களாகும். பொன்வேய்ந்த பெருமால் எழுதிய சந்திரோதையம் சிறந்த புதினமாகும்.

**அகிலனின்**

வேங்கையின் மைந்தன் சாகித்திய அகாதமியின் பரிசினைப் பெற்றது. கையல்விழி, வெற்றித் திருநகர் ஆகியன இவர் எழுதிய சிறந்த வரலாற்றுப் புதினங்களாகும்.

**ஜெகசிற்பின்**

திருச்சிற்றம்பழம் என்னும் வரலாற்று நாவல் 5000 ரூபாய் பரிசினைப் பெற்றது. இவர் நாயகி நற்சோனை, ஆலவாய் அழகன், மகரயாழ். மங்கை, பத்தினிகோட்டம், நாயகி நற்சோனை முதலிய நாவல்களையும் எழுதியுள்ளார்.

**அரு. இராமநாதன்**

இவரின் வீரப்பாண்டியன் மனைவி மிகச் சிறந்த வரலாற்று நாவலாகும். இவருடைய அசோகன் காதலி, சரித்திர நாவல்களில் சிறந்த இடத்தினைப் பெற்றது.

**சோமு**

இவர் பழந்தமிழகப் பண்பாட்டைப் பேசும் நாவல்களான 'கடல் கண்ட கனவு', வெந்நிலவு பெண்ணரசி ஆகியவற்றை எழுதினார்.

**நா.பார்த்தசாரதி**

இவர் எழுதிய பாண்டிமா தேவி நல்ல நாவலாகும். இவர் எழுதிய மற்றொரு சிறந்த நாவல் மணிபல்லவம் என்பதாகும்.

**பூவண்ணன்.**

வரலாற்று நாவல்களைச் சுவைப்பட எழுதும் மற்றொரு நாவலாசிரியர். 'இவருடைய காந்தலூர்ச் சாலை, கொல்லி மலைச் செல்வி, சிறந்த வரலாற்றுப் புதினங்கள் என்று குறிப்பிடபடுகின்றன.

**கோ.வி.மணிசேகரன்**

பல்லவர் கால வரலாற்றுப் பின்னணியில் எழுதிய 'இராஜ சிம்மனின் காதலி' என்னும் நாவல் சிறப்புப் பெற்றது.

**சான்டிலியன்**

இவர், கொற்கை சுந்தரப்பாண்டியனை மையமாக வைத்து எழுதப்பட்ட ராஜமுத்திரை ஒரு சிறந்த நாவலாகும்.

**கலைஞர் மு.கருணாநிதி**

இவரது ரோமாபுரிப் பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம் குறிப்பிடத்தக்க மிகச் சிறந்த நாவலாகும்.

**கி.ராஜேந்திரன்**

இவரது ரவிகுலத் திலகன் அண்மைக்காலத்தில் வெளிவந்த சிறந்த வரலாற்றுப் புதினமாகும்.

**சமூக நாவல்கள்**

**மு.வரதராசன்**

சமூக நாவல்களில் ஈடு இணையற்ற புகழ் பெற்றவர் ஆவர். இவர் தூய தமிழ் நடையில் நாவல்களைப் படைத்துள்ளார். இவரின் 'பாவை' என்னும் நாவல் தொடக்க காலத்தில் எழுதப்பட்டது. பர்மாவிலிருந்து, தமிழர் ஓடி வந்த நிகழ்ச்சியினை அவலம் தோன்ற இந்த நாவல் வருணிக்கின்றது. இவரின்

‘செந்தாமரை’ என்னும் நாவல் ஓர் உயரிய இலக்கியப் பழைய படைப்பாகும் ஒழுக்கத்தில் வழுக்கி விழுவோர்க்கு எச்சரிக்கைத் தரும் நாவலாக அல்லி என்னும் நாவல் அமைகிறது. இவரின் ‘கையமை’ என்னும் நாவல் ஒரு புரட்ச்சிப்படைப்பாகும் பண்பைப் பறைசாற்றும் நாவலாக மலர்விழி அமைகிறது. இவரின் ‘கரித்துண்டு’ நாவல் மேலை நாட்டு படைப்புகளோடு ஒப்பிட்டு காணத்தக்கது. ‘நெஞ்சில் ஒரு முள்’ ‘வாடாமலர்’ இவர் எழுதிய நூல்களில் இறுதிக்காலத்தது. இவரின் ‘அகல்விளக்கு’ நாவல் சாகித்திய அகாதமி பரிசுப் பெற்றது. இவரின் கல்லோ காவியமோ?, பெற்றமனம் ஆகியவை நெஞ்சை கொல்லைக்கொள்ளும் அற்புத படைப்புகளாகும்.

இவரைத் தொடர்ந்து சமுதாய நாவல்களை எழுதிய **தேவனின்** மிஸ்டர் வேதாந்தம், **வ.ரா.வின்** ‘சுந்தரி’ ஆகிய நாவல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன. **விந்தனின்** ‘பாலும் பாவையும்’ **அகிலனின்** ‘நெஞ்சின் அலைகள்’ சுவையான நாவல்களாகும் ‘சித்திரப்பாவை’ ‘ஞானபீட பரிசு’ பெற்றது. **என்.ஏ.பி.யின்** பிரம்மச்சாரி. காதலெனும் தீவினிலே, நீ சொல்லாதே. ஓவியம் என்னும் நாவல்களை எழுதியுள்ளார். **கொத்தமங்கலம் சுப்பு** எழுதிய தில்லானா மோகனாம்பால் தலைச்சிறந்த நாவலாகும் **பி.எம்.கண்ணனின்** நாகவல்லி, முல்வேலி, நிலவே நி சொல் என்பன நல்ல வரவேற்பைப் பெற்ற நாவலாகும் **சோமுவின்** நந்தவனம் **நா.பார்த்தசாரதியின்** குருஞ்சி மலர், பொன்விலங்கு சிறந்த நாவல்கள் ‘சமுதாய வீதி’ என்னும் நாவலுக்குச் சாகித்திய அகாதமி பரிசு 1981 வழங்கப்பெற்றது. பாலகுமாரனின் மெர்குறிப்பூக்கள் 1981, இலக்கியச் சிந்தனைக்கான பரிசைப் பெற்றது. இவருடைய ‘இரும்புக்குதிரைகள்’ 1985-ல் பரிசுப் பெற்றது.

**க.னா.சுப்பிரமணியத்தின்** ‘ஒரு நாள்’ **கோவி மணி சேகரனின்** ‘தென்னங்கீற்று’, தவமோ தத்துவமோ **கு.இராஜவேலுவின்** காதல் தூங்குகிறது, மகிழம்பூ **ஜெகசிற்பியின்** ‘சொற்கத்தின் நிழல்’ **தி.ஜானகிராமனின்** அம்மா வந்தாள், மரப்பசு என்பன, இன்றைய சிறந்த நாவல்களாகும். **இரா.சு நல்லபெருமாள்** எழுதிய கல்லுக்குள் ஈரம் போறாட்டங்கள் ‘திருடர்கள்’ நம்பிக்கைகள் ஆகியன சிறந்த நாவல்களாகும். **உமா சந்திரன்** எழுதிய முல்லும் மலரும் ஆகியன, பரிசுப் பெற்ற நாவலாகும். **ஜெயகாந்தனின்** பாரிசுக்குப் போ, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறார் ஆகியன சிறந்த நாவல்களாகும். கல்லூரி வாழ்வில் கற்பை இழந்த ஒரு பெண்ணின் பிற்கால வாழ்வை, சிலநேரங்களில் சில மனிதர்கள் என்னும் நாவல் படம் பிடித்துக் காட்டுகிறது. இவரின் ‘கங்கை எங்கே போகிறாள்’ என்னும் நாவலும் குறிப்பிடத்தக்கச் சிறந்த நாவலாகும். **மணியனின்** மோகம் முப்பது வருசம் என்னும் நாவலும் **கி.இராஜேந்திரனின்** சாருலதா என்னும் நாவலும். **ராஜம் கிருஷ்ணனின்** அமுதமாகி வருக **எஸ்ஏ.பியின்** ‘பிறந்த நாள்’ நாவலும் குறுநாவல்கள். சுமார் 100 பக்கங்களுக்கு உட்பட்ட கதைகளைக் குறுநாவல்கள் என்னு அழைக்கின்றனர். **சுஜாத்தாவின்** விபரீத கோட்பாடு மகரிசியின் புவனா ஒரு கேள்விக்குறி **அனுராதா ரமணனின்** சந்தியா காலத்து சலனங்கள் **சிவசங்கரியின்** ஒரு சிங்கம் முயலாகிறது. **இராஜேந்திரிரகுமாரின்** வணக்கத்துக் குறிய காதலியே, வாலியின் ‘அது அதில் இல்லை’ முதலியன குறுநாவல்களில் சிறந்தவை ஆகும்.

**புதுமை நாவல்கள்**

**கெப்சியா ஜெசுதாசன்** 1964 இல் ‘புத்தம் வீடு’ என்னும் நாவலை வெளியிட்டார். இது நடையாளும் கதையாளும் ஒரு புதுமை நாவலாக போற்றப்படுகிறது. **சுந்திரராமசாமியின்** ‘ஒரு புலியமரத்தின் கதை’ நாவல்

உலகில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இந்நாவலின் கதை மாந்தராக, புலியமரம் விளங்குகிறது. இது திருநெல்வேலி வட்டார வழக்கில் எழுதப்பட்ட நாவலாகும் **நீல பத்மநாபன்** 1968-ல் 'தலைமுறைகள்' என்னும் உயரிய படைப்பை எழுதி வெளிக்கொணர்ந்தார் இதுவும் நாகர்கோவில் வட்டார வழக்கில் எழுதப்பட்டவையே **கி. இராஜநாராயனின்** 'கிடை' 'கரிசல் காட்டில் ஒரு சம்சாரி' என்னும் இரு நாவல்களும் அவரின் திறத்திற்கு சான்றுகளாகும். இவர் எழுதிய 'கோபல்ல கிராமம்' என்னும் நாவல் தெலுங்கர்கள் தமிழ்நாட்டில் குடியேரியதை விளக்கும் சமூக வரலாற்று நாவல்களாகும். இது, 1976ல் வெளிவந்தது. இவர்களைத் தொடர்ந்து **ரகுநாதனின்** 'பஞ்சும் பசியும்' **சா.கந்தசாமியின்** 'சாயா வனம்' **ஆ.மாதவனின்** 'புனலும் மனலும்' **எம்.எஸ்.கல்யாணசுந்தரத்தின்** 'இருபது வருசங்கள்' ஆகியன தனித்தன்மை வாய்ந்த சிறந்த நாவல்களாகும்.

### பெண் எழுதாளர்கள்

**இராஜம் கிருஷ்ணன்** மன தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நாவல் எழுதுபவர். இவரின் மலர்கள், குறுஞ்சித் தேன் மிகவும் சிறந்த நாவல்களாகும். இவரது வளைக்கரம், நாவல் நேருபரிசையும், 'வேருக்கு நீர்' 1973-இல் சாகித்திய அகாதமி பரிசினையும் 1980-இல் கரிப்பு மணிகள், இலக்கியச் சிந்தனைப் பரிசையும் பெற்றன. **வசுமதி** 'கேப்டன் கல்யாணம்' என்னும் நாவலை எழுதினார். **லஷ்மி** 'பெண்மனம், காஞ்சனையின் கனவு, மதிலா விலாஸ், அரக்கு மாளிகை ஆகியன வாசகர்களைக் கவர்ந்த நாவலாகும். **சூடாமணியின்** மணத்திற்கு இனியவள், விடிவை நோக்கி ஆகியன சிறந்த நாவல்களாகும். **கிருஷ்ணா** இராஜ் என்னும் உயரிய படைப்பை வழங்கியவர். **விமலாரமணி** பாரிஜாதம் என்னும் நாவலை எழுதியுள்ளார்.

### மொழிபெயர்ப்பு நாவல்கள்

பிற மொழிகளில் தோன்றிய நாவல்களையும் தமிழில் மொழிப்பெயர்த்து தமிழுலகிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் உலகத்தில் புகழ்ப்பெற்ற நாவல்கள் பலவற்றை தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வகையில் மார்க்சிம் கார்க்கியின் தாய் நாவல், டால்ஸ்டாயின் போரும் அமைதியும், கெமிங்வேவின் கடலும் கிழவனும், பேர்ல்பர்க்கின் நல்ல நிலம், குஸ்தாவ் பிளாபர்ட்டின் மேடம் பவாரி, வால்டர் ஸ்காட்டுவின் ஐவன்கோ ஆகிய மேலைநாட்டு நாவல்களும் வேங்கடேச ஐயங்காரின் சுபன்னா என்னும் கன்னட நாவலும், தகழி சிவசங்கரம்பிள்ளையின் செம்மீன் என்னும் மலையாள நாவலும் மொழிப்பெயர்க்கப்பட்டன. மேலும், காண்டேகரின் மராட்டி நாவல்களும் தாகூரின் வங்கால நாவல்களும் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டன. குஜராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட நாவல்களும் தமிழில் மொழிப் பெயர்க்கப்பட்டன. ஏழைப்படும்பாடு, 'இழிச்ச வாயன்', ஆகிய நாவல்களை ஆங்கிலத்திலிருந்துத் தமிழுக்கு சுந்தானந்த பாரதியார் மொழிப்பெயர்த்துள்ளார். தாகூரின் பூந்தோட்டம், 'புயல்' ஆகிய நாவல்களை நா. குமாரசாமியும், குமுதினி என்னும் நாவலை ரங்க நாயகியும், மாயா வினோதினியைத் தஞ்சமும் மொழிப்பெயர்த்துள்ளார். இதேபோன்று இன்றும் திராவிட மொழிகளில் எழுதப்படும் நாவல்களும் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டு வருகின்றன.

## 4.4 நாடகங்கள்

நாடகக்கலை என்பது உலகத்தின் பொதுக்கலை. எனவே, உலக நாடகங்களின் தோற்றமும் வகைகளும் பல நிலைகளில் இருந்தாலும் இந்நாடகக்கலை எப்படி தோன்றியிருக்கும் என்பதற்குப் பொதுவாக ஊகிக்கும் அடிப்படைக் கருத்தில் அறிஞர்களிடையே பெரும் வேறுபாடு இல்லை எனலாம்.

**நாடகம் தோற்றம் பற்றிய அறிஞர்களின் கருத்து அல்லது அடிப்படை உண்மைகள்**

"ஒருவரைப்போல் நடிக்கும் இயல்பூக்கம் எந்த ஒரு தனிநாட்டு மக்களுக்கும் உரியதன்று உலகம் முழுவதற்குமே அந்த உணர்ச்சி உண்டு. ஆதி மனிதனின் ஆரம்ப உணர்ச்சிகளுள் இதுவும் ஒன்று" என்று அஸார் தைஸ் நிக்கோஸ், நாடக வரலாற்றுச் சுருக்கம் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்

"நேரில் கண்ட காட்சியைச் சித்திரத்தில் காணும் பொழுதும், தினமும் பார்த்துக்கொண்டிருக்கும் நம் வீட்டிலுள்ள பாப்பாவைப் புகைப்படத்தில் பார்க்கும் பொழுதும், உண்மையான பழங்களைப் பார்ப்பதைவிடப் பழங்கள்போல் செய்தவற்றைப் பார்க்கும் பொழுதும் நமக்கு ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படுகின்றது இந்த உணர்ச்சிக்கு என்ன காரணமோ அதே காரணத்தால்தான் நாடகமும் தோன்றியிருக்க வேண்டும். இதுவே, அறிஞர்களின் கருத்து என்கிறார். அவ்வை சண்முகம் (பழுத்த நாடக அனுபவமிக்கவர்)

"பொதுவாக மனிதன் மூன்று உணர்வுகளைப் பெற்றுள்ளான். 1. உணவு 2. உடலுறவு, 3. விளையாட்டு இவற்றில் மூன்றாவதான விளையாட்டு உணர்ச்சியில், பிறரைப் போலவே செயல்பட, இளமைக்காலம் முதல் விருப்பப்படுகிறான், இப்படி அவன் செயல்படும்பொழுது, போலச் செய்தலை (Immitation) ஒலிகளாலும் சிரிப்புக்களாலும் நிரப்புகிறான்". என்று ஆர் எல் அகுஜா, Theory of Drama in Ancient Indian (1964) குறிப்பிடுகிறார்.

**நாடகத் தோற்றம் பற்றிய அறிஞர்களின் கருத்து வேறுபாடுகள்**

"பிறப்பு என்பது பொதுவாக இருந்தாலும் விதையிலிருந்து செடி பிறப்பது. முட்டையிலிருந்து குஞ்சி பிறப்பது. தன்மைகளால் வேறுபடுவதுபோல நாடகத் தோற்றத்திலும் கருத்து வேறுபாடு உண்டு".

"நாட்டியத்திலிருந்து நாடகம் பிறந்தது' என்று ஹில்லேப்ராண்ட் (Prof Hillerbrand) ஸ்டென்கொனா என்ற அறிஞர்கள் குறிப்பிடுகிறனர். "பொம்மலாட்டத்திலிருந்து வந்தது" என்று பிஷல் (Pischel) கூறுகிறார் "நிழலாட்டத்திலிருந்த வந்தது" என்று லிடர்ஸ் (Luders) கூறுகிறார்.

இக்கொள்கைகளுக்கெல்லாம் தக்க சான்று இல்லை என்று கூறுகிறார் அறிஞர் கீத் (Keith). அவர்கள் சமஸ்கிருத நாடகங்களுக்கு மூலம் கிரேக்க நாடகம் என்று நினைக்கின்றார். விண்டிஸ் (Windish) என்னும் அறிஞர் இக்கொள்கையில் உடன்பாடு இல்லை கீத் என்னும் அறிஞரின், இக்கருத்து முரண்பாட்டை அறிஞர் சாஸ்திரியார் குறிப்பிடும் பொழுது, "நாடகத்தில் உதவும் திரையைக் குறிக்க 'யவனிகா' என்ற சொல் இருப்பதாலும் நாடகத்தை அங்கங்களாக, கிரேக்க நாடகங்கள்போல் பிரித்திருப்பதாலும் சமஸ்கிருத நடிகையைப்போல் கிரேக்கில் இருப்பதாலும், 'விண்டிஷ்'. கிரேக்க நாடகத்தில் திரை வழங்கப்படாமையாலும் ஏனைய ஒற்றுமைகள் இயற்கையாய் ஒன்றிலிருந்து ஒன்று கடன் வாங்காமல் வந்திருத்தலாலும் வின்டிஷின் கொள்கை ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று எனக் கீத் கூறினார் என்று குறிப்பிடுகிறார்.

நாட்டியத்திலிருந்து நாடகம் தோன்றியது. நாட்டியத்திலிருந்து தோன்றிய நாடகம் ஒரு காலக்கட்டத்தில் பாடலையும் வசனத்தையும் கொண்டது. ஆல்டன்பர்க் (Oldenburg) என்பவர் இன்பத்தை வெளிப்படுத்த ஆதிகால மனிதனின் இயற்கையான வெளிப்பாட்டின் ஒருவகை வடிவமே நாடகம் என்று ஹில்லேப்ராண்ட் (Hilleabrant) கூறுகிறார்.

நாட்டுக்கு நாடு தட்ப வெப்பம், மொழி மாறுபடுவது போல இக்கலையில் தோற்றம் மாறுபடுவது இயற்கையே, அவ்வகையில் இக்கலையும் மாறுபாடு அடைகிறது.

**உலகில் நாடகத்தோற்றம்**

தமிழ்நாடகதோற்றத்தை அறியும் முன், உலகில் நாடகத் தோற்றம் எவ்வாறு அமைந்தது என அறிதல் ஒப்பாய்வுக்கு ஏற்ற நெறியாகும்.

உலகில் பல நாடுகளிலும் சமயத்தைப் பரப்புவதற்கு அதன் தூதுவர்கள் பல கருவிகளைக் கையாண்டனர். அவர்கள் கையாண்ட கருவிகளுள் வலிமை மிக்கக் கருவியாக நாடகக் கலையைக் கருதினர், சமயத் தொடர்பாகவே உலகின் பல நாடுகளிலும் நாடகங்கள் தோன்றின.

ஸ்பெயின் நாட்டில் கிருத்துவ மதச் சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என்றும் (கி.பி.12 ஆம் நூற்றாண்டு) ஜெர்மன், ஜப்பான், கிரீஸ், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் சமயத்தின் அடிப்படையில் நாடகம் தோன்றியது என்றும் கூறுகின்றனர்.

இதில், ஜப்பானிய நாடகத் தோற்றம் பற்றிச் சிறிது கருத்து மாறுபாடு இருப்பினும் தங்கள் நாட்டு நாடக வளர்ச்சி 'சம்போசர்' (Sambosa) என்னும் நாட்டியத்திலிருந்து வந்ததாகவே கொள்ளுகின்றனர். எரிமலையிலிருந்து தப்ப இந்நாட்டியம் பயன்பட்டது கேளிக்கை நிறைந்த பப்பூன் ஆட்டம், விகடங்கள் இவைகளையே மதவிழாக்களில் ஆப்பிக்கர் நடத்த, இந்நிகழ்வே நாட்டின் நாடகத்தொடக்கம் என்றனர்.

பழமைக்கு முதலிடம் வகிக்கும் கிரேக்க நாட்டில் எலுசீனியன் மதவிழாவில் ஆடிய நடனங்களே நாடகக் கலையைத் தோற்றுவித்திருக்கின்றன. இலங்கையில் தொடக்கத்தில் பூத நடனக்குழுவின் நடனமே நாடகமாக இருந்தது

சீனாவில் கி.பி.12ஆம் நூற்றாண்டு, இதற்குமுன் விகடங்கள், பாட்டுகள் அபிநய நாட்டியம் பரவலாக நடை பெற்று வந்தன. நாடகம் உருப்பெற்றகாலத்திலும் ஆபாச கருத்துகளே தொடக்கத்தில் நாடகத்தில் இருந்தன.

பிரிட்டீஸ் (இங்லாந்து) நாட்டில் கி.பி 13, 14-இல் ஆங்கிலம் இலக்கியத் தோற்றம் பெற்றது. கர்த்தோலிக்க மதத்தைப்பரப்ப கிருத்துவபாதிரிமார்கள் தொடக்கத்தில் மாதாக்கோயில்களில் 1. மறைபொருள் 2. அற்புத நாடகம் (ஓரங்க நாடகம்) நடித்தனர், இதுவே ஆங்கில நாடகத்தின் தோற்றம் என்கின்றனர். ஸ்வீடனில் கி.பி 16 ஆம் நூற்றாண்டிலும், மென்மார்க் கி.பி 17 ஆம் நூற்றாண்டிலும் தோன்றியது என்கின்றார்.

**நாடகம் முதலில் தோன்றிய நாடு**

உலகின் பல்வேறு பகுதிகளில் தோன்றியதாக அறியப்பெற்றாலும் எகிப்தில்தான் நாடகம் முதலில் தோற்றம் பெற்றது. எகிப்தில் கி.மு 3000 வரை உள்ள பிரமிடுகள் சவக்கல்லறைகளில் 55 நாடகங்கள் கிடைத்திருப்பதாக மாஸ்பரோ (Maspero) கூறுகிறார். அந்நாடகங்களில் இடம் பெறும் குறிப்புகள்,

1. பாத்திரங்களின் பெயர்கள் நடிப்புக் குறிப்புகள்
2. இறந்துபோன 'புரோவா' மன்னர்களின் கதைகள்
3. ஒசிரிஸ் (Osiris) ஐசிஸ் (Iris) ஹோரஸ் (Horus)

ஆகிய மூன்று தெய்வீக மனிதர்களின் சரிதைகளை ஒட்டிய துன்பவியல் நாடகங்கள் நடிக்கப்பட்டது. அரசர்களின் முடிசூட்டு விழாவில் அவைகள் நோயாளிகளைக் குணப்படுத்தும் சாந்திக் கூத்துகளாக நடிக்கப்பட்டன. என்று (டாக்டர் பிரிட்ஸ்வே) கூறியதாக வி.சுப்ரமணியம் "இந்திய மேலைநாட்டு மேடைக்களங்கள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

**இந்தியாவில் நாடகத்தோற்றம் பற்றிய கருத்து**

இந்தியாவிலும் தெய்வம் தொடர்புடைய கலையாகவே நாடகக்கலையைக் கருதப்படுகிறது. வடநாட்டினர் பரதமுனிவரை நாடகக் கலையின் தந்தை எனக் கருதுகின்றனர். பரத முனிவர் தம் புராணத்தில் நாடகம் பிறந்ததை ஒரு கதையாகக் கூறுகிறார். தேவர்களின் கண்களுக்கு விருந்து அளிக்கவேண்டும் என்று கருதிய தேவேந்திரன் படைப்புக் கடவுளாகிய நான்முகனை நோக்கித் தன் விருப்பத்தை வெளியிடுகிறார். நான்முகன் நாடகத்திற்கு ஏற்பாடு செய்கிறார். அது அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நடப்பதாக உருவான நாடகம். அவர்கள் குழப்பத்தால் தடைப்பட யாரையும் புண்படுத்தாத 'திரிபுரதகனம்' என்னும் நாடகத்தை உருவாக்கினார் இன்பச்சுவைக்கு அழகும், பாடலும் கூட்டினார். சிவன் நடனமாடினார். இவ்விதமாக நடந்த நாடகத்தைப் பரத முனிவர் கண்டு அதனை உலகுக்குக் கொண்டு வந்தார். இப்புராண வரலாற்றுக்குத் துணையாவது போல வேதங்களில் நாடக அம்சங்கள் பொதிந்து கிடப்பதையும், கி.பி.140 இல் தோன்றிய 'பதஞ்சலி சூத்திரத்தில்' நாட்டியத்தைப் பற்றிய குறிப்பு இருந்ததையும் காணலாம். எனவே, இந்திய நாட்டு வரலாற்றிலும் இலக்கண சமயத்தோடும் தொடர்பு கொண்டு நாட்டியத்திலிருந்து பிறந்ததாக அறிய முடிகிறது.

**தமிழ் நாடகம் தோற்றம் வளர்ச்சி**

மேற்கண்ட சிந்தனைகளையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ் நாடகத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி பற்றி நாம் ஆராயும் பொழுது இவ்வாய்வால், தமிழ் இலக்கிய வரலாறு மேலும் மணமுடையதாக விளங்கும். இத்தமிழிலக்கிய வரலாறு எழுதுவோர் பொதுவாகத் தொல்காப்பியர் காலம், சங்க காலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், ஆங்கிலேயர் காலம், நாயக்கர் காலம், மராத்தியர் காலம், சோழர் காலம், விடுதலைக்கு முற்பட்ட காலம் என்று பிரித்து ஆராய்வர். இந்நாடகக்கலை வரலாற்றையும் அவ்வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பகுத்துக்காணுதல் பொருந்துவதாகும்.

தமிழகத்தில் எல்லா வரலாறுகளும் தொல்காப்பியர் காலத்திலிருந்துத் தொடங்கப்பட்டாலும் அவைகளின் தொடக்கம் அக்காலத்திற்கு முன்பிருந்தே வளர்ந்து வந்த ஒன்று, என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு அகத்தியர் காலம் முதல் தமிழ் நாடகத் தோற்றம் பற்றி வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இங்கு பகுத்து ஆராயப்படுகிறது.

**அகத்தியர் காலத்தில் நாடகம்**

நாடகத்தமிழ் பற்றி கூறும் நூல்களில் பழமையானது அகத்தியம். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கணத்தை கூறும் ஒரு பெரிய இலக்கண நூல் இது. தென் மதுரைக்கண் இருந்த தலைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய அகத்திய முனிவரால் அருளிச் செய்யப்பட்டது என்று கூறுகிறார் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்.

இந்நூல், கிடைக்காமையால் அவைபற்றிய செய்திகளை அறிய இயலவில்லை எனினும், அகத்தியம் என்னும் பெயரால் நூற்பாக்கள் சில கிடைக்கின்றன.

"அவைதாம்

சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்று

ஆய்ந்துற வகுத்தனன் அகத்தியன் தானே"

என்பன போன்று அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர் எடுத்துக்காட்டும் அகத்திய நூற்பாக்களால் கூத்துகள் பற்றிய இலக்கணம் அகத்தியரால் கூறப்பட்டது என அறிகிறோம். 'நாடகம்' 'கூத்து' என்ற பெயரால் வழங்கி வந்தது

அகத்தியர் காலத்தில் இருந்த நாடகநூல் 'பரதம்'. ஆசிரியர் பரதர். 'பரதசாத்திரம்' – பரதர் இது வடமொழி நாடக இலக்கணநூல். இவ்விரண்டு நூல்களையும் இயற்றிய புலவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் புலமை பெற்றவராதல் வேண்டும். அகத்தியர் காலத்தில் கூத்தின் ஒரு வகையான நாட்டியத்தைப் பரதநாட்டியம் என வழங்குவதற்கு இவரே காரணமானவர்.

**தொல்காப்பியத்தில் நாடகக் கூறுகள்**

நாடகம் என்ற சொல்லை முதன் முதலாகத் தொல்காப்பியத்தில் தான் காண்கிறோம்.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்' தொ.அக.56

இந்நூற்பா இவர்காலத்து நாடக வழக்குண்மையைக் காட்டுகிறது.

பத்துப்பாட்டில் கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை போன்ற இலக்கியங்களின் தலைப்புக்களே. கலையை வளர்க்கும் கூட்டத்தினரின் பெருமையினைச் சுட்டிக்காட்டுபவையாக உள்ளன.

வள்ளிக்கூத்து

'வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்

நாடு பல கழிந்த பின்றை' பொரு - 370-71

என்னும் வரிகள் பல சிற்றூர்களிலும், இக்கூத்து நடைபெற்றதை உணர்த்துகிறது.

'நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த

விசிவீங் கின்னியம் கடுப்ப பொரு – 55-56

என்னும் கூற்று நாடக மகளிர் பற்றியும் ஆடுகளம் குறித்தும் கூறப்படுகிறது.

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் 2. சிலப்பதிகாரம் 3. மணிமேகலை ஆகிய நூல்களில் நீதி நூலாசிரியர்கள் நாடக மாந்தரைப் படைத்து, அவர்களை முன்னிலைப்படுத்திக் கூறல், அவர்கள் தனிமையில் பேசுவதாகக்கூறல் தங்கள் நெஞ்சத்தை முன்னிலைப்படுத்திக் கூறுவதாகக் கூறல் போன்ற நாடக அமைப்புக் கூறுகளைக் கையாண்டுள்ளனர்.

**திருக்குறளில் நாடகக் கூறுகள்**

படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில் தனிமையில் கூறுவதாக வரும் பாங்கை

'என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்னை

முன்னின்று கன்னின் றவர்

என்னும் குறள் ஒரு வீர நாடகத்தையே படைத்துக்காட்டுகிறது.

வருமையாளன் நாடகமேடையில் நின்று அலறுவது போன்ற நாடகப் பாணியில்

'இன்று வருவது கொல்லோ நெருகலும்
கொன்றது போலும் நிரப்பு'

என்னும் குறள் அமைந்துள்ளது. நேற்று என்னை வறுமை வாட்டியது, கொலை செய்தது போன்று துன்பம் வந்தது என்னை நெரித்தது ஆ....... அவ் வறுமை இன்றும் என்னைக் கொல்ல வருகின்றதோ? என நாடகக் கூறுகளைப் பெற்று அமைந்தள்ளது. கூத்தர், கூத்தியர் என்ற சொற்கள் காணப்படுவது போல 'ஆடல்' என்ற சொல்லும் தொகை நூலில் காணக்கிடக்கின்றது.

'ஆடல் பாடு பெறும்' நாண் - 86
'பாடலொடு ஆடல் பயின்று' ஏலாதி – 51
'படுத்தலொடு ஆடல்' ஏலாதி – 69

என்ற வரிகள் இதற்குச் சான்றுகளாவன.

**சிலப்பதிகாரத்தில் நாடகக் கூறுகள்**

இக்காப்பியத்தில் நாடகம் எவ்வண்ணம் இருந்திருக்கலாம் என்பதனைக் கீழ்க்கண்ட வகையில் பிரித்து நோக்கலாம்.

1. நாடகம் - சொல்லாட்சி
2. பதினோரு ஆடல்கள்
3. நாடக அரங்கு
4. நாடகக் கலை அமைப்புகள்

**நாடகம் சொல்லாட்சி**

நாடகமேத்தும் நாடக கணிகையொடு சில.பதி – 15
நாடக முருப்பசி சில – 21

**பதினோரு ஆடல்கள்**

1. அலாரிப்பு 2. ஜதீஸ்வரம் 3. வர்ணம் 4. மாகமாசி 5. மனமே 6. வரட்டும் 7. விருத்தம் 8. நடனமாடினார் 9. வருகலாமே 10. தில்லதனா 11. குறத்தி நடனம் என்பன. மாதவி ஆடிய பதினோரு ஆடல்களையும் நோக்கினால் சிலப்பதிகாரக் காலம் ஆடற்கலைக்குத் தந்த தூய்மை வெளிப்படும். மாதவி ஆடிய 11 ஆடல்களும் நாடகத்தின் உறுப்புகள் என்பர் அடியார்க்கு நல்லார்.

**மணிமேகலையில் நாடகக் கூறுகள்**

மணிமேகலை துறவு காப்பியமாயினும், இதனுள் நாடக யாழ், தண்ணுமை, குழல் போன்ற செய்திகள் ஆங்காங்குச் சுட்டப்படுகின்றன. நாடகம் இருந்ததற்காணச் சான்று,

'ஆடல் கூத்தினொடு அவிநயந் தெரிவோர்
மணி – 19

'நாடகம் கண்டு பாடற் பான்மையில் கேள்வி
இன்னிசை கேட்டு மணி 25 – 82

'நாடகம்' என்பது 'கூத்து' என்னும் பொருளிலேயே எடுத்தாளப்பட்டுள்ளது.

**பல்லவர் காலத்தில் நாடகம்**

இக்காலத்து நாடகம் பற்றி இலக்கியங்களாகிய பெருங்கதை, சீவக சிந்தாமணி, சமயக்குரவர் பாடல்கள், கோயில் சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றால் நாடகக்கலை பற்றிய செய்திகள் வளர்ந்த பாங்கு அறியப்பெறும். பெருங்கதை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று இ.எஸ்.வரதராஜ ஐயர் கூறுகிறார். நாடகம் நடத்த தனிக்குழுக்கள் இருந்த செய்தியிணை,

'வாயில் கூத்தும் சேரிப்பாடலும்

கோயில் நடக் குழுக்களும் வருகென' பெருங் 1-37

என்னும் அடிகள் இதற்குச் சான்றாக அமைகிறது.

**சோழர் காலத்தில் நாடகம்**

கி.பி எட்டாம் நூற்றாண்டில் வளரத்தொடங்கிப் பத்தாம் நூற்றாண்டில் புது மலர்ச்சிப் பெற்றது எனலாம். தமிழிலக்கியத்தின் பொற்காலம், இக்காலத்தில் தோன்றிய இராசராசேசுவர நாடகம் இராசராசன் வரலாறு பற்றியது

1. தஞ்சை பெரிய கோயில் நிகழ்ச்சி
2. குடிமக்கள் மன்னனிடம் கொண்ட அன்பு
3. போர் மாட்சி
4. தேவிமார் அளித்த நிவந்தங்கள்
5. கருவூர்த் தேவர் புகழ்ந்து பாடிய செய்தி
6. நடித்தவர் - விசயராசேந்திர ஆச்சாரி
7. நாடகம் நடிப்பவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டன

ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இராசராசேசுவர நாடகம் பூம்புலியூர் நாடகம் பல்லவர் காலத்தில் தோன்றியது. விசயராசேந்திர ஆச்சாரி, ஐயாறன் கலியுகச் சுந்தரத் தலைக் கோலி, நக்கள் பிள்ளையாளி, ஏழு நாட்டு மங்கை, பெருநம்பி குமரன், சிகண்டன், இத்திமறைக்காடன், விருதராச பயங்கர ஆசாரியான் ஆகிய நடிகர் குறிப்புகளும் காணப்படகின்றன.

**நாயக்கர் மராத்தியர் காலத்தில் நாடகம்**

இக்காலத்தில் இலக்கிய வடிவில் நாடகத்தோற்றம் பெற்றது. அவை, முக்கூடற் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள் அ – பள்ளு நாடகம் - உழவர்களின் வாழ்வை சித்திரித்தல் (முக்கூடல் பள்ளு) ஆ – குறவஞ்சி நாடகம் - குறத்தி குறி கூறுவதாக அமைதல் (திருக்குற்றாலக் குறவஞ்சி) இ - நொண்டி நாடகம் - நகைச்சுவை எள்ளல் சுவை நிரம்பியது.

**நாடக இலக்கியங்கள் துவக்கம்**

முன் கண்ட நீண்ட வரலாற்றில் நாடகங்கள் நாட்டியங்கள் பற்றிய குறிப்புகள் பரவிக் கிடக்கின்றன. இந்நீண்ட வரலாற்றுக்குப்பின் இலக்கிய வடிவில் முதன் முதலாகக் கிடைக்கும் நாடக வடிவங்கள் இம்மூன்றேயாகும் காலம் செல்லச் செல்ல 'Drama' என்ற பரிமாணத்தைப் பெற்றது. இதன் தொடர்ச்சியாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாடகம் பரவிச் செழித்தது. பின்னர் புராணச்சம்மந்தமான நாடகங்கள் தோன்றின.

அரிச்சந்திரபுராணம், மார்க்கண்டேயர் நாடகம், சிறுதொண்டர் நாடகம், அல்லிநாடகம், பவளக்கொடி நாடகம், கிருஷ்ணண் தூது நாடகம், கோவல நாடகம், காத்தவராயன் நாடகம், இராவண சம்ஹார நாடகம் முதலிய நாடகங்கள் நாடக மேடையில் நடிக்கப்பட்டுப் பொது மக்களால் பாராட்டப்பட்டன.

1891 ஆம் ஆண்டில், ஆரம்பத்தில் தமிழ் நாடக உலகில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டது. சங்கரதாஸ் சுவாமிகள் என்னும் பெரியார் நாடக உலகில் நுழைந்தார். அவர் பழைய நாடகங்களை ஒழுங்குபடுத்திப் புதிய நாடகங்கள் பலவற்றை எழுதித் தாமே நடித்தும் ஆசிரியராயிருந்தும் தமிழ் நாடகக் கலைக்கு மகத்தான சேவை புரிந்தார். சங்கரதாஸ் சுவாமிகள் சுமார் 40 நாடகங்கள் எழுதியிருக்கிறார்.

**பெ.சுந்தரம் பிள்ளை**

திரு.பெ.சுந்தரம்பிள்ளை 1855-ஆம் ஆண்டு ஆலப்புழையில் பிறந்தவர். திருவனந்தபுரம் வல்கலைத் தத்துவப் பேராசிரியர். இவர் மனோன்மணீயம் நடிப்பதற்கன்றிப் படிப்பதற்காகவும் எழுதப்பட்டது இது லிட்டன் பிரபு (Lard Lytton) ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்னும் நூலைத் தழுவியதாகும். தமிழ்ச்சுவை, நாடகச்சுவை, கவிச்சுவை கலந்த இந்நூல் நாடகக் காப்பிய உலகில் தலையாயதாய் மிளிர்கின்றது.

**பரிதிமார் கலைஞர்**

திரு.வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார் தம் பெயரைப் 'பரிதிமாற்கலைஞர்' எனத் தூய தமிழில் மாற்றி அமைத்துக் கொண்டார். இதன் மூலம் இவர் தமிழ்ப் பற்று விளங்கும். கிருத்துவக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும் ஒருங்கே புகழ்பெற்று விளங்கிய இவர், 'ஞான போதினி' என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கும் ஆசிரியராய் இருந்தார். 'நாடகவியல்' (1897) என்னும் நாடக இலக்கண நூலை இயற்றினார். பாவலர் விருந்து' என்ற பாடல் தொகுப்பு நூலையும், தனிப் பாசுரத் தொகை' என்ற இசைப்பாடல் தொகுப்பு நூலையும் இயற்றி வெளியிட்டார். 'ரூபாவதி', 'கலாவதி', 'மான விஜயம்' சூர்பநகை என்னும் மூன்று நூல்களும் இடையிடையே பாட்டுகள் அமைக்கப்பட்டு உரைநடையில் எழுந்த நாடக நூல்களாகும்.

**பம்மல் சம்பந்த முதலியார்**

சென்னையைச் சேர்ந்தவர். பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் நம்மிடையே வாழ்ந்த 'தமிழ் நாடகத் தந்தை' ஆவர். 1891 - இல் தான் அமெச்சூர் சபைகள் தோன்றின. நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் சென்னையில் சுகுண விலாச சபையை நிறுவினார். பம்மல் முதலியாரவர்கள் நாடகத்தைத் தொழிலாகக் கொள்ளாமல் கலை வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு நாடகக் கலைக்கு ஓர் உயர்வான ஸ்தானத்தைத் தேடித்தந்தார். பம்மல் சம்பந்த முதலியார், ஷேக்ஸ்பியர், காளிதாசன் ஆகியோரின் நாடகங்களை மொழி பெயர்த்ததோடு கற்பனையாகவும், சுமார் எண்பது நாடகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். நாடகங்கள் யாவும் அமெச்சூர் தொழில் முறை சபைகள் ஆகிய இரு சாராராலும் மேடையில் நடிக்கப்பட்ட நாடகங்கள். 'மனோகரா' என்ற இவரது கற்பனை நாடகம், சென்ற 65 ஆண்டுகளாகத் தமிழ் நாடக மேடையில் சமத்துவம் பெற்ற நாடகமாய் விளங்கி வருகிறது. தமிழ் நாடக உலகம், 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்'

சங்கரதாஸ் சுவாமிகளையும், 'தமிழ் நாடகத் தந்தை' என்று பம்மல் சம்பந்த முதலியாரையும் அழைத்தனர்.

**தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்**

இவர் தூத்துக்குடியைச் சேர்ந்தவர். தமிழ் நாடகத் தலைமையாசிரியர் இவர். சுவாமிகள் நாடக அமைப்புத்திறன் தெரிந்தவர். காட்சி அமைப்பதில் நயங்கண்டவர். நாடகப்பாத்திரங்கள் வாயிலாக வெளிவரும் பாடல்களிலும் உரையாடல்களிலும் நல்ல பல கருத்துகளை வைத்தவர். சுவாமிகள் ஏறத்தாழ நாற்பது நாடகங்களை எழுதியுள்ளார். அபிமன்யு, சுந்தரி, சீமந்தினி, பவளக்கொடி, இலங்காதகனம் கோவலன் நல்லத்தங்காள், சத்தியவான் சாவித்திரி சதிசுலோசனா சதியநுசூயா, பிரகலாதன், வள்ளி திருமணம் முதலிய நாடகங்கள் அவற்றுள் சிலவாகும். வடமொழி நாடகமான மிருச்சகடியையும், ஷேக்ஸ்பியர் நாடகமான ரோமியோ ஜுலியட், சிம்பலைன் ஆகியவற்றையும் தமிழ் நாடகங்களாக்கியுள்ளார். சுவாமிகள் இயற்றியருளிய நாடகங்கள் தாம் தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு. 'அடிப்படைச் செல்வங்கள்' என்று சொல்லலாம்.

**அறிஞர் அண்ணா**

இவர் அரசியல், சமுதாய சீர்திருத்த நாடகங்களை எழுதி மக்களிடையே ஒரு புரட்சியினையும் சிந்தனைக் கிளர்ச்சியினையும் உண்டாக்கி அதன் விளைவாக மக்கள் மன்றத்திலேயே ஒரு மறுமலர்ச்சியினை உருவாக்கிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும். சம்பவங்கள் 'ஓர் இரவு' என்னும் நாடகத்தைப் பார்த்து கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இவரைத் 'தென்னாட்டுப் பெர்னாட்ஷா' என்றும் அழைத்தார். 'நீதிதேவன் மயக்கம்' சிந்தனையாற்றலைத் தூண்டிவிடுவதாகும். அண்ணா தீட்டிய ஒப்பற்ற வரலாற்று நாடகம் சந்திரமோகன், 'வேலைக்காரி' இவை, சமூக சீர்திருத்த நாடகங்கள். கருணாகரத் தொண்டைமானை மையமாக வைத்து 'கலிங்க ராணி' நாடக உலகிற்கு அண்ணா ஆற்றிய அருந்தொண்டுகள் அளவில்லாதது ஜெகசிற்பியன் 'மதுராந்ததி' கோவி.மணிசேகரன் செம்பியன் செல்வி' சாண்டில்யன் 'கடல் புறா' ஆகியன குறிப்பிடத்தக்கன.

**நாடகத்தமிழின் இன்றைய நிலை**

இன்று நாடகம் நல்ல முறையில் வளர்ந்துவருகின்றது. திரு.பி.எஸ்.ராமையா அவர்கள் எழுதிய 'தேரோட்டி மகன்' 'டாக்டருக்கு மருந்து', தில்லை நாயகம்' முதலிய நாடகங்கள் திரு.சகஸ்ரநாமம் அவர்கள் நடத்தும் 'சேவாஸ்டேஜ்' குழுவினரால் நடத்தப்பட்டன. டி.கே.எஸ் சகோதரர்கள் கல்கியின் 'சிவகாமியின் சபதத்தினை அரங்கேற்றித் திறம்பட நடித்தனர். அரு.இராமநாதன் எழுதிய 'ராஜராஜ சோழன்' இக் குழுவினரின் புகழ்மிக்க நாடகமாகும். 'அப்பாவின் ஆசை' என்ற சிறுவர் நாடகத்தையும் அரங்கேற்றினர். திரைப்பட இயக்குநர் திரு.கே.பாலசந்தர் 'நீர்க் குமிழி,' 'மெழுகுவர்த்தி', 'நாணல்', 'எதிர் நீச்சல்', 'நவக்கிரகம்' பெண் பாத்திரம் இன்றி ஒரே அரங்கில் (Set) பாட்டும் இல்லாது நடைபெறும் நாடகமான 'மேஜர் சந்திரகாந்த்' முதலிய நாடகங்கள் இவர் எழுதியனவாகும்.

நாடக மேடையைத் தம் வயப்படுத்தியிருக்கும் மற்றோர் இளைஞர் திரு.'சோ' ஆவார். இவர், மக்கள் பெரிதும் விரும்பி மகிழும் நகைச்சுவை நாடகங்களை எழுதி, மேடையேற்றி வந்தவர். இன்றைய சமுதாயச் சூழலில் உள்ள குற்றங்குறைகளை இவர் நாடகங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'மனம் ஒரு குரங்கு', 'சம்பவாமியுகே யுகே', 'கோவாடிஸ்', 'முகம்மது

பின்துக்ளக்,' 'யாருக்கும் வெட்கமில்லை', 'உண்மையே உன் விலை என்ன?' முதலியன இவர் எழுதி நடிக்கும் பிரபலமான நாடகங்களாகும். 'ஆனந்த விகடன்' நிறுவனத்தினர் நடத்திய நாடக இலக்கியப் போட்டியில் திரு.முத்துசாமி என்பவர் எழுதிய 'கலங்கரைத் தெய்வம்' முதற்பரிசு பெற்றது.

நடிகர் திலகத்தின் சிவாஜி நாடக மன்றம், திரு சக்தி கிருஷ்ணசாமி எழுதிய 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நாடகத்தினைச் சிறப்புற நடத்தி வந்தது. திரு.பாலமுருகன் எழுதியுள்ள 'நீதியின் நிழல்,' 'திரு.ஜி.பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள 'தேன்கூடு', திரு.சக்தி கிருஷ்ணசாமி எழுதியுள்ள 'ஜஹாங்கீர்' முதலிய நாடகங்களைச் சிறப்புற நடத்தி வருகின்றனர். திரு.அகிலன் அவர்களின் சிறந்த படைப்பான 'வேங்கையின் மைந்தன்' என்ற புதினத்தை திரு.சக்தி கிருஷ்ணசாமி, திரு.ஏ.பி.நாகராஜன் ஆகிய இருவரைக் கொண்டு நாடகமாக்கித் திறம்பட நடித்தினர். வியட்நாம் வீடு, தங்கப்பதக்கம் ஆகியன, சிவாஜி மேடையில் அரங்கேற்றிப் பின் திரைப்படம் ஆகி வெற்றி கண்டன. எம்.ஜி.ஆர். நாடக மன்றம் முன்பு 'அட்வகேட் அமரன்' திரு.நா.பாண்டுரங்கன் அவர்கள் எழுதிய 'சுமைதாங்கி' என்ற பெயரில் 'இன்பக் கனவு' முதலிய நாடகங்களை நடத்தி வந்தது. எம்.ஆர்.ராதாவின் பிரபலமான நாடகம் 'ரத்தக்கண்ணீர்' பின்னர் திரைப்படமாகவும் வெளிவந்தது நாடகத்தில் பகுத்தறிவுப் பிரசாரம் செய்தவர் திரு.எம்.ஆர்.ராதா ஆவர்.

கலைஞர் மு.கருணாநிதி 'திருவாளர் தேசியம் பிள்ளை,' 'காகிதப்பூ' முதலியன தேர்தல் பிரசார நாடகங்களாகும். பராசக்தி, மனோகரா, மந்திரிகுமாரி, பூம்புகார், அணையாவிளக்கு 'ரோமாபுரி பாண்டியன்' மற்றும் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள சில நல்ல நாடகங்கள் 'ஞான ஒளி' கோவி.மணிசேகரனின் 'நான்கு திசைகள்', மணியனின் 'சொல்லத்தான் நினைக்கிறேன்' முதலியன தரமான நாடகங்களாகும். பிரபல எழுத்தாளர் சுஜாதாவும் நாடக உலகில் நுழைந்துள்ளார் 'ஒரு கொலை – ஒரு பயணம்?' டாக்டர் நரேந்திரனின் வினோத வழக்கு' ஆகிய இவருடைய நாடகங்களைப் பூர்ணம் விசுவநாதன் அரங்கேற்ற மேடையில் புகழ் பெற்றுள்ளன. எழுத்தாளர் 'மெரீனா' எழுதியுள்ள 'தனிக்குடித்தனம்', மௌலியின் 'ஒரு புல்லாங்குழல் அடுப்பூதுகிறது'. ஆகிய நாடகங்கள் நல்ல வெற்றி கண்டுவருகின்றன.

தொலைக்காட்சியிலும் நாடகங்கள் இடம்பெறுகின்றன. நகைச்சுவையோடு நல்ல நாடகங்களைக் கிரேசி மோகன், விசு ஆகியோர் எழுதி வருகின்றனர். 1980 இல் அரங்கேறிய கோமல் சுவாமிநாதனின் 'தண்ணீர் தண்ணீர்' இன்றைய நாடகங்களில் சிறந்தது எனக் கூறலாம். இன்று தொலைக்காட்சியில் நீண்ட தொடராக பலவகையான நாடகங்கள் நடிக்கப்பட்டு வருகின்றன.

### 4.4 அயலகத் தமிழ் வளர்ச்சி

தமிழர்கள் மற்றைய நாடுகளில் பரவி வாழ்ந்ததற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. மூவேந்தர்கள் ஆண்ட காலத்தில் போரிட்டுப் பிறநாட்டைக் கைப்பற்றியபோது அங்குத் தமிழர்கள் குடியேறினார்கள். அடுத்து அன்னியர்கள் இந்தியாவை ஆண்டபோது இலங்கை, சிங்கப்பூர், மலாயா, பர்மா போன்ற நாடுகளில் தொழிலாளர்களாகச் சென்று குடியேறினார்கள். தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழர்கள் பிற நாடுகளில் அடிமை வாழ்வு வாழ்ந்தார்கள். தமிழரின் உழைப்பு சுரண்டப்பட்டது. பட்டினி, நோயால் பல்லாயிரக் கணக்கானோர் மடிந்து போனார்கள். அவர்களில் அவல வாழ்க்கையைப் பாரதியார் அப்படியே சொல்லோவியமாக வடித்துத் தருகின்றார்.

கரும்புத் தோட்டத்திலே – அவர்

கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி

என்னும் கவிதை மூலம் கூறுகிறார். அண்மைக்காலத்தில் படித்தவர்கள் அலுவலகம் பணி தேடி அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் குடியேறி இருக்கின்றார்கள். வாழ்க்கை முறையில் பல மாறுபாடுகள் காணப்பெறுகின்றன. பல தலைமுறைகளுக்கு முன் சென்றவர்கள் மாலத்தீவு, பிஜித் தீவு போன்ற இடங்களில் மொழியையும் மறந்து வருகிறார்கள். எப்படி இருந்தபோதிலும் ஆய்வு, படைப்பு இலக்கியங்கள் போன்றவற்றில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

தமிழ் நாளேடுகள், வார, மத இதழ்கள், சிற்றிதழ்கள், அச்சகங்கள் போன்றவற்றை நிறுவித் தமிழை வளர்த்துள்ளார்கள். அயல் நாடுகளில் இலங்கை வாழ் தமிழர்களின் பணி குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடும் இலங்கையும் அரசியல், மொழி, சமுதாயம், பண்பாட்டுத் தொடர்பு கொண்டுள்ளன.தமிழார்வம் கொண்டுத் தமழ் வளர்த்த பெரியோர்கள் பலரை இலங்கை ஈன்றெடுத்துள்ளது பல்வேறு துறைகளில் தொண்டற்றியுள்ளனர், அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆறுமுக நாவலர் , சி வை தாமோதரம் பிள்ளை அவர்கள்..

ஆறுமுக நாவலர் என்னும் மாமேதை 1823 ஆம் ஆண்டு யாழ்பாணத்து நல்லூரில் பிறந்தார். இவர், தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் இரு கண்கள் எனப் போற்றினார். இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்கு நாவலர் ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. நன்னூல் என்னும் நூலை எழுதிய பவணந்தி முனிவர், இலக்கணத்திற்கு இவர் உரை இன்றும் கைவிளக்காகத் திகழ்கின்றது. மேலும், சிவஞானபோதம், பெரிய புராணம் போன்றவற்றில் திறனாய்வு செய்து நூல்களை எழுதி இருக்கின்றார்.

சி.வை. தாமோதரம் பிள்ளை யாழ்பாணத்து சிறு பிட்டியில் 1832 ஆம் ஆண்டு பிறந்தார். சென்னைப் பல்கலையில் பி ஏ பட்டம் பெற்ற இவர் ஆற்றிய தமிழ்ப் பணியும் குறிப்பிடத்தக்கது அச்சேராமல் கிடந்த ஓலைச்சுவடி களையெல்லாம் சேகரித்து பதிப்பிக்கத்தொடங்கினார். தொல்காப்பியம் நச்சினார்க்கினியம், சேனாவரையம், வீரசோழியம் இறையனார் அகப்பொருளுரை போன்ற இலக்கண நூல்களைப் பதிப்பித்துள்ளார். கலித்தொகை தணிக்கைப்புராணம் சூளாமணி மதலிய இலக்கிய நூல்களையும் பதிப்பித்துள்ளார். கதிர்வேல்பிள்ளை, தமிழ்ச் சொல்லகராதி ஒன்றை வெளியிட்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து, இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை, மரபு வழி சார்ந்த பொன்.இராமநாதன் சி.கணேசையர் ஆனந்த குமாரசாமி, தனிநாயக அடிகள், சுவாமி விபுலானந்தர் போன்றோர், பல நூல்களைப் பதிப்பித்தும் எழுதியும் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். மருத்துவத்தைத் தமிழில் கற்றுத்தரவும் ஏற்பாடு செய்து இருக்கின்றார்கள்.

படைப்பிலக்கியம் ஆய்வு போன்றவற்றிலும் இலங்கைத் தமிழர்கள் சாதனை புரிந்துள்ளார்கள். டேனியல் டோமினிக் ஜீவா கணேசலிங்கம் போன்றவர்கள் ஈழத்து மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் நாவல்களை எழுதியுள்ளார்கள்.

சு.வித்தியானந்தன், ஆ.வேலுப்பிள்ளை, க.கைலாசபதி, கார்த்திகேசு, சிவத்தம்பி, அ.சண்முகதாஸ் போன்றவர்கள் இலக்கிய இலக்கணங்களைப் புதிய நோக்கில் ஆராய்ந்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு வழிகாட்டிகளாக இருந்து இருக்கின்றார்கள் என்பதை நினைக்கையில் மிகையாகாது.

இலங்கையைப் போன்றே மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கோ.சாரங்கபாணி, முருகு சுப்பிரமணியம் எனப் பலர் இதழின்வழித் தமிழ்ப்பணி புரிந்துள்ளார்கள். இன்று உலகில் பல்வேறு நாடுகளில் பணிபுரியும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் படைப்புகளைத் தொகுத்து நூலாக வெளியிடுகின்றார்கள்.

கிருத்துவர்களும் சமயத்தொண்டினை ஆற்றும் முகத்தான் தமிழ் நூல்கள் இயற்றினார்கள். மானிப்பாயில் பிறந்த சதாசிவம் பிள்ளை நன்னெறி மாலை திருச்சதகம். பாலவர் சரித்திர தீபகம் முதலிய நூல்களை இயற்றினார். கனக சபைப் பிள்ளை அலவெட்டி என்னும் ஊரிலே பிறந்து அழகர்சாமி மடல் திருவாக்குபுராணம் என்னும் நூல்களை எழுதியுள்ளார். இவர்களைப்போன்று பிற நாட்டுத் தமிழ் அறிஞர்களும் தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

இலங்கை அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், ஜெர்மனி, இங்கிலாந்து நார்வே, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து படைப்புக்கள் கண்ணில் தெரியுது. வானம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டு இருக்கின்றார்கள். முன்பு பல இதழ்களையும் வெளியிட்டுள்ளார்கள். தமிழர்கள் வாழும் இடங்களில் தமிழையும், தமிழர்களையும் வாழ்த்துதலுக்கும் பெருமைப்படுவதற்கும் உரியவர்கள்.

## 4.5 தனித்தமிழ் இயக்கம்

பண்டைய காலத்தில் தமிழிலக்கியம் நல்லத் தமிழில் எழுதப்பட்டு தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலமாகத் திழ்ந்தது. இக்காலத்தில் தமிழகம் மூவேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பிறகு. களப்பிரர்களும், பல்லவர்களும், வடதமிழகத்திலும் தென் தமிழகத்திலும் புகுந்து தமிழகத்தை ஆட்சியைப் பிடித்தனர். இவர்கள் பாலி மொழியையும் பிராக்கிருத மொழியையுமே ஆதரித்தனர். அப்பொழுது தமிழ்மொழியின் வளம் குன்றியது. பிறமொழிக் கலப்பு, அதாவது வடமொழிக்கலப்பு, தமிழில் ஏற்படலானது. இவ்வாறு வடசொற்களைத் தமிழில் அளவுக்கதிகமாகக் கலப்பதால் முத்தும் பவளமும் கலந்த மாலைப்போல தமிழ்மொழி விளங்குகிறது என வடமொழியாளர் கூறி அந்த முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு கலந்து, அதற்கு மணிப்பிரவாள நடை என்று பெயர் தந்தனர். இயல்பாகவே சொல்வளம், பொருள் வனம் நிரம்பிய பண்பட்டத் தமிழில் இவர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை.

தமிழ் நூல்களுக்கு வடமொழியாளர் தக்க மதிப்பு கொடுக்கவிலிலை. தமிழ்நாட்டில் பிறந்து தமிழ்கற்றுத் தேர்ந்த வடமொழியாளர் தேவாரம், திவாசகம் முதலிய தமிழ் சைவ நூல்களைப் படிக்காமல் புறக்கனித்தார்கள். தமிழ் மட்டும் கற்றவர்களை மதிக்காமல் நடந்தார்கள். தமிழ் நீச பாசை. வடமொழி மட்டுமே தேவ பாசை என்று தமிழை தாழ்த்தியும் வடமொழியை உயர்த்தியும் பேசினார்கள். திருக்குறள் முதலான உலகச் சிறப்புப்பெற்ற நூல்களை வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன என்று காரண காரியமின்றி கூறினார்கள்.சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம் முதலியவற்றைப் புறக்கணித்தார்கள். இச்சூழ்நிலையில் சூரியநாராயண சாஸ்திரியார், சுவாமி வேதாசலம் ஆகியோர் தோன்றி தமிழுக்கு உள்ள இலக்கிய வளத்தையும், சொல் வளத்தையும் எடுத்துச்சொன்ன பிறகே அந்த போலி முயற்சி அடங்கியது. முதலில் சூரியநாராயண சாஸ்திரியார் தன் பெயரை பரிதிமார் கலைஞர் என்றும், சுவாமி வேதாசலம் தன் பெயரை மறைமலையடிகள் என்றும், தூய தமிழில் மாற்றிக்கொண்டனர்.இவர்கள் வடமொழி அறிஞர்களின் போலி முயற்சியை எதிர்க்கும் நோக்கில் அவர்கள் வடசொற்களே கலக்காமல் தனித்தமிழில் எழுதத்தொடங்கினர். சூரியநாராயண சாஸ்திரியார் மறைந்த பிறகு மறைமலையடிகள் நீண்ட காலம் வாழ்ந்து

1916-இல், அதை ஒரு இயக்கமாகவே தோற்றுவித்தார். அன்று தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கு இன்றும் தொடர்ந்து நிலவி வருகிறது.

### 4.7 புதுக்கவிதை

#### தோற்றுவாய்

மக்களுக்குக் கருத்துகள் சென்றடைந்தால் மட்டுமே போதுமானது என்று வாதிட்ட அறிஞர்களின் முயற்சியின் விளைவே புதுக்கவிதையின் தோற்றுவாயாக அமைந்தது எனலாம். உள்ளதை உள்ளவாறே உரைக்காமல் உள்ளதை உணர்ந்தவாறு உரைக்கும் கலை கவிதைக்கலை.கற்பனை உணர்ச்சியோடு கலந்த கருத்துப் புலப்பாடே புதுக்கவிதை எனலாம். ஏறத்தாழ ஈறாயிரம் ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்பினையுடைய இக்கவிதைக்கலை காலமாறுபாட்டால் வடிவத்தாலும் உள்ளடக்கத்தாலும் பல்வேறு கோலங்களைப் பெற்று விளங்குகிறது. அவ்வக்காலக் கவிதை உலகில் மேலோங்கி நின்ற கருப்பொருட்களை விளக்கும் வண்ணம் அமைந்த காதற் கவிதை, நீதிக்கவிதை, அருட்கவிதை, கைக்கிளைக் கவிதை, தேசியக் கவிதை, கிராமியக் கவிதை, புதுக்கவிதை முதலிய பல்வேறு கவிதைகள் வரலாற்றில் கவிதைக்கலை பெற்ற மாற்றத்தை வளர்ச்சியை உணர்த்தி நிற்கின்றன.

#### புதுக்கவிதை

'சொற்சிக்கனம், பேச்சுப்பாங்கு, பேச்சமைதி, புதுமைப்படிமப் பயன்பாடு தற்காலச் சொல்லாட்சி, உணர்ச்சிப் பாங்கு, தத்துவ நோக்கு, ஒலிநய அழுத்தம், உடனிகழ் கால உணர்வு, இன்றைய இக்கட்டான நிலை இவற்றைத் தன் உள்ளடக்கத்துக்கும், உருவத்திற்கும் பொருளாகவும் சாதனங்களாகவும் கொண்டு புதுக்குரலில் ஒலிப்பது தான் இன்றைய புதுக்கவிதை' எனப் புதுக்கவிதை பற்றி உரைக்கின்றார் திரு.சி.சு.செல்லப்பா.

#### தோற்றம்

உரைநடை செல்வாக்குப் பெற்றபோது அது தன் செல்வாக்கைக் கவிதையில் காட்டத் தொடங்கியது. இதன் வெளிப்பாடே வசன கவிதை. பாரதிக்குப் பின்வந்த பாரதிதாசன் பரம்பரையினர் அனைவருமே, வலிதே செய்யுளை நிரப்பும் பொருட்டுச் சொற்களைக் கையாண்டனர். சொற்சுருக்கமே கவிதை என்ற நிலைபோய், சொற்பெருக்கமே கவிதை என ஆகிய நிலையில் வசனத்திலேயே கவிதையாக எழுதிவிடலாமே என்ற எண்ணம் வேரூன்றத் தொடங்கியது. இந்த எண்ணமே நாளடைவில் புதுக்கவிதை மலர்வதற்கு உரிய வித்தாக அமைந்தது.

அரசியல், கல்வி, சமூகம், தொழில் துறை என்ற துறைகளிலெல்லாம் ஏற்பட்ட கட்டுப்பாட்டின் எதிர்க்குரல் கவிதைத் துறையிலும் கேட்கத் தொடங்கியது. சீர், தளை, அடி, தொடை போன்ற எந்த விதியும் கவிதைக்குத் தேவையில்லை கேட்கத் தொடங்கியது இந்தப் புதுக்குரலும் வசன கவிதையுமே புதுக்கவிதையின் தோற்றத்திற்குக் காரணங்களாக அமைந்தன.

1910-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பழைய ஆங்கில யாப்புக் கட்டுக்கோப்புகளை எதிர்த்து 'வால்ட் விட்மன்' என்பவர் எதிர்க்குரல் கொடுத்தார். இதனால், புதுக்கவிதை (New Poetry) என்றும் பிரெஞ்சு இலக்கியத்தைப் பின்பற்றிக் கட்டற்ற கவிதை (Verse Libre) என்றும் புதிய கவிதை முயற்சி தோன்றலாயிற்று. இ∴து, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் 1910-க்குப் பிறகு ஏற்பட்டது. ஏறத்தாழ இதே காலத்தில் தான் பாரதி, தமிழில் 'வால்ட் விட்மன்' என்ற தலைப்பில் வசன கவிதை எழுதினார். இவருக்குப்பின் புதுக்கவிதையில் நாட்டம் கொண்ட ந.பிச்சமூர்த்தி அவர்களும்

வால்ட்விட்மனின் தாக்கம் தன்னைப் பெரிதும் பாதித்தது எனக் கூறுகின்றார்.வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' என்ற யாப்பு மரபே கண்டிராத கவிதைத் தொகுப்பிலிருந்து (வசன கவிதை) சில பகுதியை மொழிபெயர்த்து 'மனிதனைப் பாடுவேன்' என்ற தலைப்பில் ச.து.சு.யோகி அவர்கள் வெளியிட்டார். வால்ட் விட்மனைத் தொடர்ந்து புதுக்கவிதைக்கு ஆக்கம் தந்தவர் எஸ்ரா பௌண்ட் என்பவர் ஆவார். 1912-ஆம் ஆண்டில் டின்டன் என்பவருடன் சேர்ந்து புதுக்கவிதை பற்றிய ஒரு கொள்கையை ஏற்படுத்தினார்.

**தமிழில் புதுக்கவிதை வளர்ச்சி**

தமிழ்க் கவிதைக்கு முதன்முதலாக உலகளாவிய பார்வையை வழங்கியவர் பாரதி. ஓருலக மனப்பான்மையையும் பொதுவுடமைக் கோட்பாட்டையும் அறிவியல் முறையில் கவிதையில் புகுத்தியவர் இவரே. தமிழ், தமிழினம், இயற்கை, காதல், பெண்விடுதலை, தனிமனிதத்துதி என்று பிரித்துத் தமிழ்க் கவிதைகள் படைத்த பாரதிதாசன் பரம்பரையினர் இரு கிளையாகப் பிரிந்தபோது நா.காமராசன், இன்குலாப், சிற்பி, தமிழன்பன், வீரா போன்றோர் தேக்கத்தைத் தகர்த்தெறிந்தனர்.

கி.பி. 1910 - இல் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் புதுக்கவிதை முயற்சி தொடங்கியது. 1910-18 என்ற இடைவெளியில் தமிழ் நாட்டில் பாரதியின் வசன கவிதை முயற்சி வளர்ந்தது 1930 - க்குப் பின்னர்ப் பாரதியின் வழியில் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா., வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் ஆகியோர் தொடர்ந்து வளர்த்தனர். 1930-40 என்ற காலவெளியில் கிராம ஊழியன், சிவாஜி, எழுத்து போன்றவை புதுக்கவிதையைப் போற்றி வளர்த்தன. அண்மைக் காலத்தில் 'எழுத்து' நின்றுவிட்ட போதிலும் நடை, கசடதபற, வானம்பாடி, ஆகிய இதழ்கள் தொடர்ந்து பல புதுக் கவிதைகளையும் புதிய தமிழ்க் கவிஞர்களையும் அறிமுகப்படுத்திப் பரப்புகின்றன. புதுக் குரல்கள், பால்வீதி, கனவுகள், கற்பனைகள், காகிதங்கள், விதி, அன்று வேறு கிழமை, உதய நிழல், தமிழ்நாட்டின் கவிதைகள், தமிழன்பன் கவிதைகள், வைகறை முதலிய புதுக்கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்தன. இவையே அன்றிக் கதம்பம், அலைகள், புள்ளி, வெண்மை, உதயம், ரசிகன், நீ முதலிய குட்டிக் கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மீராவின் கனவுகள், கற்பனைகள், காகிதங்கள் நா.காமராசனின் கறுப்பு மலர்களையும் புதுக்கவிதைகள் என்று கூறுவதைவிட வசனகவிதை என்பதே பொருத்தமுடையதாகும்.

**கவிதையின் உருவம்**

ஒரு கவிதையின் வெற்றி என்பது அது சமுதாயத்திற்கு உணர்த்தும் சமூகக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. உருவத்தில் அன்று, எனவே, பழைய கால யாப்பு வடிவம் இல்லை என்பதால் புதுக் கவிதைகளைப் புறக்கணிக்க இயலாது. புதுக்கவிதைகளில் ஒலிநயம் இல்லை என்றும் கூறிவிட முடியாது தமக்கே உரிய சில ஏற்றத் தாழ்வுகளை இவை பெற்றிருக்கின்றன.

'பூக்களிலே நானும் ஒரு
பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே
பொன் விரல்கள் தீண்டலையே – நான்

பூமாலை ஆகலையே’

என்ற மேத்தாவின் கவிதையும், நா.காமராசனின் கறுப்பு மலர்களில் காணப்படும் சில கவிதைகளும், ஒலிநயம் மிக்குத் திகழ்வதற்குக் காட்டுகளாகும். புதுக்கவிதையில் யாப்பும் ஓசைநயமும் இல்லை என்று கூறுவார் கூற்றை மறுப்பதற்கு இவை சான்றுகளாகும்.

**புதுக் கவிதையின் பாடுபொருள்**

புதுக் கவிதையின் பாடுபொருள்களாக வாழ்க்கை, சாவு, நிராசை, தனிமனித உணர்வு கவிஞன் தொழில், எழுத்தாளன் தொழில் , உவமை, படிமம், உருவகம், எதார்த்தம் (Obscurity) ஆகியன இடம் பெறுகின்றன.

‘நடந்தே அழியணும் வழி
கொடுத்தே தீரணும் கடன்
செய்தே அழியணும் வேலை
அழுதே அழியணும் துக்கம்
வாழ்ந்தே முடியணும் வாழ்வு
இதுவே உலகின் நியதி

என வாழ்க்கையைப் பற்றி வல்லிக்கண்ணன் கூறுகிறார்.

‘இன்டலெக்சுவல் கவி’ என்று பட்டம் சூட்டப்பெற்ற டி.கே.துரைசாமியின், ‘இறப்பு’ காமத்தையும் சாவையும் இணைத்துப் பாடுகிறது.

‘சத்தம் சரணம் கச்சாமி
காமம் சரணம் கச்சாமி
மரணம் மரணம் கச்சாமி
பொருட்பாலுக்குக்
காமத்துப்பாலை விற்கிறேன்
அதற்காக
அறத்துப்பால்
ஏன் அழுது புலம்புகிறது.
நாங்கள் சேற்றில்
கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில்
கை வைக்க முடியாது

நடை பாதையைப் பற்றி நா.காமராசன் குறிப்பிடும்போது,

‘ஏழைகள் உறங்கிட
இயற்கையால் ஏற்படுத்தப்பட்ட புழுதிக்கட்டில்

எனச் சுட்டுகின்றார் இக்கவிதை அவரது பார்வைக்கு நல்லதோர் காட்டு,

‘ஏழையின் குடிசையில்
அடுப்பும் விளக்கும் தவிர
எல்லாமே எரிகின்றன.

என வறுமையின் கொடுமையைப் படம்பிடிக்கிறார் வைரமுத்து.

**புதுக்கவிதையில் குறியீடுகள்**

தான் ஏதேனும் ஒருசில குறியீடுகள் வைத்துக்கொண்டு எழுதுவதால் அக் குறியீடுகள் என்ன என்று தெரிகின்றவரை புதுக்கவிதை புரிவதில்லை

‘இரண்டாம் உலக
தமிழ் மாநாட்டுக்குத்
திறக்கப்பட்டன சென்னையில்
இருபத்தியொரு
புதிய லெட்ரீன்கள்

இதில் சென்னையில் இருபத்தியொரு சிலைகள் திறக்கப்பட்டமையும் அவை பறவைகளுக்கு லெட்ரீன்களாக இருந்ததையும் குறிப்பாகப் புலப்படுத்தப்படுகிறது.

**புதுக்கவிதையும் பேச்சு வழக்கும்**

புதுக்கவிதை யாப்பிலக்கண வரம்புக்கு உட்படாததால் கவிதையில், சிறுகதை நாவலைப்போன்று பேச்சு வழக்கினைப் பயன்படுத்தும் பாங்கினைக் காணலாம். காட்டாக, ‘சுதந்திரம்’ என்ற தலைப்பில்

‘இரவில் வாங்கினோம்
இன்னும் விடியவே யில்லை

என்ற கவிதையில் பேச்சு வழக்கின் முழு அமைதியைக் காணமுடிகிறது.

**புதுக் கவிதையும் பொதுவுடைமையும்**

தனி உடைமைச் சமுதாயத்தை உடைத்தெறிந்து பொது உடைமைச் சமுதாயத்தைக் காணவேண்டும் என்ற துடிப்பினைப் புதுக்கவிதைகள் பல புலப்படுத்தி நிற்கின்றன.

‘ஜகத்தினில் அனைவர்க்கும் உணவில்லை எனவே
அரசினை அழித்திடுவோம் - முதலாளி
அரசினை அழித்திடுவோம்
தொட்டிற் சனியன் தொடர்ந்தே அழுதது
தூங்கிய மனிதர்கள் சலித்தனர்
வட்டில் நோயால் தாயும் சேர்ந்தழ
வறுமை நோய்க்கு மருந்துகள் உண்டோ.

இக்கவிதைகளில் புதுக்கவிஞர் ஒருவர். பசிக்குக் காரணமான தனி உடைமைச் சமுதாயத்தை உடைத்தெறிய முன்னேறுகிற உலகம் பெரும்படையைச் சுட்டிக்காட்டி அதன் வெற்றியால் உலகில் பசி அழியும் என்ற நம்பிக்கையை ஏழை உள்ளங்களில் எழுப்புகிறார்.

‘பூமிச் சருகாம் பாலையை
முத்து பூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி

இரவ லரோடு பேசுவேன்

இரவெரிக்கும் பரிதியை – ஏழை

விறகெரிக்க வீசுவேன்

என்ற நா.காமராசனின் கவிதை பொதுவுடைமைச் சமுதாயத்தை ஏற்படுத்தத் துடிக்கும் உள்ளத்தின் எதிரொலியாக அமைகிறது. ‘குடிகாரன்’ என்ற கவிதையில் நா.காமராசன் அவர்கள் கூறும்

‘மாளிகைக்குப் பெர்மிட்டு

சேரிக்கு மட்டும் கைவிலங்கு’

என்ற கூற்று சமுதாயத்தின் போலி வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகிறது.

**புதுக் கவிதையில் இயற்கை**

தளிர் பற்றிப் பாடவரும் நா.காமராசன் அவர்கள்

‘இலைப்பிஞ்சு

விதைப்பட்டு

தாவர மின்னல்

வேர்த்தூ ரிகையின் ஒவியம்

என்றெல்லாம் அடுக்கிச் செல்கின்றார். கடலைப் பற்றிப் பாடும்போது

‘வானத்திற்கும் பூமிக்குமாக

மழைநெசவு நடந்தபோது

அறுந்துபோன மின்னல் நூல்களை

நினைத்துப்போன மின்னல் நூல்களை

நினைத்துத்தான் நான்

அழுதுகொண்டிருக்கிறேன்

என்று கூறுவது கவியின்பம் நல்குவதாக அமைகிறது. வானவில்லைப் பற்றிப்பாடும் போது

‘இயற்கை

ஒரு தூரிகையை சிருஷ்டிக்க எண்ணி

ஒரு ஓவியத்தை சிருஷ்டித்தது

அதுதான் வானவில்

சொர்க்கத்திலிருந்து வீசியெறியப்படுகிற

துரும்புகூட

அழகாகத்தான் இருக்கிறது.

என்று கூறுகின்றார். இவ்வாறாகப் புதுக்கவிதைகளில் இயற்கை எவ்விதத் தாக்கமும் இன்றி அழகுணர்ச்சிக்காக மட்டுமே கையாளப்படுகின்றது.

**4.8 திறனாய்வு வளர்ச்சி**

திறனாய்வுத்துறை மேனாட்டார் தொடர்பால் வளர்ந்து வந்த ஒரு துறையாகும். மேலை நாட்டில ஒரு திறனாய்வு நூலுக்கு ஒரு திறனாய்வு நூல்

வளர்ந்து வரும் பாங்கைக் காணலாம். திரு.வ.வே.சு.ஐயர் ஆங்கிலத்தில் எழுதிய 'கம்பராமாயண ரசனை' இத்துறையில் வழிகாட்டி நூலாகும். ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் எழுதிய 'இதய ஒலி' ஆ.முத்துசிவன் 'அசோகவனம் 'அசலும் நகலும் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் எழுதிய 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' இலக்கியக் கலை திரு.மார்க்கபந்து சர்மா சிலப்பதிகார ரசனை டாக்டர் மு.வரதராசனார் 'இலக்கிய ஆராய்ச்சி' 'இலக்கியத்திறன் 'இலக்கியமரபு என்பன டாக்டர் ந.சஞ்சீவி 'இலக்கிய இயல் அ,ஆ, எனும் நூல் புதிய உத்தி முறையில் எழுதப்பட்ட நூலாகும். டாக்டர் கைலாசபதியின் நூல்கள் ஈண்டுக் கருதத்தக்கனவாகும்.

## வினாக்கள்

### பகுதி – அ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

1. பாரதியாரின் சிந்தனைகளைக் குறிப்பிடுக.
2. தேசிக வினாயகம் பிள்ளைக் குறித்து எழுதுக.
3. புரட்சிக்கவியின் சீர்த்திருத்தப்போக்கு, மொழிப்பற்றினை எழுதுக.
4. நாமக்கல் கவிஞர் - குறிப்பு வரைக
5. நாவலுக்கும் சிறுகதைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
6. அயலகத் தமிழ் வளர்ச்சி குறித்து எழுதுக.
7. தனித்தமிழ் இயக்கம் குறிப்பு வரைக.
8. தமிழில் திறனாய்வு வளர்ச்சி குறித்து எழுதுக.

### பகுதி – ஆ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.**

9. புதுக்கவிதையின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
10. சிறுகதைத் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
11. நாவல் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
12. தமிழ் நாடகத் தோற்றம் வளர்ச்சிக் குறித்து எழுதுக.
13. புதுக்கவிதைக்கும், மரபுக் கவிதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையைச் சான்றுடன் விளக்குக.
14. புதுக்கவிதை வளர்ச்சிக்குத் தமிழ் இதழ்களின் பங்கு குறித்து கட்டுரை எழுதுக.

## NOTES

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

………………………………………………………………………………………...

## அலகு – 5

### 5.1 அகத்தியம்

அகத்தியரைப்பற்றியும் அகத்தியத்தைப் பற்றியும் இறையனார் களவியல் உரை கூறுகிறது. இவ்வுரை, அகத்தியம் தலை சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் கடைச் சங்கத்திலும் இலக்கண நூலாக விளங்கிற்று என இயம்புகின்றது. அகத்தியத்தை பற்றி காண்பதற்கு முன், அகத்தியரைப் பற்றி அறியலாம்.

**அகத்தியர்**

அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் வெளிப்படையாகக் காணவில்லை பரிபாடலில் உள்ள "பொதியின் முனிவன்" என்னும் தொடருக்கு அகத்தியன் என்று உரை வகுத்துள்ளனர். பரிமேலழகர் மதுரைக் காஞ்சியில் "தென்னவர் பெயரிய துன்னருந் துப்பின் தொன்முது கடவுள்" என்னும் பகுதியில் தொன்முது கடவுள் என்பது அகத்தியரைக் குறிக்கும் என நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். இவ்விரண்டு இடங்களும் உரையாசிரியர்கள், அகத்தியரைப் புகுத்திக் கூறிய இடங்களே ஆகும். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இவர் சங்கத்துத் தலைமைப் புலவராக விளங்கியவர். முதல், இடை, கடை சங்கத்துத் தலைவர். பொதிய மலையில் வாழ்ந்தவர். தமிழ் மக்களால் தேய்வ நிலை வரை உயர்வுப் பெற்றவர்.

**அகத்தியர் பற்றி திறனாய்வாளர் கருத்து வேறுபாடு**

அகத்தியர் இல்லை என்றும், வெறும் கற்பனையே என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால், பண்டை புலவர் முதல் பாரதி முடிய இல்லாத ஒன்றை ஏர்ப்பாரா, என்று தகுந்த இலக்கியச்சான்றுகளோடு அகத்தியர் இருந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றனர் மற்றொரு சாரார்.

**இலக்கியச்சான்றுகள்**

பொதியில் முனிவர் புரைவரை கீழ் - (பரி – 11)

மாதவ முனிவன் மலைவளங்கொண்டு – (சில,அடை 17)

அமர முனிவன் அகத்தியன் - (மணிமேகலை)

மாமுனி – (கந்தபுராணம்)

அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு – (வில்லி பாரதம்)

அகத்தியனை உவப்பானை – (அப்பர் தேவாரம்)

அகத்தியன் புலனிக்கு இயம்பிய தண்டமிழ் - (வீரசோழியம்)

காணார் மலையைத் தருத்தவன் சொன்ன கன்னித் தமிழ்
(யாப்-காரிகை)

சிவனை நிகர் பொதியவரை முனிவன் - (திருப்புகழ்)

தமிழ் முனிவன் வாழிமலை – (குமரகுருபரர்)

அகத்தியன் என்பான் ஓதிவளர்க்க வளர்ந்தேன் - (பாரதி)

மேலும், அகத்தியன் பற்றிய குறிப்புகள்

திருவிளையாடல் புராணம்

காஞ்சி புராணம்

சின்னமனூர் வேல்விக்குடிச்செப்பேடு,

ஆகியன பகர்கின்றன.

**வால்மீகி இராமாயணத்தில் அகத்தியர் பற்றிய சான்று**

தென்திசை நோக்கி சீதையைத்தேடச்சென்ற வானரங்களிடம், பொதிகை மலையில் அகத்தியப் பெருமுனிவனின் தமிழ்ச்சங்கம் உள்ளது. எனவே, தமிழ்சுவையினை நுகர வேண்டி நுமித்தம் மறந்து அங்கே தங்கிவிட்டால் சீதையைத்தேடும் குறிக்கோல் கெட்டுவிடும் என சுக்ரீவன் கூற்றாக, வால்மீகி இராமாயணத்தில் கிஸ்கிந்தா காண்டத்தில் இடம்பெற்றுள்ளது. மேலும், அகத்திய முனிவரை வணங்கி வழிபட்டு படைக்கலம் பெற்றதாகக் கூறுகிறது, வால்மீகி இராமாயணம். தென்தமிழ் நாட்கண் பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் என்று கம்பர் குறிப்பிடுகிறார் எனவே, மேற்கண்ட குறிப்புகள் அகத்தியர் இருந்ததற்கான சான்றுகளாக நின்று உறுதிப்படுத்துகின்றன. அகத்தியர் பலர் இருந்திருக்கலாம், ஆனால், பொதிகை மலையில் சங்கம் நிறுவித் தமிழ் ஆய்ந்தவர் இவர் ஒருவரே எனலாம்.

**அகத்தியம்**

இதன் ஆசிரியர் அகத்தியர். முச்சங்கத்திற்கும் உரியது, 1200 நூற்பாக்களைக் கொண்டது. உலக மொழிகளில் உள்ள இலக்கண நூல்களைக் காட்டிலும் இதுவே மிகப் பெரிய இலக்கணநூல் ஆகும்.

**பகரப்படுவது**

1. எழுத்து 2. சொல் 3. பொருள் 4. யாப்பு 5. சந்தம் 6. வழக்கியல் 7. அரசியல் 8. அமைச்சியல் 9. பார்ப்பனவியல் 10. ஜோதிடம் 11. கந்தருவம் 12. கூத்து என்பன ஆனாப் பெருமை அகத்தியன் என்னும் அருந்தவ முனிவன் ஆக்கிய முதல் நூல் என்கின்றது பன்னிரு படலப் பாயிரம். எனவே, தமிழ் மொழிக்கேயமைந்த முதல் நூலாக விளங்குகிறது. இறுப்பினும் நூல் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை உரையாசிரியர்கள் கையாண்ட 103 சூத்திரங்களை பாவானந்தம் பிள்ளை பேரகத்தியத்திரட்டு என்ற பெயரில் வெளியிட்டார் அமைப்பு நடை பிற்காலத்தனவாகக் காட்டுகின்றது. இலக்கியத்திலிருந்து இலக்கணம் பிறக்கிறது என்பது அகத்தியர் கூற்று, அதாவது,

இலக்கியமின்றி இலக்கணம் இன்றே

எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே

எள்ளினின் றெண்ணெய் எடுப்பதுபோல

இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்

என்பதாகும்.

**அகத்தியம் பற்றிய சிலர் கருத்து**

அகத்தியம் என்றொரு நூல் இல்லை வெறுங்கற்பனையே என்று சிலர் கூறுவர். ஆனால், நாடகத்தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் இருந்தன என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார். மேலும், ஆனந்தக்குற்றங் கூறினார் அகத்தியர் என்று யாப்பருங்கலம் கூறுகின்றது நன்னூல் உரையாசிரியர்களாகிய மயிலைநாதர், அடியார்க்கு நல்லார் சங்கர நமச்சுவாயர் போன்றோர் அகத்தியத்தை மேற்கோளாகக் காட்டுகின்றனரே என்று, அகத்தியம் என்றொரு நூல் இருந்தது உண்மை அது கடல்கோளால் அழிந்திருக்கக்கூடும் எனக்கருதுகின்றனர்.

## 5.2 தொல்காப்பியம்

### தொல்காப்பியர்

அகத்தியரின் பன்னிரு மாணவருள் ஒருவர் தொல்காப்பியர். தொன்மை வாய்ந்த காப்பியக்குடியில் பிறந்ததால் இவர் தொல்காப்பியரானார் என்றும் இளம்பூரணரும் பழமையான நூல்கட்குக் காப்பாக அமைந்ததால் இப் பெயர் பெற்றார் என்றும் கூறுவர். கீரர் - நக்கீரர் காப்பியனார் - பல்காப்பியனார் என்பது போல 'தொல்' என்னும் அடைமொழிச்சேர 'தொல்காப்பியன்' ஆனார் என்றும், தொல்காப்பியம் என்னும் நூலைத்தந்தமையால் 'தொல்காப்பியர்' எனவும் தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி என்பதனால் அவர் குலப்பெயரையே தன்பெயராகப் பெற்றார் என்பர். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்ற பாயிர அடிகொண்டு பாணினிக்கு முந்திய ஐந்திரம் என்ற நூலை ஓதிய வடமொழிப் புலமையாளன் என்றும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து கூறுபாடுகளை உணர்ந்தெழுதிய தொல்காப்பியன் எனவும் இயம்புவர்.

### காலம்

கி.மு 5 என்று வெள்ளை வாரணரும், கி.மு 7 ஆம் நூற்றாண்டு என்று இலக்குவனாரும் கி.மு 4 ஆம் நூற்றாண்டு என்று சீனிவாச ஐயங்காரும் கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்கு முன்தையவர் என்று இரா.இராகவையங்காரும் கி.மு 500 க்கு முன் வாழ்ந்தவர், வேதகாலத்திற்கு முற்பட்டவர் என்றும் கி.மு 300 ல் வாழ்ந்தவர் என்று இராசமாணிக்கனாரும் பாணினியின் காலமாகிய கி.மு 4 ஆம் நூற்றாண்டினர் என்றும் பரஞ்சோதி முனிவருக்கு முற்பட்டவர் என்றும் வியாசர் வேதத்திற்கு முற்பட்டவர் என்றும் உ.வே.சா கூறுவர். கி.பி 5ல் வாழ்ந்தவர் என்று வையாபுரிப்பிள்ளையும் கி.பி 4-ஆம் நூற்றாண்டிணர் என்று கெ.என் சிவராசப்பிள்ளையும் கூறுவர். மேற்கண்ட அணைத்தையும் ஒப்பு நோக்க கி.மு 350 க்கும் முந்தியவர், ஐந்திரத்திற்குப் பிந்தியவர் ஆதலின், காப்பியர் காலம் கி.மு 5ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது என்று எல்லோராலும் ஒப்ப முடிகிறது.

### சமயம்

சமணர் என்று திரு வையாபுரிப்பிள்ளையும் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பதால் பௌத்தர் என்று டாக்டர் பர்ணரும் கூறுவர் பௌத்தர் என்றோ சமணர் என்றோ வரையறுக்க இயலவில்லை மகாவித்வான் இராகவையங்காரும் இவ்வாறே கூறுவர்.

### தொல்காப்பியம்

### தொல் பழமை

எள்ளினின்று எண்ணெய் எடுபதுபோல

இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்

ஆதலில் தொல்காப்பியதிற்கு முன்னர் பல இலக்கியங்கள் இருந்திருக்கவேண்டும் அவற்றிற்கே தொல்காப்பியனார் இலக்கணம் வகுத்தார் என்பது தெளிவு, தம் நூலில் பல இடங்களில் என்ப, என்மனார் புலவர், மொழிப, யாப்பறி புலவர், நூல் நவில் புலவர் ஆகிய குறிப்புகள் முன்பு இருந்தன என்பதற்கான சான்றுகளாகும. இலக்கியம்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்

என்று தொல்காப்பியப் பொருளதிகாரம் தமக்கு முற்பட்ட இலக்கிய மரபினைக் குறிப்பிடுகிறது.

**இலக்கணம் கூறும் முறை**

முதலில் பொது விதி, இரண்டாவதாகச் சிறப்புவிதி மூன்றாவதாகப் புறநடைவிதி என்ற முறையில் அடக்கிக் கூறுதல் இவர் மரபு. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடியவர் பனம்பாரனார் ஆவர். இந்நூல் கபாடபுரத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இந்த அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்தவர் அதங்கோட்டாசான் என்னும் பாண்டிய மன்னனாவான். இடை, கடை, சங்கத்திற்கு இலக்கணநூலாய் விளங்கியது.

**தொல்காப்பியத்தின் சிறப்பு**

பொருளதிகாரம் தமிழரின் உயர்ந்த ஒழுக்கத்தையும், மொழி முதல், இறுதி எழுத்துக்களைப்பற்றியும் ஆராய்ந்துள்ளது சிறப்புக்குறியதாகும்.

**பாகுபாடு**

இந்நூல் 1. எழுத்து 2. சொல் 3. பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டது. எழுத்ததிகாரம் எழுத்துகளைப்பற்றியும் சொல்லதிகாரம் எழுத்துகளால் ஆகிய சொற்கள் பற்றியும் பொருளதிகாரம் சொற்களால் அமைந்துள்ள பொருள் பற்றியும் விளக்குகிறது. எழுத்து, சொல் தமிழ் மொழியின் அமைதியை விளக்குகின்றன. பொருள் தமிழரின் உயர்ந்த ஒழுக்கத்தைச் சிறப்பிக்கிறது. இந்நூல் 1611 நூற்பாக்களைக் கொண்டது.

**எழுத்ததிகாரம்**

1. நூன் மரபு, 2. மொழி மரபு, 3. பிறப்பியல், 4. புணரியல் 5. தொகைமரபு 6. உருபியல் 7. உயிர் மயங்கியல் 8. புள்ளி மயங்கியல் 9. குற்றியலுகரப் புணரியல்ஆகிய ஒன்பது இயல்களையும்

**சொல்லதிகாரம்**

1.கிளவியாக்கம் 2. வேற்றுமை 3. வேற்றுமை மயங்கியல் 4. விளிமரபு 5. பெயரியல் 6. வினையியல் 7. இடையியல் 8. உரியியல் 9. எச்சவியல் ஆகிய ஒன்பது இயல்களையும்

**பொருளதிகாரம்**

1. அகத்திணையியல் 2. புறத்திணையியல் 3. களவியல் 4. கற்பியல் 5. பொருளியல் 6. மெய்பாட்டியல் 7. உவமயியல் 8. செய்யுளியல் 9. மரபியல் ஆகிய ஒன்பது இயல்களையும் கொண்டது. இந்நூல் மொத்தம் 27 இயல்களைக் கொண்டது.

**எழுத்ததிகாரம்**

1. **நூன்மரபு**

எழுத்துகளின் வகை முதல், சார்பு, உயிர், மெய், உயிர்மெய், மாத்திரை அளவு, ஆகியவற்றையும்

2. **மொழி மரபு**

ஓரெழுத்தொருமொழி, தொடர்மொழி, ஈரெழுத்தொருமொழி, மொழி முதல், இறுதி எழுத்துகள் ஆகியவற்றையும்

3. **பிறப்பியல்**

உயிரெழுத்துகள் பிறத்தல், மெய்யெழுத்துகள் பிறத்தல் ஆகியவற்றையும்

4. **புணரியல்**

உயிரெழுத்துப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி, மெய்யெழுத்துப் புணர்ச்சி, சாரியைகள், வேற்றுமைப் புணர்ச்சி ஆகியவற்றையும்

5. **தொகை மரபு**

அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் உயிர் மயங்கியும் புள்ளி மயங்கியும் வரும் இலக்கணங்களையும்

6. **உருபியல்**

பெயர்களோடு உருபு புணர்தளையும்

7. **உயிர் மயங்கியல்**

நிலைமொழியின் ஈற்றில் நின்று, உயிர் தன்னோடும் சிறுபான்மை பிறவற்றோடும் மயங்குதல் பற்றியும்

8. **புள்ளி மயங்கியல்**

உடனிலை மெய்மயக்கம் வேற்றுநிலை மெய்மயக்கம் பற்றியும்

9.**குற்றியலுகரப்புணரியல்**

உயிர்தொடர்மொழி, இடைத்தொடர் மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்தொடர்மொழி, மென்தொடர் மொழி, பற்றியும் விளக்குகின்றன.

**சொல்லதிகாரம்**

1. **கிளவியாக்கம்**

திணை, பால், பால்விகுதிகள், செப்பு, வினா, இடம், வழக்கு, ஐயம், வழு, வழுவமைதி ஆகியவற்றையும்

2. **வேற்றுமையியல்**

எழுவாய் வேற்றுமை முதல் விளி வேற்றுமை முடிய எட்டு வேற்றுமைகளையும்.

3. **வேற்றுமை மயங்கியல்**

உருபு மயக்கம், பொருள் மயக்கம், , எதிர்மறையில் வேற்றுமை, ஆகுபெயர், ஆகிய இலக்கணங்களையும்

4. **விளிமரபு**

ஈறு திரிதல், பிரிது வந்தடைதல், உயர்திணையில் விளிஏற்கும் உயிரீறுகள், உயர்திணையில் விளிஏற்க்கும் புள்ளியீறுகள் வினையாலணையும் பெயர், பண்புப் பெயர் விளிஏற்றல், அளபெடை விளிஏற்றல் அ∴றிணைபெயர் விளிஏற்றல், அண்மைவிளி ரகரயீறு விளிஏற்றல் முதலியவற்றையும்.

5. **பெயரியல்**

பெயர்ச்சொல்லின் இலக்கணம், உயர்திணை பெயர், அ∴றிணை பெயர் ஆகியவற்றையும் அதன் வகைகள் முதலியனவற்றையும்

6. **வினையியல்**

வினைச்சொல்லின் இலக்கணம், வினைச்சொல்லின் வகைகள் முதலியவற்றையும்

7. **இடையியல்**

இடைச்சொல்லின் பாகுபாடுகளையும்

8. **உரியியல்**

உரிச்சொல் இலக்கணம், ஒருகுணம் தழுவிய பல உரிச்சொற்கள் பல குணம் தழுவிய ஒரு உரிச்சொல் முதலியவற்றையும்

9. **எச்சவியல்**

செய்யுளீட்டச் சொற்கள், பொருள்கோள், தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர், இடக்கரடக்கல் ஈ, தா, கொடு முதலியவற்றையும் விளக்குகின்றன.

**பொருளதிகாரம்**

1. **அகத்திணையியல்**

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உள்ள காதல் ஒழுக்கத்தையும் தலைவன் தலைவி ஒத்த அன்பால் கூடி மகிழும் உணர்வு நிலையைப்பற்றியும் தாமே உள்ளத்தால் உணர்வதன்றிப் புறத்தாருக்கு உரைக்கப்படாத காதல் பற்றியும் ஒருபார் காதல், ஒவ்வா காதல், ஒத்த காதல் ஆகியவற்றையும்

2. **புறத்திணையியல்**

போர், வீரம், கொடை பற்றியும் அதாவது அறமும் மறமும் பற்றி புறத்தே நிகழும் போர் நிகழ்ச்சிக்கேற்ப வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் முதலிய புறத்திணைகள் பற்றியும் போர்முறைகள் அரணமைத்தல் முதலிய அரசியல் தொடர்பான செய்திகள் முதலியவற்றையும் விளக்குகிறது.

3. **களவியல்**

அகத்திணையில் காதல் வாழ்க்கையாகிய களவு வாழ்க்கைப் பற்றிய செய்திகளை விளக்குகிறது.

4. **கற்பியல்**

திருமணத்திற்க்குப்பின் நடைபெறும் இல்லறவாழ்க்கை இலக்கணங்களை விளக்குகின்றது.

5. **பொருளியல்**

அகம், புறம் பற்றிய இயல்களில் கூறாமல் ஒழிந்த சில செய்திகள் அடுத்துக் கூறப்பட்ட இயல்களில் விடுபட்டுப் போன சில செய்திகளையும் விளக்குகிறது.

6. **மெய்ப்பாட்டியல்**

மக்கள் தமது உள்ளத்தின் உணர்ச்சிகளை புறத்தே புலப்படுத்தும் நிலை மெய்ப்பாடாகும். எண்வகை அடிப்படை மெய்ப்பாடுகள் மெய்ப்பாட்டின் நிலைகளை களவுக்கால மெய்ப்பாடுகள் கற்புக்கால மெய்ப்பாடுகள் ஆகியவற்றை விளக்குகின்றது.

7. **உவமையியல்**

நாம் நாள்தோறும் வாழ்வில் காணும் செய்திகளையே கவின் கலைத்திறனுடன் சுவைப்படக்கூறுகிறார். இத்தகைய கலைத்திறனுக்கு உவமை பெரிதும் உதவுகின்றது. புலனல்லாதன புலனாதல், அலங்காரமாகிக் கேட்போருக்கு இன்பம் பயத்தல் உவமையின் பயன்களாகும் என்று இளம்பூரணார் கூறுகின்றார். இத்தகைய உவமையின் வகைகள் முறைகள் முதலியவற்றின் விளக்கங்களை இவ்வியல் கூறுகிறது.

8. **செய்யுளியல்**

செய்யுளின் உறுப்புகள் பற்றியும் இலக்கிய வகைப்பற்றியும் இவ்வியல் கூறுகிறது.

9. **மரபியல்**

சொற்பொருள் மரபு பற்றியும், முறைமைகள் பற்றியும் எடுத்தியம்புகிறது.

### 5. 3 இறையனார் களவியல்

இறையனாரால் இயற்றப் பெற்றது. அகப் பொருள் பற்றிய இலக்கணநூல். இதற்குக் களவியல் எனவும் இறையனார் களவியல் எனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. 'இறையன்' என்பதை 'இறைவன்' எனக்கொண்டு உரையும் வரலாறும், உரைத்து வருதல் நெடுநாள் வழக்காக உள்ளது. இந்நூலைச் செய்தான் இறைவன் எனக் கொண்டமையால் இதனை வழிநூல் என்பதற்குத் தடையுண்டாயிற்று. ஒரு கூற்றை வாங்கிக் கொண்டு செய்யப்பட்டது எனினும் 'இறைவன்' செய்ததாகக் கொண்டமையால் அதற்கு இழுக்காகா வகையில் 'முதனூல்' என்கிறார்.

இறையனார் களவியல் உரை "ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே" என்று பெரிது விரித்து விளக்கம் கூறிக் காக்கை பாடினியம், தொல்காப்பியப் பாயிரங்களையும் மேற்கோள் காட்டுகின்றது. ஆனால், இக்களவியலில் பாயிரம் இல்லை. 'அன்பின் ஐந்திணை' என்று நூல் தொடங்கி விடுகின்றது. இறையனார் களவியல் முழுமையும் 60 நூற்பாக்களில் அடங்கி விடுகின்றது. ஓர் அடியால் வரும் நூற்பாக்கள் 15 உள்ளன. இந்த ஓரடி நூற்பா சிந்தடி ஒன்றாலேயே அமைந்துள்ளது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் பல இலக்கண நூல்கள் தோன்றத் தொடங்கின அவ்வகையில் அகப்பொருள் பற்றிக் கூறும் நூலாகத் தோன்றியது இந்நூல். களவியல் முதல் நூற்பா.

"அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்"

என்கிறது. முதல் நூற்பாவைக் குறித்த அளவில், நிறுத்திவிட்டுப் பாயிரம், பாயிர வகை அவற்றின் இன்றியமையாமை, முச்சங்க வரலாறு, களவியல் வரலாறு, களவியல் உரை, கண்டம் உரை, நடந்து வந்த முறை களவு என்றதன் காரணம், களவியல் கற்க நாற்பொருளும் பயத்தல், நூல் வகை, நூல் நுதலியது, நூற்பா நுதலியது, அன்பு இன்னது என்பது, பொருள்வகை, ஐந்திணை, ஐந்திணை முதல், உரி, கருப்பொருள்கள், ஐந்திணைக் களவு, எண்வகை மணம் ஆகிய இவற்றையெல்லாம் தனி இலக்கணமென இலக்கிய அமைதியில் இருபத்தெட்டுப்பக்க அளவில் விரித்துச் செல்கின்றது இக்களவியல் உரை.

### 5. 4 பன்னிருபடலம்

"அளவினால் பெயர் பெற்றது பன்னிருபடலம்" என்பது இறையனார் களவியல்.

"தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்"

என்பது புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம். தொல்காப்பியர் பன்னிரு படலத்தின் வெட்சிப்படலம் பாடினார் என்றும் ஒரு கருத்து வழங்குகிறது பன்னிருபடலத்து வரும் நூற்பா ஒன்றை யாப்பருங்கல விருத்தி, 'வஞ்சிப்பாவினுள் ஆசிரியம் மயங்கி வருவது அகத்திணை அல்லாத வழியே' என்பதற்கு மேற்கோளாகக் காட்டுகிறது. வாகை, பாடாண், பொதுவியல் ஆக மூன்றையும் புறப்புறமெனக் கொள்வனவற்றுள் பன்னிருபடலமும் ஒன்று என்பதைக் குறிக்கிறது.

### 5.5 புறப்பொருள் வெண்பா மாலை

இதன் ஆசிரியர் ஐயனாரிதனார், இவர் சேரமரபினர் இந்நூல் புறப்பொருள் இலக்கணம் பற்றியது. இதன் காலம் கி.பி 9 - ஆம் நூற்றாண்டு. (இளம்பூரணார் காலத்திற்கு முந்தியது) வெண்பா யாப்பால் ஆனது. புறப்பொருள் விளக்கம் என்னும் வேறுபெயராலும் அழைக்கப்படுகிறது தொல்காப்பிய புறத்திணையியலை அடிப்படையாகக்கொண்டு எழுந்தது என்று கூறுகிறது. புறப்பொருளைப்பற்றி தோன்றிய தனிநூல் தொல்காப்பியம். ஏழு புறத்திணைகளாக கூறுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை வெட்சி முதல் பெருந்திணை முடிய பன்னிருபடலங்களையுடையது. இந்நூல் விளக்கப்பாடல்கள் 261. புறநானூற்று வரலாறுகளை நன்கு அறிந்து பாடியுள்ளார் இவ்வெண்பா நம் உள்ளத்தைக் கவர்கிறது. காட்டாக,

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத்து இசைவிளங்க – தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்

என்னும் பழம் பாடல் கூறுகிறது.

### 5.6 அகப்பொருள் விளக்கம் (அ) நம்பியகப்பொருள்

இதன் ஆசிரியர் நாற்கவிராச நம்பி, சமண சமயத்தைச் சேர்ந்தவர். அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல். இதன் காலம் கி.பி 12-ன் இறுதி 13-இன் முற்பகுதியாகும். தொல்காப்பியம் அகப்பொருளைக் கூற்றுவகையால் கூறும். இந்நூல் துறைவகையால் கூறும் தொல்காப்பியத்தில் காணப்படும் அகப்பொருள் கருத்துகளைக் காலத்திற்குப் பொருந்திய வகையில் இனிய எளிய முறையில் விளக்குகிறது. அகப்பொருள் நூல்கள் பல தோன்றின. அவற்றில் நம்பியகப்பொருள் ஒன்றே இன்று நின்று நிலவுகிறது. இந்நூலுக்கு உதாரணச்செய்யுளாகப் பொய்யாமொழிப்புலவரின் தஞ்சைவாணன் கோவையில் அமைந்திருக்கும் 400 பாடல்கள் காட்டப்படுகின்றன. இதன் பாகுபாடு 1. அகத்திணையியல் 2. களவியல் 3. வரைவியல் 4. கற்பியல் 5. ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களைக் கொண்டது.

### 5.7 நன்னூல்

இதன் ஆசிரியர் பவணந்தி முனிவர். இந்நூலுக்குக் கிடைக்கும் உரைகளில் காலத்தால் முந்தியது மயிலைநாதர் உரை. இதற்கு விருந்தியுரை வழங்கியவர்கள் சங்கர நமச்சிவாயர். சிவஞானமுனிவர் ஆவர். புகழ்வாய்ந்த மிகச்சிறந்த காண்டிகையுரை வழங்கியவர் ஆறுமுகநாவலர். இந்நூல் 462 நூற்பாக்களைக் கொண்டது. தொல்காப்பியத்திற்கும் இதற்கும் ஆயிரம் ஆண்டுகால இடைவெளி இருக்கும். இவ்வளவு பிறகு தோன்றிய போதிலும் இதன் பெருமை அளவிட்டுக்கூறமுடியாததாகும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே"

பழங்காலத்தில் இலக்கணத்துறையில் தொல்காப்பியம் பெற்ற இடத்தினை இடைக்காலத்தில் இந்நூல் பெற்றது. எனவே, தொல்காப்பியனார் காலத்திற்குப்பின்னர் வழக்காறு அற்றுப்போன இலக்கணங்களை விடுத்து இடைக்காலத் தமிழின் இயைந்த பெற்றிற்கு இணைந்த முறையிலேயே இந்நூலை இயற்றியுள்ளனர் நன்னூலார். தெளிவு, எளிமை ஆகிய அனைத்து அழகுகளையும் உடையது இந்நூல்

'திருந்திய செங்கோற்சீய கங்கன்

அருங்கலை வினோதன் அமராபரணன்"

என்னும் சிறப்புப்பாயிரம் தொடர்கொண்டு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவனாய் மைசூரில் கோளார்ப்பகுதியை ஆண்ட சீயகங்கன் என்னும் மன்னனே இந்நூல் தோன்ற காரணமாய் இருந்தான் என்பது தெரியவருகிறது. எனவே, இந்நூல் காலம் கி.பி.13 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

**பாகுபாடு**

இந்நூல் பாயிரப்பகுதியில் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என்னும் 2 பகுதிகள் உள்ளன. அதிகாரப்பகுதியில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், என்னும் 2 அதிகாரங்களாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. பாயிரம் - முகவுரை, பதிகம், அணித்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை. பொதுப்பாயிரம் கூறும் செய்திகள் 1. நூலிசை, 2. ஆசிரியன் 3. நூலை மாணவர் கற்பிக்கும் செய்திகளையும் கூறுகிறது. 4. மாணக்கன் இலக்கணம் 5. மாணாக்கர் பாடம் கேட்கும் வரலாறுகள் ஆகும். இவை, எல்லா நூல்களுக்கும் பொதுவானவையாதலால் இவற்றை விளக்கமாக முறை சொல்வது பொதுப்பாயிரமாகும்.

## 5.8 யாப்பருங்கலம்

இதன் ஆசிரியர் அமிர்தசாகரர், உரையாசிரியர் குணசாகரர். இவர் சமணர், வாழ்ந்தது தீபங்குடி, இது யாப்பு பற்றி எழுந்தநூல். மிகப்பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில், அக்காலத்தில் வழக்கில் இருந்த பாவினங்களுக்கு மட்டுமே இலக்கணம் கூறப்பட்டது. பிற்காலத்தில் பாவினங்கள் பல பெருகின. இவற்றிற்கு இலக்கணம் கூற யாப்பிலக்கணங்கள் தோன்றின இவற்றுள் சிறந்தனவாகப் போற்றப்படும் இலக்கணநூல் இரண்டாகும் 1. யாப்பருங்கலக்காரிகை 2. யாப்பருங்கலம் என்பன. 1. யாப்ருங்கலக்காரிகை கட்டளைக்கலித்துறையால் ஆனது 2. யாப்பருங்கலம் அகவற்பாவால் ஆனது இதன் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டாகும். யாப்பருங்கலம் யாப்பருங்கல விருத்தியென்றே கூறப்படுகிறது. இதனால் விருத்தியுரையின் சிறப்புப் புலனாகிறது விருத்தியுரை வேறெந்த தமிழ் இலக்கியத்திற்கோ இலக்கணத்திற்கோ முழு அளவில் விரிவான உரை அமையவில்லை. காரிகை உரை சுருக்கமானது. யாப்பருங்கலத்தைவிட சுருக்கமான உரை கொண்ட யாப்பருங்கலக்காரிகையே பெரும்பான்மையோர் பயில்கின்றனர். இந்நூல் மூன்று இயல்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

1. உறுப்பியல் - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய செய்யுள் உறுப்புகளை விளக்குகிறது.
2. செய்யுளியல் - ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, மற்றும் பாவினங்கள் ஆகியவற்றை விளக்குகிறது.

3. ஒழிபியல் - எண்வகை வனப்பு, பொருள்கோள் 9 உறுப்பியல், செய்யுளியலில் விடுபட்ட செய்திகள் ஆகியவற்றை விளக்குகிறது.

### 5.9 நேமிநாதம்

இதன் ஆசிரியர் குணவீரபண்டிதர் ஆவர். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். தொண்டைநாட்டிலுள்ள களத்தூரில் பிறந்தவர். இவர் காலம் கி.பி 12 ஆம் நூற்றாண்டின் இறுதி, 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். இது எழுத்து, சொல் என்னும் இரண்டு அதிகாரங்களைக் கொண்டது. இந்நூல் சுருங்கக் கூறுகிறது. வெண்பா யாப்பால் அமைந்தது. ‘சின்னூல்’ என்ற வேறுபெயராலும் அழைக்கப்படுகிறது-

### 5.10 வீரசோழியம்

இதன் ஆசிரியர் புத்திமித்தரர் ஆவர். பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். இதன் காலம் கி.மு 11 ஆம் நூற்றாண்டாகும். வீரராசேந்திர சோழன் காலத்தது. இந்நூல் 1.எழுத்து, 2.சொல், 3.பொருள், 4.யாப்பு, 5.அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் கொண்டு வெளிவந்த முதல் நூல் இதுவாகும் வடநூல் மரபை ஒட்டி இந்நூல் செய்யப்பட்டது. ஆசிரியர், தம்மை ஆதரித்த வீரசோழன் பெயரையே இந்நூலுக்குச் சூட்டியுள்ளது இவரின் நன்றியுணர்ச்சியைப் புலப்படுத்தும்.

### 5.11 தொன்னூல் விளக்கம்

இதன் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவர். காலம் கி.பி 1730 ஆகும். இந்நூலுக்கு வீரமாமுனிவரே உறை எழுதியுள்ளார். இது நன்னூல், சின்னூல் (நேமிநாதம்) இவற்றிற்குப் பின்னெழுந்தத் தொன்னூலாகும். இது ஐந்திலக்கணத்தைக் கொண்டது.

### 5.12 முத்துவீரியம்

இதன் ஆசிரியர் முத்துவீர உபாத்தியாயர் ஆவர். இவர் பிறந்த ஊர் திருச்சி உறையூர் என்பதாகும். இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு சார்ந்ததாகும். ஐந்திலக்கணத்தைக் கொண்டது. இந்நூலுக்கு உரையெழுதியவர் திருப்பாற்கடல் நாதன் கவிராயர் ஆவர்.

## வினாக்கள்

### பகுதி – அ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

1. அகத்தியர் - குறிப்பு வரைக
2. அகத்தியம் பற்றி எழுதுக.
3. பன்னிருபடலம் குறிப்பு வரைக
4. புறப்பொருள் வெண்பாமாலை குறித்து எழுதுக.
5. அகப்பொருள் விளக்கம் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
6. வீரசோழியம் - குறிப்பு வரைக
7. தொன்னுல் விளக்கம் - குறிப்பு வரைக
8. முத்து வீரியம் குறிப்பு வரைக.

### பகுதி – ஆ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

9. தொல்காப்பியத்தைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
10. இடைக்கால இலக்கண நூல்களின் தோற்றத்திற்குத் தொல்காப்பியமே அடிப்படை என்பதை ஆய்க.
11. இறையனார் களவியல் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
12. நன்னூல் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
13. யாப்பருங்கலம், நேமிநாதம் குறித்து எழுதுக.
14. அக இலக்கண நூல்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## NOTES

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...